# உலக வரலாறு

(கி. பி. 1789-முதல் இன்று வரை)



ஆர். இராமச்சந்திரன்

தமிழ் வெளியீட்டுக் கழகம்
தமிழக அரசு

தமிழ் வெளியீட்டுக் கழக வரிசை எண்—126

# உலக வரலாறு

(கி.பி. 1789 முதல் இன்றுவரை)

**புகுமுக வகுப்புக்குரியது**

ஆசிரியர்
டி. ஆர். இராமச்சந்திரன், எம்.ஏ., எம்.லிட்.,
பேராசிரியர், வரலாற்றுத்துறை,
பச்சையப்பன் கல்லூரி, சென்னை.

தமிழ் வெளியீட்டுக் கழகம்
தமிழக அரசு

First Edition—July, 1966
Fourth Reprint—June, 1969

B.T.P. No. 126

© Bureau of Tamil Publications

World History

T. R. Ramachandran

*Price Rs.* 4–50

*Printed by*
Kabeer Printing Works,
Madras-5

# அணிந்துரை

(திரு. இரா. நெடுஞ்செழியன், தமிழகக் கல்வி-தொழில் அமைச்சர்)

தமிழைக் கல்லூரிக் கல்வி மொழியாக ஆக்கி ஏழு ஆண்டுகள் ஆகிவிட்டன. தொடக்கத்தில் இருந்த இடர்ப்பாடுகள் மெல்ல மெல்ல மறைந்து வருகின்றன. நாடு முழுவதும் பரந்துள்ள மாணவர்களின் ஆர்வம், 'தமிழிலேயே கற்பிப்போம்' என முன்வந்துள்ள கல்வி ஆசிரியர்களின் ஊக்கம், பிற பல துறைகளிலும் தொண்டு செய்வோர் இதற்கெனத் தந்த உழைப்பு, தங்கள் சிறப்புத் துறைகளில் நூல்கள் எழுதித்தர முன்வந்த நூலாசிரியர்கள் தொண்டுணர்ச்சி—இவற்றின் காரணமாக இத் திட்டம் நம்மிடையே மகிழ்ச்சியும் மனநிறைவும் தரத்தக்க வகையில் நடைபெற்று வருகிறது.

பல துறைகளில் பணிபுரியும் பேராசிரியர்கள் எத்தனையோ நெருக்கடிகளுக்கிடையே குறுகிய காலத்தில் அரிய முறையில் நூல்கள் எழுதித் தந்துள்ளனர்.

வரலாறு, அரசியல், உளவியல், பொருளாதாரம், புவியியல், வேதியியல், உயிரியல், வானியல், புள்ளியியல், தத்துவம்—ஆகிய பல துறைகளில் தனி நூல்கள், மொழிபெயர்ப்பு நூல்கள் என்ற இரு வகையிலும் தமிழ் வெளியீட்டுக் கழகம் நூல்களை வெளியிட்டு வருகிறது.

இவற்றுள் ஒன்றான 'உலக வரலாறு' என்ற இந் நூல் தமிழ் வெளியீட்டுக் கழகத்தின் 126ஆவது வெளியீடாகும். கல்லூரித் தமிழ்க் குழுவின் சார்பில் வெளியான 35 நூல்களையும் சேர்த்து, இதுவரை 161 நூல்கள் வெளிவந்துள்ளன.

கணக்கிலடங்காத் தடைகளை எல்லாம் அகற்றித் தமிழன்னை கல்லூரிக் கலை மண்டபத்தில் கொலுவீற்றிருக்கிறாள். எனவே, இவ் அன்னையை வாழ்த்துவோமாக! உழைப்பின் வாரா உறுதிகள் இல்லை; ஆதலின், உழைத்து வெற்றி காண்போம். தமிழைப் பயிலும் மாணவர்கள் உலக மாணவர்களிடையே சிறந்த இடம் பெறவேண்டும்; அதுவே தமிழன்னையின் குறிக்கோளுமாகும். சென்னைப் பல்கலைக் கழகத்தின் பலவகை உதவிகளுக்கும் ஒத்துழைப்புக்கும் நம் மனம் கலந்த நன்றி உரித்தாகுக.

ஜூலை, 1967 இரா. நெடுஞ்செழியன்

# பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | பதினேழு, பதினெட்டாம் நூற்றுண்டுகளில் உலக நாடுகள் ... ... ... ... | 1 |
| 2. | ஐரோப்பாவில் ஏற்பட்ட புரட்சிகள் (1789–1848) ... | 77 |
| 3. | அமெரிக்க நாடுகளின் வளர்ச்சி ... ... | 123 |
| 4. | பத்தொன்பதாம் நூற்றுண்டில் ஐரோப்பாவில் தேசிய நாடுகள் ஏற்படுத்துதல் ... ... ... | 149 |
| 5. | ஆஃப்ரிக்காவும் ஆஸ்திரேலியாவும் ... ... | 183 |
| 6. | தொழிற் புரட்சியும் விவசாயப் புரட்சியும் ... ... | 211 |
| 7. | தற்கால ஆசியா ... ... ... ... | 231 |
| 8. | இருபதாம் நூற்றுண்டில் உலகத்தின் நிலை ... | 279 |


பின்னிணைப்பு—படங்கள்


| | | |
|---|---|---|
| 1. | பதினெட்டாம் நூற்றுண்டில் ஐரோப்பியக் குடியேற்றங்கள் ... ... ... ... | 319 |
| 2. | 1750-ல் புதிய உலகத்தில் ஐரோப்பியக் குடியேற்றங்கள் ... ... ... ... | 320 |
| 3. | 1763-ல் பதின்மூன்று அமெரிக்கக் குடியேற்றங்கள் ... | 321 |
| 4. | நெப்போலியனுடைய பேரரசு (1812) ... ... | 322 |
| 5. | வியன்ஞ ஏற்பாடு (1815) ... ... ... | 323 |
| 6. | லத்தீன் அமெரிக்க நாடுகள் (1850) ... ... | 324 |
| 7. | 1871-ல் இத்தாலி ... ... ... ... | 325 |
| 8. | 1871-ல் ஜெர்மனி ... ... ... ... | 326 |
| 9. | 1914-ல் ஆஃப்ரிக்கா ... ... ... | 327 |
| 10. | 1919-ல் ஐரோப்பா... ... ... ... | 328 |

# உலக வரலாறு
# (1789—1960)

## 1. பதினேழு, பதினெட்டாம் நூற்றுண்டுகளில் உலக நாடுகள்

### தோற்றுவாய்

தற்கால உலக வரலாற்றினை நாம் அறிந்துகொள்வது அவசியமாகும். ஏனெனில், தற்கால மனிதனுடைய நடவடிக்கைகளைச் சரியாகப் புரிந்துகொள்வதற்கு அது நமக்குப் பெரிதும் பயன்படுகிறது. 1789ஆம் ஆண்டு முதற்கொண்டு தற்கால உலகம் எவ்வெவ் வகையில் வளர்ச்சியுற்றது என்பதை நாம் இந் நூலில் கவனிப்போம். 1789ஆம் ஆண்டு உலக வரலாற்றிலே குறிப்பிடத்தக்க கட்டமாகும். அவ்வாண்டில் ஐரோப்பாவிலுள்ள ஃபிரான்சு நாட்டில் மாபெரும் புரட்சியொன்று ஏற்பட்டது. அக் காலத்தில் தோன்றிய சமத்துவம், சுதந்திரம் ஆகிய கருத்துகள் அப் புரட்சி ஏற்படக் காரணமாயிருந்தன. இன்று பல்வேறு நாடுகளில் இயங்கிவரும் மக்களாட்சி (முறை)யின் அடிப்படைத் தத்துவங்கள் என்று கூறப்படும் இக் கருத்துகள் அக் காலத்தில் ஃபிரான்சிலும் இதர ஐரோப்பிய நாடுகளிலும் வாழ்ந்துவந்த மக்களிடம் மட்டுமன்றி, பத்தொன்பதாம் நூற்றுண்டில் வாழ்ந்த மக்களிடமும் செல்வாக்குப் பெற்றிருந்தன. இதன் விளைவாக அந்நிய ஆட்சியும், வல்லாட்சியும் பல நாடுகளினின்றும் அகற்றப்பட்டன. அவைகளுக்குப் பதிலாகக் குடிமக்களின் நலன்களைப் பேணும் மக்களாட்சி நிறுவப்பட்டது. வல்லாட்சிக் கொள்கைக்கும், மக்களாட்சிக் கொள்கைக்கும் பத்தொன்பதாம் நூற்றுண்டு முழுவதும் நடைபெற்றுவந்த போராட்டம் முதல் உலகப்

போரின்போது உச்ச கட்டத்தை அடைந்தது என்று கூறலாம். அப்பொழுது பல்லாண்டுகளாக நடைபெற்றுவந்த முடி ஆட்சி பல இடங்களில் அழிவுற்றது. அதற்குப் பதிலாகக் குடியரசுகள் நிறுவப் பட்டன. தேசியத் தன்னாட்சிக் கொள்கையை அடிப்படையாகக் கொண்ட புது நாடுகள் உருவாக்கப்பட்டன. இதனின்றும் 1789-ல் ஏற்பட்ட புரட்சி வல்லாட்சிக் காலத்தையும், மக்களாட்சிக் காலத்தையும் பிரிக்கும் ஓர் எல்லைக் கோடாகக் கொள்ளலாம் என்பது தெளிவாகிறது. இத்தகைய சிறப்புப் பெற்ற ஃபிரெஞ்சுப் புரட்சியின் வரலாற்றினை அறிந்துகொள்வதற்கு முன்னர், புரட்சிக்குமுன் ஐரோப்பாவின் நிலைமையைப்பற்றித் தெரிந்துகொள்வது அவசியமாகும்.

### ஐரோப்பாவில் வல்லரசுகள்

பதினேழாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் பொதுவாக ஐரோப்பிய நாடுகளனைத்தையும் மன்னர்கள் ஆண்டுவந்தனர். இடைக்காலத்தில் அரசர்கள் பலம் பொருந்தியவர்களாயிருந்தனரில்லை. அவர்கள் தங்கள் விருப்பப்படி ஆட்சி செய்ய முடியவில்லை. பிரபுக்கள், மத குருமார்கள், நகர மக்கள் ஆகியோர் பெற்றிருந்த உரிமைகள், அவ் வரசர்களுடைய அதிகாரத்தை விரிவுபடுத்துவதைத் தடுத்து நிறுத்தின. இடைக்கால மக்கள் சபைகள் அரசர்களுடைய அதிகாரத்தைக் கட்டுப் படுத்தின. ஆனால், பதினைந்தாம், பதினாறும் நூற்றாண்டுகளில் தோன்றிய தேசிய உணர்ச்சி ஏற்பட்டதன் விளைவாக மன்னர்கள் தேசிய ஒற்றுமையின் சின்னங்களாகக் கருதப்பட்டனர். இதனால் அவர்களுடைய அதிகாரத்தைப் பெருக்கிக்கொள்ள முடிந்தது. மேலும், பிரபுக்கள் போன்றவர்களுடைய கொடுமைகளினின்றும் மக்களைக் காப்பற்றக்கூடியவர் அரசர் ஒருவர்தாம் என மக்கள் உணர்ந்தனர். ஆகவே, அவர்கள் வல்லாட்சி ஏற்படுத்துவதை ஆதரித்தனர். மேலும், அரசர்கள் பலம் பொருந்தியவர்களாயிருந்தால் தான் நாட்டில் அமைதி நிலவ முடியும் என்ற கருத்து வளர்ந்து வரலாயிற்று. பொருளாதாரத் துறையில் முன்னேறுவதற்கு அமைதி இன்றியமையாததென்றும் உணர்ந்தனர். இக் காரணங்களால் ஐரோப்பாவில் வல்லாட்சி ஏற்பட்டது.

பதினேழாம் நூற்றாண்டிலும், பதினெட்டாம் நூற்றாண்டிலும் ஏற்படுத்தப்பட்ட வல்லாட்சிகள் அரச தெய்விக உரிமைக் கோட் பாட்டினை அடிப்படையாகக் கொண்டு இருந்தன. நாட்டரசு கடவுளால் ஆக்கப்பட்டது ; அரசர்கள் கடவுளால் நியமிக்கப்பட்டவர்கள், அவர்கள் கடவுளன்றி வேறெவருக்கும் பதில் சொல்லும் பொறுப்புடையவரல்லர் ஆகிய கருத்துகளை அக் கோட்பாடு உட்கொண்டு இருந்தது. அரசர் தீயவராயிருப்பினும், மக்கள் அவருக்கு எதிராகக் கிளர்ச்சி செய்யக் கூடாது என்றும், மக்களின் பாவச் செயல்களைத் தண்டிக்கும்

பொருட்டே கடவுள் அத்தகைய அரசரை அனுப்பிவைக்கிருர் என்றும் கருதி வந்தனர். முடியரசர்கள் தங்களுடைய நாடுகளைத் தங்களின் சொத்தாகக் கருதினர். தங்களுடைய நலன்களையும் நாட்டினுடைய நலன்களையும் ஒன்றெனஅவர்கள் கருதினர். அவர்கள் நாட்டில் வலிமை பொருந்திய மைய ஆட்சி முறையை ஏற்படுத்திஞர்கள். திறமை வாய்ந்த அதிகார வர்க்கமும், சிறந்த பயிற்சி பெற்ற நிலப் படை யொன்றும் இவ்வாட்சிக்கு உறுதுணையாக இருந்தன. அரச ருடைய சொந்த விருப்பு வெறுப்புகளின்படியே ஆட்சி நடைபெற்றது. மக்களுக்கு யாதோர் உரிமையும் வழங்கப்படவில்லை. தங்களது நாடுகளை விரிவுபடுத்தவேண்டும் என்ற ஆசையும், பிற அரசர்களின் பால் ஏற்பட்ட பொருமையும், அவ்வரசர்களைப் போரில் ஈடுபடுமாறு தூண்டின. சொந்த எண்ணங்களை நிறைவேற்றிக்கொள்ளவேண்டி நாடுகளைப் போரில் ஈடுபடுத்துவது அக் காலத்தில் வழக்கமாயிருந்தது. பதினெட்டாம் நூற்றுண்டின் பிற்பகுதியில் இவ் வல்லரசர்களிடம் மக்களுக்கு நன்மை பயக்கும் வகையில் தாங்கள் ஆளவேண்டும் என்ற எண்ணம் உண்டாயிற்று. ஆகவே, தகுதி பெற்றவர்களையே அமைச்சர் களாக அமர்த்தினர். சட்டங்களைத் திருத்தியமைத்தனர். விவசாயம், தொழில், வர்த்தகம் ஆகியவைகளைப் பெருக்கினர். கல்வி பெருகு வதற்கு வழிவகை செய்தனர். விஞ்ஞானிகளையும், எழுத்தாளர்களையும், கலைஞர்களையும் ஆதரித்தனர். எனவே, இவர்களை மக்கள் நலம் பேணும் வல்லரசர்கள் (Benevolent Despots) என்றும், நல்ல அறிவுடைய வல்லரசர்கள் (Enlightened Despots) என்றும் கூறு கிருர்கள். இத்தகைய வல்லரசர்களில் தலைசிறந்தவர்களைப்பற்றி இப் பகுதியில் காணலாம்.

### ஃபிரான்சில் வல்லாட்சி

ஐரோப்பிய நாடுகள் பலவற்றில் வல்லாட்சி நடைபெற்று வந்த பொழுதிலும், ஃபிரான்சு நாட்டில்தான் இவ்வாட்சி முழுமையை அடைந்தது. இடைக்காலத்தில் ஃபிரெஞ்சு மன்னர்கள் ஒருசில அதிகாரங்களே பெற்றிருந்தனர். அவர்கள் கீழிருந்த பல பிரபுக்களில் ஒருவராகவே அவர் மதிக்கப்பெற்ருர். நாட்கள் செல்லச் செல்ல அவர்கள் பிரபுக்களின் உரிமைகளையும் அதிகாரங்களையும் அழித்து, நாடு முழுவதையம் தங்களுடைய நேரடி ஆட்சியின்கீழ்க் கொண்டு வந்தனர். 1589ஆம் ஆண்டு தொடங்கி 1610ஆம் ஆண்டுவரை ஆட்சி புரிந்த பூர்போன் (Bourbon) வம்சத்தைச் சார்ந்த முதல் அரசரான நான்காம் ஹென்றியும், அவரைப் பின் தொடர்ந்து ஆட்சி புரிந்த பதின்மூன்ரும் லூயியின் அமைச்சரான கார்டினல் ரிஷெலியூவும் (Cardinal Richelieu) ஃபிரான்சு நாடு முழுவதிலும் மன்னரின் ஆதிக்கத்தை ஏற்படுத்த முனைந்தனர். அதில் அவர்கள் பெரு வெற்றி

யடைந்தனர். எனினும், பதின்மூன்றும் லூயிக்குப் பிறகு அரியாசனத்தில் அமர்ந்த பதினன்காம் லூயியினுடைய நீண்ட ஆட்சிக் காலத்தின்போதுதான் இவ்வாட்சி உச்சகட்டத்தை அடைந்தது.

## பதினன்காம் லூயி மன்னர் (1643—1715)

பதினேழாம் நூற்றுண்டில் ஃபிரான்சில் ஆட்சி புரிந்த அரசர்களில் தலைசிறந்தவர் பதினன்காம் லூயி ஆவார். அவர் தம்முடைய ஐந்தாவது வயது நிரம்புமுன்னரே பட்டத்துக்கு வந்தார். ஆகவே, அவருடைய குழந்தைப் பருவத்தில் ஆட்சிப் பொறுப்பை அவருடைய தாயாரான ஆஸ்திரியா நாட்டின் இளவரசியான ஆன் (Anne of Austria) ஏற்றுவந்தார். இத்தாலி நாட்டினின்று வந்து ஃபிரெஞ்சுக் குடிமகனுக மாறிய கார்டினல் மாசரின் (Mazarin) என்ற மதகுரு அமைச்சராகப் பணியாற்றினர். அவர் மிக அழகாக இருந்த காரணத்தால், ஆன் அரசியாரின் நம்பிக்கையையும் அன்பையும் பெற்றுர். ஆன் அரசியை இரகசியமாக மணஞ் செய்துகொண்டார் என்றும் கூறப்படுகிறது. அவர் மதகுருவாயிருந்தபோதிலும் அரசியல் விவகாரங்களிலும், வெளிநாட்டு விவகாரங்களிலும் மிக்க அக்கறை கொண்டிருந்தார். அவருக்கு முன்னர் அமைச்சர் பதவிவகித்த ரிஷெலியூ தொடங்கிய வெளிநாட்டுப் போரைத் தொடர்ந்து நடத்துவதே தம்முடைய முதல் வேலையாகக் கொண்டிருந்தார். இப் போரை வெகு திறமையாக நடத்தி, ரிஷெலியூவினுடைய எண்ணங்களை நிறைவேற்றி வைத்தார். அக் காலத்தில் தலைசிறந்து விளங்கிய இரு போர் வீரர்களான காண்டி (Conde), டூரென் (Turenne) ஆகியோர்களின் உதவியைக் கொண்டு எதிரிகளை ராக்ராய் (Rocroi), லென்ஸ் (Lens) என்ற இடங்களில முரியடித்தார். அதனுல் 1648-ல் ஜெர்மானியர்கள் ஃபிரான்சுடன் வெஸ்ட்பேலியா உடன்படிக்கை (Treaty of Westphalia) செய்துகொண்டனர். அதன் விளைவாக ஃபிரான்சு சில பிரதேசங்களைத் தன்னுடன் இணைத்துக்கொண்டது. ஐரோப்பாவில் ஃபிரெஞ்சினுடைய செல்வாக்கு அதிகரித்தது. ஆகவே, வெஸ்ட்பேலியா உடன்படிக்கை மாசரினுடைய பெரும் சாதனை என்று கூறுவது மிகையாகாது.

ஆனல், ஸ்பெயின் நாட்டுடன் நடத்திவந்த போர் தொடர்ந்து நடைபெற்றது. பல வெற்றிகளை ஃபிரெஞ்சுக்காரர்கள் அடைந்தபோதிலும், ஸ்பெயின் நாட்டினை முழுமையாக அடக்குவது முடியாத காரியம் என்று அவர்கள் அறிந்தார்கள். அப்பொழுது இங்கிலாந்தின் ஆட்சிப் பொறுப்பை ஏற்றிருந்த கிராம்வெல் (Cromwell) என்பவரின் உதவியை இரு நாடுகளும் நாடின. இறுதியில் ஃபிரான்சு அவருடைய உதவியைப் பெறுவதில் வெற்றிகண்டது. மாசரின், இங்கிலாந்தின்

துணைகொண்டு, ட்யூன்ஸ் சண்டையில் (Battle of the Dunes) வெற்றி கண்டார். 1659-ல் பிரனீஸ் உடன்படிக்கை (Treaty of Pyrennes) வாயிலாகப் போர் முடிவுற்றது. ஃபிரான்சு சில பிரதேசங்களைத் தன்னுடன் சேர்த்துக்கொண்டது. பதினான்காம் லூயி மன்னருக்கும், ஸ்பெயின் நாட்டிளவரசியான மேரியா தெரீசாவிற்கும் (Maria Theresa) நடைபெற்ற திருமணம் இச் சமாதானத்தை மேலும் வலுப்படுத்தியது. இதனையும் மாசரினுடைய பெரும் சாதனை என்று கூறலாம்.

உள்நாட்டு விவகாரங்களில் இவர் ரிஷெலியூவைப்போல் பெருமைப் படத்தக்க சாதனைகளை நிறைவேற்றவில்லை. ஏனெனில், ரிஷெலியூவிடம் காணப்பெற்ற செயல்திறமும், யாவரையும் பணியவைக்கத்தக்க ஆற்றலும் இவரிடம் காணப்படவில்லை. மேலும் இவர் இத்தாலிய நாட்டைச் சார்ந்தவராதலால், ஃபிரெஞ்சுக்காரர்களின் சிறப்பியல்பு களைச் சரிவரப் புரிந்துகொள்ள இவரால் இயலவில்லை. மற்றும் இவர் அந்நியர் என்ற காரணத்தால் இவருக்கெதிராகச் சதி செய்வது எளிதாக இருந்தது. இவர் ஏராளமான பொருளை ஈட்டிய காரணத்தால், இவர் மீது குற்றஞ் சாட்டுதலும் எளிதாக இருந்தது. இவர் பெருமளவில் அதிகாரத்தைப் பெற்றிருந்ததால், பிரபுக்கள் இவர்மீது பொறாமை கொண்டனர். மேலும், இவர் காலத்தில் நடைபெற்ற போர்களின் விளைவாக நாட்டு மக்கள்மீது சுமத்தப்பட்ட வரிப்பளு அதிகரித்தது. இக் காரணங்களால் இவருக்கெதிராகவும், மன்னருக்கு எதிராகவும் கலகங்கள் ஏற்பட்டன. இவைகளை ஃபிராண்டே கிளர்ச்சிகள் (Wars of the Fronde) என்று அழைக்கிறோம். இவைகளுள் முதலாவது கிளர்ச்சி பாரிஸ் பார்லிமென்டால் (Parliament of Paris) துவக்கப் பட்டது. இம் மன்றத்தின் உறுப்பினர்கள் மக்களால் தேர்ந்தெடுக்கப் பட்டவர்களோ அல்லது அரசரால் நியமிக்கப்பட்டவர்களோ அல்லர். அவர்களில் சிலர் தங்களுடைய மன்ற உறுப்பினர் பதவியை மரபுரிமை யாகப் பெற்றிருந்தனர். மற்றவர்கள் அப் பதவியை விலை கொடுத்து வாங்கியிருந்தனர். அம் மன்றத்தை நீதிமன்றம் என்று அழைப்பது பொருத்தமேயன்றிச் சட்டசபை என்று கூற இயலாது. அதன் முன்னர் சமர்ப்பிக்கப்படும் அரசர் ஆணைகளைப் பதிவு செய்யும் உரிமையே அதற்கு வழங்கப்பட்ட ஆட்சிமுறை சார்ந்த ஒரே அதிகார மாகும். அம் மன்றத்தின் ஏடுகளில் பதிவு செய்யப்படாத எந்த அரச ஆணையும் சட்டமாகக் கருதப்படமாட்டாது. 1648-ல் மாசரின், நிதியைப்பற்றிய புது ஆணைகளை அம் மன்றத்தின்முன் வைத்தார். பார்லிமென்ட் அவைகளைப் பதிவு செய்ய மறுத்துவிட்டதோடல்லாமல், ஆட்சி முறையில் சீர்திருத்தங்கள் வேண்டும் என்ற கோரிக்கையை விடுத்தது. இவ்வாறாகப் பார்லிமென்ட் மக்கள் உரிமைகளுக்காகப் போராடும் மன்றமாகத் திகழ்ந்தது. மாசரின் பார்லிமென்டின் முக்கிய

தலைவர்களைச் சிறையில் அடைத்து நிலைமையைச் சமாளிக்க எண்ணினர். காண்டியின் தலைமையின்கீழ் ஒரு சேனையை அனுப்பி பாரிஸ் நகரத்தை முற்றுகையிடச் செய்தார். 1649-ல் இக் கிளர்ச்சி முடிவுற்றது. ஃபிரெஞ்சு அரசாங்கம் வரிச் சலுகைகள் அளிக்க இசைந்தது.

சிறிது காலத்திற்குள் மாசரின் ஆட்சியில் அதிருப்தியடைந்த பிரபுக்கள் மற்றொரு கிளர்ச்சியை ஆரம்பித்தனர். காண்டியைச் சிறையிலிட்ட செய்தி கிளர்ச்சிக்கு நேரடியான காரணமாகும். பாரிஸ் நகர மக்கள் கிளர்ச்சிக்காரர்களுடன் சேர்ந்துகொண்டனர். மன்னரிடத்தில் அதிக அளவில் விசுவாசத்துடன் நடந்துவந்த டூரென்கூடக் கலகத்தில் சேர்ந்துகொண்டார். மாசரின் பதவியைவிட்டு விலக வேண்டும் என்று கலகக்காரர்கள் கூச்சலிட்டனர். எதிர்ப்பு மிகக் கடுமையாக இருந்த காரணத்தால் மாசரின் காண்டியை விடுத்ததோடல்லாமல், அவரே நாட்டைவிட்டுச் சென்றார். ஃபிரான்சுக்கு வெளியே இருந்த காலத்திலுங்கூட ஆட்சியை அவர் நடத்திவந்தார் என்பதைக் குறிப்பிடுதல் அவசியமாகும். சில காலத்திற்குப்பின் டூரென் மீண்டும் அரசர் படையில் சேர்ந்துகொண்டார். மேலும், கலகக்காரர்கள் தெளிவான திட்டங்களைப் பெற்றிருக்கவில்லை. ஆகவே, அவர்களுடைய ஆர்வம் குறையலாயிற்று. 1652-ல் காண்டி தோற்கடிக்கப்பட்டார். மாசரின் ஃபிரான்சுக்குத் திரும்பி மறுபடியும் பதவியில்அமர்ந்தார். ரிஷெலியூ ஏற்படுத்திய ஆட்சிமுறை மறுபடியும் புகுத்தப்பட்டது. இவ்வாறாக அரசருடைய ஆதிக்கத்தை ஃபிரான்சு முழுவதிலும் மீண்டும் நிலைநிறுத்தினர். 1661-ல் மாசரின் உயிர் நீத்தார்.

மாசரின் மறைந்த பிறகு, இருபத்திரண்டு வயது நிரம்பிய லூயி (Louis XIV) தாமே ஆட்சியை நடத்தத் தீர்மானித்தார். ஆகவே, புதிய முதல் அமைச்சரை எதிர்பார்த்திருந்த அரச சபையினரை, ‘நானே இனி என்னுடைய முதலமைச்சராக இருப்பேன்’ என்று கூறி அதிரவைத்தார். லூயி மிகத் திறமை வாய்ந்தவர். கட்டான உடலமைப்புடன் அழகையும் உயர்ந்த பண்புகள் சிலவற்றையும் பெற்றிருந்தார். அவருடைய நடத்தையில் யாதொரு குறையும் காண இயலாது. தன்னடக்கம் பெருமளவில் பெற்றிருந்தார். அவர் கடும் உழைப்பையும் மேற்கொள்ளும் திறனுடையவர். எல்லா ஆலோசனைச் சபைக் கூட்டங்களிலும் கலந்துகொள்வார். ஆட்சி முறை சார்ந்த பத்திரங்களை வெகு கவனமாகப் படிப்பார். அரசியல் விவகாரங்கள் அனைத்திலும் அவர் முழுத் தேர்ச்சியடைய வேண்டும் என்ற எண்ணங் கொண்டவர். அவருடைய ஆட்சியின் முதற் பகுதியில் அவருடைய அமைச்சர்கள் ஆட்சியை நடத்திவந்தனர் என்றாலும், பிற்காலத்தில் அவர்கள் அவருடைய விருப்பத்தினை நிறைவேற்றிவைக்கும் கருவி

களாகவே இயங்கிவந்தனர். திறமை வாய்ந்தவர்களையே அமைச்சர்களாக நியமிக்கும் ஆற்றலைப் பெற்றிருந்தார். அவருடைய முடிவுகளில் அவருக்கு அலாதி நம்பிக்கை உண்டு. ஐரோப்பிய அரசியல் விவகாரங்களை மிகத் தெளிவாக உணர்ந்தவர். அரச தந்திரத்தில் கைதேர்ந்தவர்; நிரம்பப் படியாதவர் என்ருலும், அவர் பல துறைகளில் மேம்பட்டு விளங்கியவர்களைக் கொண்ட அவை ஒன்றை ஏற்படுத்திஞர். இதைப்பற்றிப் பின்னர் விரிவாகக் கவனிப்போம்.

அவரிடம் சில குறைகளும் உண்டு. அவர் சுயநலக்காரர்; தருக்கு நிறைந்தவர்; வெளிநாட்டு விவகாரங்களில் அவர் காட்டிய பொறுமையினை மதம் போன்ற விவகாரங்களில் காட்டியவரல்லர்; மத விஷயங்களில் அவரை ஒரு வெறியர் என்றே கூறவேண்டும். நாடு பிடிப்பதிலும், போரிடுவதிலும் அவருக்கு அதிக விருப்பமிருந்தது. இதனுல் ஃபிரான்சு அவசியமின்றிப் பல போர்களில் ஈடுபட்டது. இதன் காரணமாக அந் நாட்டின் பொருளாதார நிலை சீர்குலையலாயிற்று. அவர் அநேக வெற்றிகளைக் கண்டார் என்பதும், முற்றுகை முறையில் மிகுந்த அக்கறை கொண்டவர் என்பதும் உண்மையே என்ருலும், அவர் ஒரு வீரர் அல்லர். அவர் எந்தப் போராட்ட ஏற்பாட்டிலும், முக்கிய அங்கம் வகித்ததில்லை. கிராண்ட் (Grant) அவர்கள் குறிப்பிட்டபடி, அவர் ஒரு வீரராகவோ அரசியல் நிபுணராகவோ ஐரோப்பிய வரலாற்றிலே உயர்ந்த இடத்தைப் பெறவில்லை; அவர் தற்கால முடியாட்சியின் சிறந்த உதாரணமாக விளங்குகிருர். பெரும்பாலும் எல்லா ஐரோப்பிய அரசர்களும் அவரை மாதிரியாக வைத்துக்கொண்டு ஆட்சி செய்ய முற்பட்டனர். பல துறைகளிலும் சிறந்த பணிகளை ஆற்றிய காரணத்தால் அவருக்கு மாட்சிமிக்க மன்னர் (Grand Monarch) என்ற பட்டம் அளிக்கப்பட்டது.

**லூயியின் ஆட்சிமுறை**

அரச அதிகாரத்தை விரிவுபடுத்துவதே அவருடைய முக்கியக் குறிக்கோளாக இருந்தது. அரச தெய்விக உரிமைக் கோட்பாட்டில் திடநம்பிக்கை கொண்டிருந்த அவர் தன்னைக் கடவுளுடைய பிரதிநிதியாகக் கருதிஞர். அரசர்தாம் எல்லா அதிகாரத்தின் பிறப்பிடம் என்று அறிவித்தார். 'நான்தான் நாடு' (I am the State) என்ற சொற்ருெடர், அரசாங்கத்தைப்பற்றி அவர் கொண்டிருந்த கருத்துகளைத் தெளிவாக எடுத்துக் காட்டுகிறது. ரிஷெலியூ, மாசரின் ஆகியோரின் காலத்தில் முழு வளர்ச்சியடைந்த மைய ஆட்சி முறையினை லூயி கையாண்டுவந்தார். இதன்படி எல்லா அதிகாரங்களையும் தம் கைக்குட்படுத்திஞர். எவ்வளவு திறமை பெற்றிருந்த

போதிலும் 'ஒரு தனி மனிதனுல் எல்லா அதிகாரங்களேயும் நடைமுறைப்படுத்துவது மிகக் கடினமான செயலன்ருே? ஆகவே, அவருடைய நம்பிக்கையைப் பெற்ற ஆட்சி வட்டாரம் ஒன்றினை ஏற்படுத்திஞர். அதனில் தலேசிறந்து விளங்கியவை பலதிறப்பட்ட சபைகளாகும் (Councils). இச் சபைகளே அவருடைய கருத்துக்குத் தக்கவாறு திருத்தி அமைத்தார். புது சபைகளே உண்டாக்கினர். பிரபுக்களேயும், மத குருக்களேயும் அவைகளினின்றும் விலக்கினர். ஏனெனில், இவர்கள்தாம் முற்காலத்தில் வல்லாட்சியின் பகைவர்களாக இருந்தனர். அவர்களுக்குப் பதிலாக நடுத்தர வகுப்பினைச் சார்ந்தோர்களே, குறிப்பாக வழக்கறிஞர்களே அமர்த்திஞர். ஏனெனில், தன்ஞல் நியமிக்கப்பெற்ற காரணத்தால் அவர்கள் தனக்கு அடங்கி நடப்பார்கள் என்று லூயி கருதினர். இச் சபைகளில் மிக முக்கியமானது அரச சபையாகும் (King's Council). எல்லா முடிவுகளும் அரச சபையில்தான் மேற்கொள்ளப்பட்டன. ஆனல், எல்லாச் சபைகளும் ஆலோசனை சபைகளாகவே இயங்கி வந்தன என்பதை நாம் கருத்தில் கொள்ளவேண்டும். அடுத்த படியாக, அரசருடைய விருப்பத்தை நிறைவேற்றி வைப்பதற்காகப் பல அமைச்சர்கள் நியமிக்கப்பட்டனர். இவர்களனைவரையும் அரசரே நியமித்தார். இவர்கள் அரசருடைய நம்பிக்கையைப் பெற்றிருந்த வரையில்தான் பதவியில் இருக்கமுடிந்தது. லூயி திறமை வாய்ந்தவர்களேயே அமைச்சர்களாக நியமித்தார். ஆனல், ஆட்சி நடத்தும் பொறுப்பு உண்மையில் செயலாளர்களிடம்தான் இருந்தது. இவர்களெல்லோரும் ஆட்சிமுறை நடத்துவதில் சிறந்த பயிற்சி பெற்றவர்களாயிருந்தனர். ஃபிரான்சு நாடு பல மாகாணங்களாகப் பிரிக்கப்பட்டது. ஒவ்வொன்றிலும் கவர்னர் ஒருவர் இருந்தார். இவர் பிரபுக்கள் வகையினைச் சார்ந்தவராதலால், இவரிடமிருந்த அதிகாரங்கள் எல்லாம் பறிக்கப்பட்டன. அவருக்குப் பதிலாக ரிஷெலியூ காலத்தில் நியமிக்கப்பட்ட இன்டென்டன்ட்டு (Intendant) என்னும் அதிகாரி அரசருடைய பிரதிநிதியாக ஆட்சி நடத்திஞர். தொடக்கத்தில் வரி வசூலிக்கும் அதிகாரம்மட்டும் பெற்றிருந்த அவர்கள் நாளடைவில் பல்வேறு அதிகாரங்களேயும் பெற்றனர். அவர்களுடைய கவனமெல்லாம் அரச ஆதிக்கத்தினைப் பெருக்குவதிலேயே செலுத்தப்பட்டது. மாசரின் காலத்தில் வல்லாட்சியை எதிர்த்துப் போராடிய பாரிஸ் பார்லிமென்டு இப்பொழுது நியாயம் வழங்கும் மன்றமாகவே இயங்கிவந்தது. மற்றைய பார்லிமென்டுகள் மங்கிய நிலேயை எய்தின. ஸ்டேட்ஸ்-ஜெனரல் (States-General) என்னும் பிரபுக்கள், மதகுருக்கள், மக்கள் பிரதிநிதிகளடங்கிய சபை இவர் காலத்தில் கூட்டப்படவேயில்லே. இதனுல் மக்களுடைய ஒப்புதல் இன்றி அவர்களிடமிருந்து வரி வசூல் செய்யப்பட்டது. மாகாணங்களில் அமைக்கப்பெற்றிருந்த பிரதிநிதிகளடங்கிய சபைகள்

சில ஒழிக்கப்பட்டன. எஞ்சியிருந்த சபைகளின் அதிகாரங்கள் குறைக்கப்பட்டன. அவைகள் இப்பொழுது அரசருக்குத் தேவையான வரித்தொகை வழங்கும் சபைகளாக மாறின. நகரசபைகளுக்காக நடத்தப்படும் தேர்தலிலும் அரசாங்கப் பணியாளர்கள் தலையிட்டனர். பெரும்பாலும் அரசருக்கு அடங்கி நடப்பவர்களே நகரசபைத் தலைவர் களாகத் (Mayors) தேர்ந்தெடுக்கப்பட்டனர். மக்களுக்கு எவ்வித உரிமையும் வழங்கப்படவில்லை. அதற்கு மாருக அரசரை எதிர்ப் பவர்கள் விசாரணையின்றிச் சிறையிலடைக்கப்பட்டனர்.

## நிதிநிலையில் சீர்திருத்தங்கள்

லூயி பட்டத்திற்கு வந்தபொழுது நிதிநிலை சீர்குலைந்திருப்பதைக் கண்டார். அப்பொழுது நிதி அமைச்சராக விளங்கிய ஃபோகே (Fouquet) என்பவர் திறமைசாலி என்ருலும், குறுக்கு வழிகளில் நிறையப் பொருள் தேடியவர். ஆகவே, முதல் வேலையாக அவரைப் பதவியினின்று நீக்கினுர். அந்தப் பதவியில் கால்பர்ட் (Colbert) என்பவரை நியமித்தார். கால்பர்ட் திறமை வாய்ந்தவர். மன்னரிடத்தில் மிக்க விசுவாசமுடையவர். மாசரின்கீழ் வெகு சிறப்பாகப் பணியாற்றிய காரணத்தால், மாசரின் அவரைத் தமக்குப் பின்னர் அமைச்சர் பதவி யில் நியமிக்கவேண்டும் என்று சிபாரிசு செய்தார். அவர் வர்த்தகத்தில் ஈடுபட்டிருந்த நடுத்தரக் குடும்பத்தைச் சார்ந்தவர். லூயி மன்னரின் நேராட்சியின் முதல் பதினேர் ஆண்டுகளில் கால்பர்ட்டின் கருத்து களுக்கேற்றவாறே ஆட்சி நடைபெற்றுவந்தது என்பது உண்மையே யாகும். நிதி விவகாரங்களைக் கவனிக்கும் பொறுப்பை அவர் ஏற்ற வுடன், நிதி முறையில் காணப்பட்ட குறைகளை நீக்க கால்பர்ட் முற்பட்டார். ஃபிரெஞ்சு நாட்டின் நிதிமுறையில் காணப்பட்ட பெருங்குறை யாதெனில், பிரபுக்களும், மதகுருக்களும் நிலவரி செலுத்துவதினின்றும் விலக்குரிமை பெற்றிருந்ததேயாகும். ஆகவே, வரிச்சுமை முழுவதும் குடிமக்கள்மீது சுமத்தப்பட்டது. கால்பர்ட் இந்த விலக்குரிமையை அகற்ற முற்படவில்லை என்பது உண்மையே யாளுலும், அவர் விலக்குரிமைக் கோரிக்கைகளை மிகக் கவனமாகப் பரிசீலனை செய்யுமாறு கட்டளை பிறப்பித்தார். அதன் விளைவாக அவ்வுரிமையைப் பெறத் தகுதியற்றவர்கள் என்று கருதப்பட்டவர்கள் அதனை இழந்தார்கள். அரசாங்கத்தினுடைய வருவாயும் பெருகியது. மேலும், வரி வசூல் செய்வதில் உயர் அதிகாரிகள் மிகக் கவனமாக மேற்பார்வையிடவேண்டும் என்றும் வலியுறுத்திஞர். குறைந்த செலவுடன் வசூல் செய்யும் அதிகாரிகளுக்கு வெகுமதியும், மிகுந்த செலவுடன் வரி வசூல் செய்யும் அதிகாரிகளுக்குத் தண்டனையும் வழங்கப்பட்டன. இவ் வகைகளில் அரசாங்கத்தின் வருவாயை இரண்டு மடங்காக்கினுர். சரியான கணக்குகளை வைத்திருக்கவேண்டியதன்

அவசியத்தை அவர் வலியுறுத்திஞர். அவர் வரவு செலவுத் திட்டப் பட்டியல் தயாரிக்கும் முறையைப் புகுத்திஞர்.

### பொருளாதாரத்துறையில் முன்னேற்றம்

கால்பர்ட் காலத்தில ஃபிரான்சு தொழில்வளம் நிறைந்த நாடாகக் காணப்படவில்லை. மக்களுக்கு வேண்டிய செயற்கைப் பொருள்கள் வெளிநாடுகளிலிருந்தே இறக்குமதி செய்யப்பட்டன. ஃபிரெஞ்சு நாட்டு மன்னரின் பெருமை மக்களுடைய பொருள் வளத்தைச் சார்ந்திருந்தது என்பதையும், அப் பொருள்வளம் வர்த்தகம், தொழில் ஆகியவைகளின் வளத்துடன் இணைக்கப்பட்டிருந்தது என்பதையும் கால்பர்ட் நன்கு உணர்ந்திருந்தார். ஆகவே, அவர் ஃபிரெஞ்சு மக்கள் தங்களுக்குத் தேவையான பொருள்களைத் தாங்களே உற்பத்தி செய்யுமாறும், வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யச் சிறந்த பொருள்களைத் தயாரிக்குமாறும் அவர்களைத் தூண்டினர். ஆதலால், 1663-ல் ஃபிரான்சு நாட்டில் தயாரிக்கப்படவேண்டிய பொருள்களின் பட்டியலொன்றை வெளி யிட்டார். நசிந்துபோன தொழில்கள் மீண்டும் புதுப்பிக்கப்பட்டன. புதிய தொழில்களைத் தொடங்க முன்வருபவர்களுக்கு அரசாங்கம் உதவித் தொகை அளித்தது. வெளிநாடுகளிலிருந்து ஃபிரான்சு நாட்டிற்கு வந்து தங்கி, தங்கள் நாட்டுப் பொருள்களைத் தயாரிக்க முன்வரும் அந்நியர்களுக்கு சால்பர்ட் வெகுமதி வழங்க ஏற்பாடு செய்தார். அதே சமயத்தில் தொழில்துறையில் ஈடுபட்ட ஃபிரெஞ்சுக் காரர்கள் வெளிநாடு செல்வதையும் தடுத்தார். தங்கள் நாட்டின் தொழில் நுணுக்கங்களை அந்நிய நாட்டிற்குத் தெரிவிக்கும் ஃபிரெஞ்சுக் காரர்கள் கடுமையான தண்டனைக்கு ஆளாக்கப்பட்டார்கள். ஃபிரெஞ்சு மக்கள் சோம்பேறிகளாக வாழ்வதையும் தடுத்தார். தொழில் வளம் பெருக விடுமுறை நாட்கள் குறைக்கப்பட்டன. அந்நிய நாட்டினர் ஃபிரெஞ்சுப் பொருள்களை விரும்பி வாங்கவேண்டும் என்பதற்காக உயர்தரமான சாமான்களையே உற்பத்தி செய்யவேண்டும் என்று கட்டளை பிறப்பிக்கப்பட்டது. இக் கட்டளையை நிறைவேற்றுவதற்கு மேற்பார்வையாளர்கள் நியமிக்கப்பட்டனர். உள்நாட்டுத் தொழில் களைக் காப்பாற்றும் நோக்கத்துடன் வெளிநாடுகளிலிருந்து இறக்கு மதியாகும் பொருள்களின்மேல் மிகுதியான காப்புவரி விதிக்கப் பட்டது. ஃபிரான்சிலிருந்து ஏற்றுமதி செய்யப்படும் பொருள்களின் மீது விதிக்கப்பட்டிருந்த சுங்க வரி குறைக்கப்பட்டது. ஃபிரான்சி லிருந்து ஏற்றுமதி செய்யப்படும் மூலப்பொருள்களின்மீது மிகுதியான வரி விதிக்கப்பட்டது. அதனுல் ஒரு நாட்டின் தொழில்வளத்தைக் காக்கும் முறைக்கு கால்பர்டிஸம் (Colbertism) என்ற பெயர் வழங்கப் பட்டது. கால்பர்ட், ஃபிரெஞ்சு நாட்டின் வர்த்தகம் பெருகுவதற்கும் வழிவகை செய்தார். இங்கிலாந்து, ஹாலந்து ஆகிய நாடுகள் தங்களுடைய வாணிபத்தைப் பெருக்குவதற்கு வாணிகக் கம்பெனிகளை

ஏற்படுத்தியிருந்தன. அம் முறையை கால்பர்ட் பின்பற்றி பால்டிக் கடல் நாடுகள், மத்தியதரைக் கடல் நாடுகள், இந்தியக் கடல் நாடுகள், அமெரிக்க நாடுகள் ஆகியவற்றுடன் வியாபாரம் செய்வதற் கெனப் பல கம்பெனிகளை ஏற்படுத்திஞர். அவைகளில் மிக முக்கிய மானது ஃபிரெஞ்சுக் கிழக்கிந்தியக் கம்பெனியாகும். அயல்நாடுகளில் ஃபிரெஞ்சுக் குடியேற்றங்களை அமைப்பதற்குத் திட்டம் வகுத்து அத் திட்டத்தைச் செயல்படுத்திஞர். இவர் காலத்தில்தான் கனடாவில் ஃபிரெஞ்சுக் குடியேற்றங்களை அமைப்பதில் அதிக அக்கறை காண்பிக் கப்பட்டது. இக் குடியேற்ற நாடுகள் ஃபிரான்சு நாட்டில் தயாரித்த பொருள்களை விற்பதற்கும், ஃபிரெஞ்சுத் தொழில்களுக்குத் தேவை யான மூலப்பொருள்களை அடைவதற்கும் உதவின. வாணிபம் பெருகு வதற்கு வியாபாரக் கப்பல்கள் இன்றியமையாததென்று கால்பர்ட் அறிந்திருந்தார். எனவே, அவர் கப்பல் கட்டும் தொழிலில் ஈடுபட் டிருந்தவர்களுக்குக் கடன் தொகை வழங்கிஞர். ஃபிரெஞ்சுக்காரர் களின் அயல்நாட்டு வாணிபத்தையும், குடியேற்ற நாடுகளையும் தக்கவாறு பாதுகாக்க பலம் பொருந்திய கடற்படை அவசியம் என்பதையும் உணர்ந்திருந்தார். அத்தகைய கடற்படையை உருவாக்க முற்பட்டார். கப்பற்படைப் பயிற்சிப் பள்ளிகளையும், படைக் கொட்டில் களையும் அமைத்தார். போர்க் கப்பல்கள் கட்டப்பட்டன. முதன் முதலில் இருபதே கப்பல்கள் கொண்டிருந்த படை 1667-ல் 270 கப்பல் களைக் கொண்டிருந்தது. ஃபிரெஞ்சு மாலுமிகள் குறிப்பிட்ட காலம் கப்பற்படையில் செயலாற்றும்படி கட்டாயப்படுத்தப்பட்டனர். துறை முகங்களைச் செப்பனிட்டார். புதிய துறைமுகங்களைக் கட்டுவித்தார்.

உள்நாட்டு வியாபாரத்தைப் பெருக்குவதிலும் கால்பர்ட் கவனம் செலுத்திஞர். சாலைகளைத் திருத்தியமைத்தார். ரோமானியர்களுக்குப் பிறகு இவரைப்போல் எவரும் சாலைகள் விஷயத்தில் அக்கறை கொள்ள வில்லை.[1] அநேக கால்வாய்கள் வெட்டப்பட்டன. இவற்றுள் மிக முக்கியமானது லாங்டாக் கால்வாய் (Canal Longudoc) ஆகும். பல திறப்பட்ட சுங்கவரி முறைகள் உள்நாட்டு வியாபாரத்திற்குத் தடையாக இருந்தன. ஆகவே, அவைகளை ஒன்றுசேர்த்துவைக்க நடவடிக்கை மேற்கொண்டார்.

விவசாயப் பெருக்கத்திலும் கால்பர்ட் மிக்க அக்கறை கொண்டிருந் தார். குறிப்பாகக் குதிரை வளர்ப்பில் மிகுந்த கவனம் செலுத்திஞர். ஆனால், குடியானவர்களின் நிலை முன்னேற்றம் அடைவதற்கு வேண்டிய வழிவகைகளை அவர் செய்யவில்லை என்பது இங்குக் குறிப்பிடுதல் அவசியமாகும்.

[1] 'கேம்பிரிட்ஜ் தற்கால வரலாறு', வால்யூம் I, பக்கம் 14 (Cambridge Modern History, Vol. I, page 14).

கால்பர்ட், நீதி வழங்கும் முறையில் காணப்பட்ட குறைகளைப் போக்கவும் முனைந்தார். நீதி வழங்கும் முறையைச் சீர்படுத்தப் பல சட்டங்களை இயற்றினர். இச் சட்டங்களின் தொகுதிக்கு கோட் லூயி (Code Louis) என்ற பெயர் அளிக்கப்பட்டது. இத் தொகுதியில் காணப்படும் முறைகளின் அடிப்படைக் கோட்பாடுகளைத்தான் இன்றும் ஃபிரான்சு நாட்டின் நீதிமன்றங்கள் கடைப்பிடித்து வருகின்றன.[1]

பதினான்காம் லூயி கல்வி, கலை ஆகியவை வளர்ப்பதில் மிகுந்த அக்கறை கொண்டவர் என்பதை முன்னரே குறிப்பிட்டோம். அவர் காலத்தில் ஃபிரான்சு நாடு இத் துறையில் பெரும்புகழ் எய்தியது. அவருடைய அரசவையினைப் பல்வேறு துறைகளிலும் பெரும்புகழ் பெற்றவர்களைக்கொண்டு அலங்கரித்தார். அவருடைய காலம் ஃபிரெஞ்சு இலக்கியத்தின் பொற்காலம் என்று கூறப்படுகிறது. இராசைன் (Racine), மோலியர் (Moliere) போன்ற சிறந்த நாடக ஆசிரியர்களும், பாயிலு லாபாண்டேன் போன்ற கவிகளும், செயின்ட் சைமன் (St. Simon) போன்ற வரலாற்று ஆசிரியர்களும், பாஸ்கல் (Pascal), தெகார்த்தே (Descartes) போன்ற தத்துவ ஞானிகளும், நிதித்துறையில் கைதேர்ந்த கால்பர்ட் அவர்களும், போசோ (Boussuet), ஃபெனலன் (Fenelon) போன்ற இறைமை இயல் வல்லுநர்களும், காண்டி, டூரின் போன்ற ஒப்பற்ற போர்வீரர்களும், லூவா (Louvois) என்ற சிறந்த போர்த்துறை அமைச்சரும், வாபன் (Vauban) என்ற படைத்துறைக் கட்டுமான வேலைகளைத் திட்டமிட்டு வகுத்தமைப்பவரும் இவருடைய அவையில் வைத்துப் போற்றப்பட்டனர். கால்பர்ட் ஐந்து புதிய கலைக்கழகங்களை (Academics) அமைத்து விஞ்ஞானம், கட்டடக்கலை, இசை ஆகியவற்றின் வளர்ச்சிக்குப் பெரும் பாடுபட்டார். கவிஞர்கள், கலைஞர்கள், விஞ்ஞானிகள் ஆகியோருக்கு உதவிப்பணம் வழங்கினர். அறிஞர்கள் வாயிலாக மக்கள் கருத்தைக் கட்டுப்படுத்துவதே அவருடைய முக்கிய நோக்கம் என்பதை இங்குக் குறிப்பிடுதல் அவசியமாகும்.

பதினான்காம் லூயி பகட்டாரவாரத்தில் மிக்க நாட்டங் கொண்டவர். அவரைப் பகட்டாரவாரப் பித்தன் என்று கூறுகிறார்கள்.[2] லூயி மூன்று அரண்மனைகளைக் கட்டிமுடித்தார். அவற்றுள் மிகச் சிறந்தது பெருஞ் செலவில் கட்டப்பட்ட வார்சேயி (Versailles) அரண்மனையாகும். கண்ணாடி அறைகளையும், ஓவியங்கள்

1 ஃபிஷர், 'ஐரோப்பிய வரலாறு', பக்கம் 667 (Fisher, A History of Europe, page 667).

2 டேவிஸ், 'உலக வரலாற்றின் சுருக்கம்' பக்கம் 420 (Davis, 'An Outline History of the World', p. 420).

தீட்டப்பட்ட சுவர்களையும், தோட்டங்களையும், நீர் ஊற்றுகளையும் கொண்டிருந்த அவ்வரண்மனையைப் போற்றுதவர் எவருமிலர். அதுவே அரசருடைய கொலுவிருக்கையாக ஏற்பாடு செய்யப்பட்டது. ஏனைய ஐரோப்பிய அரசர்கள் இவ்வரண்மனையைப் போன்ற அரண்மனைகளைத் தங்கள் நாட்டில் கட்ட முனைந்தனர்.

லூயி மன்னரின் நேராட்சியின் முதல் பன்னிரண்டு ஆண்டுகள் தொழில், வாணிகம், விவசாயம் ஆகிய துறைகளில் வளர்ச்சியைக் கண்டன. அதற்குப் பிறகு அரசருடைய மனம் படைத்துறையில் புகழ் தேடுவதை நாடியது. இதற்குக் காரணமாயிருந்தவர் லூவா என்ற பெயருடைய போர்த்துறைத் தலைவராவார். அவர் அரசரைப் போருக்கான முயற்சிகளில் பொருள் செலவிடுமாறு தூண்டினுர். அவர் ஃபிரெஞ்சுப் படையினைச் சீர்திருத்தி அமைத்தார். ஃபிரெஞ்சுப் படையினை அரசருடைய நேரடி அதிகாரத்திற்குட்படுத்தினுர். பிரபுக்களின் செல்வாக்கு அழிக்கப்பட்டது. நவீன போர்க்கருவிகள் பயன்படுத்தப் பட்டன. போர்வீரர்களுக்குக் கடும் பயிற்சி அளிக்கப்பட்டது. போர்க் காலத்தில் சேனைகள் துரிதமாகச் செல்வதற்காக ஆங்காங்கே படைக் கலக் கொட்டில்கள் ஏற்படுத்தப்பட்டன. அக்காலத்தில் பிரபுக்கள் போர்வீரர்களைச் சேகரித்தும் அவர்களுக்குத் தக்க கருவிகளைக் கொடுத்தும் வந்தனர். அதற்காக அரசாங்கத்தினிடம் அவர்கள் பொருள் பெற்று வந்தனர். பொதுவாக அவர்கள் வைத்துப் பேணிவரும் வீரர்களின் எண்ணிக்கையைவிட அதிகமான எண்ணிக்கையை அரசாங்கத்திற்குக் காட்டி பெரும் பொருளை அவர்கள் ஈட்டி வந்தனர். லூவா மேற்பார்வையாளர்களை நியமித்து இவ் வழக்கத்தை ஒழித்தார். போரில் காயமுற்று வேலையிழந்த வீரர்களுக்கு உதவி செய்வதற்காக அவர் ஹோட்டல் தெ இன்வலிட் (Hotel de Invalides) என்ற ஸ்தாபனத்தை ஏற்படுத்தினுர். இவ்வாருக, ஃபிரெஞ்சு சேனையின் தரத்தைப் பெருமளவில் உயர்த்தினுர்.

**மதக்கொள்கை**

அரசியல் விவகாரங்களில் உயர்வதிகாரம் பெற்ற லூயி மன்னர் மத விஷயங்களிலும் ஒப்புயர்வற்றவராக விளங்க எண்ணியது இயற்கையே யாகும். மதஸ்தாபனங்கள் அனைத்தும் தன்னுடைய ஆணைக்குட்பட்டு நடக்கவேண்டும் என்பது அவரது பேரவாவாகும். எனவே, 1682-ல் காலிகன் லிபர்டிஸ் (Gallican Liberties) என்ற அறிக்கையை விடுத்தார். கத்தோலிக்கர்கள் தலைவரான போப் ஆண்டவர் மத விவகாரங்களில் மட்டுமே அவருடைய அதிகாரத்தைச் செலுத்தவேண்டும் என்றும், அவருக்கு அரசரைப் பதவியிலிருந்து நீக்க உரிமையில்லை என்றும், மத விவகாரங்களில்கூட அரசர் இசைவு பெற்ற அதிகாரம்

மட்டுமே அவர் செலுத்தவேண்டுமென்றும் அதில் குறிப்பிட்டார். போப் இவ்வறிக்கையை எதிர்த்தார். ஆயினும், லூயி விட்டுக் கொடுக்க வில்லை.

அக் காலத்தில் ஃபிரான்சில் ஜேன்சனிஸம் (Jansenism) என்ற மதவியக்கம் தோன்றியது. இவ்வியக்கத்தைச் சார்ந்தவர்கள் தங்களுடைய கருத்துகளை ஜேன்ஸன் என்ற மதகுரு ஆக்கிய நூல்களினின்றும் பெற்றனர். இவர்கள் கத்தோலிக்க மதத்தில் மிகுந்த பற்றுடையவர்கள். ஆனால், இவர்கள் தூய வாழ்க்கை முறையைக் கையாண்டு வந்தனர். இவ் வியக்கத்தில் பாஸ்கல், இராசைன் போன்ற அறிஞர்கள் கலந்துகொண்டனர். லூயி, இவ்வியக்கத்தினால் தன்னுடைய அதிகாரங்கள் பாதிக்கப்படும் என்று எண்ணியதால், இதனை ஒடுக்கினார்.

அடுத்தபடியாக அவருடைய கவனம் ஃபிரெஞ்சு பிராடஸ்டண்டுகள் (Protestants) பக்கம் திரும்பியது. ஃபிரெஞ்சு மக்கள் பெரும்பாலோர் கத்தோலிக்கர்கள். அவர்களில் ஒருசிலரே பிராடஸ்டண்டு மதத்தைப் பின்பற்றிவந்தனர். இவர்கள் யூகனோக்கள் (Huguenots) என்று அழைக்கப்பட்டனர். ஒரு காலத்தில் இவர்கள் ஒரு பெரும் சக்தியாக விளங்கினார்கள். ஆனால், இப்பொழுது அவர்களுடைய எண்ணிக்கை குறைந்துவிட்டது. சமுதாயத்தில் அவர்களுக்கு இருந்த செல்வாக்கும் படைபலமும் அழிந்துவிட்டன. மன்னரிடம் உண்மை விசுவாசம் கொண்டிருந்தார்கள். அவர்கள் கவனமெல்லாம் இப்பொழுது வியாபாரம், தொழில் ஆகிய துறைகளிலேயே செலுத்தப்பட்டது. ஆகவே, அத்தகைய மக்களைக் கொடுமை செய்வதற்குக் காரணமாயிருந்தது அவருடைய மதவெறி என்பதில் ஐயமில்லை. நாட்டில் மத விவகாரங்களிலும் ஒற்றுமையை ஏற்படுத்தவேண்டும் என்ற எண்ணத்தினாலும் அவர் யூகனோக்களைத் துன்புறுத்தினார். முதலில் இவருடைய குழந்தைகளின் வளர்ப்புத் தாயாகவிருந்து பிறகு இவருடைய மனைவியாகிய மாதாம் தெ மென்டனான் (Madame de Maintenon) இவ்வகையில் இவருக்கு உதவியாக இருந்தார். யூகனோக்கள் பலவகையில் துன்புறுத்தப்பட்டனர். அவர்கள் உரிமைகள் பறிக்கப்பட்டன. அவர்களுடைய சொத்துகள் பறிமுதல் செய்யப்பட்டன. அவர்களுடைய குழந்தைகள் கடத்திச் செல்லப்பட்டனர். அவர்களுடைய தொழுகை இல்லங்கள் அழிக்கப்பட்டன. அரசு பணியில் அவர்கள் ஈடுபட அனுமதிக்கப்படவில்லை. அவர்கள் வீடுகளில் போர்வீரர்கள் தங்க ஏற்பாடு செய்யப்பட்டது. கத்தோலிக்க மதத்தைச் சேர விரும்பும் யூகனோக்களுக்குப் பொருள் அளிக்கப்பட்டது. இவைகளில் திருப்தி அடையாத லூயி மன்னர் 1685-ல் நான்டீஸ் ஆணையை (Edict of Nantes) நிராகரித்தார். யூகனோக்களின் எண்ணிக்கை மிகச் சொற்பமாக இருந்ததால் அவர்களுடைய மத உரிமைகளைக் காக்கவேண்டிப் பிறப்பிக்கப்

பட்ட இக் கட்டளை இனி அவசியமில்லை என்று வாதாடினர். இதன் விளைவாக யூகனேக்கள் இதுகாறும் அனுபவித்துவந்த மத சுதந்திரம் பறிபோயிற்று. இதற்குப் பிறகு ஃபிரான்சில் குடியிருக்க விருப்பங் கொள்ளாததால் அவர்களில் பெரும்பாலோர் நாட்டைவிட்டுச் சென்றனர். அவர்களுக்கு இங்கிலாந்து, ஹாலந்து, ஜெர்மனி போன்ற நாடுகள் புகலிடம் தந்தன. அவர்கள் அனைவரும் தொழிலிலும், வர்த்தகத்திலும் ஈடுபட்டிருந்ததால், அவர்கள் நாட்டைவிட்டுச் சென்றபின் ஃபிரெஞ்சு நாட்டின் தொழில்வளம் பேரளவில் குன்றியது. ஃபிரான்சு எதை இழந்ததோ அதை அந்நிய நாடுகள் பெற்றன.

### வெளிநாட்டுக் கொள்கை

லூயி நாடு பிடிக்கும் ஆசை கொண்டவர் என்று முன்னரே குறிப்பிட்டோம். இவ்வாசையின் விளைவாக ஃபிரான்சு நாடு பல போர்களை நடத்தியது. இப் பகுதியில் இப் போர்களைப்பற்றிக் கவனிப்போம்.

லூயி மன்னர் அயல்நாட்டு விவகாரங்களைப் பொறுத்தவளவில் இரு குறிக்கோள்களைக் கொண்டிருந்தார். முதலாவதாக ஃபிரெஞ்சு நாட்டின் எல்லைகளை அதனுடைய இயற்கையாக அமைந்த எல்லையான ரைன் நதி வரை பரப்பவேண்டும் என்று விரும்பினர். இரண்டாவதாக ஃபிரெஞ்சு நாட்டின் எதிரிகளான ஹாப்ஸ்பர்க்கு (Hapsburgs) வம்சத்தைச் சார்ந்த அரசர்களை ஒழிக்கவேண்டும் என்று விரும்பினர். இவ்வெண்ணங்களை நிறைவேற்றுவதற்காக இரண்டு வழிகளைக் கையாண்டார். முதலில் வேற்று நாட்டு அரச குடும்பங்களுடன் உறவு கொண்டு தம் நாட்டை விரிவுபடுத்த எண்ணினர். இவ்வெண்ணம்தான் இவருக்கும் ஸ்பெயின்நாட்டு இளவரசிக்கும் இடையே முன்னரே குறிப்பிட்ட திருமணம் நடைபெறுவதற்குக் காரணமாகும். போர் புரிந்து நாடுகளை வெல்லவேண்டுமென்பதே அவர் கைகொண்ட இரண்டாவது வழியாகும். அதன் விளைவாக லூயி மன்னர் நான்கு பெரும் போர்களில் ஃபிரான்சு நாட்டை ஈடுபடுத்தினர்.

அவற்றுள் முதலாவது உரிமைப்போராகும் (War of Devolution 1667—1668). 1659-ல் லூயி ஸ்பெயின் நாட்டின் மூத்த இளவரசியான மேரியா தெரீஸா என்பவரை மணமுடித்தார் என்று முன்னரே கூறினேம். அவருடைய உட்கருத்தை அறிந்துகொண்ட ஸ்பெயின் அரசர் அப்பொழுது ஒரு நிபந்தனையை விதித்தார். அதாவது, அவர் எக் காரணத்தைக் கொண்டும் ஸ்பெயின் நாட்டு அரசுக்கும் அல்லது அதனுடைய ஆளுகைக்குட்பட்ட எந்தப் பகுதிக்கும் உரிமை கொண்

டாடுதல் கூடாது என்பதாகும். இதற்குப் பதிலாக அவருக்கு ஒரு பெரும் தொகையைச் சீதனமாகக் கொடுக்க இசைந்தார். 1665-ல் ஸ்பெயின் மன்னர், நான்காவது ஃபிலிப் (Philip IV) காலமானார். உடனே லூயி ஸ்பெயினுக்குச் சொந்தமான நெதர்லாந்து நாட்டின் ஒரு பகுதி தன்னுடைய மனைவிக்குச் சேரவேண்டும் என்று உரிமை கொண்டாடினர். முன்னர் அறிவித்தபடி அவருக்குக் கொடுக்கவேண்டிய சீதனத் தொகையைக் கொடுக்கத் தவறியதால், தன்னுடைய வாக்குறுதிக்குத் தான் கட்டுப்படவியலாது என்று கூறினர். ஸ்பெயின் அரசருக்கு இரு மனைவிகளிருந்தனர். மூத்தவளின் மகள் மேரியா தெரீசாவாகும். இளையவளுக்கு சார்லஸ் என்ற பெயர்கொண்ட ஒரு மகனும், மார்கரெட் தெரீஸா (Margaret Theresa) என்ற பெயருடைய மகளும் இருந்தனர். ஸ்பெயின் மன்னரின் ஆளுகைக்குட்பட்ட நெதர்லாந்தின் ஒரு பகுதியில் வழங்கிவந்த சட்டத்தின்படி, இளையவளின் மகனைக் காட்டிலும் மூத்தவளின் மகளுக்கே சொத்துரிமை வழங்கப்பட்டது. அச் சட்டத்தைத் தனக்கு ஆதாரமாகக்கொண்டு லூயி அப் பகுதியின் ஆட்சியுரிமையைக் கொண்டாடினர். இவ் வுரிமையை அங்கீகரிக்க மறுத்த காரணத்தால் போர் மூண்டது. ஃபிரெஞ்சுப்படை நெதர்லாந்தில் முன்னேறியது. ஸ்பெயின் நாட்டின் படை பல இடங்களில் தோல்வியுற்றது. அச் சமயத்தில் ஃபிரான்சின் ஆக்கிரமிப்பைக் கண்டு அச்சமடைந்த ஹாலந்து, இங்கிலாந்து, ஸ்வீடன் ஆகிய நாடுகள் ஒப்பந்தம் (Triple Alliance) ஏற்படுத்திக்கொண்டன. இதன் முக்கிய நோக்கம் ஃபிரெஞ்சு நாட்டின் முன்னேற்றத்தைத் தடுப்பதேயாகும். இந் நாடுகளுடன் போர்புரியத் தயக்கம் கொண்ட லூயி ஸ்பெயினுடன் ஏக்ஸ் லா ஷாபேல் உடன்படிக்கை (Aix-la-Chapelle) செய்துகொண்டார். இதன்படி நெதர்லாந்துப் பகுதியில் சில இடங்களை ஃபிரான்சு பெற்றது. கைப்பற்றப்பட்ட இதர இடங்களை ஸ்பெயினுக்குத் திருப்பிக் கொடுக்க ஃபிரான்சு இசைந்தது.

லூயி நடத்திய இரண்டாவது போர் டச்சுப் போராகும் (1672—1678). லூயியினுடைய பெரும் பகைவர்கள் டச்சுக்காரர்களாவார்கள். இவர்கள் மூவரசு நேச ஒப்பந்தம் ஒன்றை ஏற்படுத்தி லூயியினுடைய முன்னேற்றத்தைத் தடை செய்தார்கள் என்று முன்னர் கண்டோம். உரிமைப்போர் முடிந்த பிறகு லூயி இதற்காக டச்சுக்காரர்களைத் தண்டிக்க எண்ணினர். மேலும், வர்த்தகத் துறையில் ஃபிரான்சின் போட்டியாளராக இருந்து அவருடைய வெறுப்பை டச்சுக்காரர்கள் தேடிக்கொண்டனர். லூயி மன்னர் கத்தோலிக்க மதத்தில் பற்றுள்ளவர். கத்தோலிக்க மதத்தைப் பின்பற்றும் நாட்டின் தலைவரும் ஆவார். டச்சுக்காரர்கள் பிராடஸ்டண்டு மதத்தினராதலால் இவ்விருவருக்குமிடையே பகைமையுணர்ச்சி வளரலாயிற்று. ஃபிரெஞ்சு நாட்டில் வல்லாட்சி நடைபெற்றுவந்தது. டச்சுக்காரர்கள் குடியாட்சி

முறையைக் கையாண்டு வந்ததாலும் இவ்விரு நாடுகளுக்கிடையே கசப்புணர்ச்சி வளர்ந்தது. போரிடுமுன் லூயி மன்னர் இங்கிலாந்து மன்னரான இரண்டாவது சார்லஸ் (Charles II) என்பவருடன் டோவர் இரகசிய ஒப்பந்தம் (Secret Treaty of Dover) ஒன்றைச் செய்துகொண்டார். அதன்படி லூயி மன்னருக்கு டச்சுக்காரர்களுடன் போர் நடக்குங்காலத்தில் உதவி புரிய அவர் ஒப்புதல் தெரிவித்தார். ஸ்வீடன் அரசாங்கத்திற்கு இலஞ்சம் கொடுத்து அந் நாட்டை மூவரசு நேச ஒப்பந்தத்தினின்றும் பிரித்தார். இந்த ஏற்பாடுகள் முடிவுற்ற பிறகு ஹாலந்து நாட்டின்மேல் படையெடுத்தார். யாதோர் உதவியுமின்றிப் போரிட்ட டச்சுக்காரர்கள் பல இடங்களை இழந்தனர். ஆம்ஸ்டர்டாம் நகருக்குப் பேராபத்து ஏற்பட்டது. டச்சுக்காரர்கள் வேறு வழியில்லாத காரணத்தால் சமாதானப் பேச்சினை ஆரம்பித்தனர். லூயி கண்மூடித்தனமாக அதனை நிராகரித்தார். அத் தருணத்தில் சில மாற்றங்கள் ஏற்பட்டன. அரசியல் துறையில் ஆற்றல் வாய்ந்த வில்லியம் ஆரஞ்சு (William of Orange) என்பவரைத் தலைவராக டச்சுக்காரர்கள் அமர்த்தினுர்கள். ஹாலந்து நாடு கடல் மட்டத்திற்குக்கீழ் இருப்பதால், கடல் நீர் நாட்டிற்குள் புகாவண்ணம் செய்கரைகள் (dykes) எழுப்பப்பட்டிருந்தன. அதனை உடைத்தெறியுமாறு வில்லியம் கட்டளையிட்டார். சமவெளிப் பிரதேசம் முழுவதும் நீர்மயமாயிற்று. இதனுல் ஃபிரெஞ்சுக்காரர்கள் பின்வாங்க நேரிட்டது. மேலும், தன்னுடைய திறமையால் வில்லியம் ஃபிரான்சுக்கெதிராக நேசநாட்டு ஒப்பந்தம் ஏற்படுத்தினுர். இதில் ஸ்பெயினும், ஜெர்மனியிலுள்ள பிராண்டன்பர்க்கும் கலந்துகொண்டன. இதற்கிடையில் இங்கிலாந்து லூயி மன்னருடன் சேர்ந்து போரில் ஈடுபட்டது. சில காலத்திற்குள் இங்கிலாந்தின் மக்கள் அதை எதிர்த்தனர். இங்கிலாந்தின் மக்கள் ஹாலந்து நாட்டுடன் சமாதானம் செய்துகொள்ளுமாறு அவர்களுடைய அரசாங்கத்தை வற்புறுத்தினுர்கள். 1678-ல் இப் போர் முடிவுற்றது. அப்பொழுது செய்துகொள்ளப்பட்ட நிமீஜியன் உடன்படிக்கைப்படி (Treaty of Nimeguen) ஃபிரான்சு வட எல்லையில் சில இடங்களையும், கிழக்கு எல்லையில் ஃபிரான்ஷி காம்டி (Franche Comte) என்ற பகுதியையும் பெற்றுத் தன்னுடைய நாட்டின் எல்லையை விரிவுபடுத்தியது. அதனுடைய புகழும் உயர்ந்தது.

லூயி நடத்திய மூன்ருவதுபோர் ஆக்ஸ்பர்க் ஒப்பந்த நாடுகளுடன் 1688-ல் மேற்கொண்ட போராகும் (War of the League of Augsburg). இதற்கிடையேயிருந்த சமாதான காலத்தில் ரியூனியன்ஸ் (Reunions) எனப்படும் பிரதேசங்களை அவர் தன்னுட்டுடன் இணைத்துக்கொண்டார். 1648-ல் வெஸ்ட்பேலியா உடன்படிக்கை ஏற்பட்டது என்பதை முன்னரே குறிப்பிட்டுள்ளோம். அதன்படி ஆல்சேஸ்

(Alsace), லொரேன் (Lorraine) பகுதிகளில் உள்ள சில மாவட்டங்கள் ஃபிரான்சுடன் இணைக்கப்பட்டன. அத்துடன் அப்பிரதேசங்களுக்கு இருந்த உரிமைகளை ஃபிரான்சு அனுபவிக்க வேண்டும் என்றும் அறிவிக்கப்பட்டது. அவ்வுரிமைகள் சரிவர வரையறுக்கப்படவில்லை. ஆகவே, லூயி தனக்குச் சாதகமான ஒரு நீதிமன்றத்தை அமைத்து இப் பிரச்சினைக்குத் தீர்வுகாண முனைந்தார். இறுதியில் ஆல்சேஸும், அத்துடன் ஸ்ட்ராஸ்பர்க் (Strassburg) என்ற ஜெர்மனியிலுள்ள நகரமும் ஃபிரான்சுக்குச் சேரவேண்டும் என்று முடிவுசெய்யப்பட்டது. அதேபோல் லக்ஸம்பர்க்கும் (Luxemburg) இத்தாலியிலுள்ள காசேலும் (Casale) ஃபிரான்சுடன் இணைக்கப்பட்டன. ஸ்ட்ராஸ்பர்க்கு, காசேல், லக்ஸம்பர்க்கு ஆகிய இடங்களை ஃபிரான்சுடன் இணைப்பதைத் தடுத்து நிறுத்த ஜெர்மனியில் இராடிஸ்பன் (Ratisbon) என்னுமிடத்தில் ஜெர்மனியிலுள்ள நாடுகளின் பிரதிநிதிகள் கூடினர். அப் பிரதிநிதிகள், மேற்கூறிய இடங்களை ஆளும் உரிமையை இருபது ஆண்டுகளுக்கு லூயி மன்னருக்கு வழங்கவேண்டும் என்றும், தவறினால் சண்டையிட நேரிடும் என்றும் அவர் அறிக்கை விடுத்தார். இறுதியில் அவர்கள் லூயியின் கட்டளைக்கு இணங்கினார்கள்.

பல இடங்களைக் கைப்பற்றிய பிறகுங்கூட லூயி கொண்டிருந்த நாடுபிடிக்கும் ஆசை குறையவில்லை. ஆகவே, அவருக்கு எதிராக நேசநாடுகள் கூட்டிணைவு ஒன்று ஏற்படுத்தப்பட்டது. இதற்கு ஆக்ஸ்பர்க்கு கூட்டிணைவு என்ற பெயரளிக்கப்பட்டது. அதில் ஹாலந்தும், ஸ்பெயினும், ஸ்வீடனும், வேறு சில நாடுகளும் கலந்துகொண்டன. ஆஸ்திரியப் பேரரசரும் சேர்ந்துகொண்டார். இதற்கிடையில் இங்கிலாந்தில் பெரும் புரட்சியொன்று ஏற்பட்டதன் விளைவாக, ஹாலந்து நாட்டின் தலைவரான வில்லியம் இங்கிலாந்து நாட்டுக்கு மன்னரானார். ஆகவே, இங்கிலாந்தும் இக் கூட்டிணைவில் கலந்துகொண்டது. 1688-ல் லூயி மன்னருக்கெதிராகத் தொடங்கப்பட்ட போரில் இங்கிலாந்தும் சேர்ந்துகொண்டது. லூயி மன்னர், இங்கிலாந்து மக்களால் துரத்தியடிக்கப்பட்ட இரண்டாவது ஜேம்ஸ் மன்னரை வில்லியத்திற்கு எதிராக ஆதரித்ததே இதற்குக் காரணமாகும். அதனால் இப் போருக்கு ஆங்கிலேய வாரிசுரிமைப் போர் (War of English Succession) என்ற பெயர் வழங்கப்பட்டது. அயர்லாந்திலும், நெதர்லாந்திலும், கடலிலும் இப்போர் நடைபெற்றது. 1688-ல் அயர்லாந்துக்கு ஓடிச்சென்ற ஜேம்ஸ் மன்னருக்கு உதவியாக அயர்லாந்து கத்தோலிக்கர்கள் திரண்டெழுந்தார்கள். மூன்றுவது வில்லியம் அயர்லாந்து சென்று ஜேம்ஸ் மன்னரை பாயீன் (Boyne) நதிக்கரையில் நடந்த சண்டையில் தோற்கடித்தார். 1690-ல் நடைபெற்ற கப்பற்சண்டையில் ஃபிரெஞ்சுக் கப்பற்படை ஆங்கிலேயக் கப்பற்படையினையும், டச்சுக்காரர்களின் கப்பற்படையினையும் பீசி ஹெட் (Beachy Head) என்னுமிடத்திற்கு அருகே

தோற்கடித்தது. 1692-ல் லூயி இங்கிலாந்து நாட்டின்மீது படையெடுக்கப் பெருமுயற்சி செய்தார். லா ஹோக் முனைக்கு (Cape La Hogue) அருகே நடந்த சண்டையில் ஆங்கிலேயர்கள் ஃபிரெஞ்சுக் கப்பற்படையைத் தோற்கடித்து, படையெடுப்பினைத் தடுத்து நிறுத்தினர்கள். ஐரோப்பாவில் நடந்த போரில் லூயி பல வெற்றிகளை அடைந்தார். அநேக கோட்டைகளைக் கைப்பற்றினர். இப் போர் அமெரிக்காவிலும் நடைபெற்றது. ஃபிரெஞ்சுக்காரர்களுக்குச் சொந்தமான அகேடியா (Acadia) ஆங்கிலேயர் கைவசமாயிற்று. 1697-ல் இரு தரத்தாரும் களைத்துப்போன காரணத்தால் போரை நிறுத்திக் கொண்டார்கள். அப்பொழுது செய்துகொண்ட ரிஸ்விக் உடன்படிக்கையின்படி (Treaty of Ryswick) ஃபிரான்சு இப் போர் தொடங்குவதற்கு முன்னர் கைப்பற்றிய இடங்களையும், பிற இடங்களையும் திருப்பிக்கொடுக்க இசைந்தது. மூன்ரும் வில்லியத்தை இங்கிலாந்தின் அரசராக லூயி ஏற்றுக்கொண்டார். ஜேம்ஸ் மன்னரும் அவருடைய வமிசத்தைச் சேர்ந்தவர்களும், இங்கிலாந்து நாட்டின் ஆட்சியைத் திரும்பக் கைப்பற்ற மேற்கொள்ளும் முயற்சியை ஆதரிப்பதில்லை என்றும் அவர் வாக்குறுதி கூறினர். எல்லைப்புறக் கோட்டைகளை டச்சுக்காரர்கள் தங்களுடைய சேனைகளைக்கொண்டு பலப்படுத்த அனுமதிக்கப்பட்டனர்.

லூயி துவக்கிய கடைசிப் போர், ஸ்பெயின் நாட்டின் வாரிசுரிமைப் போராகும். இப் போருக்கு அடிப்படைக் காரணம் ஸ்பெயின் நாட்டைத் தன்னுடைய ஆதிக்கத்தின்கீழ்க் கொண்டுவரவேண்டும் என்று அவர் கொண்ட ஆசையாகும். அப்பொழுது ஸ்பெயின் நாட்டை இரண்டாம் சார்லஸ் (Charles II, the King of Spain) என்பவர் ஆண்டு வந்தார். அவருக்குக் குழந்தை எதுவும் இல்லை. ஆகவே, அவருக்குப் பின் ஸ்பெயினை ஆளவேண்டியவரை நியமிப்பதில் ஐரோப்பிய அரசுகள் தங்களுடைய கவனத்தைச் செலுத்தலாயின. சார்லஸ் அரசருக்குப் பின்னர்ப் பட்டத்திற்கு வர மூவருக்கு உரிமையிருந்தது. அவர்களுள் ஒருவர் சார்லஸின் மூத்த சகோதரியை மணம் புரிந்துகொண்ட பதினன்காம் லூயி ஆவார். அடுத்து உரிமை கொண்டாடியவர் பவேரியா நாட்டுத் தலைவரான (The Elector of Bavaria) மாக்ஸ் இம்மானுவேல், (Max Emmanuel) ஆவார். இவர் சார்லஸின் இளைய சகோதரியான மார்கரெட் தெரீஸாவிற்கும், அவர் கணவர் பேரரசர் லியோபால்டுக்கும் (Leopold) பிறந்த மேரியாவின் கணவராவார். பேரரசர் லியோபால்டும் ஸ்பெயின் நாட்டு ஆட்சி உரிமையைக் கோரினர். இவர் இரண்டாம் சார்லஸின் தகப்பனரான நான்காம் ஃபிலிப்பின் இளைய சகோதரியின் மகனவார். இவர்களில் எவரொருவர் பட்டத்திற்கு வரினும், வாரிசுப் போரொன்று நடைபெறுவது திண்ணம் என்பதையும், வல்லமைச் சமநிலை (balance of

power) பாதிக்கப்படும் என்பதையும் அனைவரும் உணர்ந்திருந்தனர். அதே சமயத்தில் வல்லரசுகள் வாரிசுரிமைப் போர் ஏற்படுவதையும், வல்லமைச் சமநிலை பாதிக்கப்படுவதையும் தடுக்க எண்ணின. உரிமை கொண்டாடிய மூவரும் தங்கள் குடும்பத்தைச் சார்ந்தவர்களில் எவரேனும் ஒருவருக்குத் தங்களுடைய உரிமையை விட்டுக்கொடுக்க இசைந்தார்கள். இறுதியில் வில்லியம் மேற்கொண்ட முயற்சியின் விளைவாகப் பாகப் பிரிவினை உடன்படிக்கையொன்று ஏற்படுத்தப் பெற்றது. அதன்படி மாக்ஸ் இம்மானுவேலினுடைய மகன் ஜோசப் ஃபெர்டினண்டை (Joseph Ferdinand) ஸ்பெயின் நாட்டரசராக ஏற்றுக்கொள்ள லூயி இசைந்தார். ஃபிரான்சும், ஆஸ்திரியாவும் தங்களது உரிமையை விட்டுக் கொடுத்ததற்காக, ஸ்பெயினுக்குச் சொந்தமாக இத்தாலியிலுள்ள பகுதிகளைப் பெறவேண்டும் என்றும் முடிவு செய்யப்பட்டது. ஆனால், சில காலத்திற்கெல்லாம் ஜோசப் ஃபெர்டினண்டு அம்மை கண்டு இறந்துவிட்டார்; ஆகவே, இரண்டாவது பாகப்பிரிவினை ஒப்பந்தம் செய்துகொள்ளப்பட்டது. அதன்படி லியோபால்டின் இளைய மகன் சார்லஸ் ஸ்பெயின் நாட்டு அரசுக்கு உரிமை உடையவராக ஏற்றுக்கொள்ளப்பட்டார். இத்தாலியில் ஸ்பெயினுக்குச் சொந்தமாயிருந்த பகுதிகளை ஃபிரான்சு பெறவேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது. இவ்விரு ஒப்பந்தங்களும் சார்லஸின் ஒப்புதல் இன்றியே ஏற்படுத்தப்பெற்றன. இதனால் ஸ்பெயின் மக்கள் வெகுண்டெழுந்தனர். மேலும், அவர்களுடைய பேரரசைச் சிறு துண்டுகளாக்க விரும்பவில்லை; ஆகவே, அவர்களுடைய அரசரை இப்பிரச்சினைக்குத் தீர்வு காணுமாறு வேண்டினர். இதன் விளைவாக சார்லஸ் வாழ்விறுதி விருப்பப் பத்திரம் (Will) ஒன்று தயாரித்தார். அதன்படி லூயி மன்னரின் இளைய பேரனை ஃபிலிப், சார்லஸுக்குப் பின் ஸ்பெயின் நாட்டரசராக நியமிக்கப்பட்டார். சார்லஸ் இறந்த பிறகு அவருடைய விருப்பம் வெளியிடப்பட்டது. உடனே லூயி தன்னுடைய பேரனை ஸ்பெயின் நாட்டரசராக ஏற்றுக்கொண்டார். இந்நிகழ்ச்சி மட்டும் போரைத் தொடங்கி இருக்கமுடியாது. ஏனெனில், இதனால் வல்லமைச் சமநிலை பாதிக்கப்பட்டதென்று கூற இயலாது. ஏனெனில், அவரது இளைய பேரன்தான் ஸ்பெயின் அரசராக நியமிக்கப் பெற்றார். மூத்த பேரன் உயிருடன் இருக்க இளைய பேரன் ஃபிரான்சு நாட்டு அரசராக முடியாதல்லவா? ஆனால், லூயியினுடைய செய்கைகளில் சில போருக்குக் காரணமாயின. ஸ்பெயின் நாட்டரசரான பிறகுங்கூட பிலிப் ஃபிரான்சின் அரசுரிமையை இழக்கவில்லை என்று அறிவித்தார். ஃபிரான்சும், ஸ்பெயினும் ஒரு நாடு என்றே கருதிவந்தார். இதனின்றும் லூயி பிற்காலத்தில் ஃபிரான்சுடன் ஸ்பெயினை இணைத்து, ஃபிரான்சை வலிபொருந்திய நாடாக்க எண்ணினர் என்பது தெளிவாயிற்று. ஆதலால், வல்லமைச் சமநிலை பாதிக்கப்படும் என்று கருதிய நாடுகள் போருக்குத் தயாராயின. மேலும், லூயி ரிஸ்விக்

உடன்படிக்கையை மீறி நடந்தார். டச்சுக்காரர்களை எல்லைப்புறக் கோட்டைகளினின்றும் துரத்திஞர். இரண்டாவது ஜேம்ஸின் மகஞன ஜேம்ஸ் என்பவரே இங்கிலாந்து நாட்டரசுரிமை பெறத் தகுந்தவர் என்று அறிவித்தார். ஆகவே, வில்லியம் ஐரோப்பிய நாடுகளுக்குத் தூதனுப்பி, நேச நாடுகளின் கூட்டிணைவு ஒன்றை ஏற்படுத்திஞர். இதற்கு கிராண்ட் அலையன்ஸ் (Grand Alliance) என்ற பெயர் வழங்கப்பெற்றது. இதில் இங்கிலாந்து, ஹாலந்து, ஆஸ்திரியா, பிராண்டன்பர்க்கு, இன்னும் சில சிறு நாடுகள் சேர்ந்துகொண்டன. லியோபால்டின் இளைய மகன் சார்லஸ் என்பவரை ஸ்பெயின் நாட்டு அரசராக ஆக்குவதே அதனுடைய முக்கிய நோக்கமாகும்.

1702ஆம் ஆண்டு தொடங்கிய இப் போர் ஐரோப்பாவிலும், அமெரிக்காவிலும், அட்லான்டிக் பெருங்கடலிலும், மத்தியதரைக் கடலிலும் நடைபெற்றது. ஐரோப்பாவில் ஃபிரெஞ்சு சேனைகள் ஸ்பெயினுக்குச் சொந்தமான நெதர்லாந்தில் புகுந்தன. டச்சுக் காரர்கள் உதவியுடன் ஆங்கிலேயப் படைகள் மார்ல்பரோ பிரபுவின் கீழ் நெதர்லாந்தில் போரிட்டன. மார்ல்பரோவின் குறிக்கோள் ஃபிரெஞ்சுப் படையினை நெதர்லாந்தினின்றும் துரத்தியடிப்பதே யாகும். இதற்கிடையே ஃபிரெஞ்சுக்காரர்கள் பவேரியா நாட்டின் துணைகொண்டு ஆஸ்திரியாவின் தலைநகரான வியன்ஞவைக் கைப்பற்ற முயன்றனர். பேரரசருடைய வேண்டுகோளை ஏற்று மார்ல்பரோ பிரபு (Duke of Marlborough) தன் சேனையை மத்திய ஐரோப்பாவிற்கு நடத்திச் சென்ருர். பிலென்ஹீம் (Blenheim, 1704) என்னுமிடத்தில் ஃபிரெஞ்சு சேனையை முறியடித்து வியன்ஞவைக் காப்பாற்றிஞர். இவ் வெற்றி ஃபிரெஞ்சு சேனையின் மதிப்பைக் குறைத்துவிட்டது. பிறகு மார்ல்பரோ, நெதர்லாந்துக்குச் சென்று அங்கு ஃபிரெஞ்சுக்காரர்களை, ராமிலீஸ் (Ramillies), அவுடநார்டு (Oudenarde), மால்பிலேக் (Malplaquet) ஆகிய இடங்களில் தோற்கடித்து, அவர்களை அவ்விடத்தினின்றும் விரட்டிஞர். இதற்கிடையில் ஸ்பெயினுக்குச் சொந்தமான ஜிப்ரால்டர் ஆங்கிலேயர் கைவசமாயிற்று. 1708-ல் மைஞர்கா (Minorca) தீவும் ஆங்கிலேயர் கைவசமாயிற்று. போர் ஸ்பெயினிலும் நடைபெற்றது. நேச நாடுகள் பார்சிலோஞவைக் கைப்பற்றின. சேனைகளுடன் சென்ற லியோபால்டின் மகன் சார்லஸ், மூன்ரும் சார்லஸ் என்ற பெயருடன் ஸ்பெயினின் ஒரு பகுதிக்கு அரசராஞர். ஆஞல், இறுதியில் அல்மான்சா (Almanza) என்னுமிடத்தில் நடைபெற்ற சண்டையில் நேசநாடுகள் தோல்வியுற்றன. ஜிப்ரால்டரைத் தவிர மற்ற இடங்களினின்றும் அவர்கள் விரட்டப்பெற்றனர். ஃபிரான்சுக்குச் சொந்தமான மேற்கிந்தியத் தீவுகள் தாக்கப்பட்டன. பல இடங்களில் தோல்வியுற்ற

## ஸ்பெயின் அரச குடும்பத்தின் வழிவிளக்க அட்டவணை



லூயி மன்னர் 1709-ல் சமாதானத்தை விரும்பினுர். ஆனுல், நேச நாடு களின் நிபந்தனைகள் மிகக் கடுமையாக இருந்ததால், போரைத் தொடர்ந்து நடத்துவதென முடிவு கட்டினுர். 1711-ல் பிரிட்டனில் போரை விரும்பாத டோரி கட்சியினர் பதவியேற்றனர். மேலும், 1711-ல் ஆஸ்திரியாவின் சார்லஸ் பேரரசரானுர். அவர் ஸ்பெயின் நாட்டின் அரசராக அமர்த்தப்பட்டால் வல்லமைச் சமநிலை பாதிக்கப் படும் என்று உணர்ந்ததால், 1713-ல் பிரிட்டிஷ் அரசாங்கம் லூயி மன்னருடன் உட்ரெக்ட் சமாதானம் (Treaty of Utrecht) செய்து கொண்டது. அதன்படி ஐந்தாம் பிலிப், ஸ்பெயின் நாட்டு அரசராக ஏற்றுக்கொள்ளப்பட்டார். ஆனுல், அவர் ஃபிரெஞ்சு நாட்டை ஆளும் உரிமையை இழந்தார். ஸ்டூவர்டு குலத்தைச் சார்ந்த மூன்றும் ஜேம்சை ஆதரிப்பதில்லை என்று லூயி உறுதி கூறினுர். ஸ்பெயி னுக்குச் சொந்தமான நெதர்லாந்து, மிலான், சார்டினியா, நேபில்ஸ் ஆகிய இடங்கள் பேரரசர் சார்லஸுக்கு அளிக்கப்பட்டன. சிசிலித் தீவு சவாய் கோமகனுக்கு (Duke of Savoy) அளிக்கப்பட்டது. பிரிட்டன், ஸ்பெயினுக்குச் சொந்தமான ஜிப்ரால்டர், மைனுர்கா ஆகிய இடங்களையும், அமெரிக்காவில் ஃபிரெஞ்சுக்குச் சொந்தமான அகேடி யாவையும் பெற்றது. நியூஃபவுண்டுலாந்து, ஹட்சன் வளைகுடா ஆகிய பிரதேசங்களில் ஃபிரெஞ்சுக்காரர்கள் அனுபவித்திருந்த சில உரிமை களை விட்டுக்கொடுத்தனர். ஸ்பெயினுடன் பிரிட்டன் ஏற்படுத்திக் கொண்ட ஆசியென்டோ ஒப்பந்தத்தின்படி (Asiento Treaty) பிரிட்டிஷ்காரர்கள் ஸ்பெயினுக்குச் சொந்தமான அமெரிக்க நாடு களுடன் வியாபாரம் செய்யவும், அந் நாடுகளுக்கு அடிமைகளை விற்கவும் அனுமதி பெற்றனர்.

ஆனுல், பேரரசர் போரைத் தொடர்ந்து நடத்திவந்தார். ஃபிரெஞ்சுக்காரர்கள் சில வெற்றிகளை அடைந்தார்கள். ஆகவே, 1714-ல் பேரரசர் லூயி மன்னருடன் ராஸ்டாட் உடன்படிக்கை (Treaty of Rastadt) செய்துகொண்டார். இது உட்ரெக்ட் உடன் படிக்கையின் நிபந்தனைகளை வலியுறுத்தியது.

இவ்வாறுக ஐரோப்பா, ஃபிரெஞ்சு அரசரின் ஆக்கிரமிப்புகளால் ஏற்பட்ட ஆபத்தினின்றும் காப்பாற்றப்பட்டது. லூயி மன்னருடைய பெருமை அழிந்தது. ஃபிரெஞ்சு நாட்டின் நிதிநிலை சீரழிந்தது. போர் காரணமாக மக்கள்மீது கடுமையான வரிகள் விதிக்கப்பட்டன. இதனுல் அவர்கள் மனக்கசப்பு அடைந்தனர். இந்த நிலையில் லூயியினுடைய மகனும், இரண்டு பேரன்களும் இறந்தனர். லூயி மனமுடைந்து 1715-ல் காலமானுர். மிகச் சிறப்பாகத் தொடங்கிய ஆட்சி, லூயி தொடங்கிய போர்களின் விளைவாகச் சீர்குலைந்து மக்கள் மதிப்பை இழந்துவிட்டது.

### ருஷ்யாவில் வல்லரசு

ருஷ்ய நாடு ஐரோப்பாவின் கிழக்குப் பாகத்தில் பரந்து கிடக்கிறது. இடைக்காலத்தில் ருஷ்யா முக்கியத்துவம் பெற்ற நாடாக விளங்க வில்லை. அவர்களுடைய நாகரிகம் ஆசிய நாட்டு மக்களின் நாகரிகத் தைச் சார்ந்திருந்தது. வெகுகாலம்வரை அவர்களுடைய நாடு பல ஆட்சிப் பகுதிகளாகப் பிரிந்திருந்தன. அவைகளெல்லாவற்றையும் தார்த்தாரியர் (Tartars) என்ற மங்கோலியர்கள் தங்கள் ஆளுகைக்குட் படுத்தி இருந்தனர். அப்பகுதிகளில் ஒன்முன மஸ்கோவியின் (Muscouy) தலைவர், ருஷ்யத் தலைவர்கள் மங்கோலியர்களுக்குச் செலுத்தவேண்டிய கப்பப் பணத்தை வசூலித்து வந்தார். பிற்காலத் தில் மங்கோலியர் ஆதிக்கத்தை ஒழிக்க மேற்கொள்ளப்பட்ட இயக்கத் தின் தலைமைப் பொறுப்பை மஸ்கோவியின் சிற்றரசர் ஏற்பதற்கு அத்தகைய அதிகாரம் உதவியாக இருந்தது. மங்கோலியர்களை விரட்டியபின் எல்லா ருஷ்யத் தலைவர்களும் மஸ்கோவி சிற்றரசரின் ஆணைக்குட்பட்டு நடக்கலாயினர். இவ்வாறுக ருஷ்ய அரசு ஏற்பட்டது. ருஷ்யாவின் அரசர்கள் ஃஸார் (Czar) என்ற பட்டத்தைச் சூட்டிக் கொண்டனர். இதன் பிறகு ருஷ்ய அரசர்கள் தங்களுடைய நாட்டை விரிவுபடுத்துவதில் ஈடுபட்டனர். 16ஆம் நூற்றுண்டில் அரசாண்ட ஐவன் (Ivan, the Terrible) என்பவர் தார்த்தாரியர்களுக்குச் சொந்தமான காஜான் (Kazan), ஆஸ்ட்ரகான் (Astrakan) போன்ற சிறு நாடுகளை வென்றுர். பிறகு ருஷ்யர்கள் சைபீரியாவில் குடியேறி னர். பதினேழாம் நூற்றுண்டில் ருஷ்யர்களின் ஆட்சி பசிஃபிக் பெருங்கடல்வரை பரவலாயிற்று. மேலும், மேற்குப் பாகத்திலும் போலந்துக்குச் சொந்தமான பகுதிகளை வென்று ருஷ்ய அரசர்கள் தங்களுடைய நாட்டை விரிவுபடுத்தினுர்கள்.

1598-ல் ருஷ்யாவை ஆண்டுவந்த அரச குடும்பம் மரபற்றழிந்தது. ஆதலால், நாட்டில் குழப்பங்கள் அதிகரித்தன. வெளி நாடுகள் இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி ருஷ்ய விவகாரங்களில் தலையிட்டுத் தங்கள் செல்வாக்கைப் பெருக்கிக்கொண்டன. 1610-ல் போலந்து அரசாங்கம் ருஷ்யாவின்மீது தனது ஆதிக்கத்தை நிலைநாட்டியது. அயல்நாட்டின் தலையீடு நாட்டில் கிளர்ச்சியை உண்டாக்கியது. இதன் விளைவாகப் போலந்தின் ஆதிக்கம் அகற்றப்பட்டது. 1613-ல் ரோமனுவ் (Romanov) வமிசத்தைச் சேர்ந்த மைக்கேல் (Machael) என்பவரைத் தங்களரசராக ருஷ்யர்கள் தேர்ந்தெடுத்தனர். 1645-ல் அலெக்ஸிஸ் (Alexis) என்பவர் பட்டத்துக்கு வந்தார். அவருடைய ஆட்சியில் முக்கிய நிகழ்ச்சிகள் ஏற்பட்டன. ஏழ்மையில் வாடிக்கொண்டிருந்த மக்கள் பல கிளர்ச்சிகளைத் தொடங்கினுர்கள். 1649-ல் சட்டங்களைத் திருத்தியமைத்தார். அந்நியர்களைக் கொண்டு சிறந்த பயிற்சியைத்

தன் வீரர்களுக்கு அளிக்க ஏற்பாடு செய்தார். போர்ப் பயிற்சிக்காக வரவழைக்கப்பட்ட அந்நியர்கள் மேற்கத்திய நாகரிகப் பண்புகளை ருஷ்யாவில் புகுத்தலாயினர். அலெக்ஸிஸ் தன் முன்னோர்கள் வழியைப் பின்பற்றி நாட்டை விரிவுபடுத்தினார். ஸ்வீடனுடன் சேர்ந்து, போலந்துக்கு எதிராகப் போரிட்டு வெள்ளை ருஷ்யாவையும் சிறிய ருஷ்யாவையும் தன் நாட்டுடன் 1656-ல் இணைத்தார். பிறகு ஸ்வீடனுடன் போரிட்டார். இதை அறிந்த போலந்து 1656-ல் தான் ருஷ்யாவுடன் செய்துகொண்ட வில்ன உடன்படிக்கையை (Treaty of Vilna) நிராகரித்தது. இரண்டு பகைவர்களுடன் ஒரே சமயத்தில் போரிடுவது உசிதமன்று என்று எண்ணிய அலெக்ஸிஸ் ஸ்வீடனுடன் சமாதானம் செய்துகொண்டார். இதன்படி ருஷ்யா, பால்டிக் கடலையும் பின்லாந்து வளைகுடாவையும் பயன்படுத்தும் உரிமையை இழந்தது. இறுதியில், அலெக்ஸிஸ் போலந்துடன் சமாதானம் செய்துகொண்டார். அதனால் சில பகுதிகளைப் போலந்திடமிருந்து பெற்றார்.

அலெக்ஸிஸ் மறைவிற்குப் பின்னர் 1676-ல் மூன்றாம் தியோடர் (Theodore III) பட்டத்திற்கு வந்தார். 1682-ல் குழந்தையேதுமின்றி அவர் இறந்தார். அவருக்கு ஐவன், பீட்டர் என்ற இரு சகோதரர்கள் இருந்தனர். அவர்களிருவரும் வெவ்வேறு தாய் வயிற்றில் பிறந்தவர்கள்; அப்பொழுது ஐவனுக்கு வயது பதினாறு; பீட்டருக்கு வயது பத்து. ஐவன் மிக்க பலவீனனாக இருந்ததால், மக்கள் பீட்டரை அரசராகத் தேர்ந்தெடுத்தார்கள். ஆனால், ஐவனின் தமக்கையான சோபியா தன்னுடைய தம்பி பட்டத்திற்கு வரவேண்டுமென்று கிளர்ச்சி செய்தார். இறுதியில் இரு சகோதரர்களும் அரசாளவேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது. 1696-ல் ஐவன் இறந்த பிறகு, பீட்டர் மட்டும் ஆட்சிசெய்துவந்தார். அவருடைய ஆட்சிக்காலம், தற்கால ருஷ்யாவின் வரலாற்றின் தொடக்கத்தைக் குறித்துக் காட்டுகிறது என்று கூறப்படுகிறது.

வரலாற்று ஏடுகளில் காணக்கிடக்கும் விசித்திர மனிதர்களுள் பீட்டரும் ஒருவராவார். உடல் வலிமை பெற்றவர். அவர் மகா முரடர். எதற்கும் கட்டுப்படாதவர். கொடுஞ் செயல்களைச் செய்வதற்கு அஞ்ச மாட்டார். அவருடைய சகோதரி சோபியாவை அடைத்து வைத்தார். அவருடைய மனைவியைக் கன்னிமாடத்தில் சேர்த்துவிட்டார். அவருடைய மகனை, தன்னை எதிர்த்த காரணத்திற்காகச் சித்திரவதை செய்து கடைசியில் கொன்றார். அவர் ஒரு குடிகாரர். ஆகவே, அவர் இறந்தபொழுது மக்கள் எல்லோரும் பேராறுதல் அடைந்தார்கள். அவரிடத்தில் சில நற்பண்புகளும் காணப்பட்டன. அவர் அயராது உழைக்கும் திறனைப் பெற்றிருந்தார். கடும் உழைப்பில் இன்பத்தைக்

காணும் பண்புடையவர். எவ்வித வேலையும் ஏற்றுச் செவ்வனே நடத்தும் திறம் பெற்றிருந்தார். அவர் உயர்ந்த பதவியிலிருந்த போதிலும், எந்த வேலையினையும் அவருடைய தகுதிக்குத் தாழ்ந்தது என்று கருதியதில்லை. விஞ்ஞானம், தொழில் ஆகியவற்றில் மிகுந்த அக்கறை காட்டி வந்தார். சில சமயம் காட்டுமிராண்டித்தனமாக நடந்துகொண்டிருந்தபொழுதிலும், ருஷ்யர்கள் மேலைநாட்டுப் பண்பு களை மேற்கொண்டு சிறப்பாக வாழவேண்டும் என்ற உயரிய நோக்கத்தைக் கொண்டிருந்தார். அந் நோக்கத்தை நிறைவேற்ற அரும்பாடு பட்டார். ஆதலால், அடில்லா என்ற கொடிய ஹூணைப் படைத் தலைவரிடம் காணப்பட்ட கேவலமான பண்புகளும், பதினுன்காம் லூயி பெற்றிருந்த உயரிய பண்புகளும் ஒருங்கே இவரிடம் சேர்ந்திருந்தன என்று கூறுவது முற்றிலும் உண்மை யாகும்.[1]

பீட்டரின் நோக்கங்களில் ஒன்று அவருடைய அதிகாரத்தைப் பெருக்குவதேயாகும். இதை நிறைவேற்றும்பொருட்டு வல்லாட்சியினை அமைத்தார். அரசர் எல்லோருக்கும் மேம்பட்டவர்; அவர் இவ் வுலகத்தில் எவருக்கும் கீழ்ப்படிந்தவரல்லர்; அவர் கடவுளைத் தவிர வேறொருவருக்கும் பதில் சொல்லும் பொறுப்புடையவரல்லர் என்று அவர் விடுத்த அறிக்கை ஒன்றில் குறிப்பிட்டார். அரசர் அதிகாரத்தை நிலைநாட்டுவதில் சில முட்டுக்கட்டைகள் இருப்பதை அவர் உணர்ந் திருந்தார். ஆகவே, அவர் முதலில் அவைகளை அகற்ற முற்பட்டார். வல்லாட்சியை அமைப்பதில் பெரிய முட்டுக்கட்டைகளாக விளங்கிய வர்கள் பிரபுக்களே ஆவார்கள். அதனுல் அவர்கள் அனுபவித்துவந்த உரிமைகளையும் சலுகைகளையும் ஒழித்தார். பிரபுக்களைக்கொண்ட டூமா (Duma) என்னும் சபையை அழித்தார். அரசாங்க அலுவலர்களை அமர்த்தும்பொழுது உயர் குடியில் பிறந்தவர்களுக்குத் தனிச் சலுகைகள் காட்ட மறுத்தார்.

பிரபுக்களின் செல்வாக்கைக் குறைத்த பிறகு ஸ்ட்ரெல்ட்சி (Streltsi) என்னும் மெய்க்காவற்படையை அழிப்பதில் தன் கவனத்தைச் செலுத்தினுர். இப் படையிலுள்ள வீரர்கள் சில சிவப் புரிமைகளைப் பெற்றிருந்தார்கள். இவர்கள் பெரும்பாலோர் சோம்பேறி களாகவும், திறமையற்றவர்களாகவும் இருந்தார்கள். மேலும், பீட்டர் புகுத்த விரும்பிய நூதன கருத்துக்களை எதிர்த்தனர். அவர்கள் தொடங்கிய கலகத்தை அடக்கி, கையிலகப்பட்ட அனைவரையும் தூக்கி லிட்டுக் கொன்ருர்.

[1] A. J. Grant, 'Europe—The Story of the Last Five Centuries' p. 624.

பீட்டருடைய அதிகாரத்தைப் பெருக்குவதற்குக் குறுக்கே இருந்த மற்ெறாரு தடை ருஷ்ய மத ஸ்தாபனமாகும். இந்த ஸ்தாபனத்தின் தலைவர் (Patriarch of Moscow) மதகுருமார்களால் தேர்ந்தெடுக்கப் பட்டார். இவருக்குச் சமூகத்தினரிடம் மிக்க செல்வாக்கு இருந்தது. இத்தகைய செல்வாக்குடன் தனித்தியங்குகிற மதத்தலைவர் வல்லாட்சி முறைக்கு முரணாகக் கருதப்பட்டார். ஆகவே, பீட்டர் மதத்தலைவர் பெற்றிருந்த அதிகாரங்களை அவரிடமிருந்து பிடுங்கி, அவற்றைப் புதிதாக ஏற்படுத்திய தூய சபைக்கு (Holy Synod) வழங்கினர். இச் சபையில் உள்ள உறுப்பினர் அனைவரும் அரசரால் நியமிக்கப்பட்ட மதகுருக்களாவார்கள். அரசரால் அமர்த்தப்பட்ட மதத்துறை சாராதவர் ஒருவர் அதனுடைய தலைவராக நியமிக்கப்பட்டார். இச் சபைக்கு மத விவகாரங்களில் முழுமையான அதிகாரம் வழங்கப்பட்டது. மதச் சொத்துக்களின்மீது மடாதிபதிகளுக்கு இருந்த அதிகாரம் நீக்கப் பெற்றது. மடத்துறவிகளுக்கு அரசாங்கமே சம்பளத் தொகையைக் கொடுத்துவந்தது. அப்பொழுதிலிருந்து மத ஸ்தாபனம் அரசருடைய உண்மை ஊழியர்களுள் ஒன்றாக மாறியது.

அதன் பிறகு பீட்டர், ஆட்சி முறையை அவருடைய கருத்துக்கு ஏற்றவாறு திருத்தியமைக்க முற்பட்டார். ருஷ்யப் பிரபுக்கள் அடங்கிய சபையைக் கலைத்தார் என்று முன்னரே குறிப்பிட்டோம். அத்துடன் ஏனைய மக்கட் பிரிவுகளின் பிரதிநிதிகளைக் கொண்ட மற்ெறாரு சபை யினையும் ஒழித்துக் கட்டினர். அவைகளுக்குப் பதிலாக, ஆட்சி முறை யில் தனக்கு உதவியாக இருக்கும்பொருட்டு ஓர் ஆலோசனைச் சபையை ஏற்படுத்தினர். அடிக்கடி போர் காரணமாக ருஷ்யாவைவிட்டுச் செல்லவேண்டியதாய் இருந்ததால் பீட்டர் ஆட்சி முறை சார்ந்த சபை யொன்றை (Administrative Senate) ஏற்படுத்தினர். அவர் தலைநகரில் இல்லாத காலத்தில் எல்லா அதிகாரங்களையும் இச் சபை பெற்றிருந்தது. ஆட்சிமுறை ஒழுங்காக அமையும் பொருட்டு, மைய ஆட்சி முறையை ஒன்பது துறைகளாகப் பிரித்தார். அவைகள் ஒவ்வொன்றினையும் காலேஜ் (College) என்றழைக்கப்பட்ட சிறு குழுவின் அதிகாரத்திற்குட்படுத்தினர். ருஷ்யா, எட்டுப் பகுதிகளாகப் பிரிக்கப்பட்டது. ஒவ்வொரு பகுதிக்கும் கவர்னர் ஒருவர் அமர்த்தப் பட்டார். வரி வசூல் செய்வதே அவருடைய முக்கிய வேலையாகும். தலத்தாபன ஆட்சி முறையும் திருத்தியமைக்கப்பட்டது. மேலைநாட்டுப் பாணியில் நகரசபைகள் ஏற்படுத்தப்பட்டன. ருஷ்ய நாடு பல மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டது. ஒவ்வொரு மாவட்டத்திலும் நடுத்தர வர்க்கத்தினரால் தேர்ந்தெடுக்கப்பட்ட சபையொன்று அமைக் கப்பட்டது. தன்னுடைய வல்லாட்சிக்கு உறுதுணையாக இரண்டு அமைப்புகளை ஏற்படுத்தினர். அவற்றுள் ஒன்று, இரகசியப் பாதுகாப்புப் படை (Police) ஆகும். மற்ெறான்று, இரண்டு லட்சம்

பேர் கொண்ட இராணுவப் படையாகும். இப் படையினருக்குப் பயிற்சி அளிக்க அந்நியர்களை வரவழைத்தார். அதனுடைய முக்கிய ஆணையர்கள் வெளிநாட்டவர்களாகவே இருந்தனர். படித்தவர்களும் திறமைசாலிகளுமே ஆணையர்களாக அமர்த்தப் பட்டனர்.

இவருடைய ஆட்சி ஒழுங்காக நடைபெறுவதற்குச் சீரான நிதி அமைப்பு அவசியமென்பதை நன்குணர்ந்தார். எல்லா வகுப்பினரும் வரி செலுத்த ஏற்பாடு செய்தார். எனினும், சாதாரண மக்களே அதிக வரி செலுத்தி வந்தார்கள். அரசாங்க வருவாயைப் பாதுகாக்க அதிகாரிகள் நியமிக்கப்பட்டனர். பொதுக் கணக்குகளைச் சீராக வைப்பதற்காக நில அலுவலகங்களை (Land offices) ஏற்படுத்தினர். ஊழல் நிறைந்த அதிகாரிகள் கடுமையாகத் தண்டிக்கப்பட்டார்கள். அரசாங்க வருமானத்தைப் பெருக்க மதுபானங்களை விற்கும் உரிமையை அரசாங்கமே ஏற்றுக்கொண்டது.

### பொருளாதார நடவடிக்கைகள்

பீட்டர், ருஷ்ய மக்களின் பொருளாதார நிலையை அபிவிருத்தி செய்யப் பல நடவடிக்கைகளை மேற்கொண்டார். அவர் சிறு பிள்ளையாக இருந்தபொழுதே தொழில் துறையில் நாட்டம் செலுத்தினர். மேல்நாட்டுத் தொழில்களை—குறிப்பாகக் கப்பல் கட்டும் தொழிலை—கற்றுக்கொள்வதற்காகத் தாமே அந் நாடுகளுக்குச் சென்றார். ஹாலந்து நாட்டில் ஒரு சாதாரணத் தொழிலாளியாகக் கப்பல் துறைகளில் வேலை பார்த்தார். ருஷ்ய மக்களை வெளி நாடுகளுக்குச் சென்று தொழில்முறைகளைக் கற்றுக்கொள்ளுமாறு தூண்டினர். வெளி நாடுகளிலிருந்து நூற்றுக்கணக்கான தொழிலாளர்களை வரவழைத்தார். அவர்களுக்கு அநேக சலுகைகளைக் காட்டினர். அவர் காலத்தில் இரும்புத் தொழில், நெசவுத் தொழில் ஆகியவை வளர்ச்சியடைந்தன. தோல் பதனிடும் தொழிலில் புதுமுறைகள் கையாளப்பட்டன. கப்பல் கட்டும் தொழிலில் அதிக அக்கறையை அவர் காட்டிவந்தார். ருஷ்யாவின் வர்த்தகத்தைப் பெருக்குவதற்கு பிரிட்டன், ஹாலந்து ஆகிய நாடுகளுடன் வர்த்தக உடன்படிக்கையைச் செய்துகொண்டார். ருஷ்ய வர்த்தகர்களின் நன்மைக்காக வியாபாரக் கம்பெனிகள் நிறுவப்பட்டன. சாலைகளை அமைத்தார். கால்வாய்கள் வெட்டினர். நாணய முறையில் சீர்கேடுகள் மலிந்திருந்ததால் வியாபாரம் வளர்ச்சியடையவில்லை என்பதைப் பீட்டர் உணர்ந்தார். ஆகவே, நாணய முறையில் சில மாற்றங்களை ஏற்படுத்தினர். தங்க நாணயங்களைத் தயாரிக்கவும், அவைகளின் தரத்தை அளவிடவும், தங்கசாலைகள் நிறுவப்பட்டன.

**சமூக நடவடிக்கைகள்**

மேலைநாட்டு நாகரிகத்தை ருஷ்யாவில் புகுத்தவேண்டுமென்பது பீட்டரின் தலையாய நோக்கமாக இருந்தது. அவர் காலத்தில் ஐரோப்பியர்கள் தாடி வளர்க்கும் வழக்கத்தைப் பெரும்பாலும் கைவிட்டிருந்தார்கள். ஆகவே, பீட்டர், ருஷ்யர்களும் தாடி வளர்க்கும் வழக்கத்தைத் கைவிடவேண்டும் என்று கட்டளை இட்டார். அவர், நாட்டு மக்களின் தலைவர்களை அழைத்துத் தம்முடைய கைகளினுலேயே அவர்களுடைய தாடியையும் நீண்ட மீசையையும் கத்தரித்துவிட்டார். அதற்குப் பெரும் எதிர்ப்பு ஏற்பட்டதால் தாடி வளர்ப்பதை அனுமதித்தார். ஆனுல், தாடியை வைத்திருப்பவர்களை அதற்கென வரி கட்டுமாறு கட்டாயப்படுத்தினுர். ருஷ்யர்கள் நீண்ட ஆடைகளை அணிவது வழக்கமாக இருந்தது. பீட்டர் மேல்நாட்டுப் பாணியில் ருஷ்யர்கள் ஆடைகள் அணியவேண்டும் என்று பணித்தார். நகர வாயில்களில் காவலாளிகளை நிறுத்தி நகருக்குள் செல்லும் ருஷ்யர்களின் ஆடைகளை முழங்கால் வரை கத்தரித்து விடுமாறு கட்டளையிட்டார். ருஷ்யப் பெண்களும் மேல்நாட்டவர்கள்போல் ஆடைகள் அணியவேண்டும் என்று கட்டாயப் படுத்தினுர். ருஷ்யப் பெண்களின் நிலை உயர்த்தப்பட்டது. கட்டாய மணம் தடை செய்யப்பட்டது. இதுகாறும் ருஷ்யப் பெண்கள் பிறர் பார்வையில் படாமல் வாழ்ந்து வந்தனர். ஆனுல், இவர் காலத்தில் பெண்கள் அரண்மனை விழாக்களில் கலந்துகொள்ள அனுமதிக்கப் பட்டனர். மேல்நாட்டு மக்களைப்போல் ருஷ்யர்கள் புகைபிடிக்கும் வழக்கத்தைக் கற்றுக்கொள்ளுமாறு கட்டளையிட்டார். அரசர் முன் மக்கள் முழங்காலிட்டு வணங்கும் வழக்கத்தையும் ஒழித்தார். ஐரோப்பிய நடன முறையைப் புகுத்தினுர். இதுவரை ருஷ்யர்கள் செப்டம்பர் முதல் தேதியினை வருடப்பிறப்பு நாளாகக் கொண்டாடினர். இனி ஐரோப்பியர்களைப்போல ஜனவரி முதல் தேதியினை வருட ஆரம்ப நாளாகக் கொள்ளவேண்டும் என்று கட்டளையிட்டார். மாஸ்கோ நகரில் ஒரு நவீன மருத்துவசாலையைக் கட்டினுர். நகரத்தின் சுகாதாரத்தைப் பெருக்குவதற்குச் சுகாதார அதிகாரிகளை அமர்த்தினுர். தீ விபத்தினின்றும் மக்களைக் காப்பாற்ற எல்லா வீடுகளையும் செங்கற்களால் கட்ட வேண்டும் என்று கட்டளையிட்டார்.

கல்வித்துறையில் பல குறிப்பிடத்தக்க முன்னேற்றங்கள் ஏற்படுவதற்கு வழிவகை செய்தார். கணக்கியல், நீர்வழிச் செலவுபற்றிய பாடங்களைப் போதிக்கும் பள்ளிகள் நிறுவப்பட்டன. ஃபிரெஞ்சு, ஜெர்மன் ஆகிய மொழிகளைப் பள்ளியில் போதிக்குமாறு பணித்தார். விஞ்ஞானத்தைப் பெருக்குவதற்கு ஏராளமான பொருள் செலவிடப் பட்டது. விஞ்ஞானக் கலைக்கழகம் (Academy of Science) ஒன்று ஏற்படுத்தப்பட்டது. ருஷ்ய மொழியின் எழுத்துத் தொகுதி சுருக்க வடிவமாக்கப்பட்டது.

ருஷ்யச் சட்டம் ஸ்வீடன் நாட்டுச் சட்டத்தில் காணப்பெற்ற கருத்துக்களுக்கேற்ருற்போல் மாற்றியமைக்கப்பட்டது. புதிய வாரிசுச் சட்டம் ஒன்று இயற்றப்பட்டது. அதன்படி விளைநிலம் முழுவதும் மூத்த பிள்ளைக்கே சேரவேண்டும் என்று அறிவிக்கப்பட்டது. இவ் வழக்கத்தை இங்கிலாந்து நாட்டில் மக்கள் கடைப்பிடித்து வருவதைப் பீட்டர் கண்டறிந்தார்.

மதத்துறையிலும் பல திருத்தங்களை ஏற்படுத்தினர். லூயி மன்னரைப்போல் அவர் மதவெறியர் அல்லர். ஆகவே, எல்லோருக்கும் தொழுகைச் சுதந்திரம் வழங்கினர். யூதர்களுக்கு இச் சுதந்திரம் வழங் கப்படவில்லை என்பது இங்குக் குறிப்பிடுதல் அவசியமாகும். எல்லா மக்களும் ஆண்டுக்கொருமுறை கோயிலுக்குச் சென்று தங்களுடைய பாவங்களைச் சமய குருமாரிடம் முறைப்படி தெரிவிக்கவேண்டும் என்று ஆணையிட்டார். ஞாயிற்றுக்கிழமையை ஓய்வு நாளாகப் பின்பற்றவேண்டும் என்று கூறினர்.

பீட்டர், லூயி மன்னரைப்போல் கட்டடம் கட்டுவதில் ஆர்வம் காட்டினர். பீட்டர்ஸ்பர்க்கு என்னும் புதிய நகரத்தைக் கட்டுவித்து அதனைத் தன்னுடைய தலைநகரமாக்கினர். அவ்விடத்தில் அழகிய மாளிகையொன்றையும் கட்டுவித்தார்.

### வெளிநாட்டுக் கொள்கை

பீட்டர் அரச பதவியேற்றபொழுது, ருஷ்யர்கள் காஸ்பியன் கடல், வெண்கடல் ஆகியவற்றின் வழியாகமட்டுமே கடல்வழி வர்த்தகம் மேற் கொள்ள வாய்ப்பிருந்தது. இவற்றுள் காஸ்பியன் கடல் ஓர் ஏரியாக இருப்பதாலும், வெண்கடல் பெரும்பாலும் உறைந்து கிடப்பதாலும், ருஷ்யர்களின் வியாபாரம் செழித்து ஓங்கவில்லை என்பதைப் பீட்டர் கண்டறிந்தார். ஆகவே, தம்முடைய கவனத்தை பால்டிக் கடல் பக்கமும், கருங்கடல் பக்கமும் திருப்பினர். அப்பொழுது பால்டிக் கடல் பிரதேசம் வலிமைபொருந்திய ஸ்வீடன் ஆட்சிக்குட்பட்டிருந்த தால், பீட்டர் துருக்கியின் ஆளுகைக்குட்பட்டிருந்த கருங்கடல் பிரதேசத்தைக் கைப்பற்ற முனைந்தார். அஜாவ் (Azov) என்ற துருக்கியர்களின் கோட்டையைக் கைப்பற்றுவதைத் தம் முக்கியக் குறிக்கோளாகக் கொண்டார். பீட்டரே பெருஞ் சேனையொன்றை 1695-ல் நடத்திச் சென்ருர். ஆனல், அதைக் கைப்பற்றும் முயற்சியில் தோல்வியுற்ருர். கப்பற்படை இல்லாததே தோல்விக்கு காரணமென்றறிந்த பீட்டர் அயல் நாடுகளிலிருந்து கப்பல் கட்டுவதில் வல்லுநர்களை வரவழைத்து ஒரு கப்பற்படையைக்

கட்டுவித்தார். 1696-ல் மீண்டும் துருக்கியுடன் போரிட்டுக் கப்பற் படையின் துணைகொண்டு அஜாவ் கோட்டையைப் பிடித்தார். அவ்விடத்தில் கப்பற்படைத் தளம் (Naval Station) ஒன்றை அமைத் தார். இவ் வெற்றிக்குப் பிறகு தேசியக் கடற்படையொன்று அமைக்க முடிவு கட்டினுர். மேலும், துருக்கியர்களை வென்று கருங்கடல் பிரதே சத்திலுள்ள கிரிமியா (Crimea) தீபகற்பத்தைத் தம் நாட்டுடன் இணைத்துக்கொள்ளப் பிற நாடுகளின் உதவி இன்றியமையாதது என்றும் அறிந்தார். ஆகவே, வெளிநாடுகளின் உதவிபெறத் தூதுக் குழு ஒன்றினை அனுப்பிவைத்தார். ஹாலந்து, இங்கிலாந்து போன்ற நாடுகளின் கப்பல்கட்டும் முறையையும், விஞ்ஞானம் முதலியவற்றை யும் கற்றுக்கொள்ள ருஷ்யர்களை அங்கு அனுப்பிவைத்தார். அவரே மாறுபெயருடன் அந் நாடுகளில் சென்று பல தொழில்களைக் கற்று வந்தார் என்று முன்னரே குறிப்பிட்டோம். தேசியக் கப்பற்படையை உருவாக்குவதில் வெற்றி கண்டார். ஆனுல், துருக்கியர்களுடன் நடத்த எண்ணியிருந்த போரில் மேலை நாடுகளின் உதவியைப்பெற அவர் செய்த முயற்சி தோல்வியுற்றது. பிற நாடுகளின் உதவியின்றி கிரிமியாவைக் கைப்பற்றமுடியாது என்று அறிந்த பீட்டர் தம்முடைய கவனத்தை பால்டிக் கடற்பக்கம் திருப்பிவிட்டார்.

அக்காலத்தில் ஃபின்லாந்து, (Finland), எஸ்தோனியா (Estonia), லாட்வியா (Latvia) ஆகிய பால்டிக் கரை நாடுகள் ஸ்வீடன் ஆட்சிக் குட்பட்டிருந்தன. மேலைநாடுகளுடன் தொடர்புகொள்ள இவ்விடங்களைத் தன் நாட்டுடன் இணைப்பது அவசியம் என்பதைப் பீட்டர் உணர்ந் திருந்தார். ஆகவே, ஸ்வீடனுடன் போரிடத் தயாரானுர். அப்பொழுது பதினைந்து வயது நிரம்பிய பன்னிரண்டாவது சார்லஸ் ஸ்வீடனில் ஆட்சி புரிந்துவந்தார். ஸ்வீடன் அரசர் சிறு பிள்ளையாக இருந்தமை யால் அவரைத் தோற்கடிப்பது எளிதான காரியமென்று பீட்டர் கருதினுர். இச் சண்டையில் தமக்கு உதவியாகப் பீட்டர் போலந்து நாட்டரசரையும் டென்மார்க்கு அரசரையும் சேர்த்துக்கொண்டார். சிறு பிள்ளையாக இருந்தபோதிலும் சார்லஸ் திறமை வாய்ந்தவர் ; திடசித்த முடையவர் ; இராணுவக் கலையினை நன்கு பயின்றவர். 1699-ல் சார்லஸ் டென்மார்க்கு நாட்டிற்குத் தம்முடைய சேனையை நடத்திச் சென்று அந் நாட்டைப் பணியவைத்தார். பிறகு ருஷ்ய நாட்டிற்குள் புகுந்து நார்வா (Narva) என்னும் இடத்தில் ருஷ்யர்களைத் தோற்கடித்தார். அதன் பிறகு போலந்து நாட்டின்மீது படையெடுத்துச் சென்று, அதன் தலைநகரைக் கைப்பற்றி, புதிய ஆட்சியொன்றை ஏற்படுத்தினுர். தொடர்ந்து அவர் பெற்ற வெற்றிகள், அவரை மேலும் வெற்றிகளைத் தேடுமாறு ஊக்கின. ஆகவே, மறுபடியும் ருஷ்யர்கள் பக்கம் அவரது கவனத்தைத் திருப்பினுர். மாஸ்கோ நகரத்தை நோக்கிப் பெருஞ் சேனையொன்றை நடத்திச் சென்றுர். ருஷ்ய நாட்டின் குளிர், போதிய

ஆகாரமின்மை, தேவையான போர்க்கருவிகள் பெற இயலாமை ஆகிய காரணங்களால் அவருடைய சேனை அதிக இன்னல்களுக்குட்பட்டது. இறுதியில், புல்டோவா (Pultowa) என்னும் இடத்தில் தோற்கடிக்கப் பட்டது. 1721-ல் போர் முடிவுற்றது. அப்பொழுது ஏற்படுத்தப்பட்ட நைஸ்டாட் உடன்படிக்கையின்படி (Treaty of Nystad) எஸ்தோனியா, லாட்வியா, ஃபின்லாந்தின் ஒரு பகுதி ஆகிய நாடுகளடங்கிய பால்டிக் கரைப் பிரதேசத்தை ருஷ்யா பெற்றது. ருஷ்யர்கள் இனி மேலைநாடுகளுடன் எளிதில் தொடர்புகொள்ள வாய்ப்பு ஏற்பட்டது. ஆகவே, இதனை மேலைநாடுகள் பக்கமாக அமைக்கப்பட்ட சன்னல்கள் (Windows to the West) என்று கூறுகிறார்கள்.

1725-ல் பீட்டர் இறந்தார். பல குறைகள் அவரிடம் காணப்பட்ட போதிலும், பிற்போக்குச் சக்திகள் நிரம்பியிருந்த ருஷ்யாவை நவீன நாடாக மாற்றியமைத்துப் பெரும்புகழ் தேடிக்கொண்டார். தற்கால நாடு பெற்றிருக்கவேண்டிய சிறப்புக் கூறுகளான பலம்பொருந்திய சேனை, கப்பற்படை, அமைதிக்காலப் பணித்துறை ஆகியவற்றைத் தம் பெருமுயற்சியினால் உருவாக்கி ருஷ்யாவிற்குத் தந்தார்.[1] கல்வி, தொழில் ஆகிய துறைகளிலும் ருஷ்யர்கள் முன்னேறவேண்டிய அவசியத்தைக் குறித்துக்காட்டியுள்ளார். இத்துணை நற்காரியங்களை அவர் செய்து முடித்ததால், அவரை மகா பீட்டர் என்று அழைக்கிறார்கள்.

பீட்டருக்கு அடுத்தபடியாக ஆட்சிசெய்த மிகச்சிறந்த அரசி இரண்டாவது காதரைன் (Catherine II, 1762—1796) ஆவார். பீட்டர் 1725-ல் மறைந்தார் என்று முன்னரே கூறினோம். இரண்டாவது காதரைன் 1762-ல் பதவியேற்றார். இதற்கிடையே ருஷ்யாவைப் பீட்டரின் மனைவி முதலாவது காதரைன் (1725—1727), அவருடைய பேரனான இரண்டாவது பீட்டர் (1727—1730), அவரது தமையன் மகளான ஆன் (Anne, 1730—1740), அவரது இளைய மகளான எலிசபெத் (Elizabeth, 1741—1762) ஆகியோர் ஆண்டனர். இவர்களெல்லோரும் பலவீனர்களாகவும், பிற்போக்குக் கருத்துடையவர்களாகவும் இருந்தனர். ஆன் காலத்தில் ஜெர்மானியர்களுடைய செல்வாக்குப் பெருகியது. முக்கியப் பதவிகள் எல்லாம் ஜெர்மானியர்களுக்கே கொடுக்கப்பட்டன. அவருக்குப்பின் ஆட்சிசெலுத்திய எலிசபெத் ஜெர்மானியர்களை வெறுத்தார். ருஷ்யர்களையே பெரும் பதவிகளில் அமர்த்தினார். இவர் காலத்தில் ருஷ்யா, பிரஷ்யா (Prussia) நாட்டுடன் போர் தொடங்கியது. எலிசபெத் அரசிக்குப் பிறகு மூன்றாவது பீட்டர் பட்டத்துக்கு வந்தார். அவர் மகா பீட்டரின் மூத்த மகளின்

[1] ஃபிஷர், 'ஐரோப்பிய வரலாறு', பக்கம் 723. (Fisher,' 'A History of Europe', page 723).

மகளுவார். அவர் களியாட்டங்களில் தமது கவனத்தைச் செலுத்தினுர். அவரை ஓர் அரைப் பயித்தியமாக மக்கள் கருதினுர்கள். ஆகவே, அவரை அரியணையிலிருந்து அகற்ற ஒரு கிளர்ச்சி ஏற்பட்டது. அவரது மனைவி, ஜெர்மனியிலுள்ள சிற்றரசர் குடும்பத்தைச் சார்ந்த காதரைன், கிளர்ச்சிக்காரர்களுக்கு உதவி செய்தார். பீட்டர் சிறையிலடைக்கப்பட்டு, பிறகு கொலை செய்யப்படுவதற்கும் இவர் உடந்தையாக இருந்தார். பிறகு காதரைனே அரசப் பொறுப்பேற்ருர். ஜெர்மனியைச் சார்ந்தவரென்ருலும், அவர் ருஷ்ய மக்களிடம் செல்வாக்குப் பெற்றிருந்தார். அவர்களுடைய நன்மதிப்பைப் பெறுவதற்குப் பல வழிகளைக் கையாண்டார். ருஷ்ய மொழியை நன்கு கற்றுத் தேர்ந்தார். ருஷ்ய மதத்தைத் தழுவினுர். எப்பொழுதும் ருஷ்யர்களுடைய யோசனையின்படியே நடக்கலானுர். அவர் நடத்தை கெட்டவர் என்ருலும் திறமை வாய்ந்தவர். நாட்டு நன்மையையே கோருந் தன்மையுடையவர்.

காதரைன் வல்லாட்சிமுறைக் கருத்துகளுக்கேற்ப ஆட்சி முறையைத் திருத்தியமைத்தார். நியாயம் வழங்கும் முறையைச் சீர்படுத்தினுர். மத ஸ்தாபனத்தை அவரது அதிகாரத்துக்குட்படுத்துவதற்காக அதனுடைய சொத்துகளைப் பறிமுதல் செய்தார். அவருடைய ஆட்சியை உண்மையுடன் ஆதரிப்பவர்களுக்குத் தக்க வெகுமதிகளை அளித்தார். மகா பீட்டர் ருஷ்யாவை மேற்கத்திய மயமாக்குவதற்கெனத் தொடங்கிய இயக்கத்தைக் காதரைன் பின்பற்றினுர். அக் காலத்தில் ஃபிரெஞ்சு நாட்டில் சிறந்து விளங்கிய கற்றறிந்த பெரியோர்களுடனும் தத்துவ நூலாசிரியர்களுடனும் தொடர்பு வைத்துக்கொண்டார். ஃபிரெஞ்சு மொழியினையும், பழக்க வழக்கங்களையும், கட்டடக் கலையினையும் ருஷ்யர்கள் கற்றுக்கொள்ளும்படி ஊக்குவித்தார். வெளிநாடுகளிலிருந்து வந்து ருஷ்யாவில் குடியேறும் மக்களுக்குப் பல சலுகைகள் காட்டினுர். வர்த்தகம், தொழில் ஆகிய துறைகளில் குறிப்பிடத்தக்க பெருக்கத்தை உண்டாக்கினுர். அநேக கல்விக்கூடங்களையும், பீட்டர்ஸ்பர்க்கில் ஒரு கலைக்கழகத்தையும் நிறுவினுர்.

அயல்நாட்டு விவகாரங்களில் மகா பீட்டரைப்போல் ஒப்பற்ற சாதனைகளைப் புரிந்தார். இத் துறையில் அவரது முக்கிய நோக்கங்களில் ஒன்று, ருஷ்யாவின் தெற்கெல்லையைக் கான்ஸ்டான்டிநோபிள் வரை பரப்புவது ஆகும். மற்ருென்று, போலந்து நாட்டில் அவருடைய ஆதிக்கத்தை நிலைநாட்டுவது ஆகும். அவருடைய முதல் நோக்கத்தை நிறைவேற்றும்பொருட்டுத் துருக்கியுடன் இரண்டு போர்கள் நடத்தினுர். முதல் போர் 1768-ல் தொடங்கி 1774-ல் முடிவுற்றது. 1774-ல் செய்துகொள்ளப்பட்ட குசக் கைனுர்ஜி (Kuchuk Kainardji) உடன்படிக்கையின்படி, ருஷ்யா அஜாவ் என்னுமிடத்தைத் திரும்பப் பெற்றது. அதனுடன் கருங்கடலுக்கும் காஸ்பியன் கடலுக்கும்

இடையே துருக்கிக்குச் சொந்தமான இடங்களையும் பெற்றது. ருஷ்யக் கப்பல்கள் பாஸ்போரஸ், டார்டனல்ஸ் ஆகிய கடற்கால்கள் வழியாகச் செல்ல அனுமதிக்கப்பட்டன. இரண்டாவது போர் 1787-ல் தொடங்கி 1792-ல் முடிவுற்றது. 1792-ல் ஏற்படுத்தப்பட்ட ஜாஸி உடன்படிக்கை யின்படி (Treaty of Jassy) காகசஸ் மலைத்தொடர் இவ்விரு நாடு களின் எல்லையாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. இதற்கிடையில் கிரிமியாத் தீபகற்பமும் ருஷ்யாவிற்குச் சொந்தமாயிற்று.

போலந்து விவகாரத்திலும் குறிப்பிடத்தக்க வெற்றியை அவர் அடைந்தார். 18ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் போலந்து ஒரு பெரிய நாடாக இருந்துவந்தது. அந் நாட்டு மக்கள் கத்தோலிக்க மதத்தைச் சார்ந்தவர்கள். அதன் அரசரைப் பிரபுக்களும் நடுத்தர மக்களும் சேர்ந்து தேர்ந்தெடுத்தார்கள். அவ்விருவகை மக்களின் பிரதிநிதிகளடங்கிய சபைக்குச் சட்டமியற்றும் உரிமையும் வழங்கப் பட்டிருந்தது. அச் சபை பிரபுக்களின் செல்வாக்கையும், நடுத்தர மக்களின் உரிமைகளையும் காப்பதிலேயே தன் கவனத்தைச் செலுத்தி வந்தது. மன்னரைத் தேர்ந்தெடுக்கும் முறை போலந்து நாட்டில் எக் காலத்திலும் அமைதியை நிலவவிடாமல் தடுத்தது. மேலும், அது அந்நிய நாட்டினரைப் போலந்தின் விவகாரங்களில் தலையிட வாய்ப் பினை உண்டாக்கியது. அவ்வாறே 1764-ல் காதரைன் அதனுடைய விவகாரங்களில் தலையிட்டு, தனது அன்பைப் பெற்றவர்களில் ஒருவ ரான ஸ்டானிஸ்லாஸ் போனியாடோவஸ்கி (Stanislaus Poniatowski) என்பவரை அந் நாட்டரசராக்கினார். அந் நாட்டு மக்கள் ஒற்றுமை யுடன் நடந்துகொள்வரேயாயின் தமது செல்வாக்கை அங்கு நிலைநாட்ட முடியாது என்று அவர் கருதினார். ஆகவே, அவர்களிடம் ஒற்றுமை வளரவிடாமல் தடுத்தார். 1768-ல் அவர்களிடம் ஏற்படுத்தப்பட்ட ஒப்பந்தத்தின்படி போலந்து அரசாங்கம் மேற்கொள்ளும் சீர்திருத் தங்கள் காதரைனுடைய அங்கீகாரம் பெறவேண்டுமென்று அறிவிக்கப் பட்டது. 1772-ல் போலந்தின் அழிவிற்குக் காரணமாயிருந்த மூன்று பிரிவினை ஒப்பந்தங்களில் முதல் ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டது. இதில் ருஷ்யா, ஆஸ்திரியா, பிரஷ்யா ஆகிய நாடுகள் கலந்துகொண் டன. அதன்படி போலந்துக்குச் சொந்தமான லிதுவேனியா (Lithuania) ருஷ்யாவிற்கும், காலிசியாவின் (Galicia) பெரும்பகுதி ஆஸ்திரியாவிற்கும், மேற்குப் பிரஷ்யா பிரஷ்யாவிற்கும் வழங்கப் பட்டன. இதன் விளைவாக, போலந்து தன் நாட்டின் கால்பகுதியினை இழந்தது. இனியும் இத்தகைய இழப்பு நேராதிருக்க, அந் நாட்டு மக்கள் தங்கள் அரசாங்கத்தைப் பலப்படுத்தத் தொடங்கினார்கள். காதரைன் இதனால் கோபமடைந்தார். 1793-ல் மறுபடியும் பிரஷ்யா வுடன் சேர்ந்துகொண்டு இரண்டாவது பிரிவினை உடன்படிக்கையை ஏற்படுத்தினார். பிரஷ்யா போசனையும் (Posen) மேற்குப் போலந்தை

யும் பெற்றது. ருஷ்யா கிழக்குப் போலந்து, தென்கிழக்குப் போலந்து ஆகியவற்றின் பெரும்பகுதியைப் பெற்றது. இத் திட்டத்தை எதிர்த்துப் போராடிய போலந்து மக்களைக் காதரைன் தோற்கடித்தார். 1795-ல் மூன்ருவது முறையாகப் போலந்து, வல்லரசுகளிடையே பிரித்துக்கொள்ளப்பட்டது. இதன் விளைவாகப் போலந்து நாடு ஐரோப்பிய வரைபடத்தினின்றும் மறைந்துவிட்டது. போலந்து நாட்டின் பெரும்பகுதி ருஷ்யாவுடன் இணைக்கப்பட்டதால், ருஷ்யாவின் எல்லை ஐரோப்பிய வல்லரசு நாடுகளின் எல்லைவரை விரிவுபடுத்தப் பட்டது.

1796-ல் காதரைன் மறைந்தார். ருஷ்யாவை ஐரோப்பிய நாடாக மாற்றிய பெருமை பீட்டரைச் சார்ந்ததாகும்; ருஷ்யாவை வல்லரசாக ஏற்படுத்திய பெருமை காதரைனைச் சார்ந்தது என்பதில் ஐயமேதும் இல்லை. ஆகவே, இவரையும் மகா காதரைன் என்று அழைக்கிருர்கள்.

### பிரஷ்யாவில் வல்லாட்சி

இடைக்காலத்தில் ஜெர்மனி பல சிறு நாடுகளை உட்கொண்டிருந்தது. அவைகள் எல்லாம் புனித ரோமானியப் பேரரசின் (Holy Roman Empire) கீழ் ஒன்றுசேர்க்கப்பட்டிருந்தன. ஆஸ்திரிய நாட்டரசர் அப்பேரரசின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். ஜெர்மனியிலுள்ள நாடுகளில் மிக முக்கியமானது பிரஷ்ய நாடாகும். அந் நாட்டு மக்களில் பெரும்பாலோர் ஸ்லாவ் (Slav) வகுப்பைச் சார்ந்தவர்களாவார்கள். இடைக்காலத்தில் டியூட்டானிக் (Teutonic) இனக் குழுவைச் சார்ந்த ஜெர்மானியச் சமயப் பணித்துறையாளர்கள் பிரஷ்யாவிற்குச் சென்று, அந் நாட்டின் அரசியல், மதம் ஆகிய விவகாரங்களில் அவர்களுடைய அதிகாரத்தை நிலைநாட்டினுர்கள். அவர்களின் தலைவர், 'பிரஷ்யாவின் பெருந்தலைவர்' (Crand Master of Prussia) என்ற பட்டத்தைச் சூட்டிக்கொண்டார். 15ஆம் நூற்ருண்டில் போலந்து அரசர் பிரஷ்யாவை வென்ருர். மேற்குப் பிரஷ்யா போலந்துடன் இணைக்கப்பட்டது. கிழக்குப் பிரஷ்யாவில் டியூட்டானிக் தலைவர்கள் தொடர்ந்து ஆட்சிசெலுத்த அனுமதிக்கப்பட்டார்கள். ஆனுல், அவர்கள் போலந்து அரசருக்கு அடங்கியிருக்கவேண்டும் என்ற நிபந்தனை விதிக்கப்பட்டது. 16ஆம் நூற்ருண்டில் ஹோயன்ஜோலர்ன் (Hohenzollern) குடும்பத்தைச் சார்ந்த ஆல்பர்ட்டு (Albert) என்பவர் பிரஷ்யாவின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். 1618-ல் அவருடைய சந்ததி அற்றுப்போனதால், ஜெர்மனியிலுள்ள பிராண்டன்பர்க் என்ற ஒரு சிறு ஆட்சிப் பகுதியை ஆண்டுவந்த ஹோயன்ஜோலர்ன் குடும்பத்தைச் சேர்ந்தவர் கிழக்குப் பிரஷ்யாவின் தலைமைப் பொறுப்பையேற்ருர். முதன்முதலில் பிராண்டன்பர்க் ஜெர்மானியர்கள்

அல்லாதாரை ஜெர்மனிக்குள் நுழையவிடாது தடுக்கும்பொருட்டு அமைக்கப்பட்ட எல்லைக் காவல் அரணாக விளங்கியது. பிறகு சிறிது சிறிதாக வளர்ச்சியடைந்தது. 1415-ல் புனித ரோமானியப் பேரரசர் அதனை ஆளும் உரிமையை ஹோயன்ஜோலர்ன் குடும்பத்தைச் சார்ந்த ஃபிரடெரிக் என்பவருக்கு வழங்கினார். அவருக்குப் பேரரசரைத் தேர்ந்தெடுக்கும் உரிமை அளிக்கப்பட்டதால் அவருக்கு 'எலக்டர்' (Elector) என்ற பட்டம் அளிக்கப்பட்டது. 1609-ல் பிராண்டன்பர்க்கின் தலைவர், தம்முடைய மனைவியின் உரிமையை ஆதாரமாகக் கொண்டு, கிலீவ் (Cleves) என்னும் பகுதியைத் தன் நாட்டுடன் இணைத்தார். இவ்வாறாகப் பதினேழாம் நூற்றாண்டில் பிராண்டன்பர்க்கை ஆண்டுவந்த ஹோயன்ஜோலர்ன் குடும்பத்தைச் சார்ந்த தலைவர், கிலீவ் என்னும் ரைன் நதிப் பகுதியினை 'டியூக்' (Duke) என்ற பட்டத்துடனும், பிராண்டன்பர்க்கை 'எலக்டர்' என்ற பட்டத்துடனும், கிழக்குப் பிரஷ்யாவை 'கிராண்ட் மாஸ்டர்' என்ற பட்டத்துடனும் ஆட்சி செய்துவந்தார். ரைன் நதிப் பகுதியினையும், பிராண்டன்பர்க் பகுதியினையும் பேரரசின் கட்டளைக்குட்பட்டும், கிழக்குப் பிரஷ்யாவைப் போலந்து மன்னரின் அதிகாரத்துக்குட்பட்டும் ஆட்சிபுரிந்தார்.

பதினேழாம் நூற்றாண்டில் சிறந்து விளங்கிய பிரஷ்யாவின் தலைவர் ஃபிரடெரிக் வில்லியம் (1640 - 1688) என்பவராவார். அவர் ஜெர்மனியில் நடைபெற்றுவந்த முப்பதாண்டுப் போரில் (Thirty Years War, 1618 - 48) கலந்துகொண்டார். அப் போர் முடிவுற்ற போது, கிழக்குப் பாமரேனியா, மாக்டிபர்க் (Magdeburg) ஆகிய இடங்களைப் பிரஷ்யா பெற்றது. 1657-ல் ஸ்வீடன் நாட்டுடன் சேர்ந்துகொண்டு போலந்தை வார்சா சண்டையில் தோற்கடித்தார். அதன் விளைவாக, போலந்து அரசர் கிழக்குப் பிரஷ்யாவில் பெற்றிருந்த அதிகாரம் நீக்கப்பட்டது. 1675-ல் ஸ்வீடனுடன் ஃபிரடெரிக் வில்லியம் போரிட்டார். ஸ்வீடனை ஃபெஹர்பெல்லின் (Fehrbellin) என்னுமிடத்தில் தோற்கடித்தார். அவ் வெற்றி பிரஷ்யாவின் கீர்த்தியைப் பெருக்குவதற்கு உதவியாயிருந்தது. மேற்கூறிய சாதனைகளின் விளைவாக 'மகா எலக்டர்' (Great Elector) என்னும் பட்டம் அவருக்கு அளிக்கப்பட்டது.

ஃபிரடெரிக் வில்லியம் அவர்களின் ஆட்சி இன்னுமொரு காரணத்தால் சிறப்பாகக் கருதப்படுகிறது. அவர் வல்லாட்சிமுறை வளர்வதற்கேற்ற சூழ்நிலையை உருவாக்கினார். பிரதிநிதிகளைக் கொண்ட சபைகள் நசுக்கப்பட்டன. அவைகளுக்குப் பதிலாகத் தனக்கு அடங்கி நடக்கும் சபையொன்றை ஏற்படுத்தினார். எல்லா அதிகாரங்களையும் அவரே ஏற்றுச் செயல்படுத்தினார். வல்லாட்சிக்கு ஆதாரமாக அமையுமாறு பலம் பொருந்திய சேனை யொன்றினை ஏற்படுத்

திஞர். பிரஷ்யாவின் பொருளாதார நிலேயில் அபிவிருத்தியை உண்டாக்கிஞர். வியாபாரம் பெருகுவதற்குக் கால்வாய்களே வெட்டிஞர். நாட்டுத் தொழில்களேக் காப்பாற்றும் வகையில் வெளிநாடுகளினின்றும் இறக்குமதியாகும் பொருள்களின்மீது கடுமையான வரிகளே விதித்தார். இவர் காலத்தில்தான் ஃபிரெஞ்சு யூகனேக்கள் வெளிநாடுகளில் அடைக்கலம் நாடினர். அவர்களே நல்ல முறையில் வரவேற்றுப் பிரஷ்யாவில் குடிவைத்தார். மேலும், அவர்களுக்கு அநேக சலுகைகளேக் காட்டிஞர். அவர்கள் எல்லோரும் சிறந்த கைவினைஞர்கள் என்று முன்னரே குறிப்பிட்டோம். ஆகவே, பிராண்டன்பர்க்கின் தொழில் முன்னேற்றம் அடைந்தது. மேலும், அவர்கள் பிரஷ்ய நாட்டின் படைகளில் சேர்ந்து, அந் நாட்டின் இராணுவ பலத்தையும் பெருக்கிஞர்கள்.

ஃபிரடெரிக் வில்லியம் இறந்த பிறகு மூன்றுவது ஃபிரடெரிக் பட்டத்துக்கு வந்தார். அவர் களியாட்டங்களில் மிக்க விருப்பங்கொண்டவர். அரசியல் திறம் அவரிடம் காணப்படவில்லே. எனினும், அவர் காலத்தில் நடைபெற்ற ஸ்பெயின் நாட்டின் வாரிசுப் போரில் பேரரசர் பக்கத்தில் சேர்ந்துகொண்டார். ஆகவே, பேரரசர் அவருக்கு அரசர் பட்டங் கொடுத்தார். இனி, பிராண்டன்பர்க் தலேவர்கள் பிரஷ்யாவின் அரசர் என்று அழைக்கப்படலாயினர். அப்பொழுதிலிருந்து பிரஷ்யாவின் ஆட்சித் தலேவர்கள் வல்லாட்சிமுறையை ஏற்படுத்துவதில் தீவிர முயற்சிகளே மேற்கொண்டனர்.

1713-ல் முதலாவது ஃபிரடெரிக் வில்லியம் பிரஷ்யாவின் அரசாங்கப் பொறுப்பேற்றுர். அவர் ஆட்சி முறையிலுள்ள சீர்கேடுகளேப் போக்கிஞர். சுதந்திரம், பிரதிநிதித்துவம் போன்ற கருத்துகளுக்கு அவராட்சியில் இடங்கொடுக்கப்படவில்லே. தம்முடைய செய்கைகளில் குறைகாணுவதை அவர் அனுமதிக்கவில்லே. தனக்கு உதவியாக இருக்கும்பொருட்டு ஆளும் வகுப்பு ஒன்றினே ஏற்படுத்திஞர். பிரஷ்யாவின் அரசாங்க அலுவலர்கள் வேலேயில் கவனக்குறைவாக நடந்தபொழுது கடுமையாகத் தண்டிக்கப்பட்டார்கள். பொருளேச் செலவிடுவதில் மிகக் கவனமாக நடந்துகொண்டதால் அவரால் ஏராளமான பொருள் சேர்க்க முடிந்தது. பிரஷ்யாவின் சேனேப் பலத்தைப் பெருக்கிஞர். அவர் பதவியிலமர்ந்தபோது பிரஷ்யாவின் வீரர்களின் எண்ணிக்கை 38,000 ஆக இருந்தது; அதை 84,000 ஆக உயர்த்திஞர். கடுமையான பயிற்சியை வீரர்களுக்கு அளிக்க ஏற்பாடு செய்தார். நவீன போர்க்கருவிகளேப் புகுத்திஞர். தகுதி வாய்ந்தவர்களே பதவியேற்றம் பெற்றனர்.

முதலாவது ஃபிரடெரிக் வில்லியம் இறந்த பிறகு அவருடைய மகஞன 28 வயது நிரம்பிய இரண்டாவது ஃபிரடெரிக் (1740—1786)

அரசப் பதவி ஏற்ருர். இவர் பிரஷ்ய நாட்டை உருவாக்கிய அரசர்களுள் தலைசிறந்தவராவார். குட்டையான உருவங்கொண்டவர்; எப்பொழுதும் அமைதியாக இருப்பவர்; நுண்ணிய திறம் பெற்றவர். அயராது உழைக்கும் தன்மையுடையவர். போர் புரிந்து புகழ் அடைவதில் மிக்க ஆர்வம் கொண்டவர். போர்க்காலத்திலும் சமாதான காலத்திலும் தலைமைப் பொறுப்பேற்று நடத்தும் ஆற்றல் பெற்றவர். அவரே பன்முறை தம்முடைய சேனையின் தலைவராக இருந்து போர் புரிந்து வெற்றியை அடைந்துள்ளார். இளமையில் இசை, கவிதை, நாட்டியம் ஆகியவற்றில் மிக்க ஈடுபாடு கொண்டிருந்தார். ஆகவே, இவரிடம் பெண்மை குடிகொண்டிருந்தது என்று பலர் கருதினுர்கள். ஆதலின், இவருடைய தந்தையார் இவரை ஆண்மகனுக்குரிய விளையாட்டுகளில் நாட்டம் செலுத்துமாறு கட்டளையிட்டார். அதனுல் வெறுப்படைந்த ஃபிரடெரிக் நாடுவிட்டு ஓட முற்பட்டார். ஃபிரடெரிக் வில்லியம் அவரைச் சிறையிலிட்டார். பிறகு அவரைக் கொல்லுமாறு ஆணை பிறப்பித்தார். இறுதியில் ஃபிரடெரிக் தந்தை காட்டும் வழியில் செல்ல இசைந்தார். கடுமையான படைப்பயிற்சி பெற்ருர். அதுவே அவர் புகழுக்குக் காரணமான வெற்றிகளை அடையக் காரணமாயிருந்தது. ஃபிரடெரிக் அக் காலத்தில் வாழ்ந்த அறிஞர்களை வெகுவாகப் பாராட்டினுர். அவர் கல்வியிலும் கலாசாரத்திலும் மிகுந்த அக்கறை காட்டி வந்தார். பெர்லின் கலைக்கழகத்தை அவர் புதுப்பித்தார். வால்டேர் (Voltaire) என்ற புகழ்பெற்ற ஃபிரெஞ்சு அறிஞரைத் தனது அவையில் வைத்துப் போற்றினுர். அவர் வரலாறு, கவிதைகள், கட்டுரைகள் ஆகியவற்றை எழுதியுள்ளார். ஆனுல், அவருக்கு ஜெர்மன் மொழியிலும் இலக்கியத்திலும் ஒரு வெறுப்பு ஏற்பட்டிருந்தது. ஆகவே, அவர் ஜெர்மானியர்களுடைய வெறுப்புக்காளானுர். அதே நேரத்தில் பிரஷ்யாவின் சேனையைக் கண்டு ஐரோப்பியர் அனைவரையும் நடுங்கச் செய்தும், பிரஷ்யாவைப் படைபலம் பொருந்திய நாடாக மாற்றியும், அவர் நிகழ்த்திய போர்களின் வாயிலாகப் பல முக்கியமான நிலப்பகுதிகளைக் கைப்பற்றியும் பிரஷ்யர்களுடைய அன்பைப் பெற்ருர். ஆகவே, இவர் ‘கெட்ட ஜெர்மானியர்; ஆனுல், நல்ல பிரஷ்யர்’[1] என்று விவரிக்கப்படுகிருர்.

ஃபிரடெரிக் காலத்தில் வல்லாட்சி முறை உச்சகட்டத்தை எய்தியது. ஆட்சியின் தொடக்கத்திலிருந்தே அவர் ஆட்சி முறையில் அதிக அக்கறை காட்டிவந்தார். அநேக வழிகளில் பதினுன்காவது லூயி மன்னரைப் பின்பற்றிவந்தபோதிலும், அவ்விருவருடைய ஆட்சி முறைகள் நேர்மாருன கருத்தை அடிப்படையாகக் கொண்டிருந்தன.

[1] ஃபிஷர், ‘ஐரோப்பிய வரலாறு’, பக்கம் 749 (Fisher, ‘A History of Europe’, p. 749).

லூயி மன்னர் தம்முடைய சொந்த நலன்களும் நாட்டினுடைய நலன்களும் ஒன்றெனக் கருதினர் என்று முன்னரே கவனித்தோம். ஆனால், ஃபிரடெரிக் தம்மை நாட்டினுடைய முதல் பணியாளன் என்று குறிப்பிட்டார். மற்றோர் இடத்தில், 'மக்களுக்காக அரசரேயன்றி அரசருக்காக மக்கள் அல்லர்' என்று எழுதியுள்ளார். மேலும், இவருக்குப் பகட்டாரவாரத்தில் யாதொரு விருப்பமும் இல்லை. மக்கள் வரிப்பணத்தைக் களியாட்டங்களில் வீணாக்கவும் இவர் விரும்பவில்லை. அரசாங்க அலுவலர்களை நியமிக்கும்போது மிகக் கவனமாக நடந்து கொண்டார். நற்றிறம் பெற்றவர்களையும், உண்மை விசுவாசத்துடன் நடப்பவர்களையுமே அமைச்சர்களாக நியமித்தார். அரசாங்க அலுவலர்களின் நடவடிக்கைகளை மிக விழிப்புடன் மேற்பார்வையிட்டுவந்தார். நாளின் பெரும் பகுதியை அரசப் பணிக்கே செலவிட்டார். இவருடைய ஆட்சிக்கு ஆதாரமாக அமையும்பொருட்டும், பகைவர்களை அச்சுறுத்தி வைத்திருக்கவும் இவருடைய படைபலத்தைக் குறையவிடாமல் கண்காணித்து வந்தார். நல்ல பயிற்சியினையும், சிறந்த போர்க்கருவிகளையும், ஒப்பற்ற ஆணையாளர்களையும் பெற்றிருந்த இவருடைய படை மற்றைய ஐரோப்பிய நாடுகளுக்கு ஓர் எடுத்துக்காட்டாக இருந்தது.

நீதிவழங்கு முறையை அவர் சீர்படுத்தினர். நீதிதவறிய நீதிபதிகளைத் தண்டித்தார். அவர்களைப் பதவியினின்றும் விலக்கினர். பிரஷ்யாவின் சட்டதிட்டங்களைத் தொகுத்தமைத்தார். கடுமையான தண்டனைகளை நீக்கினர். விசாரணையின்போது சித்திரவதை செய்யும் வழக்கத்தைப் போக்கினர்.

மக்கள் நலம் பேணும் வல்லரசராக இருந்ததால், அவர் மக்களின் பொருளாதார நிலையை உயர்த்துவதில் மிக்க கவனம் செலுத்தினர். சதுப்பு நிலங்களில் உள்ள நீரை வடித்துப் பயிர் செய்யும் நிலப்பகுதியைப் பெருக்கினர். பழமரங்கள், உண்ணத்தக்க வேரையுடைய செடிகள் ஆகியவற்றைப் பயிர் செய்யுமாறு தூண்டினர். புதிய விவசாய முறைகளைப் பின்பற்றுமாறு வற்புறுத்தினர். வெளிநாடுகளிலிருந்து வந்து பிரஷ்யாவில் தங்குவோருக்கு உதவி செய்தார். அடிமைத்தனத்தை ஒழிக்க முற்படவில்லை என்றாலும், குடியானவர்களைப் பிரபுக்களின் பிடியினின்றும் காப்பாற்றினர். இந் நடவடிக்கைகளின் விளைவாக விவசாயம் பெருகியது.

அவர் பிரஷ்யாவின் தொழில் வளத்தையும் பெருக்கினர். அவர் காலத்தில் பட்டுத் தொழில் சிறந்து விளங்கியது. வெளிநாடுகளினின்றும் இறக்குமதியாகும் பொருள்களின்மீது காப்புவரி விதிக்கப்பட்டது. வர்த்தகத்தைப் பெருக்குவதற்காகச் சாலைகளையும் கால்வாய்களையும் உண்டாக்கினர். அவர் காலத்தில் வரிச்சுமை மிகக் குறைவாகவே இருந்தது.

மத விவகாரங்களில் இவர் போற்றத்தக்க கொள்கைகளைக் கடைப் பிடித்தார். பிராடஸ்டன்டு மதத்தினராயிருப்பினும், கத்தோலிக்கர்களைத் துன்புறுத்தவில்லை. அதற்குப் பதிலாக அவர்களை அவர்கள் விருப்பம்போல் கோயில்கள் கட்ட அனுமதித்தார். துருக்கியர்கள் அவருடைய நாட்டில் வந்து தங்க நேருமிடத்து, அவர் கையாலேயே அவர்களுக்கு மசூதிகள் கட்டிக்கொடுக்க விரும்புவதாக ஓரிடத்தில் அவர் குறிப்பிட்டார். இருப்பினும், யூதர்களிடத்தில் கடுமையுடன் நடந்துகொண்டார்; அவர்கள்மீது பல கட்டுப்பாடுகளைச் சுமத்தினர்.

## வெளிநாட்டுக் கொள்கை

ஆனல், ஃபிரடெரிக், அவர் புரிந்த போர்களின் காரணமாகத் தான் இன்று எல்லோராலும் போற்றப்படுகிருர். பொருள் நிறைந்த கருவூலம், பலம் பொருந்திய சேனை, திறமைமிக்க அரசாங்க அலுவலர்கள் ஆகியவற்றை வாரிசு பொருள்களாகப் பெற்ற ஃபிரடெரிக் போர் தொடங்கியதில் வியப்பொன்றும் இல்லை. மேலும், அவர் போர் புரிந்து பெரும் புகழடைய எண்ணினர் என்று முன்னரே குறிப் பிட்டோம். அதனுடன் அவர் நாடு சேர்க்கும் ஆசை பெற்றிருந்ததால் பட்டத்துக்கு வந்தவுடன் ஆஸ்திரியா நாட்டுடன் போர் தொடங்கினர். அது ஆஸ்திரியா நாட்டு வாரிசுரிமைப் போர் என்று அழைக்கப் படுகிறது. ஆஸ்திரியாவின் பேரரசர் ஆருவது சார்லஸுக்கு ஆண் குழந்தை இல்லை. ஆனல், எல்லா வகையிலும் அவருடைய மகளான மேரியா தெரீஸா பட்டம் பெறத் தகுதியானவராகக் காணப்பட்டார். ஆகவே, அவரே தனக்குப் பின் ஆஸ்திரியா, ஹங்கேரி, பொஹீமியா, பெல்ஜியம் ஆகிய இடங்களை ஆளவேண்டும் என்றும், அவருடைய கணவர் ஃபிரான்சிஸ் பேரரசர் பட்டம் பெறவேண்டும் என்றும் விரும் பினர். ஆகவே, பேரரசரின் கட்டளை (The Pragmatic Sanction) என்ற பத்திரம் ஒன்றைத் தயாரித்து அதன் வாயிலாகத் தம்முடைய விருப்பத்தினை அறிவித்தார். அப்பத்திரத்திற்கு அவரது ஆளுகைக்குட் பட்ட நாடுகளின் அங்கீகாரத்தையும், ஐரோப்பிய நாடுகள் பலவற்றின் ஒப்புதலையும் பெற்ருர். 1740-ல் சார்லஸ் இறந்தார். உடனே ஃபிரடெரிக் ஆஸ்திரியாவின் ஒரு பகுதியான சைலீஷியாமீது உரிமை கொண்டாடி, சைலீஷியாவின்மீது படையெடுத்துச் சென்ருர். வெகு சீக்கிரத்தில் சைலீஷியாவைக் கைப்பற்றினர். ஆஸ்திரியாவின் வெகு நாள் பகைநாடான ஃபிரான்சு பிரஷ்யாவிற்கு உதவி செய்தது. ஃபிரான்சின் பெரும் எதிரியான பிரிட்டன் ஆஸ்திரியாவின் பக்கம் சேர்ந்துகொள்ளவேண்டியதாயிற்று. மேரியா தெரீஸாவின் அரச உரிமையை ஆதரிப்பதாகத் தான் கொடுத்த வாக்குறுதியைக் காப்பாற் றவும் பிரிட்டன் போரில் ஈடுபட்டது. பிரஷ்யாவும் ஃபிரான்சும் பவேரியா நாட்டுத் தலைவரைப் பேரரசராக்க முற்பட்டன. இதற்கு

முன்னரே பிரிட்டனுக்கும் ஸ்பெயினுக்கும் இடையே வியாபாரம் காரணமாகப் போர் தொடங்கியது. அப் போர் அந்த வாரிசுரிமைப் போருடன் இணைந்துவிட்டது. ஆகவே, ஆஸ்திரியா, பிரிட்டன், ஹாலந்து ஒரு புறமும், பிரஷ்யா, ஃபிரான்சு, பவேரியா, ஸ்பெயின் மற்றெரு புறமும் இருந்து போர் செய்யலாயின.

இப் போர் ஐரோப்பா, ஆசியா, அமெரிக்கா ஆகிய இடங்களில் நடைபெற்றது. ஃபிரடெரிக் ஐரோப்பாவில் சைலீஷியாவைக் கைப் பற்றினர் என்று முன்னரே குறிப்பிட்டோம். மேரியா தெரீஸா தன்னுடைய முழு பலத்தையும் ஃபிரான்சுக்கும் பவேரியாவுக்கும் எதிராகப் பயன்படுத்தவேண்டும் என்று கருதியதால், சைலீஷியாவை ஃபிரடெரிக் அவர் நாட்டுடன் இணைத்துக்கொள்ளுவதை இறுதியில் ஒப்புக்கொண்டார். ஆகவே, ஃபிரடெரிக் போர் புரிவதை நிறுத்திக் கொண்டார். அதன்பிறகு ஆஸ்திரியா பவேரியாவைக் கைப்பற்றியது. ஃபிரெஞ்சுக்காரர்கள் ஜெர்மனியினின்றும் விரட்டப்பட்டனர். இத்தாலி யிலும் ஆஸ்திரிய சேனை வெற்றிகண்டது. அதற்கிடையில் ஆங்கிலப் படை டெட்டிங்கன் (Dettingen) என்னுமிடத்தில் வெற்றிபெற்றது. அதனுல் ஃபிரஞ்சுக்காரர்கள் தெற்கு ஜெர்மனியிலிருந்து பின்வாங்க நேர்ந்தது. அதன்பிறகு ஃபிரெஞ்சுக்காரர்கள் ஆஸ்திரியாவிற்குச் சொந்தமான நெதர்லாந்தைத் தாக்கினர்கள். ஃபான்டினுய் (Fontenoy) என்னும் இடத்தில் வெற்றியடைந்து நெதர்லாந்தைக் கைப்பற்றி ஞர்கள். 1745-ல் பிரிட்டனில் கிளர்ச்சி ஏற்பட்டதால், பிரிட்டிஷ் படை நாடு திரும்ப வேண்டியதாயிற்று. இந்தியாவில் நடந்த போரில் ஃபிரெஞ்சுக்காரர்கள் சென்னையைக் கைப்பற்றினர்கள். அமெரிக்கா வில் ஆங்கிலேயர்கள் ஃபிரெஞ்சுக்காரர்களுக்குச் சொந்தமான லூயிபர்க்கைக் கைப்பற்றினர்கள். 1748-ல் போர் முடிவுற்றது. அப்பொழுது ஏற்படுத்தப்பட்ட ஏக்ஸ்-லா-சாபேல் (Treaty of Aix-la-Chapelle) உடன்படிக்கையின்படி ஃபிரான்சும் பிரிட்டனும் போரின்போது கைப்பற்றிய இடங்களைத் திருப்பித்தர இசைந்தன. நெதர்லாந்து ஆஸ்திரியாவின் ஆளுகைக்கு மறுபடியும் உட்படுத்தப் பட்டது. ஃபிரடெரிக், சைலீஷியாவைப் பிராஷ்யாவுடன் இணைத்துக் கொள்ள அனுமதிக்கப்பட்டார். பவேரியா தான் இழந்த இடங்களைத் திரும்பப் பெற்றது. 1745-ல் பவேரியாவின் 'எலக்டர்' இறந்துவிட்ட தால், மேரியா தெரீஸாவின் கணவர் பேரரசராகத் தேர்ந்தெடுக்கப் பட்டார். அவ்வேற்பாட்டினை 1748ஆம் ஆண்டின் உடன்படிக்கை உறுதி செய்தது.

மேரியா தெரீஸா எப்படியும் சைலீஷியாவைத் திரும்பப் பெற வேண்டும் என்று தீர்மானித்தார். இந்தியாவிலும் அமெரிக்காவிலும், ஆங்கிலேயர்களும் ஃபிரெஞ்சுக்காரர்களும் ஏற்படுத்திய குடியேற்ற நாடுகளுக்கும், வியாபார ஸ்தலங்களுக்கும் இடையே உண்டான

சிக்கல்களுக்கு இன்னும் தீர்வு காணப்படவில்லை. ஆகவே, மற்றொரு போர் அவசியமாகக் கருதப்பட்டது. ஆஸ்திரியா, பிரிட்டனின் நேசம் பயனற்றது எனக் கருதியது. ஆகவே, ஆஸ்திரியாவின் நெடுநாளைய பகைநாடான ஃபிரான்சின் நட்பை மேரியா தெரீஸா நாடினர். அதை அடுத்து இரு நாடுகளும் ஒப்பந்தம் ஒன்றை ஏற்படுத்தின. அதன்படி சைலீஷியாவைப் பிரஷ்யாவின் கைவசமிருந்து மீட்க வேண்டும் என முடிவுகட்டினர்கள். பிரிட்டனின் எதிரியான ஃபிரான்சு இப்பொழுது பிரஷ்யாவிற்கு எதிராக ஆஸ்திரியாவுடன் சேர்ந்து கொண்டதால், பிரிட்டன் பிரஷ்யாவுடன் சேர்ந்துகொண்டது. ருஷ்யாவும், ஸ்வீடனும், சாக்ஸனியும் மேரியா தெரீஸாவிற்கு உதவி செய்ய இசைந்தன. 1756-ல் தொடங்கிய போர் 1763-ல் முடிவுற்றது. ஆகவே, இதனை ஏழாண்டுப் போர் என்று அழைக்கிறார்கள்.

இப் போர் ஐரோப்பாவிலும், அமெரிக்காவிலும், இந்தியாவிலும் நடைபெற்றது. முதலில் பிரிட்டனும் பிரஷ்யாவும் மிக இக்கட்டான நிலையில் இருந்தன. 1756-ல் ஃபிரடெரிக் சாக்சனியின்மீது (Saxony) படையெடுத்தார். அதைக் கைப்பற்றிய பிறகு ஆஸ்திரியாவிற்குச் சொந்தமான பொஹீமியாவைத் (Bohemia) தாக்கினர். ஆனல், அவருடைய தாக்குதல் முறியடிக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து அவருடைய பகைவர்கள் பல திசைகளினின்றும் அவரைத் தாக்கினர்கள். ஒப்பற்ற திறமை வாய்ந்த ஃபிரடெரிக் தம்முடைய விரோதிகளைத் தனித்தனியாகச் சந்தித்துப் போரிட்டு வெற்றி கண்டார். மேற்கிலிருந்து தாக்கிய ஃபிரெஞ்சுக்காரர்களை ரோஸ்பாக் (Rossbach) என்னுமிடத்திலும், தெற்கிலிருந்து தாக்கிய ஆஸ்திரியாவை லூதன் (Leuthən) என்னுமிடத்திலும், கிழக்கிலிருந்து தாக்கிய ருஷ்யர்களை ஜாண்டார்ஃப் (Zondorf) என்னுமிடத்திலும் தோற்கடித்தார். இத் தோல்விகளையறிந்த ஸ்வீடன் பிரஷ்யாவின்மீது படையெடுக்கும் முயற்சியினைக் கைவிட்டது. இந் நிலையில் வில்லியம் பிட் இங்கிலாந்து முதலமைச்சரானர். அவர் ஃபிரடெரிக்குக்குப் படைகளையும் பணத்தையும் கொடுத்து உதவினர். இவ்வாறு ஃபிரெஞ்சுக்காரர்களின் கவனம் முழுவதும் ஐரோப்பாவிலேயே நிலைத்து இருக்கச் செய்தார். ஆகவே, அவர்கள் அமெரிக்காவிலும் இந்தியாவிலும் உள்ள ஃபிரெஞ்சுக்காரர்களுக்கு உதவியளிக்க முடியாத நிலையில் இருந்தனர். அதனல்தான், அமெரிக்காவிலும் இந்தியாவிலும் குறிப்பிடத்தக்க வெற்றிகளை ஆங்கிலேயர்கள் அடைய முடிந்தது. கனடாவை ஜெர்மனியின் சமவெளியில் வெல்லமுடியும்[1] என்ற கூற்றினை மெய்ப்பித்துக் காட்டினர். பிரிட்டனின் உதவி பெற்றுங்கூட ஃபிரடெரிக்கின் நிலை மோசமாக இருந்தது. 1759-ல் குனர்ஸ்டார்ஃப் (Kunersdorf) என்னுமிடத்தில் தோற்றார்.

[1] 'I will win Canada on the plains of Germany.'

பெர்லின், ஆஸ்திரியா, ருஷ்யா ஆகிய நாடுகளின் கைவசமாயிற்று. 1761-ல் பிரஷ்யாவின் பெரும் பகுதி அந்நியர்களின் கைவசமாயிற்று. அதே வருடம் வில்லியம் பிட் பதவியினின்று விலகினுர். அவருக்குப் பின் பதவியில் அமர்ந்தவர்கள் ஐரோப்பியப் போரினின்றும் விலகத் தீர்மானித்தனர். ஆனுல், நல்ல காலமாக ருஷ்யாவின் அரசி எலிசபெத் இறந்துவிட்டார். அவரைப் பின்தொடர்ந்த மூன்ருவது பீட்டர் ஃபிரடெரிக்கிடம் மிகுந்த பற்று வைத்திருந்தார். ஆகவே, அவருக்கெதிராகப் போரிடுவதை நிறுத்திக்கொண்டதோடல்லாமல், அவருடன் நட்புறவு நாடினுர். சிறிது காலத்திற்கெல்லாம் பீட்டர் கொல்லப்பட்டார். அவரைப் பின்தொடர்ந்த இரண்டாவது காதரைன் பிரஷ்யாவிடம் ஏற்படுத்தப்பட்ட ஒப்பந்தத்தை ரத்துச் செய்தார். ஆனுல், அதற்குள் பிரஷ்யா காப்பாற்றப்பட்டுவிட்டது. 1763-ல் எல்லா நாடுகளும் போர் புரிந்து சோர்வடைந்த காரணத்தால் சமா தானம் செய்துகொண்டன.

ஏழாண்டுப் போர்க் காலத்தில் பிரிட்டிஷ் கடற்படை முதலில் சில தோல்விகளை அடைந்தது. 1756-ல் மைனுர்கா தீவு ஃபிரெஞ்சுக்காரர் கள் வசமாயிற்று. அத் தீவினைத் திரும்பப்பெற பிரிட்டிஷார் மேற் கொண்ட முயற்சி தோற்கடிக்கப்பட்டது. பிட் பதவியேற்றபின் கடற்படை திருத்தியமைக்கப்பட்டது. அதன் பின்னர் அப் படை சிறந்த முறையில் செயற்பட்டது. அது ஃபிரெஞ்சுத் துறைமுகங்களை வெற்றிகரமாக முற்றுகையிட்டது. ஃபிரெஞ்சுக்காரர்களின் குடியேற்றப் பகுதிகளைத் தாக்கவும் அது பயன்படுத்தப்பட்டது. மேலும், ஃபிரெஞ்சுக்காரர்கள் 1759-ல் இங்கிலாந்தின்மீது படையெடுப்பதற்காக மேற்கொண்ட முயற்சியினைக் குவிபெரான் விரிகுடாவில் (Quiberon Bay) நிகழ்ந்த போரில் தோற்கடித்தது. இதன் பிறகு ஃபிரான்சின் கடல் ஆதிக்கம் அழிவுற்றது.

அமெரிக்காவில் நடைபெற்ற போரிலும் பிரிட்டிஷ்காரர்கள் முதலில் தோல்வியடைந்தனர். பிறகு வெற்றிவாகை சூடினுர்கள். மேற்கிந்தியத் தீவுகளில் சிலவற்றைக் கைப்பற்றினுர்கள். லூயிபர்க்கு பிரிட்டிஷார் கைவசமாயிற்று. பிரிட்டிஷ் தளபதி உல்ஃப் (Wolfe), கியூபெக் (Quebec) நகரத்தைக் கைப்பற்றினுர். 1760-ல் மான்ட்ரீல் (Montreal) பிடிபட்டது. 1762-ல் ஸ்பெயினும் போரில் கலந்து கொண்டதால், ஸ்பெயினுக்குச் சொந்தமான மேற்கிந்தியத் தீவுகளும் பிரிட்டிஷ் கப்பற்படையின் தாக்குதலுக்கு இலக்காயின.

இந்தியாவிலும் இப் போர் நடைபெற்றது. இராபர்ட் கிளைவ் 1757-ல் பிளாசிச் சண்டையில் வெற்றி பெற்று வங்காளத்தைக் கிழக் கிந்தியக் கம்பெனியின் ஆட்சிக்குட்படுத்தினுர். கர்நாடகத்தில் நடத்த போரில் ஆங்கிலேயர்கள் வந்தவாசி என்னுமிடத்தில்

ஃபிரெஞ்சுக்காரர்களைத் தோற்கடித்தார்கள். 1761-ல் பாண்டிச்சேரி ஆங்கிலேயர் கைவசமாயிற்று. இதற்குப் பின் ஃபிரெஞ்சுக்காரர்கள் இந்தியாவைத் தங்களுடைய ஆளுகைக்குட்படுத்தும் நோக்கத்தைக் கைவிட்டார்கள்.

ஏழாண்டுப் போர் 1763-ல் ஏற்படுத்தப்பட்ட பாரிஸ் உடன்படிக்கை வாயிலாக முடிவடைந்தது. ஃபிரடெரிக் சைலீஷியாவைத் தம்முடைய ஆளுகையின்கீழ் வைத்திருக்க அனுமதிக்கப்பட்டார். பிரிட்டன் ஃபிரான்சிடமிருந்து கனடா, செனீகல், மைனுர்கா, சில மேற்கிந்தியத் தீவுகள் ஆகியவற்றைப் பெற்றது. ஃபிளோரிடா (Florida) என்னும் நிலப்பகுதியை ஸ்பெயினிடமிருந்து இங்கிலாந்து பெற்றது. இதற்குப் பதிலாகப் போர்க்காலத்தில் ஃபிரான்சிடமிருந்து கைப்பற்றிய கோரீ (Goree), பாண்டிச்சேரி, இரு மேற்கிந்தியத் தீவுகள் ஆகியவற்றையும், ஸ்பெயினிடமிருந்து கைப்பற்றிய கியூபா (Cuba), பிலிப்பைன் தீவுகள் ஆகியவற்றையும் திருப்பிக் கொடுக்க பிரிட்டன் இசைந்தது. இந்தியாவில் இராணுவப் படையை நிறுத்தி வைக்க ஃபிரான்சு அனுமதிக்கப்படவில்லை.

மேற்கூறிய இரு போர்களின் வாயிலாக ஃபிரடெரிக் செல்வம் நிறைந்த சைலீஷியாவைத் தம் நாட்டுடன் இணைத்தார். அதனுடன் பிரஷ்யாவின் செல்வாக்கைப் பெருக்குவதிலும் வெற்றி கண்டார். சமாதான முறையைப் பின்பற்றி நாடு சேர்ப்பதிலும் ஃபிரடெரிக் வல்லவராய் இருந்தார். பிரிவினை ஒப்பந்தத்தின் வாயிலாக மேற்குப் பிரஷ்யாவைத் தம் நாட்டுடன் சேர்த்துக்கொண்டாரென்று நாம் முன்னரே கவனித்தோம். இந் நிலப்பகுதி கிழக்குப் பிரஷ்யாவையும் பிராண்டன்பர்க்கையும் ஒன்றுசேர்க்க உதவியாயிருந்தது. இத்தகைய சாதனைகள் பல புரிந்த ஃபிரடெரிக்கினுடைய ஆட்சி 1786-ல் முடிவுற்றது.

### ஆஸ்திரியாவில் வல்லாட்சி

பதினேழாம் நூற்றுண்டில் ஆஸ்திரியாவை ஹாப்ஸ்பர்க் (Habsburgs) குலத்தைச் சார்ந்த அரசர்கள் ஆண்டுவந்தனர். அவர்கள் புனித ரோமானியப் பேரரசர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டதால், அவர்கள் ஜெர்மனியில் செல்வாக்குப் பெற்றிருந்தார்கள். 1648-க்குப் பிறகு அவர்களுடைய செல்வாக்கு ஜெர்மனியில் குறையலாயிற்று. ஏனெனில், அவ்வாண்டில் ஏற்படுத்தப்பட்ட வெஸ்ட்பேலியா உடன்படிக்கை ஜெர்மனியிலுள்ள ஆளுநர்களின் சுதந்திரத்தை அதிகரித்தது. எனினும், ஆஸ்திரியா, ஐரோப்பாவின் வல்லரசுகளில் ஒன்ருகத் தொடர்ந்து இருந்துவந்தது.

பதினேழாம் நூற்றுண்டின் பிற்பகுதியில் முதலாவது லியோபால்ட் மன்னர் (1658—1705) ஆட்சி செலுத்தினர். ஹங்கேரியில்

தன்னுடைய ஆட்சியைப் பலம் பொருந்தியதாக்கினர். அங்குள்ள மக்களின் உரிமைகளேக் குறைத்தார். அவர் காலத்தில் துருக்கியர்கள் தங்களுடைய ஆதிக்கத்தைப் பெருக்க முற்பட்டு, ஆஸ்திரியாவின் தலை நகரான வியன்னுவரை தங்களுடைய படைகளை நடத்திச் சென்றுர்கள். ஆகவே, 1683-ல் துருக்கியர்களுக்கு எதிராக லியோபால்ட் போர் தொடங்கினர். போலந்து நாட்டின் சிறப்புவாய்ந்த கடைசி அரசர் மூன்றுவது ஜான் சோபியெஸ்கி (John Sobieski) துருக்கியர்களை விரட்டி அடித்து வியன்னுவைக் காப்பாற்றினர். 1699-ல் கார்லோவிட்ஸ் சமாதானம் (Peace of Karlovitz) செய்துகொள்ளப்பட்டது. ஹங்கேரி முழுவதும் ஆஸ்திரியாவின் ஆதிக்கத்தின்கீழ்க் கொண்டு வரப்பட்டது. லியோபால்ட், ஐரோப்பாவில் நடைபெற்ற ஆக்ஸ்பர்க் நேச நாடுகளின் போரிலும், ஸ்பெயின் நாட்டின் வாரிசுரிமைப் போரிலும் கலந்துகொண்டார். போரின் இறுதியில் ஸ்பெயினுக்குச் சொந்தமான நெகர்லாந்து, மிலான், நேபிள்ஸ், சிசிலி[1] ஆகிய இடங்களை அவருக்குப் பின்னர் அரசாண்ட ஆறுவது சார்லஸ் பெற்றுர். ஆறுவது சார்லஸ் (1711—1740) மறைவிற்குப்பின் மேரியா தெரீஸா பட்டத்துக்கு வந்தார் என்பதை முன்னரே கண்டோம்.

மேரியா தெரீஸா (1740—1780) பெண்ணுக இருப்பினும் திடசித்தமுடையவர். அவர் காலத்தில் ஆஸ்திரியாவிற்கும் பிரஷ்யாவிற்கும் இடையே ஏற்பட்ட போர்களையும், ஆஸ்திரியாவிற்கும் ஃபிரான்சுக்கும் இடையே ஏற்பட்ட நட்புறவைப்பற்றியும் முன்னரே குறிப்பிட்டுள்ளோம். உள்நாட்டு விவகாரங்களிலும் வெளிநாட்டு விவகாரங்களிலும் அவருக்கு உறுதுணையாக அவருடைய அமைச்சர் கௌனிட்ஸ் (Kaunitz) இருந்தார். அவர் புதிய சட்டத் தொகுதி ஒன்றை இயற்ற முற்பட்டார். சாலைகள், கால்வாய்கள் போன்ற வசதிகளை மக்களுக்குச் செய்து தந்தார். விவசாயத்தைப் பெருக்க விவசாயக் கழகம் ஒன்றை நிறுவினர். எல்லா மக்களையும் பாதிக்கும் வரித்திட்டம் ஒன்றை அமைத்தார். மருத்துவச்சாலைகளைக் கட்டுவித்தார். கல்வி, கலை ஆகியவற்றின் வளர்ச்சிக்குப் பாடுபட்டார். மதத் துறையில் காணப்பட்ட குறைகளை நீக்கினர். இத்துணை நற்பணிகளைச் செய்த அவரை ஐரோப்பிய வரலாற்றில் காணப்படும் சிறப்பு வாய்ந்த ஒரு நபர்[2] என்று கூறுவது மிகையாகாது. பதினெட்டாம் நூற்றுண்டில் ஆட்சி புரிந்த ஆஸ்திரிய அரசர்களுள் புனித ரோமானியப் பேரரசர் பட்டம் பெறுதவர் அவர் ஒருவர் மட்டுமே ஆவார். இவருக்குப் பதிலாக இப் பட்டத்தை இவருடைய கணவர் 1765 வரை வகித்திருந்தார்.

[1]நேபிள்ஸ், சிசிலி ஆகியவைகளை ஆஸ்திரியா 1738-ல் இழந்தது.

[2]Grant, 'Europe—The History of the Last Five Centuries,' page 642.

ஐரோப்பாவின் மக்கள் நலம் பேணும் வல்லரசர்களில் ஒருவரான இரண்டாவது ஜோசஃப் (Joseph II) 1780-ல் ஆஸ்திரிய நாட்டின் அரசரானுர். அதற்கு முன்னர் 1765-ல் பேரரசராக அவர் தேர்ந்தெடுக்கப்பட்டார். மக்களின் நன்மைக்காகப் பாடுபடவேண்டும் என்ற உயரிய நோக்கத்தைக் கொண்டவர். மேற்கொண்ட எண்ணங்களை நிறைவேற்றும் ஆற்றல் படைத்தவர். கடுமையாக உழைக்கும் ஆற்றலைப் பெற்றிருந்தார். வெளிப்படையாகப் பேசும் தன்மையுடையவர். வரலாறு, சட்டம், பொருளாதாரம், இராணுவக் கலை ஆகியவற்றில் நல்ல அறிவு படைத்தவர். அவர் நேரத்தை வீணுக்க விரும்புவதில்லை. பயன்படாத விவகாரங்களில் பொருள் செலவிடுவதை விரும்பவில்லை. ஃபிரடெரிக்கைப் போல் அவர் வகித்திருக்கும் பொறுப்புகளைப் பற்றி உயர்ந்த கருத்துகளைக் கொண்டிருந்தார். அப்படியிருந்தும் அதற்காகச் செருக்குக் கொண்டாரில்லை. அவர் நாட்டிலும் பிற நாடுகளிலும் சுற்றுப் பிரயாணம் செய்து ஆட்சிமுறை பற்றிய விவரங்களைச் சேகரிப்பதில் மிகவும் ஊக்கங் காட்டிவந்தார். அவர் தம்முடைய குடும்பத்தின் மோசமான பகைவரான ஃபிரடெரிக்கை அரசியல் குருவாக வைத்துப்போற்றினுர். பொதுவாக ஃபிரடெரிக்கினுடைய ஆட்சிமுறைக் கருத்துகளை அவருடைய நாட்டில் புகுத்த முற்பட்டார். ஆனுல், நல்ல நோக்கங்களுடன் தொடங்கப்பட்ட இவரது ஆட்சி இருள் கவிந்த நிலையில் முடிவுற்றது.

பதவியேற்றவுடனே அவருடைய சீரிய கருத்துகளைச் செயற்படுத்த முனைந்தார். அரசியல் துறையில் இரு பெரு நோக்கங்களைக் கொண்டிருந்தார். பல்வேறு இனத்தவரையும், மொழியினரையும், மதத்தினரையும் உட்கொண்டிருந்த ஆஸ்திரிய நாட்டினில் ஒருமைப்பாட்டினை ஏற்படுத்த வேண்டுமென்பது அவரது குறிக்கோள்களில் முதலாவதாகும். அக் காலத்தில், ஆஸ்திரியா பொதுவாக ஐந்து பெரும் பிரிவுகளாக இருந்தது. வியன்னுவும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளும் ஆஸ்திரியா என்றழைக்கப்பட்டன. அதில் கத்தோலிக்கர்களும் ஜெர்மானியர்களும் நிறைந்திருந்தனர். இரண்டாவது பிரிவான ஹங்கேரியில், மாகியர் (Magyars) இனத்தவர் வாழ்ந்துவந்தனர். மூன்ருவது பிரிவான பொஹீமியா, மொரேவியா பகுதிகளில் செக் (Czeck) இனத்தவர் வசித்துவந்தனர். இவர்களில் பெரும்பாலோர் பிராடஸ்டன்ட் மதத்தைச் சேர்ந்தவர்கள். இத்தாலியிலுள்ள நான்காவது பிரிவில் கத்தோலிக்கர்கள் வாழ்ந்துவந்தனர். ஆனுல், மொழி, இனம், கலாசாரம் ஆகியவற்றில் ஆளும் மக்களுக்கும், ஆளப்படும் மக்களுக்கும் இடையே பெருத்த வேறுபாடுகள் இருந்தன. இதே நிலையில்தான் ஐந்தாவது பிரிவான ஆஸ்திரியாவின் நெதர்லாந்தும் இருந்துவந்தது. ஆட்சி முறையைப் பொறுத்தவரை, அவர் கொண்

டிருந்த இரண்டாவது குறிக்கோள், அரசரது அதிகாரத்தை எல்லா வற்றிற்கும் மேலாக நிலைநாட்டுவதேயாகும்.

மேற்கூறிய இரண்டு எண்ணங்களை நிறைவேற்றப் பலநடவடிக்கை களை மேற்கொண்டார். முதலில் ஆட்சிமுறையை ஒழுங்குபடுத்திஞர். ஆஸ்திரிய நாட்டினைப் பதின்மூன்று பெரும்பிரிவுகளாகப் பிரித்து, ஒவ்வொன்றிலும் ஒரே மாதிரியான ஆட்சிமுறையை அமைத்தார். ஒவ்வொரு பிரிவினையும் ஓர் இராணுவத் தளபதியின் ஆட்சிக்குட் படுத்திஞர். அங்கு அமைக்கப்பட்டிருந்த மக்கள் சபைகளின் அதிகாரத்தை அழித்தார். அவைகள் அரசருக்குத் தேவையான வரிகளை வழங்குவதற்கு மட்டுமே கூட்டப்பட்டன. பல்வேறு இனத் தவருக்கு வழங்கப்பட்டிருந்த தனிச் சலுகைகளை ஒழித்தார். ஒவ் வொரு பெரும் பிரிவினையும் பல வட்டங்களாகப் பிரித்தார். வட்டத்தின் அதிகாரி (Circle Captain) அரசருடைய ஆணைகளைச் செயற்படுத்தி வந்தார். வட்டங்களில் அமைதியை ஏற்படுத்தும் பணியைத் தனி அதிகாரி ஒருவருக்கு அளித்தார். ஒவ்வொரு வட்டத்திலும் பல நகரங்களும் கிராமங்களும் அடங்கியிருந்தன.

மைய ஆட்சி முறை நான்கு துறைகளாகப் பிரிக்கப்பட்டது. இவைகள் அரசியல், பொருளாதாரம், நீதிமுறை, இராணுவம் ஆகிய வற்றில் கவனம் செலுத்திவந்தன. இவைகள் எல்லாம் வியன்ஞவில் இயங்கிவந்த ஆட்சிமுறையைச் சார்ந்த சபைகளின் அதிகாரத்திற் குட்படுத்தப்பட்டன. அச் சபைகளின் முடிவுகளை அரசருடைய அங்கீகாரம் பெற்ற பிறகுதான் செயற்படுத்த இயலும்.

நாட்டில் ஒருமைப்பாட்டினை வளர்க்க ஜெர்மன் மொழியினை மட்டுமே ஆட்சி மொழியாக ஏற்படுத்திஞர். இதுகாறும் அரசாங்க அலுவலகங்கள் ஜெர்மன் மொழியுடன், லத்தீன், மாகீயர் மொழிகளை யும் உபயோகப்படுத்தி வந்தன என்பதை ஈண்டுக் குறிப்பிடுதல் அவசியமாகும்.

வல்லாட்சிக்குப் பலம் பொருந்திய படை அவசியமென்பதை ஜோசஃப் நன்கு உணர்ந்திருந்தார். ஆகவே, இராணுவ அமைப்பைப் பிரஷ்யாவின் படை அமைப்பு முறையைப் பின்பற்றி மாற்றி யமைத்தார். விவசாயத்தில் ஈடுபட்டிருந்தவர்களையும் படையிற் சேருமாறு வற்புறுத்திஞர்.

வல்லாட்சி வெற்றிபெறப் பழுதற்ற நிதி அமைப்பு இன்றியமை யாதது என்பதையும் ஜோசஃப் உணர்ந்திருந்தார். எல்லோர்மீதும் வரிவிதித்தும், புது நிலவரி ஒன்றை விதித்தும், வரி விகிதங்களை மாற்றியமைத்தும், வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட பொருள்களின்மீது கடுமையான காப்பு வரியை விதித்தும் அரசாங்க

வருவாயை அதிகப்படுத்தினர். தேவையற்ற செலவுகளைக் குறைத்துக் கொண்டார்.

நீதிமன்ற அமைப்பில் மாறுதல்கள் சிலவற்றைப் புகுத்தினர். வியன்னாவின் உயர் நீதிமன்றத்தைத் தலைமை நீதிமன்றமாகவும், மாவட்டங்களிலுள்ள நீதிமன்றங்களைக் கீழ் நீதிமன்றங்களாகவும் கொண்ட அமைப்பு ஒன்றை உருவாக்கினர். திறமை வாய்ந்தவர்களையே நீதிபதிகளாக நியமித்தார். எல்லா நீதிமன்றங்களிலும் ஒரே மாதிரியான வழக்கு முறையைப் புகுத்தினர். நியாயம் பெறுவதற்கு மக்கள் செலுத்தவேண்டிய கட்டணத்தைக் குறைத்தும், தீர்ப்புகளை எழுத்துமூலமாகப் பெறுவதற்குச் செலுத்தவேண்டிய தொகையை ஒழித்தும் ஏழைகளும் நியாயம் பெற வழி செய்தார். சித்திரவதை போன்ற கடுமையான தண்டனைகள் ஒழிக்கப்பட்டன.

அவரது வல்லாட்சி நல்லாட்சியாக விளங்கவேண்டும் என்பதற்காகப் பொருளாதாரத் துறையில் பல முன்னேற்றங்களை ஏற்படுத்தினர். கைவினைஞர்களுக்கும் வர்த்தகர்களுக்கும் பொருளுதவி செய்தார். தொழிற்சாலைகளை நிறுவுவதற்கும் இயந்திரங்கள் வாங்குவதற்கும் பணவுதவி அளிக்கப்பட்டது. உள்நாட்டுத் தொழில்களைக் காப்பாற்றுவதற்கு வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பொருள்களின்மீது கடுமையான வரியை விதித்தார். உள்நாட்டுச் சுங்கவரியைத் தவிர்த்தும், சாலைகள் அமைத்தும், கால்வாய்கள் வெட்டியும், துறைமுகங்களைக் கட்டியும் வியாபாரத்தைப் பெருக்கினர்.

சமூகநலப் பணிகளையும் மேற்கொண்டார். குடியானவர்களுக்குச் சுதந்திரம் அளித்தார். பிரபுக்கள் அனுபவித்துவந்த சில உரிமைகள் ஒழிக்கப்பட்டன. அறிஞர்களைப் போற்றி வளர்த்தார். கல்வித் துறையில் பெருக்கத்தை ஏற்படுத்தினர். ஆரம்பக் கல்வியினை அனைவரும் பெற வழிவகை செய்தார். ஒவ்வொரு பெரும் பிரிவிலும் ஒரு பல்கலைக்கழகத்தை அவர் நிறுவினர். கலைக்கழகங்கள் ஏற்படுத்தினர். ஆங்காங்கே நூல்நிலையங்களை அமைத்தார். மருத்துவம், விஞ்ஞானம் ஆகிய கலைகளை வளர்த்தார். புத்தகங்கள் வெளியிடுவதற்குச் சுதந்திரம் அளித்தார்.

மதத்துறையிலும் அநேக மாறுதல்களை உண்டாக்கினர். மத விவகாரங்களிலும் அரசருடைய செல்வாக்கை ஏற்படுத்துவதே அவரது நோக்கமாகும். அவரது அனுமதியின்றிப் போப்பாண்டவருடைய கட்டளைகளை அவருடைய நாட்டில் செயற்படுத்துவதைத் தடுத்தார். மத ஸ்தாபனங்களின் சொத்துகளைப் பறிமுதல் செய்தார். அநேக மடங்களை அழித்தார். நோய்வாய்ப்பட்டவர்களைக் குணப்படுத்துவதிலும், கல்வியைப் போதிப்பதிலும் ஈடுபட்டிருந்த மடங்கள் மட்டும் தொடர்ந்து பணியாற்ற அனுமதி அளித்தார். மத குருமார்களை அர

சாங்கக் கல்விக்கூடங்களில் பயிற்சிபெறுமாறு கட்டாயப்படுத்தினர். அவர்களை மதக்கலையில் மட்டுமன்றி மற்றைய கலைகளையும் கற்குமாறு பணித்தார். மதஸ்தாபனத்தில் இருந்த சில சீர்கேடுகளையும் அகற்றினர். கோயில்களில் இருந்த சிலைகளையும் படங்களையும் அகற்றினர். நாட்டினுடைய ஒருமைப்பாட்டினுக்கு மத விவகாரங்களில் சகிப்புத் தன்மை அவசியம் என்று உணர்ந்தார். ஆகவே, 1781-ல் ஓர் அறிக்கையை விடுத்தார். அதன்படி எல்லா மதத்தினரும் அவர்களுடைய மதத்தை யாதோர் இன்னலுமின்றிக் கடைப்பிடித்துவரலாம் என்று அறிவித்தார். எல்லா மதத்தினரும் அரசாங்க வேலையில் ஈடுபடலாம் என்றும், எல்லா விதமான கல்வி நிலையங்களிலும் சேரலாம் என்றும், எல்லாத் தொழில்களிலும் ஈடுபடலாம் என்றும் அறிவித்தார்.

அயல்நாட்டுத் துறையில் இவர் தமது தாயாருடன் சேர்ந்து அண்மையிலுள்ள பவேரியாவைக் கைப்பற்ற முற்பட்டார். ஃபிரடெரிக் இதைத் தடுக்க முயற்சி எடுத்துக்கொண்டார். இதனால் 1778-ல் போர் மூண்டது. 1779-ல் இப் போர் முடிவுற்றது. ஆஸ்திரியா, பவேரியாவைக் கைப்பற்றும் எண்ணத்தைக் கைவிட்டது. ஜோசப் தன்னுடைய சுய ஆட்சியை ஏற்படுத்திய பிறகுங்கூட, நாடுகளைச் சேர்க்கும் எண்ணத்தைக் கைவிடவில்லை. பவேரியாவை அடைவதற்குத் தன்னுடைய ஆளுகைக்குட்பட்ட பெல்ஜியத்தையும் கொடுக்கத் தயாராய் இருந்தார். ஆனால், அவர் நோக்கம் நிறைவேறவில்லை. ருஷ்யாவுடன் சேர்ந்து துருக்கி நாட்டிற்கு எதிராகப் போரிட்டார். அவருடைய வெளிநாட்டுக் கொள்கை பெரும்பாலும் தோல்வியிலேயே முடிவுற்றது.

அவர் ஆட்சியின் இறுதியில் பல இடங்களில் பலத்த எதிர்ப்புகள் ஏற்பட்டன. பெல்ஜியம் மக்கள் கிளர்ச்சி செய்தார்கள். மாகியர்கள் அவர்களுடைய உரிமைகளைப் பறித்ததால் வெகுண்டெழுந்தனர். பிரபுக்கள் அவர்களுடைய செல்வாக்கு அழிக்கப்பட்டதால் அவரை வெறுத்தனர். பிற மதங்களைச் சார்ந்தோர்களுக்குச் சமமான உரிமைகள் வழங்கியதாலும், மத விவகாரங்களில் போப்புக்கு இருந்த அதிகாரத்தைக் குறைத்ததாலும், கத்தோலிக்கர்களுடைய வெறுப்புக்கு உள்ளானர். மக்களை மகிழ்ச்சியில் ஆழ்த்துவதற்குப் பதிலாக அவருடைய நடவடிக்கைகள் அவர்களை நன்றி கெட்டவர்களாக மாற்றிவிட்டதை அறிந்து அவர் மனக்கசப்பு அடைந்தார். ஆகவே, அவர் தாம் இறந்த பிறகு தம்முடைய கல்லறையின்மீது பின்வருமாறு பொறிக்கப்பட வேண்டும் என்று விரும்பினர்; 'நல்ல எண்ணங்களுடன் மேற்கொண்ட நடவடிக்கைகளுள் ஒன்றில்கூட வெற்றிபெறாத மனிதர் இங்குக் கிடக்கிறார்.' அவர் தோல்வியடைந்ததற்குப் பல காரணங்களுண்டு. அக் காலத்திய மக்கள் அவருடைய சீரிய கருத்துகளைச் சரிவரப் புரிந்துகொள்ளவில்லை. அவர் கருத்துகளை நிறைவேற்றும்பொருட்டு அமர்த்தப்பட்ட அலுவலர்கள் அவரைப்போல்

நல்லவர்களாகவோ அல்லது அவைகளில் மிக்க அக்கறை கொண்டவர் களாகவோ இருக்கவில்லை. மேலும், அவர் சில சமயங்களில் மிகக் கடுமையாகவே நடந்துகொண்டார். மத விவகாரங்களில் தலையிட்டும், தொன்றுதொட்டு வரும் பழக்கங்களைத் தாக்கியும் மக்களின் வெறுப்பைத் தேடிக்கொண்டார்.

ஐரோப்பாவில் வேறு சில நாடுகளிலும் நல்லெண்ணத்துடன் கூடிய வல்லாட்சி பதினெட்டாம் நூற்றாண்டில் நடைபெற்றுவந்தது. ஸ்பெயின் நாட்டில் மூன்றாவது சார்லஸ் (1759–1788) என்பவர் இத்தகைய ஆட்சியை ஏற்படுத்தினார். ஆட்சி முறையிலிருந்த சீர் கேடுகளை நீக்கினார். கால்வாய்களை வெட்டினார். சாலைகளை அமைத் தார். விவசாயம், வர்த்தகம், தொழில் ஆகியவற்றைப் பெருக்கினார். நிலப்படை, கப்பற்படை ஆகியவற்றைப் பலம் பொருந்தியனவாகச் செய்தார். ஸ்பெயின் அரசாங்கத்தின் வருமானத்தைப் பெருக்கினார். கத்தோலிக்கர் அல்லாதாரைத் துன்புறுத்திவந்த மன்றங்களின் (Inquisition) நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தினார். ஸ்பெயினுக்குச் சொந்தமான குடியேற்றங்களிலும் நல்லாட்சி நிலவ வழிவகை செய்தார்.

போர்ச்சுகல் நாட்டில் முதலாவது ஜோசப் (1750–1777) நல் லாட்சியை ஏற்படுத்தினார். கல்வித்துறையில் முன்னேற்றங்களை ஏற் படுத்தினார். ஸ்வீடனில் மூன்றாவது கஸ்டாவஸ் (Gustavus III) (1771–1792) வல்லாட்சி முறையை மக்களின் நன்மைக்காகக் கையாண்டுவந்தார்.

பதினேழாம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும், பதினெட்டாம் நூற் றாண்டிலும் ஐரோப்பிய நாடுகள் பலவற்றுள் ஏற்படுத்தப்பட்ட வல்லாட்சி முறையைப்பற்றி நாம் இதுவரை கவனித்தோம். அதே காலத்தில் ஓரிரு நாடுகளில் அம் முறைக்கு எதிராக ஏற்பட்ட புரட்சி களைப்பற்றி இங்குக் கவனிப்போம். 16–ஆம் நூற்றாண்டில் டச்சுக் காரர்கள் ஸ்பெயினுக்கு எதிராகக் கிளர்ச்சி செய்து, பிறகு சுதந்திரம் பெற்றார்கள். பதினேழாம் நூற்றாண்டில் இங்கிலாந்தில் வல்லாட் சியை எதிர்த்து மக்கள் புரட்சி செய்தார்கள். இப் புரட்சியின் வரலாற் றினை இங்குச் சிறிது கவனிப்போம்.

பதினேழாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இங்கிலாந்தினை ஸ்டூவர்ட்டு (Stuart) அரசர்கள் ஆண்டுவந்தனர். அவர்களின் ஆட்சியின்போது அரசருக்கும், மக்கள் பிரதிநிதிகள் அடங்கிய பாராளுமன்றத்திற்கும் இடையே தகராறு ஏற்பட்டது. அதற்குக் காரணங்கள் பல உண்டு. ஸ்டூவர்ட்டு மன்னர்களுக்கு முன்னர் ஆட்சி செலுத்திய டியூடர் குல அரசர்கள் ஏற்படுத்திய வல்லாட்சி முறையைத் தொடர்ந்து பின்பற்றவேண்டுமென அவ் வரசர்கள் விரும்பினார்கள். நாட்டில் அமைதி நிலவி யிருந்ததாலும், இங்கிலாந்

துக்குப் பலம் பொருந்திய பகைநாடு இல்லாததாலும், பாராளுமன்றம் அவ் வல்லாட்சி முறையை மாற்றியமைக்கவேண்டும் என்று விரும்பியது. இரண்டாவதாக, வியாபாரம் பெருகிய காரணத்தாலும் மக்களின் பொருளாதாரநிலை உயர்ந்ததாலும், நாட்டில் நடுத்தர வகுப்பு ஒன்று வளர்ச்சியடைந்தது. இவர்கள் விவசாயத்திலும் வியாபாரத்திலும் ஈடுபட்டிருந்தார்கள். பணம் படைத்தவர்களாகவும் படித்தவர்களாகவும் இருந்த காரணத்தால், நாட்டின் அரசாட்சியில் பங்குகொள்ள விரும்பினுர்கள். பாராளுமன்றத்தின் உறுப்பினர்களாக இவர்களில் பலர் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். அரசர் தம்முடைய அதிகாரத்தைப் பாராளுமன்றத்துடன் பகிர்ந்துகொள்ள விரும்பவில்லை. மூன்ருவதாக, ஸ்டூவர்ட்டு மன்னர்கள் ஸ்காட்லாந்தைச் சேர்ந்தவர்களாதலால் மக்களின் போக்கை உணர்ந்துகொள்ளவில்லை. அதற்கு மாருக, அவர்கள் கோபமடையுமாறு நடந்துகொண்டனர். கடைசியாக, மத விவகாரங்களில் இவ்விருதரத்தினருக்கும் இடையே இருந்த வேறுபாடுகளும் தகராறுக்குக் காரணமாயிருந்தன. அப்பொழுது நடைமுறையிலிருந்த ஆங்கில மத ஸ்தாபனத்தைச் (Anglican Church) சேர்ந்த குருமார்கள் அரசரை ஆதரித்தனர். ஆனுல், மக்களில் பலரும், பாராளுமன்ற உறுப்பினர்களில் பலரும் பியூரிடன் மதத்தைச் சார்ந்தவர்களாயிருந்ததால் ஆங்கில மத ஸ்தாபனத்தை வெறுத்தார்கள்.

இனி, புரட்சி ஏற்பட்ட விதத்தைக் கவனிப்போம். 1603-ல் ஸ்காட்லாந்து அரசரான ஆரும் ஜேம்ஸ், முதலாம் ஜேம்ஸ் (1603–1625) என்ற பட்டத்துடன் இங்கிலாந்து அரசராஞர். இவர் வல்லாட்சியில் நம்பிக்கை மிகுந்தவர். ஆகவே, இவருக்கு முன்னர் இங்கிலாந்தினை ஆண்ட டியூடர் அரசர்கள் ஏற்படுத்திய வல்லாட்சியினைத் தொடர்ந்து நடத்துவதென முடிவுசெய்தார். அரசர் தெய்விக உரிமைக் கோட்பாட்டிலும் மிக்க நம்பிக்கை கொண்டிருந்தார். ஆனுல், பாராளுமன்றம் இதற்கு மாருன கருத்துக்களைக் கொண்டிருந்தது. சட்டத்தின் வரம்புக்கு உட்பட்டே அரசர் அதிகாரத்தைச் செலுத்தமுடியும் என்று பாராளுமன்றம் வாதித்தது. அரசாங்கத்தின் செலவு அதிகமானதாலும், பாராளுமன்றம் புதிய வரிகளை ஏற்றுக்கொள்ளத் தயங்கியதாலும், ஜேம்ஸ், டியூடர்கள் கையாண்ட முறைகளைப் புதுப்பித்தார். பொருள்களைத் தயாரிக்கும் ஏகபோக உரிமையை விற்பது அவைகளில் ஒன்று ஆகும். இம் முறைகளைப் பாராளுமன்றம் கண்டித்தது. மேலும், ஜேம்ஸ் அவசரச் சட்டங்களைப் பெருவாரியாக ஏற்படுத்தினுர். அதனுலும் பாராளுமன்றம் மனக்கசப்பு அடைந்தது. ஜேம்ஸ் தம்முடைய நண்பர்களையே அமைச்சர்களாகவும் ஆலோசகர்களாகவும் கொண்டிருந்தார். ஆகவே, பாராளுமன்றம் அவர்களைத் தாக்கமுற்பட்டது. மத விவகாரங்களிலும் அவர் மக்களின் வெறுப்பைத்

தேடிக்கொண்டார். ஜேம்ஸ் ஆங்கிலிகன் மத ஸ்தாபனத்தை ஆதரித்தார். ஏனெனில், அது அரச அதிகாரத்தை அதிகப்படுத்த வேண்டும் என்ற கொள்கையினை ஆதரித்தது. ஆகவே, பாராளு மன்றத்தில் குறிப்பிடத்தக்க எண்ணிக்கையுடைய பியூரிடன்கள் இவர்மீது வெறுப்புக்கொண்டனர். மேலும், மத விவகாரங்களில் சகிப்புத்தன்மை வேண்டும் என்ற கொள்கையுடையவராதலால், முதலில் கத்தோலிக்கர்களுக்கு உரிமைகள் வழங்கினர். அதனால் மக்கள் இவரைக் கத்தோலிக்கருடைய நண்பர் என்று கருதினர். இதனாலும் பாராளுமன்றம் இவரை எதிர்த்தது. வெளிநாட்டுக் கொள்கையின் வாயிலாகவும் இவர் மக்களின் வெறுப்பைத் தேடிக் கொண்டார். இங்கிலாந்தின் பழம்பெரும் பகை நாடான ஸ்பெயினுடன் சேர முயன்றதே இதற்குக் காரணமாகும். அம் முயற்சி வெற்றி பெறவில்லை என்பதும், இங்கிலாந்து பிறகு ஸ்பெயினுடன் போர் செய்தது என்பதும் இங்குக் குறிப்பிடப்படுதல் அவசியம். அதே நேரத்தில் கால்வினிஸ்ட்[1] மதத்தினரும், ஜேம்ஸுடைய மருகருமான பாலாடினேட் நாட்டின் தலைவர் கத்தோலிக்கப் பேரரசருக்கு எதிராகப் போரிட்டுக்கொண்டிருந்தார். அவருக்கு யாதோர் உதவியும் ஜேம்ஸ் செய்யவில்லை. இது பியூரிடன்களைக் கோபமடையச் செய்தது.

அவருக்குப் பின்னர் ஆண்ட முதலாவது சார்லஸ் (1625–1649) என்பவரும் அரசருடைய அதிகாரத்தை நிலைநிறுத்த முற்பட்டார். அவர் ஹென்றியட்டா மேரியா (Henrietta Maria) என்ற கத்தோலிக்க இளவரசியை மணம் செய்துகொண்டதால், கத்தோலிக்கர்களைத் துன்புறுத்துவதை நிறுத்தினர். அதனால் மக்களும் பாராளுமன்றமும் வெறுப்படைந்தனர். அவர் காலத்தில் நடைபெற்ற வெளிநாட்டுப் போரில் இங்கிலாந்து பலத்த நஷ்டம் அடைந்தது. அது பாராளு மன்றத்தின் கோபத்தைக் கிளறிவிட்டது. வரிகளைச் சுமத்தும் விஷயத்திலும் மன்னர் பாராளுமன்றத்துடன் சண்டைபோட வேண்டிய தாயிற்று. 1628-ல் அவர் பாராளுமன்றம் தயாரித்த உரிமை மனுவை (The Petition of Right) ஏற்கவேண்டிய நிலை ஏற்பட்டது. அரசர் பாராளுமன்றத்தின் இசைவைப் பெருமல் வரிவசூல் செய்யவும், மக்களை விசாரணையின்றி சிறையிலடைக்கவும் கூடாது என்று அம் மனுவில் குறிப்பிடப்பட்டிருந்தன. அரசர் அன்பைப் பெற்றவரும் அமைச்சருமான பக்கிங்காம் பிரபுவைப் பாராளுமன்றம் விசாரணைக்குக் கொண்டுவர முயற்சி செய்தது. அவரைக் காப்பாற்றப் பாராளு மன்றம் கலைக்கப்பட்டது. அதன் பிறகு பதினேர் ஆண்டுகள் (1629–1640) மன்னர் கொடுங்கோலாட்சி புரிந்துவந்தார். கடுமையான தண்டனை விதித்தும், மக்கள் சுதந்திரத்தை அழித்தும், அவர்

[1] பிராடஸ்டன்டு மதத்தின் ஒரு பிரிவு. ஜான் கால்வின் என்ற ஃபிரெஞ்சுக் காரர் இதன் கொள்கைகளை வரையறுத்தார்.

விருப்பம்போல் வரிகளை வசூலித்தும் மக்களின் வெறுப்பைத் தேடிக் கொண்டார். மத விவகாரங்களில் பியூரிடன் மதத்தினர் கொடுமைக்குள்ளாக்கப்பட்டனர். ஸ்காட்லாந்தில் ஆங்கிலிகன் மத ஸ்தாபனத்தை ஏற்படுத்த முற்பட்டார். இதனால் அம் மக்கள் கிளர்ச்சி செய்தனர். அதனை அடக்கப் பணம் தேவையாய் இருந்தது. ஆகவே, 1640-ல் பாராளுமன்றத்தை மீண்டும் அமைத்தார். இப் பாராளுமன்றம் அரசருக்கு வேண்டிய பணம் கொடுப்பதற்குப் பதிலாக அவருக்குத் துணையாக இருந்தவர்களைத் தண்டிக்க முற்பட்டது. பாராளுமன்றம் மூன்று ஆண்டுக்கொருமுறை கூட்டப்பட வேண்டும் என்றும், அதனுடைய இசைவைப் பெறாமல் அதனைக் கலைக்கலாகாது என்றும் முடிவுசெய்யப்பட்டது. அத்துடன் இனி அமைச்சர்களை அரசர் நியமிக்கலாகாது என்றும், படையினைப் பாராளுமன்றமே கட்டுப்படுத்த வேண்டும் என்றும் முடிவு செய்யப்பட்டது. அதனால் பாராளுமன்றத்திற்கும் அரசருக்கும் போர் (1642–1649) ஏற்பட்டது. அப் போரில் அரசர் தோல்வியுற்றார். 1649-ல் அவர் கொல்லப்பட்டார். அரசருடன் எல்லா அரசியல் ஸ்தாபனங்களும் அழிக்கப்பட்டன. இதனை 'பியூரிடன் புரட்சி' என்று கூறுகிறார்கள்.

அரசர் கொல்லப்பட்ட பின்னர் குடியரசு ஏற்படுத்தப்பட்டது. அக் குடியரசு பதினோர் ஆண்டுகள் தொடர்ந்து இருந்துவந்தது. அவ்வாட்சியின் தலைவராக ஆலிவர் கிராம்வெல் விளங்கினார். இவர் பல அரசியல் முறையைச் சார்ந்த சோதனைகளை நடத்தினார். ஆனால், அவைகள் வெற்றிபெறவில்லை. ஏனெனில், அக் குடியரசு ஒரு சிலராலே (பியூரிடன்) நடத்தப்பட்டு வந்தது. மக்களாட்சி ஏற்படுத்தப் பொதுத் தேர்தல் நடைபெற்றால், பியூரிடன் ஆட்சி நிலைபெற்றிருக்க முடியாது என்பதைக் கிராம்வெல் அறிந்தார். மேலும், பாராளுமன்றத்தின் அதிகாரங்களைக் கட்டுக்குள் வைத்திருக்க விரும்பினார். அவருடைய விருப்பத்திற்கேற்றாற்போல அரசியல் முறையை அமைப்பது மிகக் கடினமாகத் தோன்றியதால், பாராளுமன்றம் இன்றியே ஆட்சி புரியலானார்.

கிராம்வெல் பொறுப்பு ஏற்பதற்கு முன்னர் தொடங்கப்பட்ட முதல் டச்சுப் போரை நிறுத்தினார். பிறகு ஸ்பெயினுக்கு எதிராக ஃபிரான்சுடன் சேர்ந்துகொண்டார் என்பதை முன்னரே கவனித்தோம். அப் போர் பலத்த பொருட்சேதத்தை உண்டாக்கியது. அதனால் குடியாட்சி மக்களின் நன்மதிப்பை இழந்தது.

கிராம்வெல் இறந்த பிறகு நாட்டில் குழப்பம் ஏற்பட்டது. அதைத் தொடர்ந்து சார்லஸின் மகனான இரண்டாவது சார்லஸ் (1660–1685) 1660-ல் அரசராக்கப்பட்டார். அவருடன் பாராளுமன்றமும், மதஸ்தாபனமும் மீண்டும் ஏற்படுத்தப்பட்டன. புதிதாக

அமைக்கப்பட்ட பாராளுமன்றத்தில் ஆங்கிலிகன் மதத்தைச் சார்ந்தவர்களே பெரும்பான்மையினராய் இருந்தார்கள். ஆகவே, பியூரிடன்கள் மிகவும் கொடுமைப்படுத்தப்பட்டார்கள். ஆனால், அரசர் அதிகாரம் உயர்ந்ததா, பாராளுமன்றத்தின் அதிகாரம் உயர்ந்ததா என்கிற பிரச்சினைக்கு இன்னும் முடிவு காணப்படவில்லை. சார்லஸும், அவருடைய தம்பி ஜேம்ஸும் கத்தோலிக்க வழிகளில் வளர்க்கப்பட்டவர்கள். ஆகவே, அவர்கள் கத்தோலிக்கர்களுக்கு மத உரிமையை வழங்க விரும்பினார்கள். ஆனால், பாராளுமன்றம் அதற்குத் தடையாக நின்றது. வெளிநாட்டு விவகாரங்களில் இருவரும் ஃபிரான்சுடன் உறவுகொள்ள விரும்பினார்கள். பாராளுமன்றம் அதற்கு இசைவு கொடுக்கவில்லை. எனவே, இருவருக்கும் மறுபடியும் சச்சரவுகள் ஏற்பட்டன.

இரண்டாவது சார்லஸ் மிகவும் பக்குவமாக நடப்பவர். அவரைப் பின்தொடர்ந்த இரண்டாவது ஜேம்ஸ் (1685–1688) வீம்பு மிக்கவர். அவர் மதவெறி கொண்டவர். அவர் தம் விருப்பம்போல் ஆட்சி செய்ய விரும்பியதால், பாராளுமன்றத்தைக் கலைத்துவிட்டார். கத்தோலிக்கர்களை உயர்பதவியில் அமர்த்த அவர்களுக்கு எதிராகச் செய்யப்பட்ட சட்டங்களினின்றும் அவர்களுக்கு விலக்கு அளித்தார் (dispensing power). சில சட்டங்களை நடைமுறைப்படுத்துவதை நிறுத்தினார் (suspending power). இதனால் கத்தோலிக்கர்கள் பொது இடங்களில் தடையின்றி வழிபாடு நடத்த முடிந்தது. அவருடைய செய்கைகள் மக்களின் கோபத்தைக் கிளறிவிட்டன. அவருக்குப்பின் இங்கிலாந்தினை ஆளும் உரிமை அவருடைய மூத்த மகளான மேரியைச் சார்ந்திருந்தது. அவர் வில்லியம் ஆரஞ்சு என்ற பிராடஸ்டன்டு மதத்தைச் சார்ந்த டச்சுத் தலைவரை மணம் செய்திருந்தார். ஆகவே, ஜேம்ஸ் இறந்த பின்னர் கத்தோலிக்க ஆட்சிக்கு முடிவு ஏற்படும் என்று கருதி அவருடைய சாவை எதிர் நோக்கி மக்கள் இருந்தனர். இப்பொழுது ஜேம்ஸுக்கு ஓர் ஆண்மகவு பிறந்தது. பிறந்த குழந்தை தந்தையைப்போல் கத்தோலிக்க மதத்தில் பற்றுக் கொள்ளக்கூடும் என்று கருதியதால், மக்கள் வில்லியம் ஆரஞ்சு, அவரது மனைவி மேரி ஆகியோரை இங்கிலாந்திற்கு வந்து ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொள்ளுமாறு அவர்களுக்கு வேண்டுகோள் விடுத்தனர். அவர்களும் அவ் வேண்டுகோளை ஏற்று 1688-ல் இங்கிலாந்தில் காலடி எடுத்துவைத்தார்கள். பெருவாரியான மக்களின் ஆதரவு பெற்றிருந்ததால், ஜேம்ஸ் அவர்களை எதிர்க்கத் துணிவுகொள்ளவில்லை. எனவே, அவர் நாட்டைவிட்டு ஓடிவிட்டார். இடைக்காலப் பாராளுமன்றம் ஒன்றைக் கூட்டி உரிமைச் சட்டம் (Bill of Rights) நிறைவேற்றி, வில்லியம், மேரி ஆகியோர்களை இங்கிலாந்தின் அரசர்களாக மக்கள் நியமித்தார்கள்.

இவ்வாறு இங்கிலாந்தில் பெரும் புரட்சியொன்று வெற்றிகரமாக இரத்தச் சேதமின்றி முடிக்கப்பட்டது.

இப்புரட்சி, அரசரின் தெய்விக உரிமைக் கோட்பாட்டினைத் தகர்த்தெறிந்தது. அரசர்களை அமர்த்தும் உரிமை பாராளுமன்றத்தைச் சேர்ந்ததாகும் என்று அறிவிக்கப்பட்டது. அரசர் அதிகாரம் குறைக் கப்பட்டது. பாராளுமன்றத்தின் செல்வாக்கு அதிகரிக்கப்பட்டது. புரட்சிக்குப் பிறகு தானுக வளர்ந்த அமைச்சரவை ஆட்சிமுறை (Cabinet System of Government) ஆப் பாராளுமன்றத்தின் ஆதிக்கத்தை விரிவுபடுத்தியது. ஆங்கிலிகன் மத ஸ்தாபனம் அரசாங் கத்தின் அங்கீகாரம் பெற்ற ஸ்தாபனமாகத் தொடர்ந்து இருந்தது. புரட்சியின் விளைவாகத் தோன்றிய முற்போக்குக் கருத்துகளை ஐரோப்பியர் நாளடைவில் தங்கள் நாடுகளிலும் புகுத்த முற்படலாயினர்.

### அமெரிக்காவில் ஏற்படுத்தப்பட்ட குடியேற்ற நாடுகள்

இன்று உலகத்தின் பல பாகங்களிலும் மேற்கத்திய நாகரிகம் செல்வாக்குப் பெற்றிருப்பதை நாம் காண்கிருேம். ஐரோப்பியர் அவ் விடங்களில் குடியேறியதே இதற்குக் காரணமாகும். 15, 16ஆம் நூற்றுண்டுகளில் இந்தியாவுடனும் கிழக்கிந்தியத் தீவுகளுடனும் நேரடி வியாபாரத் தொடர்புகள் வைத்துக்கொள்ள மேற்கொண்ட கடற்பயணங்கள் புதிய வழிகளுடன், புதிய நாடுகளையும் கண்டு பிடிக்க உதவின. அதன் பிறகு அவரவர் கண்டுபிடித்த இடங்களில் குடியேற்ற நாடுகளை அமைக்க ஐரோப்பியர்கள் முற்பட்டனர். இம் முயற்சியில் முதன்முதலில் ஈடுபட்டவர்கள் ஸ்பானியர்களும் போர்ச்சு கீசியருமேயாவார்கள். அமெரிக்காவில் முதன்முதல் காலடி எடுத்து வைத்த ஐரோப்பியர் கொலம்பஸ் என்பவராவார். இவர் 1492-இல் கிழக்கு நாடுகளுக்குப் புது வழி கண்டுபிடிக்க ஸ்பானிய அரசியின் உதவியுடன் மேற்கொண்ட கடற்பயணம், அவரை மேற்கிந்தியத் தீவுகளில் ஒன்ருன பஹாமா தீவிற்குக் கொண்டு சென்றது. அதைத் தொடர்ந்து மேலும் மூன்று பயணங்கள் செய்தார். சீனு, ஜப்பான் ஆகிய நாடுகளைத் தேடும் முயற்சி, நடு அமெரிக்கா, வெனிசூலா, கரீபியன் கடல் ஆகிய இடங்களைக் கண்டுபிடிப்பதில் முடிவடைந்தது. 1497-ல் ஜான் கேபட் (John Cabot) என்பவர் வட அமெரிக்கக் கடற் கரைப் பிரதேசத்தில் ஆய்வுப் பயணம் செய்தார். 1500-ல் கேப்ரால் (Cabral) என்னும் போர்ச்சுகீசியர் இந்தியாவிற்குப் பயணஞ் செய்து கொண்டிருந்தபொழுது புயலால் தாக்கப்பட்டு அமெரிக்காவிலுள்ள பிரேசில் (Brazil)) என்னுமிடத்திற்குக் கொண்டுபோகப்பட்டார். இவ்வாருக பிரேசில்மீது போர்ச்சுகீசியர் உரிமைகொண்டாட வழி ஏற்பட்டது. அதே சமயத்தில் அமெரிக்கோ வெஸ்புச்சி (Amerigo Vespucci) என்ற இத்தாலியர் அமெரிக்காவில் ஆய்வுப் பயணம் ஒன்று

நடத்தி, 'புதிய உலகம்' என்ற தலைப்புடன் புத்தகம் ஒன்றை வெளியிட்டார்.

16ஆம் நூற்றுண்டின் தொடக்கத்திலிருந்து ஐரோப்பிய நாடுகள் அமெரிக்காவை வென்று, தங்களுடைய ஆளுகைக்குட்படுத்தலாயின. 1494-ல் போப் அலெக்சாந்தர் உலகத்தின் குறுக்கே வடக்குத் தெற்காக ஒரு கோடிட்டு, அதன் கிழக்குப் பகுதியினைப் போர்ச்சுகீசியருக்கும், மேற்குப் பகுதியினை (பிரேசில் தவிர) ஸ்பெயினுக்கும் கொடுத்தார். அவரவருக்குக் கொடுக்கப்பட்ட பகுதியில் அவர்களுக்கு வியாபாரம் செய்யவும், குடியேற்றம் ஏற்படுத்தவும் ஏகபோகத் தனியுரிமை வழங்கப்பட்டது. அவ்வுரிமையை ஆதாரமாகக் கொண்டு குடியேற்றங்களை அமைப்பதில் கடுமுயற்சிகள் மேற்கொண்டனர். 1513-ல் ஃபிளோரிடாவை ஸ்பானியர்கள் கண்டுபிடித்தனர். 1519-ல் கோர்த்தேஸ் (Cortez) என்ற ஸ்பானியர் மெக்ஸிகோவை வென்றுர். 1538-ல் பிஸாரோ என்ற ஸ்பானியர் பெருவைக் கைப்பற்றினர். சிறிது சிறிதாக ஸ்பானியர்கள் தென் அமெரிக்காவில் பெரும் பகுதி, நடு அமெரிக்கா, மெக்ஸிகோ, ஃபிளோரிடா ஆகியவைகளைத் தங்களின் குடியேற்ற நாடுகளாக மாற்றிவிட்டனர். போர்ச்சுகீசியர் பிரேசிலைத் தங்கள் ஆளுகைக்குட்படுத்தினர்கள். இவ்விடத்திலிருந்து பொன், வைரம் ஆகியவைகள் போர்ச்சுகலுக்குப் பெருமளவில் எடுத்துச் செல்லப்பட்டன.

16ஆம் நூற்றுண்டின் இறுதியில் இவர்களுடைய ஏகபோக உரிமை இங்கிலாந்து, ஹாலந்து, ஃபிரான்சு ஆகிய நாடுகளின் தாக்குதலுக்கு இரையாயிற்று. முதலிரண்டு நாடுகளும் பிராடஸ்டன்டு மதத்தைத் தழுவி போப்பின் அதிகாரத்தை அழித்துவிட்டமையால், அவர்கள் போப்பின் ஏற்பாட்டினை ஏற்கவில்லை. அந் நாடுகளுள் அமெரிக்காவின் குடியேற்றங்களை ஏற்படுத்தவும், அங்கு வியாபாரம் செய்யவும் முற்பட்டன. இதனல் போர் ஏற்பட்டது. டச்சுக்காரர்கள் பிரேசிலின் ஒரு பகுதியைக் கைப்பற்றினர்கள். முடிவில் பிரேசில் மக்கள் ஆங்கிலேயர் உதவியுடன் அவர்களைத் துரத்தியடித்தார்கள். ஸ்பானியர்கள் பல இடங்களில் தொடர்ந்து ஆட்சி செய்து வந்தனர். ஆனல், அவர்கள் ஆதிக்கம் முழுமையாக ஏற்படுத்தப்படாத இடங்களில் ஃபிரான்சு, ஹாலந்து, இங்கிலாந்து நாட்டு மக்கள் குடியேற்றங்களை அமைத்தனர். மேலும், கொள்ளைக்காரர்களின் நடவடிக்கைகள் அவர்களுடைய வியாபாரச் செழிப்பைக் குறைத்தன. ஆகவே, பதினேழாம் நூற்றுண்டில் ஸ்பெயின், போர்ச்சுகல் ஆகிய நாடுகள் தங்கள் செல்வாக்கை இழந்த நிலையில் இருந்தன.

இனி, ஆங்கிலேயக் குடியேற்றங்களைப்பற்றிக் கவனிப்போம். ஆங்கிலேயர்களின் ஆய்வுப் பயணங்களில் முதற் பயணத்தை ஜான்

கேபட் என்பவர் மேற்கொண்டார். அவருக்குப் பின்னர் அவருடைய மகனுன, செபாஸ்டியன் கேபட் (Sebastain Cabot) என்பவர் நடத்திய கடற் பயணங்கள், நியூபவுண்டுலாந்தில் மீன் பிடிக்கும் தொழில் வளர் வதற்கு உதவி செய்தன. ஃபிரான்சிஸ் டிரேக் (Francis Drake) என்பவர் அமெரிக்காவின் கடற்கரையோரமாக கலிஃபோர்னியா வரை சென்ருர். இதை ஆதாரமாக வைத்துக்கொண்டுதான் பிற்காலத்தில் ஆங்கிலேயர்கள், கலிஃபோர்னியா, ஒரிகான் (Oregon), பிரிட்டிஷ் கொலம்பியா ஆகிய இடங்களின்மீது உரிமை கொண்டாடினர். வால்டர் ரேலே (Walter Raleigh) என்ற மற்ருேர் ஆங்கிலேய மாலுமி தென் அமெரிக்காவிலுள்ள கயானு (Guiana) பகுதியில் ஆய்வுப் பயணஞ் செய்தார். வட அமெரிக்காவில் வர்ஜீனியா என்னும் இடத்தில் குடியேற்ற நாடு அமைக்கவும் முற்பட்டார். ஆனுல், பதினுரும் நூற்ருண்டில் குடியேற்ற நாடுகளை அமைப்பதில் ஆங்கிலேயர்கள் வெற்றி காணவில்லை. ஆகவே, அவர்களின் மாலுமிகள் ஸ்பானியர், போர்ச்சுகீசியர் ஆகியோருடைய வியாபாரக் கப்பல்களைக் கொள்ளை யடித்து, எளிதான முறையில் பொருள் ஈட்டிவந்தனர்.

பதினேழாம் நூற்ருண்டில் ஆங்கிலேயர்கள் குடியேற்ற நாடுகளை அமைப்பதில் வெற்றி கண்டார்கள். அவர்களது முதல் அமெரிக்கக் குடியேற்ற நாடு வர்ஜீனியாவாகும். இங்கிலாந்தை முதலாவது ஜேம்ஸ் ஆண்ட காலத்தில், குடியேற்ற நாட்டை ஏற்படுத்த கம்பெனி ஒன்று அமைக்கப்பட்டது. 1607-ல் வட அமெரிக்காவின் கிழக்குக் கரையில் அக் கம்பெனி ‘ஜேம்ஸ் டவுன்’ என்ற சிறு நகரத்தை அமைத்தது. இப் பட்டணத்தைச் சுற்றி வர்ஜீனியா என்ற குடியேற்ற நாடு வளர லாயிற்று. அங்குப் புகையிலைத் தோட்டங்கள் ஏற்படுத்தப்பட்டன. அவைகளில் வேலை செய்வதற்கு ஆஃப்ரிக்காவினின்றும் அடிமைகளைக் கொண்டுவந்தார்கள். 1624ஆம் ஆண்டில் அக்குடியேற்ற நாட்டின் ஆட்சிப் பொறுப்பை ஆங்கிலேய அரசாங்கம் கம்பெனியினிடமிருந்து ஏற்றுக்கொண்டது. கவர்னர் ஒருவரும், ஆலோசனைச் சபை ஒன்றும் ஏற்படுத்தப்பட்டன. பிறகு பிரதிநிதிகள் அடங்கிய சபை ஒன்றும் ஏற்படுத்தப்பட்டது.

1610-ல் நியூபவுண்டுலாந்தில் அரசாங்கமே குடியேற்றம் ஏற் படுத்தியது. 1612-ல் வர்ஜீனியாக் கம்பெனி குடியேற்றக்காரர்களை பெர்மூடாவிற்கு அனுப்பியது. 1684-ல் பெர்மூடா அரசரால் குடியேற்ற நாடாயிற்று (Crown Colony).

முதலாவது ஜேம்ஸ் மன்னர் காலத்தில், அவருடைய மதக் கொள்கையில் அதிருப்தியடைந்து பியூரிடன் மதத்தினர் ஹாலந்துக்குச் சென்றனர். சில ஆண்டுகளுக்குப்பின் அவர்கள் மே ஃபிளவர் (May Flower) என்னும் கப்பலில் அமெரிக்கா சென்றனர். இவர்களை

'யாத்திரைப் பெரியார்கள்' (Pilgrim Fathers) என்று அழைத்தார்கள். இவர்கள் ஏற்படுத்திய முதல் குடியேற்றம் பிளிமத் (Plymouth) என்பதாகும். சில ஆண்டுகளுக்குப் பிறகு அநேக பியூரிடன்கள் மாசாசுசெட்ஸ் குடாக் கம்பெனி (Massachusetts Bay Company) ஒன்றை முதலாவது சார்லஸ் மன்னரின் அனுமதியுடன் தோற்றுவித்தார்கள். அக் கம்பெனியைச் சார்ந்தோர்கள் மாசாசுசெட்ஸ் குடியேற்றத்தை ஏற்படுத்தினுர்கள். இங்குக் குடியேறியவர்கள் மத வெறியர்களிடமிருந்து தங்களைக் காப்பாற்றிக்கொள்ள வெளிநாடு சென்றவர்களாவார்கள். எனினும், அவர்கள் குடியேறிய பகுதிகளில் மத விவகாரங்களில் அடக்குமுறையைக் கையாண்டனர். ஆகவே, முற்போக்குக் கருத்துடையவர்கள் அப் பகுதியினின்றும் பிரிந்து சென்று, 1636-ல் ரோட் ஐலண்ட் (Rhode Island) என்ற குடியேற்றத்தை ஏற்படுத்தினுர்கள். கொஞ்ச காலத்திற்கெல்லாம் மாசாசுசெட்ஸ் குடியேற்ற நாட்டின் தெற்கிலும் வடக்கிலும் பியூரிடன் குடியேற்றங்கள் ஏற்படுத்தப்பட்டன. இவைகளுள் சிலவற்றை மாசாசுசெட்ஸ் தன்னுடன் இணைத்துக்கொண்டது. இறுதியில் நான்கு பியூரிடன் குடியேற்றங்கள் இருந்தன; மாசாசுசெட்ஸ், ரோட் ஐலண்டு, கனக்டிகட் (Connecticut), நியூ ஹாம்ப்ஷயர் (New Hampshire), இவைகளை ஒன்றுசேர்த்து, 'நியூ இங்கிலாந்து' (New England) குடியேற்றங்கள் என்று கூறுவதுண்டு.

இதன் பிறகு ஆங்கிலேயர்கள் மேற்கிந்தியத் தீவுகள் சிலவற்றைத் தங்கள் ஆளுகைக்குட்படுத்தினர். 1885-ல் பார்படாஸ் (Barbados) குடியேற்ற நாடாக ஏற்படுத்தப்பட்டது. அதையடுத்து ஆண்டிகுவா (Antigua), செயின்ட் கிட்ஸ் (St. Kitts), பஹாமாத் தீவுகள் ஆகியவற்றிலும் குடியேற்றம் அமைத்தனர்.

1632-ல் கத்தோலிக்க மதத்தைச் சார்ந்த பால்டிமோர் பிரபு (Lord Baltimore) முதலாவது சார்லஸ் மன்னரிடம் அமெரிக்காவில் குடியேற்றம் ஏறபடுத்துவதற்கு அனுமதி பெற்றுர். அவருடைய மகன் குடியேறுபவர்களை அமெரிக்காவிற்கு அழைத்துச் சென்று, மேரிலாந்து (Maryland) என்னும் குடியேற்றத்தை அமைத்தார். அங்கு பிராடஸ்டன்டு மதத்தினரும் குடியேறினுர்கள்.

1638-ல் நடு அமெரிக்காவில் ஹோண்டுரா கடற்கரையில் பெலிஸ் (Belize) என்ற குடியேற்றத்தை ஏற்படுத்தினுர். 1655-ல் ஜமெய்கா ஆங்கிலேயர் வசமாயிற்று. இது மேற்கிந்தியத் தீவுகளில் ஒன்ருகும்.

இரண்டாவது சார்லஸ் மன்னர் ஆங்கிலேயக் குடியேற்றங்களை அமெரிக்காவில் ஏற்படுத்த உதவிசெய்தார். அவர் காலத்தில் ஹட்சன் குடாக் கம்பெனி (Hudson Bay Company) ஏற்படுத்தப்பட்டது.

1610-ல் ஹட்சன் என்னும் ஆங்கிலேயரால் கண்டுபிடிக்கப்பட்ட ஹட்சன் விரிகுடாப் பகுதியில் வியாபாரத்தைப் பெருக்குவது அதன் முக்கிய நோக்கமாகும்.

அவர் காலத்தில் மேரிலாந்துக்கு அருகே புதிய குடியேற்றம் ஏற்படுத்தப்பட்டது. சில காலத்திற்கெல்லாம் இதை இரண்டு குடியேற்றங்களாகப் பிரித்தனர்; வடக்குக் கரோலினா (North Carolina), தெற்குக் கரோலினா (South Carolina). இவ்வாறாக வட அமெரிக்காவின் கிழக்குக் கரையோரத்தில் இரண்டு ஆங்கிலேயக் குடியேற்றங்களின் தொகுதி அமைக்கப்பட்டது. வடக்குத் தொகுதி நியூ இங்கிலாந்துக் குடியேற்றங்களை உட்கொண்டிருந்தது; தெற்குத் தொகுதி மேரிலாந்து, வர்ஜீனியா, வடக்குக் கரோலினா, தெற்குக் கரோலினா ஆகியவைகளை உட்கொண்டிருந்தது. இவ்விரு தொகுதிகளுக்கு இடையில் நியூ ஆம்ஸ்டர்டாம் (New Amsterdam) என்ற டச்சுக் குடியேற்றமும், நியூ ஸ்வீடன் என்ற ஸ்வீடனின் குடியேற்றமும் இருந்தன. நாளடைவில் நியூ ஆம்ஸ்டர்டாம் குடியேற்றம் நியூ ஸ்வீடன் குடியேற்றத்தைத் தன்னுடன் இணைத்துக்கொண்டது. இரண்டாவது சார்லஸ் மன்னர் காலத்தில் இங்கிலாந்துக்கும் ஹாலந்துக்கும் இடையே போர் நிகழ்ந்தது (1664–67). மன்னரின் தம்பி ஜேம்ஸ், யார்க் கோமகன் (James, the Duke of York) நியூ ஆம்ஸ்டர்டாமைக் கைப்பற்றினார். போரின் முடிவில் நியூ ஆம்ஸ்டர்டாம் ஆங்கிலேயர் வசமாயிற்று. 'நியூயார்க்கு' என்ற பெயர் அதற்கு அளிக்கப்பட்டது. பிறகு அதனை மூன்று பிரிவுகளாக்கினார்கள்— நியூயார்க்கு, நியூஜெர்சி (New Jersey), டெலவேர் (Delaware). வில்லியம் பென் (William Penn) என்பவருக்கு சார்லஸ் பணம் கொடுக்கவேண்டியிருந்ததால், சார்லஸ் அவருக்கு எஞ்சிய நிலப் பகுதியினை அளித்தார். இதற்குப் 'பென்சில்வேனியா' என்ற பெயர் வழங்கலாயிற்று. இங்குதான் ஃபிலடெல்ஃபியா (Philadelphia) என்ற நகரம் ஏற்படுத்தப்பட்டது.

ஆங்கிலேயர்கள் தென் அமெரிக்காவிலுள்ள கயானா என்னுமிடத்தில் குடியேற்றங்களை அமைத்தார்கள். இதுவே பிற்காலத்தில் 'பிரிட்டிஷ் கயானா'வாக வளர்ச்சியுற்றது.

1732-ல் ஜேம்ஸ் ஓக்லெதோர்ப் (James Oglethorpe) என்பவர் இங்கிலாந்தில் கைதிகளை நடத்தும் முறையில் அதிருப்தியடைந்தார். ஆகவே, அமெரிக்காவில் குடியேற்ற நாடொன்றை அமைத்து, விடுதலையான கைதிகளுக்குப் புது வாழ்வு கொடுக்கத் திட்டமிட்டார். இத் திட்டத்தின் விளைவு 'ஜார்ஜியா' என்னும் குடியேற்றமாகும்.

ஆங்கிலேயர்கள் வட அமெரிக்காவில் ஏற்படுத்திய குடியேற்றங்கள் சாலச் சிறந்தனவாகும். அவைகள்தாம் உண்மைக் குடியேற்றங்

களாகும். அவைகளில் குடியேறியவர்கள் குடியிருப்பை நாடி வந்தவர்களேயாவர். ஆகவே, அவர்கள் தங்களுடைய பெண்டு பிள்ளைகளுடன் இங்குக் குடியேறினர்கள். அவர்களில் பலர் விவசாயத்தில் ஈடுபட்டிருந்தனர். அவர்களுக்கு உதவியாக அடிமைகளை அமர்த்திக்கொண்டார்கள். ஆகவே, அடிமை வியாபாரம் பெருகலாயிற்று. மேற்கிந்தியத் தீவுகள் இவ் வியாபாரத்தில் சிறந்து விளங்கின. ஒருசில மக்கள் வியாபாரத்தில் ஈடுபட்டிருந்தனர். மத விவகாரங்களில் சகிப்புத் தன்மை கையாளப்பட்டதால், இக் குடியிருப்புகளின் மக்கள் தொகை அதிகரித்தது. மிகுதியான மக்கள் தொகைதான் அவர்கள் அமெரிக்காவின் ஏனைய பகுதிகளில் குடியேற்றம் ஏற்படுத்துவதில் வெற்றி காண உதவியது. மேலும், ஆங்கிலேய அரசாங்கம், அவர்களுடைய ஆட்சிமுறை, சட்ட திட்டங்கள், வியாபாரம் ஆகியவற்றில் மிகுந்த அக்கறை காட்டிவந்தது. அதே நேரத்தில் அவைகள் இங்கிலாந்தினுடைய நன்மைக்காகவே ஏற்படுத்தப்பட்டவை என்ற கருத்தும் நிலவி வந்தது. அதனால் இங்கிலாந்தின் நன்மைக்கெனப் பல சட்டங்கள் இயற்றப்பட்டன. அவைகளுள் ஒன்று 1660-ல் இயற்றப்பட்ட 'கப்பல் போக்குவரத்துச் சட்டம்' (The Navigation Act). அதன்படி இங்கிலாந்துக்கும் குடியேற்றங்களுக்கும் இடையே நடைபெறும் வியாபாரம் ஆங்கிலேயக் கப்பல்களின் வாயிலாகவே நடைபெற வேண்டும் என்று அறிவிக்கப்பட்டது. சர்க்கரை, புகையிலை போன்ற பொருள்கள் இங்கிலாந்துக்குமட்டுமே ஏற்றுமதி செய்யப்படவேண்டும் என்றும் அறிவிக்கப்பட்டது. இத்தகைய நடவடிக்கைகள் பிற்காலத்தில் குடியேற்றங்களுக்கும் இங்கிலாந்துக்கும் இடையே போர் மூளக் காரணமாயிருந்தன. இதைப்பற்றி விரிவாகப் பின்னர் கவனிப்போம்.

ஃபிரெஞ்சுக்காரர்களும் அமெரிக்காவின் பல பகுதிகளில் குடியேற்றங்களை அமைத்தனர். 16ஆம் நூற்றாண்டில் ஜாக் கார்ஷியர் (Jacques Cartier) என்ற ஃபிரெஞ்சு மாலுமி செயின்ட் லாரன்ஸ் வளைகுடாவைக் (Gulf of St. Lawrence) கண்டுபிடித்தார். செயின்ட் லாரன்ஸ் நதிப் பள்ளத்தாக்கில் அவர் நான்கு பயணங்களை மேற்கொண்டார். லாரன்ஸ் குடாக் கரையோரங்களிலும், அதனருகே உள்ள செயின்ட் ஜீன் தீவு (Ile de St. Jean), ரோயால் தீவு (Ile Royale), கேப் பிரிட்டன் தீவு (Cape Breton Island) ஆகியவைகளிலும், நோவஸ்கோஷியாவிலுள்ள (Novascotia) அகேடியாவிலும் (Acadia) குடியேற்றங்களை ஏற்படுத்தினர்கள். பிரிட்டன் தீவில் பதினெட்டாம் நூற்றாண்டில் 'லூயிபர்க்' என்ற கோட்டை ஏற்படுத்தப்பட்டது. 1608-ல் ஷாம்ப்லேயின் (Champlain) என்பவர் 'கியூபெக்' (Quebec) என்னும் குடியேற்றத்தை ஏற்படுத்தினர். இதனின்றுதான் கனடா குடியேற்ற நாடு வளர்ச்சியுற்றது. இதன்

பிறகு ஃபிரெஞ்சு சமயப் பரப்பாளர்களும் துணிச்சல் வியாபாரம் செய்பவர்களும் லாரன்ஸ் நதிப் பிரதேசத்திலும் பெரும் ஏரிகளிலும் ஆய்வுப் பயணங்களை மேற்கொண்டனர். அவர்களில் ஒருவரான ராபர்ட் தெ லா சேல் (Robert de le Salle) என்பவர் மிசிசிபி நதி வழியாகச் சென்றார். மிசிசிபி பள்ளத்தாக்கின்மீது ஃபிரெஞ்சுக்காரர் களின் உரிமையை நிலைநாட்டினார். பதினேழாம் நூற்றாண்டில் ஃபிரெஞ்சுக்காரர்கள் மேற்கிந்தியத் தீவுகள் சிலவற்றிலும் [மார்தினிக் (Martinique), குவாதெலூப் (Guadeloupe), கிரெனடா (Grenada), செயின்ட் பார்த்தலோமியூ (St. Bartholomew), செயின்ட் குரூவா (St. Croix), செயின்ட் கிட்ஸ் (St. Kitts) தீவின் ஒரு பகுதி], தென் அமெரிக்காவின் கயானாவைச் சேர்ந்த கேயென் (Cayenne) என்னுமிடத்திலும் குடியேற்றங்களை அமைத்தனர். 1699-ல் இல்பர்வில் (Ilberville) என்பவர் லூசியானாவில் (Louisiana) ஃபிரெஞ்சுக் குடியேற்றம் ஒன்றை ஏற்படுத்தினார். லூயி மன்னர் மேற்கிந்தியக் கம்பெனியொன்றை அமைத்துக் குடியேற்ற நாடுகளைப் பெருக்குவதில் காட்டிய அக்கறையைப்பற்றி முன்னர் கவனித்தோம். இக் குடியேற்றங்கள் பெரும்பாலும் இராணுவமுறையை அடிப்படையாகக் கொண்டிருந்தன. ஆகவே, அவைகளில் ஆங்கிலேயக் குடியேற்றங்களைப்போல் மக்கள்தொகை நிறைந்திருக்கவில்லை. அது அக் குடியேற்றங்களின் அழிவுக்கு ஒரு காரணமாகும். அமெரிக்காவில் ஆங்கிலேயர்களும் ஃபிரெஞ்சுக்காரர்களும் பெரும்பாலும் அடுத் தடுத்துக் குடியேற்றங்களை அமைத்தனர். அதனால் பதினேழாம் நூற்றாண்டிலேயே இவ்விரு குடியேற்றங்களுக்கும் இடையே போர் மூண்டது. அவைகளில் முக்கியமானவை நாம் முன்னரே கவனித்த 'வில்லியம் சண்டை' என்ற ஆக்ஸ்பர்க் நேச நாடுகளின் போர் 'ஆன் அரசியார் சண்டை' என்ற ஸ்பானிய வாரிசுரிமைப் போர் ஆகும். இப் போரின் விளைவாக அக்கேடியா ஆங்கிலேயர் வசமாயிற்று. நாளடைவில் ஃபிரெஞ்சுக்காரர்கள், ஆங்கிலேயர்கள் அப்பலாசியன் மலைத்தொடரைக் கடந்து அமெரிக்காவின் உட்பகுதியில் புகுந்து, அவர்களது குடியேற்றங்களை ஏற்படுத்தவிடாமல் தடுத்து, அமெரிக்காவின் உட்பகுதியைத் தங்களது ஆளுகையின்கீழ்க் கொண்டுவர முடிவு செய்தார்கள். ஆகவே, பல கோட்டைகளை வரிசையாக அமைத்தனர். ஆங்கிலேயர்களும், ஃபிரெஞ்சுக்காரர் களின் குடியேற்றங்களாகிய கனடாவும் லூசியானாவும் இணைக்கப் பட்டால், தங்களுடைய முன்னேற்றம் பாதிக்கப்படும் என்று எண்ணிய தால் அவ்விணைப்பைத் தடுக்க முற்பட்டனர். ஆகவே, அவர்கள் ஒகியோ (Ohio) நதிப் பள்ளத்தாக்கில் கோட்டைகள் அமைக்க லாயினர். இதனால் பதினெட்டாம் நூற்றாண்டில் இரண்டு போர்கள் ஏற்பட்டன—ஆஸ்திரியா வாரிசுப் போர், ஏழாண்டுப் போர். அப் போர்களின் விளைவுகளை நாம் முன்னரே கண்டோம். இதன் பிறகு

ஆங்கிலேயர்களுடைய ஆதிக்கம் வட அமெரிக்காவில் நிலைநிறுத்தப் பட்டது.

பதினேழாம் நூற்றுண்டில் ஹாலந்து பெரு வியாபார நாடாக விளங்கியது. டச்சுக்காரர்கள் பால்டிக் கடல், அண்மைக் கிழக்கு நாடுகள், அமெரிக்க தூரக்கிழக்கு நாடுகள் ஆகியவற்றுடன் வியாபாரத் தொடர்புகள் வைத்திருந்தனர். அமெரிக்காவில் குடியேற்றங்கள் அமைப்பதற்கும், வியாபாரம் செய்வதற்கும் 1621-ல் மேற்கிந்தியக் கம்பெனி ஒன்று அமைக்கப்பட்டது. இக் கம்பெனி தன்னுடைய நோக்கங்களை நிறைவேற்றப் போர்த்துகீசியருடனும் ஸ்பானியர்களுடனும் போர்புரியவேண்டியதாயிற்று. முடிவில் மேற்கிந்தியத் தீவிலும், ஹட்சன் நதிப் பள்ளத்தாக்கிலும், தென் அமெரிக்காவில் கயானுவிலும் குடியேற்றங்களை அமைத்தனர். பிரேசிலின் ஒரு பகுதியைக் கைப்பற்றினுர்கள். ஆனுல், வெகு விரைவில் அவ்விடத்தினின்றும் பிரேசில் மக்களால் துரத்தப்பட்டனர். பதினேழாம் நூற்றுண்டில் ஹாலந்துக்கும் இங்கிலாந்துக்கும் வியாபாரம் காரணமாக மூன்று போர்கள் நிகழ்ந்தன. இவைகளின் முடிவில் டச்சுக்காரர்கள் நியூ ஆம்ஸ்டர்டாம் பகுதியினை இழந்தார்கள். டச்சுக்காரர்கள் குடியேற்றங்களை வியாபாரத் தலங்களாகக் கருதினுர்களேயொழியக் குடியிருப்பு இடங்களாகக் கொள்ளவில்லை. எனவே, அவர்களது குடியேற்றங்கள் ஆங்கிலேயர்களின் குடியேற்றங்களைப்போல் பலம் பொருந்தியனவாக இல்லை. அதுவே அவர்களின் அழிவுக்குக் காரணமாயிற்று.

### ஆஃப்ரிக்காவில் ஏற்படுத்தப்பட்ட குடியேற்ற நாடுகள்

பதினைந்தாம் நூற்றுண்டில் ஆஃப்ரிக்காக் கண்டத்தில் ஆய்வுப் பயணங்கள் பலவற்றை ஐரோப்பியர்கள் மேற்கொண்டனர். போர்த்துகீசிய அரசரான ஹென்றி என்பவர் புதிய நாடுகளைக் கண்டு ஆராய்வதில் மிகுந்த அக்கறை கொண்டிருந்தரர். மேலும், அவர் பிற மதத்தினரைக் கிறித்துவ மதத்தைத் தழுவும்படி செய்யவேண்டும் என்று ஆசைப்பட்டார். அக் காலத்தில் இந்தியாவிற்குப் புது வழி கண்டு பிடிக்கவேண்டிய அவசியத்தைப் பலர் உணர்ந்திருந்தனர். மேற்கூறிய காரணங்களால் போர்த்துகீசிய மாலுமிகள் ஆஃப்ரிக்காவின் மேற்குக் கரையோரமாகக் கடற் பயணங்கள் செய்தனர். 1460-க்குள் அவர்கள் ஆஃப்ரிக்காவின் மேற்குக் கரையோரத்தின் பாதித் தூரம் சென்றனர். 1488-ல் பார்த்தலோமியூ டயஸ் (Bartholomew Diaz) என்பவர் மேற்குக் கரையின் தெற்கு முனையை—நன்னம்பிக்கை முனையை—அடைந்தார். அவரைப் பின்தொடர்ந்த வாஸ்கோடகாமா (Vasco de Gama) என்பவர் நன்னம்பிக்கை முனையைக் கடந்து, கிழக்குக் கரையோரமாக மாலிந்தி (Malindi) வரை பயணம் செய்து,

பிறகு இந்தியாவின் மேற்குக் கரையிலுள்ள கள்ளிக்கோட்டையை அடைந்தார். இந்தக் கடற் பயணங்கள் போர்த்துகீசியர்களுடைய வியாபாரத் தலங்கள் பல ஆஃப்ரிக்காவின் கடற்கரையோரத்தில் அமைக்கப் பெரிதும் பயன்பட்டன. முதன்முதலில் ஆஃப்ரிக்கக் கரைப் பகுதியை ஆராய்ந்த காரணத்தால், ஆஃப்ரிக்கா முழுவதையும் அதனுடையதெனப் போர்ச்சுகல் உரிமை கொண்டாடியது. ஆனுல், அவ்வுரிமையைப் பாதுகாக்க அதற்குப் போதிய பலமில்லை. அதனுல் ஏனைய ஐரோப்பிய நாடுகள் ஆஃப்ரிக்காவில் வியாபாரத் தலங்களை அமைக்க முற்பட்டன. தாமஸ் விந்தாம் (Thomas Wyndham), ஜான் லோக் (John Lok) ஆகிய ஆங்கிலேய மாலுமிகள் கினி குடா விற்குப் பல பயணங்களை நடத்திச் சென்ருர்கள். ஜான் ஹாகின்ஸ் (John Hawkins) என்பவர் கினி கடற்கரையில் இறங்கிப் பல நீக்ரோக் களைப் பிடித்து, அவர்களை ஸ்பானிய அமெரிக்கக் குடியேற்ற நாடுகளில் விற்ருர். இதுதான் அடிமை வியாபாரத்தின் தொடக்கமாகும். அடிமை வியாபாரம் மிகவும் இலாபகரமாக இருந்ததால், ஆங்கிலேய அரசாங்கம் மேற்கு ஆஃப்ரிக்காவின்பால் தன்னுடைய கவனத்தைத் திருப்பியது. காம்பியா (The Gambia) நதிக்கரையில் ஒரு தலத்தை 1631-ல் ஏற்படுத்தியது. 1662-ல் 'ராயல் அட்வென்சார்ஸ்' (Royal Adventurers) என்னும் கம்பெனி ஏற்படுத்தப்பட்டது. அடிமை வியாபாரத்தை ஒழுங்குபடுத்துவதே இதனுடைய முக்கிய நோக்கமா யிருந்தது. ஆனுல், டச்சுக்காரர்களின் போட்டியால் இக் கம்பெனி நலிவுற்றது. 1672-ல் 'ராயல் ஆஃப்ரிக்கக் கம்பெனி' (Royal African Company) என்ற பெயரால் அக் கம்பெனி மறுபடியும் புதுப்பிக்கப்பட்டது. அது கோல்ட்கோஸ்டில் பல வியாபாரத் தலங்களை ஏற்படுத்தியது. ஸியேராலியோன் என்னுமிடத்திலும் குடி யேற்றத்தை ஆங்கிலேயர்கள் அமைத்தனர்.

1652-ல் டச்சுக்காரர்கள் நன்னம்பிக்கை முனையைத் தம் வசப் படுத்தினுர்கள். தேவைப் பொருள்களுக்காகக் கப்பல்கள் செல்லக் கூடிய துறைமுகமாக அதனை ஏற்படுத்தினுர்கள். ஆனுல், அதைக் குடியேற்ற நாடாக அமைக்க யாதொரு முயற்சியும் செய்யவில்லை.

ஃபிரெஞ்சுக்காரர்களும் ஆஃப்ரிக்காவில் மடகாஸ்கர், கோரீ (Goree), செனிகல் நதிப் பிரதேசம் ஆகிய இடங்களில் வியாபாரத் தலங்களை ஏற்படுத்தினுர்கள். ஆனுல், உண்மையான ஐரோப்பியக் குடியேற்றங்கள் பிற்காலத்தில்தான் ஏற்படுத்தப்பட்டன.

### பதினேழு, பதினெட்டாம் நூற்றுண்டுகளில் ஆசியா

இனி, இக் காலத்தில் ஆசியாவின் முக்கிய நாடுகளாக விளங்கிய இந்தியா, சீனு, ஜப்பான் ஆகியவற்றின் நிலைமையினைக் கவனிப்போம்.

பதினேழாம் நூற்ருண்டின் தொடக்கத்தில் அக்பர் என்னும் சிறப்புவாய்ந்த மொகலாய அரசர் இந்தியாவை ஆண்டுவந்தார். ஏறக் குறைய ஐம்பது ஆண்டுகள் அவர் அரசு செலுத்திய காலத்தில், புதுக்கருத்துகளை இந்தியாவில் புகுத்தினர். மக்களின் நலனுக்காக மிகவும் பாடுபட்டார். அவர் அரசியல் திறமை வாய்ந்தவர். அஞ்சாது போர் புரியும் ஆற்றலையும் பெற்றவர். அவருக்கு எழுதவும் படிக்கவும் தெரியாது என்று கூறப்படுகிறது. ஆனால், கல்வித்துறையில் மிகுந்த அக்கறை கொண்டவர் என்பதற்குப் போதிய சான்றுகள் உள்ளன. இந்துக்களை அடக்கியாள்வதற்குப் பதிலாக அவர்களது ஒத்துழைப் பையும் நன்மதிப்பையும் பெற்ற பேரரசை ஏற்படுத்தவேண்டும் என்ற புரட்சிகரமான நோக்கத்தைக் கொண்டிருந்தார். ஆகவே, இந்துக்களை உயர்ந்த பதவியில் அமர்த்தினர். மத விவகாரங்களின் சகிப்புத் தன்மையில் திடநம்பிக்கை கொண்டிருந்தார். ஆகவே, இந்துக்களின் மீது சமயம் காரணமாகச் சுமத்தப்பட்ட கட்டுப்பாடுகளை அகற்றினர். ஆகவே, வரலாற்றில் காணப்படும் பெருமைவாய்ந்த அரசர்களில் ஒருவராக இவர் கருதப்படுகிறர்.

அக்பருக்குப்பின் அவருடைய மகன் சலீம்' 'ஜஹாங்கீர்' என்ற பட்டத்துடன் பேரரசரானர். நியாயம் வழங்குவதில் மிக்க ஆர்வம் கொண்டவர். ஆகவே, தம் அரண்மனை வாயிலில் மணி ஒன்றை அமைத்தார். அம் மணியை அசைத்து, அவரிடம் யாவரும் தங்க ளுடைய கஷ்டங்களை எடுத்துரைக்க வழிசெய்தார். இவர் காலத்தில் ஐரோப்பாவிற்கும் இந்தியாவிற்கும் இடையே புதுத் தொடர்பு ஒன்று ஏற்படுத்தப்பட்டது. இதைப்பற்றிப் பின்னர் விவரமாகக் கவனிக் கலாம்.

1628-ல் ஷாஜஹான் பேரரசரானர். அவருடைய காலம் இந்தியா வில் மொகலாய ஆட்சியின் பொற்காலம் என்று பொதுவாகக் கூறப்படு கிறது. அவர் ஆற்றல்வாய்ந்த அரசர். அவருடைய குடிமக்களை அவர் குழந்தைகளாகப் பாவித்தார். அவரது ஆட்சியின் கடைசியில் ஏற்பட்ட வாரிசுப் ,போருக்கு முன்னர் அவருடைய அதிகாரத்தை எதிர்க்க எவருக்கும் தைரியமில்லை. அயல் நாடுகளினுல் யாதோர் ஆபத்தும் இந்தியாவிற்கு அவர் காலத்தில் நேரவில்லை. நிதிநிலையும் சீரிய நிலையில் இருந்தது. மேற்கு ஆசியாவுடனும் ஐரோப்பாவுடனும் இந்திய மக்கள் நடத்திவந்த வியாபாரம் செழிப்புற்றுக் காணப்பட்டது. கட்டடக் கலை ஓங்கி வளர்ந்திருந்தது. அக் காலத்தில் இந்தியாவின் கட்டடக் கலையின் சிறப்பை எடுத்துக்காட்டும் சின்னங்களில் ஒன்ருகிய தாஜ் மஹால் அவரால் கட்டிமுடிக்கப்பட்டது. அதைக் கட்டிமுடிக்க இருபத்திரண்டு ஆண்டுகளும், மூன்று கோடி ரூபாய்களும் செலவிடப் பட்டன என்று கூறுகிருர்கள். இலக்கிய உலகிலும் குறிப்பிடத்தக்க

முன்னேற்றங்கள் இவர் காலத்தில் ஏற்பட்டன. அப்துல் அமீத் லஹோரி (Abdul Hamid Lahori) என்பவர் இயற்றிய 'பாதுஷா நாமா' (Padshah Nama), காஃபீகான் (Khafi Khan) இயற்றிய 'முந்தகாப்-உல்-லுபாப், (Muntakab-ul-Lubab), பீஹாரிலால் இயற்றிய 'சாத் சாய்' (Sat Sai of Biharilal) ஆகிய நூல்கள் இவர் காலத்தில் இயற்றப்பட்டன. சிறப்பு மிக்க இவருடைய ஆட்சியிலும் சில குறைகள் உண்டு. மாகாண கவர்னர்களின் ஆட்சி சீர்கெட்டிருந்தது. அதைச் சீர்படுத்த யாதொரு முயற்சியும் மேற்கொள்ளப்படவில்லை. மக்களின் பொருளாதார நிலை சீரழிந்திருந்தது. அதற்குக் காரணம் அவர்கள்மேல் சுமத்தப்பட்ட வரிச்சுமையேயாகும். மாபெருஞ் சேனையையும் ஆளும் வர்க்கமொன்றையும் வைத்துப் போற்றுவதற்கு ஏராளமான பொருள் தேவைப்பட்டது. அவர் காலத்தில் கட்டப்பட்ட கட்டடங்களும் பெரும் பொருட்செலவினை ஏற்படுத்திவிட்டன. ஆகவே, இவருடைய ஆட்சி ஏறத்தாழ 14ஆவது லூயி மன்னரின் ஆட்சியை ஒத்திருக்கிறது என்று கூறுவர்[1]. ஃபிரான்சில் ஏற்பட்டதுபோலவே இந்தியாவிலும் பொதுநிதி சீர்கேட்டை அடைந்தது. இதுவே மொகலாயப் பேரரசு அழிவதற்கு ஒரு காரணமாகும்.

1657-ல் ஷாஜஹான் நோய்வாய்ப்பட்டார். அதைத் தொடர்ந்து நாட்டில் வாரிசுப் போர் ஒன்று நிகழ்ந்தது. முடிவில் ஷாஜஹானுடைய மூன்றுவது மகன் அவுரங்கசீப் வெற்றி பெற்றுர்; 1658-ல் பேரரசராக முடி சூட்டிக்கொண்டார். ஷாஜஹான் சிறையிலடைக்கப்பட்டார். பதினேழாம் நூற்றுண்டின் பிற்பகுதி முழுவதிலும் இந்தியாவை ஆண்ட அவுரங்கசீப் பல சாதனைகளைப் புரிந்தார். முதலில் வங்காளத்தின் கவர்னராகப் பணியாற்றிவந்த மீர் ஜம்லா (Mir Jumla) உதவி கொண்டு மொகலாயப் பேரரசுக்கு இடையூறுகளை விளைவித்து வந்த அஹோம்ஸ் (Ahoms) என்னும் மக்களை ஒடுக்கினர். அவர்களுடைய ஆட்சிப் பகுதிகளில் சிலவற்றைத் தம் நாட்டுடன் சேர்த்துக்கொண்டார். வடமேற்கு எல்லைப் பகுதியில் வாழ்ந்துவந்த ஆப்ரிதியர் போன்ற மக்கள் மொகலாயர்களுக்குப் பலவிதத் தொல்லைகளைக் கொடுத்து வந்தனர். அவர்களுக்கு எதிராக அவுரங்கசீப் தாமே படை நடத்திச் சென்றுர். அநேக தலைவர்களுக்குப் பணம் கொடுத்து, அவர்களைத் தம் ஆணைக்குட்படுத்தினர். மற்றவர்களைப் படைகளைக் கொண்டு அடக்கினர். உதவித் தொகை கொடுத்தும், ஒரு மக்கட்பிரிவை மற்றென்றுக்கு எதிராகத் தூண்டிவிட்டும் அமைதியை அவ்விடத்தில் ஏற்படுத்தினர்.

மத விவகாரங்களில் இவருடைய கொள்கை அக்பருடைய கொள்கையினின்றும் முற்றிலும் மாறுபட்டதாக இருந்தது. இவர் தீவிரமான

[1] 'Three Authors', 'An Advanced History of India', page 490.

மதக் கருத்துகளைக் கொண்டவர். திருக்குரானில் கூறப்பட்டுள்ளது போலவே நடக்க முயன்றார். அரசரவையில் இசை பாடுவதை நிறுத்தினார். ஜோசியர்களை விரட்டினார். குடிப்பழக்கத்தை நிறுத்தப் பாடுபட்டார். பேரரசர் பிறந்தநாளையொட்டித் தங்கத்தாலும் வெள்ளியாலும் பேரரசரை எடைபோடும் வழக்கத்தை நிறுத்தினார். திருவிழாக் காலங்களில் ஊர்வலங்களைத் தடைசெய்தார். தூய வாழ்க்கையை வற்புறுத்துவதற்கெனத் தனி அதிகாரிகளை நியமித்தார். முகம்மதியர்களல்லாதாரை இஸ்லாம் மதத்தில் சேரும்படி வற்புறுத்தினார். அவ்வாறு சேருபவருக்கு உயர்ந்த பதவிகள் அளித்தார். இந்துக்களைப் பலவாறு கொடுமைப்படுத்தினார். அவர்களுடைய தொழுகை இடங்களை அழித்தார். காசி, மதுரை ஆகிய இடங்கள் அவருடைய கொடுமைக்கு இலக்காயின. இந்துக்கள்மீது விதிக்கப்பட்டிருந்த ஜிசியா வரியைப் புதுப்பித்தார்.

இக் கொடுமைகளைச் சகிக்கமுடியாத இந்துக்கள், அரசாட்சிக்கு எதிராகப் பல கிளர்ச்சிகளைச் செய்தார்கள். ஜாட் என்னும் மக்கள் கோக்லா (Gokla), இராஜாராம் சூராமன் (Churaman) ஆகிய தலைவர்களின்கீழ் கிளர்ச்சி செய்தார்கள். கிழக்கு மாளவத்தில் புந்தேலர்கள் தனி நாடு ஒன்றை அமைத்தனர். சாத்நாமி (Satnamis) என்பவர்களின் கிளர்ச்சியை அவுரங்கசீப் அடக்கிவிட்டார். சீக்கியர்களின் தலைவர் டெஜ் பகதூர் (Teg Bahadur) அவுரங்கசீப்பின் நடவடிக்கைகளைக் கண்டித்த காரணத்திற்காகக் கொல்லப்பட்டார். இதனால் சீக்கியர்கள் மொகலாய அரசரின் பகைவர்களானார்கள். குரு கோவிந்தர் தலைமையின்கீழ் மொகலாயர்களுக்கு எதிராகச் சண்டையிட்டு வந்தனர். அக்பர் காலத்தில் மொகலாய ஆட்சியின் தூண்களாக இருந்த இராஜபுத்திரர்களும் அவுரங்கசீப்பை எதிர்க்கலாயினர். மார்வார் அரசர் இறந்தபின் அவுரங்கசீப் அப்பகுதியைப் பேரரசுடன் இணைத்தார்.

மேலும், அவ்வரசர் இறந்தபின் அவருக்குப் பிறந்த குழந்தையை அப் பகுதி மக்கள் அரசராக்கவேண்டும் என்று விரும்பினர். அவுரங்கசீப் அக் குழந்தை இஸ்லாம் மதத்தைத் தழுவினால் அரசபீடத்தில் அமர்த்துவதாகக் கூறினார். இதனால் மார்வார் மக்கள் துர்காதாஸ் என்பவரின் தலைமையின்கீழ்க் கிளர்ச்சி செய்தார்கள். அவர்களுக்கு உதவியாக மேவார் சேர்ந்துகொண்டது. அவுரங்கசீப் தாமே படை நடத்திச் சென்றார். மேவார் தலைநகரான சித்தூரைக் கைப்பற்றினார். அச் சமயத்தில் அவருடைய மகனை அக்பர் தந்தைக்கெதிராகக் கலகம் செய்தார். இராஜபுத்திரர்கள் அவருடன் சேர்ந்தனர். அவுரங்கசீப் மிகத் தந்திரமாக அவர்களை அக்பர் பக்கத்தினின்றும் பிரித்துவிட்டார். 1681-ல் மேவாருடன் சமாதானம் செய்துகொண்டார். ஜிசியா வரிக்குப் பதிலாகச் சில நிலப்

பகுதிகளை அவுரங்கசீப்புக்குக் கொடுப்பதற்கு மேவார் இசைந்தது. மார்வார் போரைத் தொடர்ந்து நடத்திவந்தது.

அதன் பிறகு அவுரங்கசீப் தம் கவனத்தைத் தக்காணத்தில் திருப்பினார். அப்பொழுது சிவாஜி என்ற மராட்டியத் தலைவர் பல கோட்டைகளைத் தக்காணத்தில் ஏற்படுத்தப்பட்டிருந்த முஸ்லிம் நாடுகளில் ஒன்றான பீஜப்பூர் சுல்தானிடமிருந்து கைப்பற்றினார். மொகலாயப் பேரரசும் அவரால் தாக்கப்பட்டது. வடமேற்குப் பகுதியில் அமைதி ஏற்படுத்துவதில் தம்முடைய கவனத்தைச் செலுத்தியிருந்ததால், அவுரங்கசீப் சிவாஜியை அடக்க உடனடியாக நடவடிக்கையினை மேற்கொள்ளவில்லை. இதற்கிடையில் பீஜப்பூர் சுல்தான் அப்சல்கான் என்ற சேனைத் தலைவனின்கீழ் அனுப்பிய படையொன்றினை சிவாஜி தோற்கடித்தார். அதன் பிறகு மொகலாய சேனையொன்று ஷயிஸ்டகான் என்பவரின் தலைமையின்கீழ் அனுப்பப்பட்டது. அதுவும் சிவாஜியால் தோற்கடிக்கப்பட்டது. ஆகவே, அவுரங்கசீப் ஜெய்சிங்கைத் தக்காணத்திற்கு அனுப்பிவைத்தார். சிவாஜி (1665) இவருடன் சமாதானம் செய்துகொள்ள வேண்டியதாயிற்று. ஜெய்சிங்கு இவரை டில்லிக்கு வருமாறு அழைத்தார். அவுரங்கசீப்பிடம் தக்க வெகுமதி பெறலாம் என்ற நோக்கத்துடன் டில்லி சென்றார். அங்கு அவர் அவமதிக்கப்பட்டார். பிறகு பேரரசரை ஏசியதற்காகச் சிறையிலடைக்கப்பட்டார். வெகு தந்திரமாகச் சிறையிலிருந்து தப்பித் தனது நாடு வந்து சேர்ந்தார். 1674-ல் இராஜ்கர் என்னுமிடத்தில் அரசன் என்ற பட்டத்தைச் சூட்டிக்கொண்டார். 1680-ல் சிவாஜி மறைந்த பின்னர் சாம்பூஜி (Shmbhuji) மராத்திய மன்னரானார்.

வட இந்தியாவில் பல கிளர்ச்சிகளை அடக்கிய பிறகு அவுரங்கசீப் தக்காணத்தின்பால் தம்முடைய கவனத்தைச் செலுத்தினார். முதலில் அங்கிருந்த ஷியா பிரிவைச் சார்ந்த முகமதிய நாடுகளான பீஜப்பூர், கோல்கொண்டா ஆகியவைகளைத் தாக்கி, மொகலாயப் பேரரசுடன் சேர்த்துவிட்டார். பிறகு மராத்தியர்களைத் தோற்கடித்து சாம்பூஜியைக் கொன்றார் (1687). அவருடைய தம்பி இராசாராம் தெற்கு நோக்கி ஓடினார். அவரைப் பின்தொடர்ந்து திருச்சி, தஞ்சாவூர் ஆகியவற்றைத் தம்முடைய கைவசமாக்கிக்கொண்டார். ஆனால், மராத்தியர்களின் தொல்லை அடங்கவில்லை. இராசாராம் சாகும்வரை மொகலாயர்களுக்கு இடையூறுகளை விளைவித்துக்கொண்டிருந்தார். அதன் பிறகு அவருடைய மனைவி தாராபாய் அவர்களுக்குத் தொடர்ந்து தொல்லை கொடுத்துவந்தார்.

அவுரங்கசீப் இறந்த பின்னர் மொகலாயப் பேரரசு அழிவுற்றது. அவரைப் பின்தொடர்ந்த அரசர்கள் பலமற்றவர்களாயிருந்தனர். அநேக வாரிசுப் போர்கள் ஏற்பட்டதால் நாட்டில் குழப்பமதிகரித்தது.

அவுரங்கசீப்பின் மதக்கொள்கை இந்துக்களையும், பிற மதத்தினரையும் பேரரசின் எதிரிகளாக மாற்றிவிட்டது. அடிக்கடி தொடுக்கப்பட்ட போர்கள் பேரரசின் கருவூலத்தைக் காலியாக்கிவிட்டன. முஸ்லிம் களுக்குள்ளேயே பிளவுகள் ஏற்பட்டன. அவர்கள் பொதுவாக இரு கட்சியினராகப் பிரிந்திருந்தனர்—ஹிந்துஸ்தானி முஸ்லிம்கள் கட்சி; வெளிநாட்டு முஸ்லிம்கள் கட்சி. வெளிநாட்டு முகம்மதியர்கள் இரு பிரிவாக இருந்தனர்—துரானியர் கட்சி; இரானியர் கட்சி. அவர் களுக்குள் ஒற்றுமை இல்லாததால் மொகலாயப் பேரரசு அழிவுற்றது. 18ஆம் நூற்றாண்டில் பேரரசர்களின் பலவீனத்தைப் பயன்படுத்தி அந்நியர்கள் படையெடுத்தார்கள். 1738-ல் நாதிர் ஷா என்னும் பாரசீக மன்னர் இந்தியாவின்மீது படையெடுத்துப் புறப்பட்டார். மொகலாய அரசரைத் தோற்கடித்து டில்லியைக் கைப்பற்றினார். அங்குள்ள மக்களைக் கொள்ளையடித்துப் பெரும் பொருளுடன் தம் நாடு திரும்பினார். சுமார் முப்பது கோடிரூபாய் மதிப்புள்ள பொருள் களை எடுத்துச் சென்றதாகக் கூறப்படுகிறது. அவர் கொண்டு சென்ற பொருள்களில் குறிப்பிடத்தக்கவை கோஹினூர் வைரமும் மயிலாசன மும் (Peacock Throne) ஆகும். அடுத்து, அகமது ஷா அப்தாலி என்னும் ஆப்கானியர் பன்முறை இந்தியாவின்மீது படையெடுத்தார். அக் காலத்தில் மராத்தியர்கள் இந்தியாவில் தங்கள் ஆதிக்கத்தை ஏற்படுத்த மேற்கொண்ட முயற்சியினை மூன்றாவது பானிப்பட் போரில் (1761) தோற்கடித்தார். அந்நியர்களின் படையெடுப்பு மொகலாயப் பேரரசின் வீழ்ச்சியைத் துரிதப்படுத்தின. மேலும், மொகலாயப் பேரரசர்கள் பலமற்றவர்கள் என்று அறிந்தவுடன், ஆங்காங்கே ஆட்சி செலுத்திய மொகலாய கவர்னர்கள் தங்களுடைய சுய ஆட்சியை ஏற்படுத்திக்கொண்டார்கள். இவ்வாறு தக்காணத்தில் நைஜாம்-உல்-முல்க் தம்முடைய ஆட்சியை ஏற்படுத்தினார். அயோத்தி (Oudh), வங்காளம் ஆகியவைகளும் தனிப்பட்ட முஸ்லீம் நாடுகளாயின. 18ஆம் நூற்றாண்டு இந்துக்கள் புத்துயிர் பெற்ற காலமாகும். சீக்கியர்கள், இராஜபுத்திரர்கள், மராத்தியர்கள் தங்களுடைய செல் வாக்கைப் பெருக்கிக்கொண்டார்கள். சாம்பூஜிக்குப் பிறகு மராத்தியர் களிடம் வாரிசு காரணமாகப் பிளவு ஏற்பட்டது. முடிவில் ஷாஹு (Shahu) வெற்றிபெற்றார். எனினும், பீஷ்வா என்ற பட்டம் பெற்ற முதலமைச்சரே அரசியல் விவகாரங்களில் செல்வாக்குப் பெறலாயினர். மேற்கூறிய காரணங்களால் மொகலாயப் பேரரசு வீழ்ந்தது. ஆனால், பேரரசர் என்ற பட்டம் 1857 வரை தொடர்ந்து வகிக்கப்பட்டுவந்தது. 1857-ல் கடைசிப் பேரரசரான பகதூர் ஷா என்பவர் பர்மாவிற்கு நாடு கடத்தப்பட்டார்.

ஆசிய வரலாற்றில் பதினேழாம் நூற்றாண்டு மற்றொரு வகையில் சிறப்புப்பெற்றது. அப்பொழுதுதான் மேலைநாட்டவர் கடல்வழியாகக்

கிழக்குப் பகுதியில் புக ஆரம்பித்தனர். மேலைநாடுகளுக்கும், கீழை நாடுகளுக்கும் இடையே வெகுகாலத்திற்கு முன்னரே வியாபாரத் தொடர்புகள் ஏற்படுத்தப்பட்டிருந்தன. ஆனால், அவ்விருவகை நாடுகளுக்கும் இடையே நேரடித் தொடர்பு அதிகமாயிருந்ததில்லை. அவர்களிடையே ஏற்பட்ட வியாபாரம் பெரும்பாலும் மற்றவர்களால் நடத்தப்பட்டது. 15, 16ஆம் நூற்றாண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட கடற்பயணங்கள் மேலைநாடுகளையும் கீழை நாடுகளையும் நெருக்கமாகப் பிணைத்துவிட்டன. முதலில் ஐரோப்பியர்கள் ஆசியாவின் பல்வேறு பாகங்களில் வியாபாரத் தலங்களை ஏற்படுத்துவதுடன் மனநிறைவு அடைந்தார்கள். ஆனால், அங்கு ஏற்பட்டிருந்த சூழ்நிலைகள் அவர்களை ஆதிக்க வெறி கொள்ளுமாறு செய்தன. அதனால், ஆசியாவின் பெரும் பகுதி மேற்கத்திய ஆதிக்கத்திற்குட்பட்டது. இனி, ஐரோப்பியர்கள் ஆசியாவில் ஏற்படுத்திய தலங்களைப்பற்றிக் கவனிப்போம்.

இந்தியாவைப் பொறுத்த அளவில், முதன்முதலில் வியாபாரத் தலங்களை ஏற்படுத்தியவர் போர்த்துகீசியராவர். அவர்கள் இந்தியாவிலும், இலங்கையிலும், கிழக்கிந்தியத் தீவுகளிலும் பதினாறும் நூற்றாண்டில் வியாபாரத் தலங்களை ஏற்படுத்தினார்கள். அவைகளுள் முக்கியமானவை கோவா, டையூ, டாமன், சால்செட், பஸ்ஸீன், பம்பாய், சான்தோம், ஹுக்ளி ஆகும். ஆனால், இவைகளில் பலவற்றை நாளடைவில் இழந்தனர். கோவா, டையூ, டாமன் ஆகியவைகளே அவர்கள் ஆட்சியில் இருந்தன. பதினேழாம் நூற்றாண்டில் ஆங்கிலேயர்கள் டச்சுக்காரர்கள், டேனியர்கள், ஃபிரெஞ்சுக்காரர்கள் கிழக்கு நாடுகளுடன் வியாபாரம் செய்ய முற்பட்டனர். இதனால் இவர்களுக்கும் போர்த்துகீசியருக்கும் சச்சரவுகள் ஏற்பட்டன. டச்சுக்காரர்கள் தங்களுடைய செல்வாக்கினைக் கிழக்கிந்தியத் தீவுகளிலும், இலங்கையிலும், இந்தியாவில் சில இடங்களிலும் ஏற்படுத்தினார்கள். 1639-ல் ஜாகர்த்தாவைக் கைப்பற்றினார்கள். 1658-ல் இலங்கையை அவர்கள் கைவசமாக்கிக் கொண்டார்கள். இந்தியாவில் பழவேற்காடு, சூரத்து, சின்சூரா, பாட்னா, நாகப்பட்டினம், கொச்சி போன்ற இடங்களில் வியாபாரத் தலங்களை ஏற்படுத்தினார்கள்.

இதற்கிடையில் ஆங்கிலேயர்கள் கிழக்கு நாடுகளை நாடிப் பல கடற்பயணங்களை மேற்கொண்டார்கள். பதினாறும் நூற்றாண்டில் பெனாங்கு (Penang) சென்றடைந்தார்கள். 1600-ல் கிழக்கிந்தியக் கம்பெனி யொன்றை நிறுவினார்கள். இதற்குக் கிழக்குப் பகுதியில் வியாபாரம் செய்வதற்கு ஆங்கில அரசியாரால் ஏகபோக உரிமை வழங்கப்பட்டது. அப்பொழுதிலிருந்து கிழக்கு நாடுகளை நோக்கிப் பல பயணங்கள் மேற்கொள்ளப்பட்டன. முதலில் அவர்கள் கவனம் ஜாவா, சுமத்ரா, மொலுகஸ் ஆகிய தீவுகளின்பால் செலுத்தப்

பட்டிருந்தது. 1608-ல் இந்தியாவில் வியாபாரத் தலம் அமைக்க முற்பட்டனர். அவ்வாண்டில் கேப்டன் ஹாகின்ஸ் என்பவரை இந்தியாவிற்கு அனுப்பியது. அவர் பேரரசர் ஜஹாங்கீரைச் சந்தித்து, சூரத்தில் வியாபாரத் தலம் ஏற்படுத்த அனுமதி கோரினர். 1613-ல் அவர்கள் சூரத்தில் பண்டகசாலை நிறுவ அனுமதிக்கப்பட்டார்கள். நாளடைவில் ஏனைய பகுதிகளிலும் பண்டகசாலைகளை அமைக்க அனுமதி பெற்றனர். அதற்குக் காரணமாயிருந்தவர் இங்கிலாந்து அரசாங்கத்தாரால் மொகலாயப் பேரரசரிடம் அனுப்பப்பட்ட தூதுவரான சர் தாமஸ் ரோ என்பவராவர். ஆக்ரா, ஆமதாபாத், மசூலிப்பட்டணம், சென்னை, பாட்ஞ, காசிம் பஜார், கல்கத்தா ஆகிய இடங்களில் வியாபாரத் தலங்களை ஏற்படுத்தினர்கள். இரண்டாம் சார்லஸ் மன்னர் பம்பாயைப் போர்த்துக்கீசியரிடமிருந்து சீதனமாகப் பெற்றுக் கம்பெனியின் ஆட்சிக்குட்படுத்தினர். ஆங்கிலேயர்களுடைய நடவடிக்கைகள் போர்த்துகீசியருக்கும் டச்சுக்காரர்களுக்கும் கோபமூட்டியது. ஆங்கிலேயருக்கும் டச்சுக்காரர்களுக்குமிடையே ஏற்பட்ட தகராறுகள் மிகக் கடுமையாக இருந்தன. 1623-ல் பத்து ஆங்கிலேயர்கள் அம்பாய்ஞ வென்னும் இடத்தில் கொல்லப்பட்டார்கள். அதற்குப் பிறகு ஆங்கிலேயர்கள் இந்தியாவிலும், டச்சுக்காரர்கள் கிழக்கிந்தியத் தீவுகளிலும் வியாபாரம் செய்யத் தலைப்பட்டனர். எனினும், இவர்களிடையே ஏற்பட்ட பூசல்கள் 1759ஆம் ஆண்டுவரை நீடித்திருந்தன.

ஃபிரெஞ்சுக்காரர்கள் கால்பர்டின் தூண்டுதலின்பேரில் 1664-ல் ஃபிரெஞ்சுக் கிழக்கிந்தியக் கம்பெனியை ஏற்படுத்தினர்கள். 1668-ல் சூரத்தில் பண்டகசாலை யொன்றை அமைத்தார்கள். பிறகு மசூலிப்பட்டணத்திலும், பாண்டிச்சேரியிலும், சந்திரநாகூரிலும் வியாபாரத் தலங்களை அமைத்தார்கள். டச்சுக்காரர்களுக்கும் ஃபிரெஞ்சுக்காரர்களுக்கும் ஐரோப்பாவில் நடைபெற்ற போர், இந்தியாவிலும் நடைபெற்றது. 1693-ல் டச்சுக்காரர்கள் பாண்டிச்சேரியைக் கைப்பற்றினர்கள். 1697-ல் ஏற்பட்ட சமாதானத்தின்படி பாண்டிச்சேரி திருப்பிக் கொடுக்கப்பட்டது. 18ஆம் நூற்றுண்டின் தொடக்கத்தில் சூரத்து, மசூலிப்பட்டணம் ஆகியவைகளை இழந்துவிட்டார்கள். பதினெட்டாம் நூற்றுண்டில் மௌரிஷியஸ், மாஹி, காரைக்கால் ஆகிய இடங்களை அவர்கள் கைவசப்படுத்தினர்கள். அந் நூற்றுண்டில் அவர்களுக்கும் ஆங்கிலேயர்களுக்கும் பெருத்த சச்சரவு ஏற்பட்டது. அதைப்பற்றிப் பின்னர் கவனிப்போம்.

### சீஞ

பதினேழாம் நூற்றுண்டின் தொடக்கத்தில் சீஞ மிங்க்ஸ் (Mings) என்றழைக்கப்பட்ட குலத்தினரால் ஆளப்பட்டுவந்தது. மிங்க்ஸ் அரசர்கள் மங்கோலியர்களை ஒழித்து, 1368-ல் தங்களுடைய

ஆதிக்கத்தை ஏற்படுத்தினார்கள். நான்கிங் (Nanking) என்பது அவர்களுடைய தலைநகரமாயிருந்தது. பதினாறும் நூற்றாண்டுவரை சீனர்கள் வெளி உலகத்துடன் நெருங்கிய தொடர்பை வைத்துக் கொள்ளவில்லை. அவர்கள் தங்களைப்பற்றி மிக உயர்வாகக் கருதி வந்தார்கள். உலகத்திலேயே பலம் பொருந்தியதும், பெருமை வாய்ந்ததும் தங்களுடைய நாடுதான் என்று எண்ணங்கொண்டிருந் தார்கள். ரோமானியர்கள் அவர்களுடன் ஓரளவு வியாபாரம் செய் தனர். அராபியர்களும் பாரசீக மக்களும் அவர்களுடன் அரசியல் தொடர்பு வைத்திருந்தனர்.

16ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் போர்த்துகீசியர் சீனாவிடம் வியாபார உரிமைகள் பெற முற்பட்டனர். சீனப் பேரரசர் முதலில் அவர்களுக்குச் சில உரிமைகளை வழங்கினார். அதைத் தொடர்ந்து அவர்கள் படைகளைக் கொண்டுவரத் தொடங்கியதைக் கண்ட பேரரசர் அவ்வுரிமைகளைப் பறித்துக்கொண்டார். 1557-ல் பேரரசர் கடற் கொள்ளைக்காரர்களை அழிப்பதில் ஈடுபட்டு இருந்தபொழுது, போர்த்து கீசியர் அவருக்கு உதவி செய்து, அவருடைய நன்மதிப்பைப் பெற்றார் கள். அதனால் மகாவோ (Macao) என்னுமிடத்தை அவர்கள் பயன்படுத்த அனுமதி பெற்றனர். டச்சுக்காரர்கள் 1641-ல் பார் மோஸா தீவைக் கைப்பற்றினார்கள். அது சர்க்கரை வியாபாரத்தில் தலைசிறந்து விளங்கியது. ஆங்கிலேயர்களும் சீனாவுடன் வியாபாரம் செய்ய முற்பட்டனர். 1635-ல் சூரத்தினின்றும் மகாவோவிற்கு ஒரு கப்பற் பயணம் மேற்கொள்ளப்பட்டது. இதனால் பயன் ஒன்றும் ஏற்படவில்லை.

பதினேழாம் நூற்றாண்டில் மிங் மன்னர்களுக்குப் பல தொல்லை கள் ஏற்பட்டன. மிங் மன்னர்களுள் சிறந்தவர் யுங் லோ (Yung Lo) என்பவராவர். அவர் காலத்தில் நல்ல பாதுகாப்பு வசதிகளைப் பெற்ற பீகிங் (Peking) சீனர்களின் தலைநகரமாயிற்று. அவருக்குப்பின் அரசாண்டவர்கள் பலவீனர்களாகவும் சீர்கேடுற்றவர்களாகவும் இருந்தனர். ஆகவே, அவர்களுக்கு எதிராகக் கிளர்ச்சி ஏற்பட்டது. இக் கிளர்ச்சி லி-சு-செங் (Li-Tsu-ch'eng) என்பவரால் ஏற்படுத்தப் பட்டது. சீனாவின் வடகிழக்குப் பகுதியிலும் மத்திய சீனாவிலும் இக் கிளர்ச்சி பரவியது. மிங் அரசர் பீகிங்கினின்றும் துரத்தப்பட்டதால், அவர் தற்கொலை செய்துகொண்டார். அச் சமயத்தில் மிங் அரசர் களின் உண்மையான தளபதிகளுள் ஒருவரான ஊ-சான்-கியி (Wu-San-Kuei) என்பவர் மஞ்சு என்னும் மக்கட் பிரிவினரைக் கிளர்ச்சிக்காரர்களுக்கு எதிராக உதவி செய்யுமாறு அழைத்தார். மஞ்சு மக்களை உட்புகாதவாறு தடுக்க அமர்த்தப்பட்ட தளபதி அவர் என்பதை ஈண்டுக் குறிப்பிடுதல் அவசியமாகும். மஞ்சுக்களும்

உடனே அவர் வேண்டுகோளுக்கு இசைந்தார்கள். சீனுவின் எல்லைக்குட் புகுந்து, புரட்சித் தலைவர் லியை ஒழித்தார்கள். சுன் ஷி (Shun Chih) என்ற மஞ்சுக் குலத்தைச் சார்ந்தவரைப் பேரரசராக நியமித்தார்கள். இவ்வாறு சீன மக்களில் ஒருவரான மிங் அரசரை ஒழித்து, அந்நியர்களில் ஒருவரான மஞ்சு மன்னரைச் சீன மக்கள் ஏற்றுக்கொள்ளவேண்டிய நிலை ஏற்பட்டது.

மஞ்சுக்கள் கிழக்கு மங்கோலியாவைச் சேர்ந்தவர்கள். முதலில் நாடோடியாகத் திரிந்த இவர்கள், பிறகு யாலு, துமென், சுங்காரி ஆகிய நதிப்பிரதேசங்களில் தங்கினுர்கள். மஞ்சு என்றுல் புனிதமான குலம் என்று பொருள். 1635 வரை அவர்கள் பெயரளவில் மிங் அரசர்களின் அதிகாரத்திற்குட்பட்டிருந்தார்கள். அவர்களைப் பலம் பொருந்திய சேனையாக மாற்றியமைத்தவர் நூர்ஹாசு (Nurhachu) என்பவராவார். இவர் சீன அதிகாரிகளின் கொடுமைக்கு ஆளான வர்களில் ஒருவர்.

மஞ்சுக்கள் பதவியேற்றபொழுது அவர்களுக்குப் பலத்த எதிர்ப்புகள் இருந்தன. மேற்குப் பகுதிகளில் அவர்களால் எளிதாகத் தங்கள் ஆதிக்கத்தை நிலைநாட்ட முடிந்தது. ஆனுல், யாங்கிட்சிகியாங் நதிக்குத் தெற்கேயுள்ள பகுதிகளில் கடுமையான எதிர்ப்பை அடக்கவேண்டியதாயிற்று. மஞ்சு அரசர்களின் ஆதிக்கத்தைத் தெற்குப் பகுதியில் ஏற்படுத்துவதைத் தடுக்க முயன்றவர்களில் கோசிங்கா (Koxinga) என்பவர் குறிப்பிடத்தக்கவராவர். அவருடைய தந்தை, மஞ்சு அரசர்களை எதிர்த்ததால் கொல்லப்பட்டார். அதைப் பழி தீர்த்துக்கொள்ள கோசிங்கா முற்பட்டார். தெற்குச் சீனுவின் கடற்பகுதியைத் தம்முடைய தாக்குதலுக்கு இரையாக்கினுர். 1657-ல் நான்கிங்கைக் கைப்பற்ற முயன்றுர். அதில் தோல்வியுறவே, தம்முடைய கவனத்தை ஃபார்மோசா தீவின்பால் திருப்பினுர். அத் தீவினின்றும் டச்சுக்காரர்களைத் துரத்தினுர். மணிலாவைக் கைப்பற்ற முயன்றுர். ஆனுல், 1660-ல் அவர் மறைந்துவிட்டதால், அம் முயற்சி கைவிடப்பட்டது. ஆசிய மக்களும் தங்களுடைய கடற்படையைக் கொண்டு வெற்றிகரமாக ஐரோப்பிய நாடுகளைத் தோற்கடிக்க முடியும் என்ற உண்மையை அவருடைய வெற்றிகள் வலியுறுத்தின. 1682ஆம் ஆண்டிற்குள் அவர்களுக்கு எதிராக உருவாகிய கிளர்ச்சிகள் எல்லாம் அடக்கப்பட்டுவிட்டன.

1662 முதல் 1772 வரை ஆண்ட காங்-சி (Kang-Hsi) என்பவர் அரசியல் திறம் பெற்றதால், அவர் ஆட்சிமுறையைச் செவ்வனே நடத்தினுர். மஞ்சு வமிசத்தின் ஆதிக்கத்தைச் சீனு முழுவதிலும் ஏற்படுத்தினுர். கல்வியை வளர்த்தார். வெளிநாட்டவர்களுக்கு வியாபாரச் சாலைகளை ஏற்படுத்த அனுமதி வழங்கினுர். கான்டன்

நகரத்தில் ஆங்கிலேயர்கள் பண்டகசாலே ஒன்றை அமைத்தனர். கான்டன் துறைமுகத்தை எல்லா நட்டினரும் பயன்படுத்த அனுமதி வழங்கப்பட்டது.

பதினேழாம் நூற்ருண்டில் ருஷ்யர்களும் குடியேற்றங்களே அமைப்பதில் ஆர்வம் காட்டினர்கள். 1650-க்குள் பசிபிக் கடற்கரை வரை கிழக்குப் பக்கமாக முன்னேறினர்கள் என்று நாம் முன்னரே குறிப்பிட்டோம். அதன் பிறகு அவர்கள் கம்சட்கா (kamchatka) தீபகற்பம், ஆமூர் பிரதேசம், மஞ்சூரியாவைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் உட்புகுந்தனர். அப்பொழுது சீனர்களுடன் போர் புரிய வேண்டியதாயிற்று. பிறகு இருநாடுகளும் சமாதானம் செய்து கொண்டன. ருஷ்யர்கள் ஆமூர் நதிக்கு வடக்கேயுள்ள எல்லேயை ஏற்றுக்கொண்டனர். சீனர்கள் ருஷ்ய வியாபாரிகளே அவர்கள் நாட்டில் தாராளமாகச் செல்ல அனுமதி கொடுத்தார்கள். இதுவே சீனர்கள் ஐரோப்பிய நாடு ஒன்றுடன் செய்துகொண்ட முதல் உடன்படிக்கையாகும். 1727-ல் ஏற்படுத்தப்பட்ட உடன்படிக்கை, ஆண்டுதோறும் இருநூறு ருஷ்ய வியாபாரிகள் பீகிங் செல்ல அனுமதித்தது.

சீனர்கள் காங்-சி ஆட்சிக் காலத்தில் தங்கள் ஆதிக்கத்தைச் சுற்றியுள்ள இடங்களில் ஏற்படுத்தலாயினர். வடக்கு மங்கோலியர்களே வென்று அவர்களேத் தங்கள் ஆளுகைக்குட்படுத்தினர்கள். காங்-சி நடு ஆசியாவிலுள்ள கால்காஸ் மக்களே வென்ருர்கள். திபெத்மீது தங்களுடைய காப்பாளர் அரசை ஏற்படுத்தினர்கள். அவர்களுக்குப் பின்னர் ஆண்ட யுங் செங் (Yung Cheng), சியென் லூங் (Chien Lung) என்பவர்களும் சிறந்த அரசர்களாவார்கள்.

மேற்கூறிய மூன்று மஞ்சு அரசர்கள் ஆட்சிக் காலத்தில் (1662—1796) சீன பல வழிகளில் முன்னேற்றங் கண்டது. அதனுடைய ஆதிக்கம் திபெத், மஞ்சூரியா, கொரியா ஆகிய இடங்களில் பரவிற்று. பீங்கான் சாமான்கள் செய்யும் முறை முன்னேற்றுவிக்கப்பட்டது. கற்களின்மீது அழகான சித்திரங்கள் செதுக்கும் கலே வளர்ச்சியுற்றது. வியாபாரம் பெருகுவதற்கு வேண்டிய அமைதியை நாட்டில் அம் மன்னர்கள் ஏற்படுத்தினர்கள். இவர்கள் காலத்தில் சமயப் பரப்பூழியர்களின் நடவடிக்கைகள் பெருகின.

## ஜப்பான்

பல தீவுகளேக்கொண்ட ஜப்பானியப் பேரரசு பல நூற்ருண்டுகளுக்கு முன்னரே ஏற்படுத்தப்பட்டது. இப் பேரரசின் தலேவர் மிகாடோ (Mikado) என்ற பட்டத்தைப் பெற்றிருந்தார். முதலில்

இவர் அநேக அதிகாரங்களைப் பெற்றிருந்தார். பிறகு எல்லா அதிகாரங்களையும் அரசவையிலிருந்த குடும்பத்தினருள் ஒன்ருன ஃபூஜிவாரா (Fujiwara) என்னும் குடும்பத்தைச் சேர்ந்தவர்களே பெற்றிருந்தார்கள். பன்னிரண்டாம் நூற்றுண்டில் இவர்கள் பெற்றிருந்த அதிகாரங்களை இராணுவத் தலைவரிடம் மாற்றிவிட்டார்கள். இவர்கள் ஷோகன் (Shogun) என்ற பட்டம் பெற்றிருந்தார்கள். டோகியோ விற்கு அருகேயுள்ள காம்கூரா (Kamkura) என்ற பட்டணம் அவர் களுடைய இருப்பிடமாக இருந்தது. பிறகு எடோ (Yeao) அவர்களது இருக்கையாக மாறியது. நாளடைவில் இதுவே நாட்டின் உண்மைத் தலைநகரமாக விளங்கியது. பெயரளவில்மட்டும் தலைவராக விளங்கிய பேரரசர், கியோடா என்னுமிடத்தல் வசித்துவந்தார். இதைத்தான் இரட்டையாட்சி என்று குறிப்பிடுகிருர்கள். இவர்களைத் தவிர, டாமியோ (Damio) என்ற பண்ணைநிலக் குடியாளர்கள் (feudatories) இருந்தனர். அவர்கள் அதிகாரங்கள் பலவற்றைப் பெற்றிருந்தார்கள். அவர்கள் ஒவ்வொருவரும் ஒரு படையை வைத்திருந்தனர். அப் படையினர் அனைவரும் சேர்ந்து சாமுராய் (Samurai) என்ற இராணுவக் குலத்தை அமைத்தனர். மேற்கூறிய பண்ணைநிலக் குடியாளர்கள் மைய ஆட்சிக்குக் கீழ்ப்படியாது சுதந்திரமாகத் தங்களுடைய அதிகாரங்களைச் செலுத்திவந்தமையால், நாட்டில் குழப்பமும் உள்நாட்டுக் கலகமும் ஏற்படலாயின. இந் நிலை சுமார் இருநூறு ஆண்டுகள் தொடர்ந்து இருந்தது.

16ஆம் நூற்றுண்டில் ஜப்பானில் குறிப்பிடத்தக்க முன்னேற் றங்கள் ஏற்பட்டன. திறமை வாய்ந்தவர்கள் ஷோகன் பதவியை ஏற்றனர். நோபுநாகா (Nobunaga), பண்ணைநிலக் குடியாளர்களைக் கட்டுப்படுத்தி வைத்தார். அவரைப் பின்தொடர்ந்த ஹிடேயோஷி (Hideyoshi) ஒர் அரசியல் வல்லுநர் ஆவார். அவர் ஆட்சி முறையை ஒழுங்குபடுத்திஞர்; ஜப்பான் பேரரசை விரிவுபடுத்த எண்ணிஞர்; கொரியாவின்மீது போர் தொடுத்தார்; அப் போர் வேலையின்றிக் கிடக்கும் ‘சாமுராய்’ குலத்தினரைச் சில காலம் வேலையில் ஈடுபடுத்தி வைக்கும் என்று கருதிஞர். அவருக்குப் பின்னர் டோகுகாவா குலத்தைச் சேர்ந்த இயாசு (Ieyasu) என்பவர் ஷோகனுகப் பதவி யேற்ருர். அவரும் அவர் குடும்பத்தினரும் 17ஆம் நூற்றுண்டில் ஜப்பானை ஆட்சி புரிந்து வந்தனர். நாட்டில் அமைதியை ஏற்படுத்தி ஞர்கள். பண்ணைநிலக் குடியாளர்கள் அதிகாரத்தை அழித்தார்கள். மக்களை ஒழுங்காக நடக்குமாறு வேண்டிஞர்கள். நாடு முன்னேற ஒவ்வொருவரும் கடுமுழைப்பை மேற்கொள்ள வேண்டும் என்று கூறிஞர்கள். ஆனுலும், ஜப்பான் நாடு முற்போக்குக் கருத்துகளை மேற்கொள்ளுவதற்கு வேண்டிய முயற்சிகள் செய்யப்படவில்லை. 19ஆம் நூற்றுண்டில்தான் பெரும் மாறுதல்கள் ஏற்பட்டன.

16ஆம் நூற்றாண்டில், போர்த்துகீசியர், ஸ்பானியர், டச்சுக்காரர் ஆகியோர் வியாபாரம் செய்யவும், மதத்தைப் பரப்பவும் ஜப்பானில் புகத் தலைப்பட்டார்கள். முதலில் அவர்களுக்குத் தகுந்த வரவேற்பளிக்கப்பட்டது. அவர்களுடன் வியாபாரம் செய்வதிலும், அவர்கள் மதத்தைத் தழுவதிலும், அவர்களது போர்க் கருவிகளைப் பயன்படுத்துவதிலும் மக்கள் ஆர்வம் காட்டினார்கள். அரசாங்கமும் பண்ணைநிலக் குடியாளர்களை அடக்க ஐரோப்பியர்களின் உதவியை நாடியது. அவர்கள் கொண்டு வந்திருந்த உயர்ந்தரகப் போர்க் கருவிகளைப் பெறவே அவர்களை நாடியது. ஆனால், நாளடைவில் பண்ணைநிலக் குடியாளர்களும் அவர்களது உதவியைப் பெற்று அரசாங்கத்தை எதிர்க்கலாயினர். மேலும் வியாபாரத்திற்கென வந்த ஐரோப்பியர்கள் நாளடைவில் தங்களுடைய ஆதிக்கத்தை ஏற்படுத்துவார்கள் என்று அஞ்சினர். மேலும் அந்நியர்கள் ஜப்பான் அரசாங்கத்தின் சட்டத்திற்கு யாதொரு மரியாதையும் காட்டவில்லை. ஆகவே, 17ஆம் நூற்றாண்டில் ஷோகன், சமயப் பரப்பூழியர்களை நாட்டைவிட்டு வெளியேற வேண்டுமென்று கட்டளையிட்டார். அவர்களுடைய தொழுகை இல்லங்களை அழித்துவிட்டார். கிறித்துவமதம் தழுவியவர்களை அம் மதத்தை விட்டுவிடும்படி ஆணையிட்டார். 1637-ல் மேலும் இரண்டு கட்டளைகளைப் பிறப்பித்தார். டச்சுக்காரர்கள், சீனர்கள் ஆகியோரைத் தவிர ஏனைய ஐரோப்பியர்கள் ஜப்பானில் பிரவேசிக்க அனுமதிக்கப்படவில்லை. டச்சுக்காரர்கள் இராணுவ பலத்தில் சிறந்தவர்கள் அல்லர் என்றும், கிறித்துவ மதத்தில் அதிக அக்கறை கொண்டவரல்லர் என்றும் கருதியதால், அவர்கள் ஜப்பானுடன் வியாபாரம் தொடர்ந்துசெய்ய அனுமதிக்கப்பட்டார்கள். ஜப்பானியர் எவரும் ஜப்பானைவிட்டுப் போகலாகாது என்றும் கட்டளையிட்டார். கப்பல்கள் கட்டுதலையும் கட்டுப்படுத்தினார். ஆகவே, மக்கள் வறுமையாலும் பஞ்சத்தாலும் துன்பமடைந்தனர். கப்பல் போக்குவரத்தும் தடைப்பட்டது. இந் நிலை பதினெட்டாம் நூற்றாண்டு முழுவதும் தொடர்ந்து இருந்து வந்தது.

### வினாக்கள்

1. பதினான்காம் லூயி மன்னர் ஃபிரான்சுக்கு ஆற்றிய சேவைகளைக் குறிப்பிடுக.
2. பதினான்காம் லூயி மன்னரின் உள்நாட்டுக் கொள்கையினையும் மதக் கொள்கையினையும் விவரி.
3. பதினான்காம் லூயி மன்னரின் வெளிநாட்டுக் கொள்கையை விளக்குக.
4. மகா பீட்டர் ருஷியாவிற்கு ஆற்றிய சேவைகளை விவரிக்க.

5. மகா பீட்டர் ருஷ்யா மன்னர்களுள் சிறந்தவராகக் கருதப் படுவதேன் ?

6. மகா பீட்டரின் நோக்கங்களையும் சாதனைகளையும் விவரிக்க.

7. எக்காரணம் பற்றி மகா ஃபிரடெரிக்கை மன்னர்களுள் கடைசி யானவர் என்று கூறுகிறார்கள் ?

8. மகா ஃபிரடெரிக் காலத்தில் பிரஷ்யா ஐரோப்பிய வல்லரசாக மாறிய விதத்தை விளக்கு.

9. இரண்டாவது ஜோசப்பை அறிவுடைய வல்லரசர் என்பதேன்?

10. வட அமெரிக்காவில் ஐரோப்பியர் குடியேறிய வரலாற்றை எழுதுக.

11. இந்தியாவில் மொகலாயப் பேரரசு அமைக்கப்பட்ட விதத்தை யும் அது அழியக் காரணங்களையும் குறிப்பிடுக.

12. அக்பர் காலம் தொடங்கி, அவுரங்கசீப் காலம்வரை நடைபெற்ற மொகலாய ஆட்சியைப்பற்றிக் குறிப்பு வரைக.

13. மிங், மஞ்சு அரசர்கள் காலத்தில் சீனாவின் நிலையை விளக்குக.

14. பதினேழு, பதினெட்டாம் நூற்றாண்டுகளில் ஜப்பான் வர லாற்றில் காணப்பெறும் முக்கிய நிகழ்ச்சிகளை விவரிக்க.

# 2. ஐரோப்பாவில் ஏற்பட்ட புரட்சிகள் (1789–1848)

## ஃபிரெஞ்சுப் புரட்சி

முன் அத்தியாயத்தில் ஐரோப்பிய நாடுகள் பலவற்றுள் வல்லாட்சிகள் 17, 18ஆம் நூற்றுண்டுகளில் ஏற்படுத்தப்பட்டன என்றும், ஆகவே அக் காலப் பகுதி வல்லாட்சிக் காலம் என்று கூறப் படுகிறது என்றும் குறிப்பிட்டோம். 1789 முதல் 1848 வரையுள்ள காலப் பகுதியினைப் புரட்சிக் காலம் என்று பொதுவாகக் குறிப்பிடுகிறர் கள். ஐரோப்பிய நாடுகள் பலவற்றுள் வல்லாட்சிமுறைக்கு எதிராகப் புரட்சிகள் அக் காலத்தில் தோன்றின. ஃபிரெஞ்சுப் புரட்சி ஏனைய புரட்சிகளுக்கு வழிகாட்டியாக அமைந்தது. இதனுல்தான் 'ஃபிரான்சுக் குச் சளி பிடித்தால் ஐரோப்பிய நாடுகளுக்குத் தும்மல் உண்டாகும்' என்று விளையாட்டாகக் கூறுகிருர்கள். ஆகவே, நாம் இப்பொழுது ஃபிரெஞ்சுப் புரட்சியைப்பற்றிக் கவனிப்போம்.

## புரட்சியின் காரணங்கள்

ஃபிரெஞ்சு ஆட்சி முறையில் காணப்பட்ட சீர்கேடுகள் புரட்சிக்கு ஒரு கரரணமாகும். அவ்வாட்சி முறையின் தலைவர் அரசராவார். அரசர் எல்லா அதிகாரங்களையும் தம்முடைய கைக்குள் அடக்கி வைத்திருந்தார் என்பதை நாம் முன்னரே கண்டோம். அத்தகைய வல்லாட்சியினை ஒரு காலத்தில் மக்கள் வரவேற்றனர். பிரபுக்கள் அனுபவித்து வந்து கொடுமையான உரிமைகளினின்றும் தங்களைக் காப்பாற்றக்கூடியவர் வலிமை பொருந்திய மன்னரேயாவார் என்று மக்கள் கருதியதால், பிரபுக்கள், மத குருமார்கள் ஆகியோருடைய உரிமைகள் இப்பொழுது பறிக்கப்பட்டுவிட்டதால், வல்லாட்சி முறையைத் தேவையற்றதாகக் கருதினர்கள். ஐரோப்பாவில் ஃபிரெஞ்சு ஆதிக்கத்தை ஏற்படுத்தியதாலும், மக்கள் நலன்களைப்

பெருக்கியதாலும், கல்வி, கலை ஆகிய துறைகளில் முன்னேற்றங்களை ஏற்படுத்தியதாலும் வல்லரசர் மக்களிடம் செல்வாக்குப் பெற்றிருந்தார். லூயி மன்னருக்குப்பின், ஃபிரான்ஸ், ஐரோப்பியப் போர்களில் பல சண்டைகளில் தோல்வியுற்றதால், தன்னுடைய செல்வாக்கை இழந்துவிட்டது. பொருளாதாரம், கல்வி, கலை ஆகிய துறைகளில் யாதொரு முன்னேற்றமும் இப்பொழுது காணப்படவில்லை. ஆகவே, மக்கள் வல்லாட்சிமுறைக்கு எதிராகக் கிளர்ச்சி செய்யத் தயாராயிருந்தார்கள். வல்லாட்சிமுறை வெற்றிபெற வேண்டுமெனில், அதை நடத்தும் அரசர் திறமை வாய்ந்தவராயிருத்தல் வேண்டும். ஆனால், பதினான்காவது லூயியைப் பின்தொடர்ந்த பதினைந்தாம் லூயி, ஆட்சிமுறையைச் சீர்படுத்தவோ செலவுகளைக் குறைக்கவோ முற்படவில்லை. ஏராளமான பொருளைக் களியாட்டங்களிலும் ஐரோப்பியப் போர்களிலும் செலவிட்டார். பிரபுக்களையும் தம்மைப் போலவே ஊதாரித்தனமாகச் செலவிடுமாறு ஊக்குவித்தார். அரசாங்கக் காரியங்கள் அவருடைய நண்பர்களிடத்தும் ஆசைநாயகிகளிடத்தும் விட்டுவைக்கப்பட்டன. அவர்களில் மிக முக்கியமானவர் மதாம் தெ பாம்படூர் (Madame de Pampadour) என்பவராவார். ஆகவே, அவர் இறந்தபோது மக்கள் தங்களுடைய துயர் நீங்கியது என்று கருதினார்கள். அவருக்குப் பின்னர் அரசாண்ட பதினாறும் லூயி மன்னர் காலத்தில்தான் புரட்சி ஏற்பட்டது. அப் புரட்சி 'எனக்குப் பின்னால் பேரழிவு ஏற்படும்'[1] என்ற பதினைந்தாம் லூயியின் கூற்றினை வெகு சீக்கிரமே மெய்ப்பித்துக் காட்டிவிட்டது. பதினாறும் லூயி மக்களை உண்மையாகவே நேசித்தார். சிறந்த கல்வியைப் பெறவில்லை என்றாலும், ஆழ்ந்து சிந்திக்கும் திறனுடையவர். கெட்ட பழக்கங்கள் அவரிடம் அதிகம் இல்லை. மதப்பற்றுடையவர். ஆனால், அவர் மத வெறியர் அல்லர். மக்களின் நலத்தையே குறிக்கோளாகக்கொண்டு ஆட்சி செலுத்த எண்ணினார். அவருடைய சொந்தச் செலவைக் குறைத்துக்கொண்டு, நிதிநிலையைச் சீராக்க வேண்டும் என்ற நோக்கம் கொண்டிருந்தார். இவ்வளவு நற்பண்புகள் பெற்றிருந்தபோதிலும் அவர் தோல்வியுறக் காரணம் என்னவென்றால், அவர் வல்லாட்சிமுறையைத் திறம்பட நடத்தத் தேவையான குண நலன்களைப் பெற்றில்லாததேயாகும். அவர், காலத்தை வேட்டையாடுவது போன்றவைகளில் செலவிட்டார். துணிச்சலான முடிவெடுக்க அவரால் முடியவில்லை. சொந்த புத்தி என்பது அவரிடமில்லை. அவராக யாதொரு செயலிலும் ஈடுபடமாட்டார். சுருக்கமாகச் சொல்லவேண்டுமென்றால், அவர் வரம்புக்குட்பட்ட முடியரசு முறைக்குத் தகுதி வாய்ந்தவரேயன்றி, வல்லாட்சிமுறைக்குக் கடுகளவும் தகுதியானவரல்லர். அவருடைய

[1] 'After me, the deluge'—Louis XV.

அரசியும் அப் பதவிக்கு ஏற்றவரன்று. அவர் ஆஸ்திரியாவைச் சேர்ந்தவராதலால் மக்கள் அவரிடம் வெறுப்புக் கொண்டனர். அரசியல் அனுபவம் இல்லாதவர்; ஆகவே, ஆட்சி தம்முடைய சொந்தக் கருத்துக்களுக்கேற்ப நடக்க வேண்டுமென்று எண்ணினர். மேலும், அவர் அந்நியராதலால், ஃபிரெஞ்சு மக்களைச் சரிவரப் புரிந்து கொள்ள அவரால் இயலவில்லை. அவரைச் சுலபமாக ஏமாற்ற முடியும். இரக்க மனப்பான்மை உடையவராதலால், எக் கட்சியினரும் அவரைச் சுலபமாகத் தங்கள் வயப்படுத்திக்கொள்ள முடிந்தது. ஊதாரித்தனமாக நடந்துகொண்டு மக்களின் கண்டனத்துக்கு ஆளானர். சுருங்கக் கூறின், ஆட்சிமுறையில் ஏற்பட்ட ஒவ்வொரு தவறுக்கும் அவர்தான் பொறுப்பு என்று எல்லா மக்களும் கருதினர்கள்.

அரசியல் அமைப்பில் மக்கள் செல்வாக்கினுக்கு இடமே யில்லை. அரசாங்கப் பொறுப்புகளை ஏற்றிருந்த அமைச்சர்கள் அரசருக்குக் கீழ்ப்படிந்தவர்களா யிருந்தார்கள். ஸ்டேட்ஸ்-ஜெனரல் எனப்பட்ட பிரதிநிதிகளடங்கிய சபை 1614ஆம் ஆண்டிற்குப் பின்னர் கூட்டப்படவேயில்லை. மக்கள் உரிமைக்காகப் போராடிய பார்லிமென்டுகள் தங்களுடைய செல்வாக்கை இழந்துவிட்டன. அரசாங்க அலுவல்களை நடத்துவதற்கு அதிகாரவர்க்கம் ஒன்று அமைக்கப்பட்டிருந்தது. அரசாங்கப் பதவிகளை விற்கும் முறை கையாளப்பட்டதால், பயனற்ற பதவிகள் உண்டாக்கப்பட்டன. அவர்களில் பெரும்பாலோர் கடுமையாக நடந்து கொண்டனர். மாகாணங்களில் மக்கள் செல்வாக்கினுக்கு இடமளிக்கப்படவில்லை. அதிகாரம் முழுவதும் இன்டெண்டன்ட் (Intendant) என்னும் அரசருடைய அதிகாரியிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. மாகாணங்களில் ஏற்படுத்தப்பட்ட மக்கள் சபைகள் பல அழிக்கப்பட்டன. எஞ்சியிருந்த சபைகளின் செல்வாக்குகள் வெகுவாகக் குறைக்கப் பட்டுவிட்டன. அவைகளுக்குச் சட்டமியற்றுதல், வரிகளை விதித்தல் போன்ற அதிகாரங்கள் வழங்கப்படவில்லை. சிறுநில ஆட்சிப் பகுதிகளிலும் (Commune) மக்கள் சபைக்கு அதிகாரங்கள் வழங்கப்பட வில்லை. இச் சபைகளின் நடவடிக்கைகளை 'இன்டெண்டன்ட்' கட்டுப் படுத்திவந்தார். நகரங்களிலும் மக்கள் சபைகள் நடைபெற்று வந்தன. ஆனால், ஓட்டுரிமை ஒரு சிலருக்கே வழங்கப்பட்டிருந்தது. பண நெருக்கடியும், அரசப் பணியாளர்களின் தலையீடும் இச் சபைகளின் செல்வாக்கினைக் குறைத்துவிட்டன.

நீதிநிலையத் துறையிலும் சீர்கேடுகள் மலிந்திருந்தன. எண்ணிறந்த சட்டங்கள் நடைமுறையில் இருந்தன. அவைகளை முறைப் படுத்தியமைக்கப் பெரு முயற்சி ஏதும் செய்யப்படவில்லை. அரசருடைய நீதிமன்றங்கள், நிலமானியதார்களின் மன்றங்கள், மத

ஸ்தாபனத்தின் மன்றங்கள் போன்ற பலவகைகள் ஏற்படுத்தப் பட்டிருந்ததால், நீதி நிலையத் துறை ஒரே குழப்பமாக இருந்தது. நீதிபதிகள் யாவரும் அரசருடைய கட்டுக்குள் அடங்கியிருந்தனர். மக்களுக்கு எவ்வித உரிமையும் வழங்கப்படவில்லை. அதற்கு மாறாக ஆட்சியைக் குறை கூறுபவர்கள் விசாரணையின்றிச் சிறையிலடைக்கப் பட்டனர்.

இராணுவ அமைப்பிலும் பல சீர்கேடுகள் இருந்தன. கடுமை யான பயிற்சியும், குறைந்த சம்பளமும், வீரர்களின் நலன்களில் கவனக்குறைவும் வீரர்களிடம் வெறுப்பை உண்டாக்கின. மேலும், படைத்தலைவர்களில் பெரும்பாலோர் தகுதியற்றவர்களாயிருந்தனர்.

சமுதாய அமைப்பு, காலத்திற்கேற்றவாறு மாற்றி அமைக்கப் படாமல் பழைய மாதிரியே இருந்துவந்தது. அது மூன்று மக்கள் பிரிவுகளை உட்கொண்டிருந்தது. அவைகளில் முதலாவது இடத்தை மத குருமார்கள் பெற்றிருந்தார்கள். மத குருமார்கள் இருவகையாகப் பிரிந்திருந்தனர்—உயர்வகை குருமார்கள் ; பாதிரி போன்ற கீழ்நிலை குருமார்கள். மத குருமார்கள் ஏராளமான சொத்துகளைப் பெற்றிருந் தார்கள். அளவுகடந்த உரிமைகளையும் பெற்றிருந்தனர். நிலவரி செலுத்துவதினின்றும் விலக்குப் பெற்றிருந்தார்கள். மக்களின் வரு மானத்தில் ஒரு பகுதியை (Tithes) மத குருமார்கள் பெற்றனர். மத ஸ்தாபனத்தில் உயர்பதவிகளைப் பிரபுக்களே வகித்தனர். அவர்களில் அநேகர் சொத்துகளை அனுபவிக்கவே மத குருமார்களாக மாறினர். உயர்பதவியிலுள்ளோர் மத ஸ்தாபனத்தின் வருவாயில் பெரும் பகுதியை எடுத்துக்கொண்டனர். ஆகவே, கீழ்நிலையிலுள்ள மதகுரு மார்கள் புரட்சியின்போது பொதுமக்களின் பிரதிநிதிகளுடன் சேர்ந்து கொண்டனர். மேலும், இவர்கள் மதத்தில் பற்றுடையவர்களாகவும், முற்போக்குக் கொள்கைகளை யுடையவர்களாகவும் இருந்தனர். மடங்கள் முன்போல் மக்களின் துயரங்களைப் போக்கும் நிலையங்களாக விளங்கவில்லை. எல்லாவற்றிற்கும் மேலாக, கத்தோலிக்க ஸ்தாபனம் பிற மதத்தினரைத் துன்புறுத்தும் கொள்கையை மேற்கொண்டிருந்தது.

இரண்டாவது பிரிவான பிரபுக்களின் எண்ணிக்கை மிகக் குறைவு.[1] இவர்கள் பணம் படைத்தவர்களாகவோ, மிகுந்த நிலம் படைத்தவர்களாகவோ இருந்ததில்லை. அவர்களுக்கு ஆட்சி அதிகார மும் இல்லை. அப்படியிருந்தும் அவர்களுக்கு எதிராக மக்கள் கிளர்ச்சி செய்வதற்குக் காரணமாயிருந்தது, அவர்கள் அனுபவித்து வந்த சலுகைகளேயாகும். மேலும், அவர்கள் பெரும்பாலும் வெர்சேயில்ஸ்

[1]பிரபுக்களும் மத குருமார்களும் சேர்ந்து 3,00,000 பேர்களே இருந்தனர். ஃபிரான்சின் மொத்த மக்கள் தொகை அப்பொழுது $2\frac{1}{2}$ கோடியாக இருந்தது.

அரண்மனையிலேயே காலங் கழித்தனர். ஆனாலும், குடியானவர்களிடமிருந்து பண்ணை முதல்வர் என்ற முறையில் பணம் வசூல் செய்தார்கள். அதற்குப் பதிலாக மக்களுக்கோ, நாட்டிற்கோ எவ்விதச் சேவையும் புரியவில்லை.

மூன்றுவது பிரிவு, மற்ற எல்லா மக்களையும் கொண்டிருந்தது. அவர்களில் சிலர் நடுத்தர வகுப்பைச் சேர்ந்தவர்களாவார்கள். அவ் வகுப்பில் அநேக வழக்கறிஞர்கள் இருந்தனர். அவர்கள் படித்தவர்களாதலால், அக் காலத்தில் தோன்றிய புதிய கருத்துகளைக் கற்றுணர்ந்திருந்தார்கள். அவ் வகுப்பில், வியாபாரிகளும் தொழில் துறையில் ஈடுபட்டவர்களும் இருந்தனர். அரசாங்கம் தங்களது துறைகளில் அடிக்கடி தலையிடுவதை அவர்கள் வெறுத்தார்கள். பொதுவாக, இவர்கள் இராணுவத்திலும், கப்பற் படையிலும், அயல் நாட்டுப் பணித்துறையிலும் உயர்பதவி பெற அனுமதிக்கப்படவில்லை. குறிப்பாக அவர்கள் பிரபுக்களுக்குத் தனி உரிமைகள் வழங்குவதையும் வெறுத்தார்கள். மேலும், தங்களுடைய தகுதிக்கும் திறமைக்கும் தக்கவாறு அரசாங்கத்தில் பங்குகொள்ளவேண்டும் என்றும் கருதினார்கள். ஆகவே, அவ் வகுப்பினின்றும் புரட்சித் தலைவர்கள் தோன்றியதில் வியப்பொன்றுமில்லை. குடியானவர்களே நாட்டு மக்களில் பெரும்பான்மையினராவார்கள். அவர்கள் அரசாங்கத்திற்கும், பிரபுக்களுக்கும், மத ஸ்தாபனத்திற்கும் செலுத்தவேண்டிய தொகைகளைச் செலுத்தியபின் சிறு தொகையே எஞ்சியிருந்தது. இது வன்றி, அவர்களுடைய விளைபொருள்களை விற்பனைக்கு எடுத்துச் செல்லும்போது அவர்கள் சுங்கவரி செலுத்தவேண்டியதாயிருந்தது. மேலும், அவர்கள் இராணுவ சேவையினையும் கட்டாய உடலீடுபாட்டு வேலையினையும் (forced labour) மேற்கொள்ள வேண்டியதாயிருந்தது. அவர்களன்றி, கூலிக்குப் பயிர்த்தொழில் செய்பவர்களும் இருந்தனர். பெரும்பாலும் ஏழைகளாகவும் மனநிறைவு அற்றவர்களாகவும் இருந்தார்கள்.

அரசாங்கத்தின் வரித் திட்டமும் பல சீர்கேடுகளை உடையதாயிருந்தது. அக் காலத்தில் வசூலிக்கப்பட்ட வரிகளில் முக்கியமானது சொத்துவரி (Taille) ஆகும். மத குருமார்களும் பிரபுக்களும் இவ் வரி செலுத்துவதினின்றும் விலக்குப் பெற்றுர்கள் என்று முன்னரே குறிப்பிட்டோம். சொத்தின் மதிப்பில் ஏதாவது மாற்றம் காணப்பட்டால், உடனே அரசாங்கம் வரியை அதிகப்படுத்தியது. ஆகவே, மக்கள் வேண்டுமென்றே தங்களுடைய வாழ்க்கைத் தரத்தைக் குறைத்துக்கொண்டார்கள். அதனுல் நாட்டின் வளம் குன்றியது. ஒவ்வொரு குடும்பத்தின் தலைவர்மீதும் தலைவரியொன்று விதிக்கப்பட்டது. எல்லா வகுப்பினரும் இவ் வரியைச் செலுத்தினுர்கள். எனினும், மூன்ரும் பிரி

வைச் சேர்ந்தவர்களே அதிகமான வரியைச் செலுத்தலாயினர். உப்பு வரியையும் (Gabelle) எல்லா மக்களும் செலுத்தவேண்டியவர்களா யிருந்தனர். அரசாங்கம் உப்பு விற்கும் முழு உரிமையைப் பெற்றிருந் தது. ஒவ்வொரு குடும்பத்தினரும் குறிப்பிட்ட அளவு உப்பு வாங்க வேண்டுமென்று கட்டாயப்படுத்தப்பட்டார்கள். உப்பின் விலையை அரசாங்கம் அதனுடைய விருப்பப்படி நிர்ணயித்தது. மேலும், சமு தாயப் பணிகளில் குடியானவர்கள் கட்டாயம் ஈடுபடவேண்டியிருந்தது என்று முன்னரே குறிப்பிட்டோம். அதற்கு யாதோர் ஊதியமும் இல்லை. இவைகளைத் தவிர பல மறைமுக வரிகளையும் மக்கள் செலுத்தி வந்தனர். அவரவர் வரி செலுத்தும் திறனுக்கு ஏற்றவாறு வரிகள் விதிக்கப்படவில்லை. குடியானவர்களே அதிகப்படியான வரிச்சுமை யைத் தாங்கவேண்டிய நிலை ஏற்பட்டிருந்தது. வரி வசூலிக்கும் முறையிலும் பல குறைகள் இருந்தன. அரசாங்கத்திற்கும் மக்களுக்கு மிடையே இருந்த வரி வசூலிக்கும் உரிமை பெற்ற குத்தகைக்காரர்கள் கொள்ளை இலாபம் அடைந்தார்கள். வரி வசூலிக்கும்போது இவர்கள் மக்களிடம் கொடூரமாக நடந்துகொண்டார்கள். பெருஞ் செலவில் வரி வசூல் செய்யப்பட்டது.[1] அரசாங்கத்தின் செலவு நாட்கள் செல்லச் செல்லப் பெருகிக்கொண்டே வந்தது. அரசாங்கத்தின் கடன் தொகை யும் பெருகியது. செலவு முறையில் சிக்கனம் கையாளப்படவில்லை. பொதுக் கணக்குகள் சரியான முறையில் வைக்கப்படவில்லை. இத் துணைச் சிக்கல்கள் உடைய நிதிமுறை புரட்சியின் காரணங்களில் ஒன்றாக அமைந்ததில் ஆச்சரியம் ஒன்றுமில்லை.

அரசாங்கத்தின் நிதி மோசமான நிலையில் இருந்தது என்று அனை வருமே அறிந்திருந்தனர். நிதி அமைச்சர்கள் நிலையைச் சீர்படுத்தவும் முனைந்தார்கள். துர்கோ (Turgot) என்பவர் இலஞ்ச ஊழலை ஒழித்து நிதி நிலையைச் சீர்படுத்த எண்ணினார். அவரைப் பின்தொடர்ந்த நெக்கர் (Necker) சிக்கன முறையைக் கையாண்டும், குறைந்த வட்டி யில் கடன் வாங்கியும் நிலைமையைச் சமாளிக்க எண்ணினார். ஆனால், அப்பொழுது அமெரிக்கப் போர் அவர் திட்டங்களைத் தவிடுபொடி யாக்கியது. கலோன் (Calonne) அதிக வட்டியில் கடன் வாங்கி நிலையைச் சீராக்க முயன்றார். ஆனால், நாளடைவில் அனைவரும் நிதி நிலையைச் சீர்படுத்தவேண்டுமெனில், எல்லா மக்களும் வரி செலுத்த வேண்டும் என்று கருதினார்கள். ஆகவே, நெக்கர் மீண்டும் நிதி அமைச்சர் பதவியை ஏற்றபொழுது, எல்லா மக்களும் வரி செலுத்தும் நிலையை ஏற்படுத்தவும், புது வரிகளை விதிக்கவும் 1788-ல் அரசருக்கு

[1] உப்பு வரியைப் பொறுத்தளவில், 20 கோடி லிவ்ரா (ஃபிரெஞ்சு நாணயம்) செலவு செய்து 60 கோடி லிவ்ரா வசூல் செய்தார்கள்.

ஸ்டேட்ஸ்–ஜெனரலை அழைக்குமாறு யோசனை கூறினர். இதுவே புரட்சியின் தொடக்கமாகும்.

எல்லா வகைகளிலும் மனக்கசப்பு அடைந்திருந்த மக்களைத் தட்டி யெழுப்பப் பதினெட்டாம் நூற்றுண்டில் வாழ்ந்த பேரறிஞர்கள் பெரிதும் உதவினர்கள். வால்டேர் (1694–1778) என்ற அறிஞர், வரலாறு, நாடகம், கவிதை ஆகியவற்றின் வாயிலாக அப்பொழுது ஆட்சிமுறை, மதஸ்தாபனம், சமுதாய அமைப்பு ஆகியவற்றிலிருந்த சீர்கேடுகளை வெளிப்படுத்தினர். பல சீர்திருத்தங்களை எடுத்துரைத்தார். சட்டங்கள் தெளிவாக இருக்கவேண்டும் என்றும், சட்டத்தின்முன் யாவரும் சமநிலையில் வைக்கப்பட வேண்டும் என்றும், வரியைச் சார்ந்த உரிமைகள் ஒழிக்கப்படவேண்டும் என்றும், மத விவகாரங்களில் சகிப்புத் தன்மை வளர வேண்டும் என்றும் யோசனை கூறினர். அரசியல் துறையில் மக்களாட்சியை அவர் விரும்பவில்லை. வரம்புக்குட்பட்ட அரசரின்கீழ் மக்கள் உரிமையுடன் வாழ வகைசெய்யும் ஆட்சி முறையை ஆதரித்தார்.[1] மான்தெஸ்க்யூவினுடைய (Montesquieu, 1689–1755) கருத்துகள் அவர் இயற்றிய அரசியல்பற்றிய நூலில் (The Spirit of the Laws) காணக்கிடக்கின்றன. இந் நூலில், ஃபிரெஞ்சுக்காரர்களை பிரிட்டனின் அரசியல் முறையை மேற்கொள்ளுமாறு வற்புறுத்தினர். சட்டம் இயற்றுதல், சட்டத்தை நிறைவேற்றுதல், சட்டத்தை மீறுபவரைத் தண்டித்தல் ஆகிய மூன்று அரசப்பணிகள் வெவ்வேறு நபர்களால் நிறைவேற்றப்படவேண்டும் என்ற கருத்தைக் கொண்டிருந்தார். புரட்சிக்காரர்களுக்குத் தேவையான கருத்துகளை வழங்கியவர் ரூஸோ (Roussueau, 1712–1778) என்பவராவர். அவர் இயற்றிய நூல் (The Social Contract) புரட்சிக்காரர்களின் வேத நூல் என்று கருதப்படுகிறது. இந் நூலில் தெய்விக உரிமைக் கோட்பாட்டினை உடைத்தெறிந்தார். அரசாங்கத்தை ஏற்படுத்துவதும் அழிப்பதும் மக்கள் உரிமை என்று வாதாடினர். மக்களாட்சியில்தான் சமத்துவமும் சுதந்திரமும் பெறமுடியும் என்று கருதினர். மக்கள் விருப்பமே சட்டமாக்கப்பட வேண்டும் என்று கருதினர். இவருடைய கருத்துகளேயன்றி, இவர் நூலைப் படிப்பவர்களுக்கு ஏற்படும் மன வெழுச்சியும், மக்களைப் புரட்சி செய்யத் தூண்டியது. இம் மூவரன்றி வேறு பல எழுத்தாளர்களும் புரட்சியைத் தூண்டிவிட்டனர். அவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள் சோஷலிஸ்டுகளும், பல்பொருள் விளக்க ஆசிரியர்களும் (Encyclopaedists) பொருளியல் நூலாசிரியர்களும் (Economists) ஆவார்கள். அவர்கள் பொதுவாக மக்கள் நலன்களைப் பேணும் ஆட்சியை ஆதரிப்பவர்களாயிருந்தனர். அவர்களும் ஆட்சி

[1] தாம் ஒரு சிங்கத்தால் ஆளப்படுவதை விரும்புவாரேயன்றி நூறு எலிகளால் ஆளப்படுவதை விரும்பமாட்டார் என்று அவர் குறிப்பிட்டார்.

முறையிலும், பொருளாதாரத் துறையிலும் இருந்த சீர்கேடுகளை வெளிப்படுத்தினார்கள்.

புரட்சிக்கு மற்றொரு காரணம் அமெரிக்காவில் ஏற்பட்ட புரட்சியாகும். 1776-ல் வட அமெரிக்காவில் இருந்த ஆங்கிலேயக் குடியேற்ற நாடுகள் தங்களுடைய சுதந்திரத்தைக் கோரி பிரிட்டனுக்கு எதிராகப் புரட்சி செய்தன. பிரிட்டன்மீது பழி தீர்த்துக்கொள்ள ஃபிரான்சு அக் குடியேற்றங்களுக்கு உதவி செய்தது. அமெரிக்காவில் போர் புரிந்தபின் நாடு திரும்பிய ஃபிரெஞ்சு வீரர்கள் அமெரிக்க மக்கள் கொண்டிருந்த மக்கள் ஆட்சி முறையைப்பற்றிய கருத்துகளையும் தங்களுடன் கொண்டுவந்தனர். மேலும், அமெரிக்கப் புரட்சியின் வெற்றி ஃபிரெஞ்சுக்காரர்களைப் புரட்சி செய்ய ஊக்குவித்தது. மேலும், அப் போர் ஃபிரெஞ்சுக் கருவூலத்தைக் காலியாக்கி விட்டது. பணமின்றி அரசாங்கத்தை நடத்துவது கடினமன்றோ? ஆகவே, வேண்டிய பணத்தை மக்கள் பிரதிநிதிகளின் அனுமதியின் பேரில் பெறலாம் என்ற நோக்கத்துடன் ஸ்டேட்ஸ்-ஜெனரல் கூட்டப்பட்டது. இதுவே புரட்சியின் தொடக்கமாகும்.

1789-ல் ஆரம்பிக்கப்பட்ட புரட்சி 1799 வரை நடைபெற்றது என்று கூறலாம். 1789-ல் ஸ்டேட்ஸ்-ஜெனரல் 1614ஆம் ஆண்டிற்குப்பின் முதல் தடவையாக வார்சேயி அரண்மனையில் கூடியது. மூன்றாவது எஸ்டேட்டுக்கு (Third Estate) அதிகமான பிரதிநிதித்துவம் வழங்கப்பட்டது.[1] எல்லா உறுப்பினர்களும் ஒன்றாகக் கலந்து சபையின் காரியங்களைக் கவனிக்கவேண்டும் என்றும், ஒவ்வோர் அங்கத்தினருக்கு ஒவ்வோர் ஓட்டு அளிக்கவேண்டும் என்றும் மூன்றாவது எஸ்டேட் உறுப்பினர்கள் கோரினார்கள். இது வரை மூன்று எஸ்டேட்டுகளும் தனித்தனியே கூடிவந்தன. ஒவ்வோர் எஸ்டேட்டுக்கும் ஓர் ஓட்டு என்ற அடிப்படையில் சபையின் தீர்மானங்கள் முடிவு செய்யப்பட்டன. அம் முறை உரிமைகள் பெற்ற முதலிரண்டு எஸ்டேட்டுகளுக்கு மிகுந்த செல்வாக்கினை அளித்தது. ஆகவே, மூன்றாவது எஸ்டேட்டின் அங்கத்தினர்கள் பெருவாரியாக இருந்தமையால் மேற்கூறிய நிபந்தனைகள் ஏற்கப்பட்டால் மூன்றாவது எஸ்டேட்டினுடைய செல்வாக்குப் பெருகிவிடும் என்று கருதினார்கள். ஆகவே, லூயி, அக் கோரிக்கைகளை ஏற்க மறுத்தார். ஆகவே, அதனுடைய விருப்பங்களை நிறைவேற்ற தானே நடவடிக்கைகளை மேற்கொண்டது மற்ற இரண்டு எஸ்டேட்டுகளும் ஒன்றுசேர்ந்து பணியாற்ற வருமாறு அழைப்பு அனுப்பியது. அவர்கள் அதற்கு

[1] ஸ்டேட்ஸ்-ஜெனரல் அப்பொழுது 1,214 உறுப்பினர்களைக் கொண்டிருந்தது. மதகுருமார்களின் எண்ணிக்கை 308, பிரபுக்களின் எண்ணிக்கை 285. மக்கள் பிரதிநிதிகளின் எண்ணிக்கை 621 ஆக இருந்தன.

இசைய மறுத்ததும், அதுவே எல்லா மக்களின் பிரதிநிதி என்ற முறையில் தன்னுடைய பெயரைத் 'தேசிய சபை' (National Assembly) என்று மாற்றிக்கொண்டது. வெகு சீக்கிரத்தில் முதலாவது எஸ்டேட்டைச் சார்ந்த கீழ்நிலை குருமார்கள் தேசிய சபையில் கலந்துகொண்டார்கள். இதைக் கண்டு கோபமடைந்த லூயி, எல்லா அங்கத்தினர்களையும் 'சந்திக்க விரும்பினார். அதற்கான ஏற்பாடுகள் செய்ய தேசிய சபை கூடியிருந்த பெரிய அறையினின்றும் தேசிய சபையின் அங்கத்தினர்கள் துரத்தப்பட்டனர். ஆனால், அவர்கள் அதற்காக வருந்தாமல் பக்கத்திலிருந்த டென்னிஸ் விளையாட்டரங்கில் கூடி ஃபிரான்சு நாடு முழுவதற்கும் புதிய அரசியலமைப்பு ஏற்படுத்தாமல் தாங்கள் கலைவதில்லை என்று பிரமாணம் செய்தார்கள். மத குருமார்களில் பலரும், சில பிரபுக்களும் இவர்களுடன் சேர்ந்துகொண்டார்கள். சில நாட்களுக்குப் பின்னர் அரசர் எல்லா எஸ்டேட்டுகளையும் ஒருங்கே சந்தித்து அவர்களை முன்மாதிரியே கூடி ஆலோசனை செய்யவும், முடிவெடுக்கவும் கட்டளையிட்டார். மூன்றாவது எஸ்டேட்டு அக் கட்டளையை நிறைவேற்ற மறுத்தது. லூயி மன்னர் துருப்புகளைக் கொண்டு அவர்களை அடக்கியிருக்கலாம். ஆனால், அவ்வாறு செய்ய அவருக்குத் துணிவில்லை ; மனமும் இல்லை என்று கூறலாம். ஆகவே, தேசிய சபை தொடர்ந்து பணியாற்றியது. பிறகு பல மத குருமார்களும் சில பிரபுக்களும் அவர்களுடன் திரும்பவும் சேர்ந்துகொண்டார்கள். இறுதியில் லூயி 'மூன்றாவது' எஸ்டேட்டின் கோரிக்கைகளை ஏற்றார். இதுவே மக்களின் சிறப்பான வெற்றிகளில் முதலாவதாகும்.

அதன் பிறகு கவர்ந்து பற்றுகிற இரு நிகழ்ச்சிகள் ஏற்பட்டன. அவற்றுள் முதலாவது பாஸ்டீல் கோட்டையைத் தகர்த்தெறிந்த நிகழ்ச்சியாகும். பயிர்த்தொழிலும், வியாபாரமும் சரிவர நடைபெறாததால், அநேகர் பட்டினியாலும் வேலையின்மையாலும் துன்பம் அடைந்தார்கள். அவர்களில் பலர் பாரிஸ் நகரத்திலிருந்த இடர் உதவி ஸ்தாபனங்களை நாடிச் சென்றனர். இவர்களும் பாரிஸ் மக்களும் நாளடைவில் பேச்சுத்திறன் படைத்த புரட்சித் தலைவர்களின் கைப் பொம்மைகளாக மாறினார்கள். இவர்களைக்கொண்டு பல புரட்சியாளர்களைக்கொண்ட கழகங்கள் பிற்காலத்தில் அமைக்கப்பட்டன. அவற்றுள் மிகப் பெயர் பெற்றது, 'ஜாகோபின் கிளப்' (Jacobin Club) என்பதாகும்.[1] பாரிஸ் நகர மக்களிடையே அருவருப்பும், கொந்தளிப்பும் வளர்ந்து இருந்த அச் சமயத்தில் அரசர் தேசிய 'சபையை (National Assembly) அடக்குவதற்கு இரகசியமாக அவருடைய படைகளைச் சேகரித்துக்கொண்டிருந்தார். அப் படைகளைக் கலைக்க வேண்டு

[1] முதன்முதல் இந்தக் கழகம் செயின்ட் ஜாக் (St. Jacques) மடத்தில் கூடியதால் இதற்கு இப் பெயர் ஏற்பட்டது.

மென்று தேசியச் சபை விடுத்த வேண்டுகோளை நிராகரித்தார். சீர் திருத்தங்களை விரும்பிய நெக்கரைப் பதவியினின்றும் விலக்கினர். மேற்கூறிய நடவடிக்கைகள் பாரிஸ் மக்களைக் கிளர்ச்சி செய்யத் தூண்டின. ஜூலை மாதம் 14ஆம் தேதி பாஸ்டில் கோட்டையில் வெடி மருந்து அதிக அளவில் இருப்பதாக ஒரு வதந்தி கிளம்பியது. உடனே புரட்சிக்காரர்கள் அதைத் தாக்கி நொறுக்கினர்கள். இவ்வாறு வல்லாட்சி யின் சின்னம் என்று கருதப்பட்ட அக் கோட்டையை அழித்த நாளை இன்றும் தேசிய விடுமுறை நாளாக ஃபிரெஞ்சுக்காரர்கள் கொண்டாடு கிருர்கள். பாரிஸ் நகரத்தில் புதிய ஆட்சியை ஏற்படுத்தினர்கள். லஃபேயெத் (Lafayette) என்பவரைத் தலைவராகக்கொண்ட புரட்சிப் படை (National guard) ஒன்று ஏற்படுத்தப்பட்டது. அந் நேரத்தி லும் மன்னர் கிளர்ச்சிக்காரர்களைப் படைகொண்டு ஒடுக்க முயற்சி செய்ய வில்லை. அதற்கு மாருக அவரே பாரிஸ் சென்று, புரட்சிக்காரர்களின் ஏற்பாட்டிற்குத் தம்முடைய ஒப்புதலை அறிவித்தார். ஃபிரான்சின் ஏனைய பாகங்களிலும் கலகங்கள் ஏற்பட்டன. பிரபுக்களின் வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டன. எல்லா நகரங்களிலும், மக்கள் பிரதிநிதி களைக்கொண்ட சபைகள் ஏற்படுத்தப்பட்டன. அவைகளுக்கு நகரங் களின் ஆட்சிப் பொறுப்பு அளிக்கப்பட்டன. அதனுல் பல பிரபுக்கள் நாட்டைவிட்டுச் சென்று வெளிநாடுகளில் குடியேறினர்கள். அவர்கள் 'எமிக்ரே' (emigres) என்று அழைக்கப்படுகிருர்கள்.

இதன் பிறகு அரசர் வாளாயிருக்கவில்லை. மறுபடியும் தம்முடைய படைகளைச் சேகரிக்க ஆரம்பித்தார். அப் படையினருக்குப் பெரு விருந்து ஒன்று ஏற்பாடு செய்தார். அச்சமயத்தில் உணவுப் பற்றுக் குறையினல் பாதிக்கப்பட்டிருந்த பாரிஸ் மக்கள் கோபமடைந்தார்கள். அரசரைத் தங்களுடைய நேர்பார்வையில் வைத்திருக்கவேண்டும் என்று எண்ணினர்கள். அதனல் பாரிஸ் பெண்கள் அணிவகுத்து வார்சேயி நோக்கிச் சென்றனர். ஆண்களும் அதில் கலந்துகொண் டனர். அரசர் பாரிஸ் மக்கள் வேண்டுகோளுக்கு இசைந்தார். தேசிய சபையும் அரசரைப் பின்தொடர்ந்தது. அந் நிகழ்ச்சிக்குப் பிறகு புரட்சிக் கருத்துகள்கொண்ட பாரிஸ் நகர மக்களிடையே அரசகுடும்பம் வாழ நேர்ந்தது. தேசியச் சபையும் பாரிஸ் மக்களைச் சார்ந்திருக்க வேண்டியதாயிற்று.

1791-ல் தேசியச் சபை கலைந்தது. ஆனல், அதற்கு முன்னர் பல சீரிய சட்டங்களை அது இயற்றிவிட்டது. பிரபுக்களும், மத குருமார் களும் பெற்றிருந்த தனி உரிமைகளை ஒழித்துவிட்டது. பிரபுக்களின் உரிமைகளும் அழிந்துவிட்டன. மதகுருமார்களுக்கு மக்கள் பணம் (Tithes) செலுத்திவரும் முறை ஒழிக்கப்பட்டது. பிறகு நாட்டின் நிதிநிலையைச் சீர்படுத்த மதச் சொத்துகளைப் பறிமுதல் செய்ய

உத்தரவிட்டனர். அச் சொத்துகளை உடனே பணமாக்குவது கடினமான செயலாகத் தோன்றியது. ஆகவே, அச் சொத்துகளை ஈடாக வைத்துப் பத்திரங்கள் (Assignats) வழங்கியது. இவையே நாளடைவில் காகிதப் பணமாகப் பயன்படுத்தப்பட்டன. மதச் சொத்துகளைப் பறிமுதல் செய்தபின்னர் கத்தோலிக்க மத குருமார்கள் அனைவரும் சம்பளம் பெறும் அரசாங்க அலுவலர்களாக மாறினர். அவர்கள், ஆட்சித்துறை வட்டாரங்களிலும் மாவட்டங்களிலும் இருந்த எல்லா மதத்தைச் சார்ந்த வாக்காளர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டனர். இந்த ஏற்பாடுகளைப் போப் கண்டித்தார். மதப்பற்றுடைய லூயி மன்னர் மிக்க வருத்தத்துடன் இந்த ஏற்பாட்டினை (Civil Constitution of the Clergy) ஏற்றுக்கொண்டார். இந்த ஏற்பாடு கத்தோலிக்கர்களைப் புண்படுத்தியது.

தேசியச் சபையின் முக்கியமான சாதனை அரசியல் அமைப்புச் சட்டம் ஒன்றினை இயற்றியதேயாகும். இச் சட்டத்தின் முதற் பகுதியில் மக்களின் உரிமைகள் அறிவிக்கப்பட்டிருந்தன. எல்லா மக்களும் சமமானவர்கள்; மக்களே எல்லாவற்றினுக்கும் மேம்பட்டவர்கள்; சட்டமியற்றுவதில் மக்கள் பங்கு கொள்ளவேண்டும்: பேச்சு சுதந்திரம் மிகப் புனிதமான சுதந்திரமாகும்; விசாரணை யின்றி எவரையும் சிறையிலடைக்கமுடியாது—என்று அவ்வுரிமை அறிக்கையில் கூறப்பட்டுள்ளன. ஆட்சி அதிகாரங்களை அரசருக்கே கொடுத்தது. அமைச்சர்களை அவரே நியமிக்கவேண்டும் என்றும், படைகளை அவருடைய கட்டுக்குள் வைத்திருக்கவேண்டும் என்றும் குறிப்பிடப்பட்டன. ஆனால், அவருக்குச் சட்டமியற்றும் அதிகாரம் கொடுக்கப்படவில்லை. சட்டங்களைத் தாற்காலிகமாகத் தடுத்து நிறுத்துவதைத் தவிர இத் துறையில் வேறு அதிகாரங்கள் அவருக்கு அளிக்கப்படவில்லை. மேலும், சட்டசபையின் அனுமதியின்றிப் போர்ப் பிரகடனம் செய்ய அவருக்கு அதிகாரம் அளிக்கப்படவில்லை. நீதிநிலையத் துறையிலும் அவருக்கு அதிகாரங்கள் வழங்கப்படவில்லை. சட்டமியற்றும் அதிகாரம் மக்களால் மறைமுகமாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட சபைக்கு அளிக்கப்பட்டது. வாக்காளர் உரிமை சொத்துடையவர்களுக்கு வழங்கப்பட்டது. அதனால் நகரத்தில் வாழ்ந்த தொழிலாளர்கள் வாக்குரிமை பெறாது போயினர். நீதிபதிகள் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். நீதிநிலையத்துறை சீர்படுத்தப்பட்டது. இதனால் எல்லோரும் நியாயம் பெற வழி ஏற்பட்டது. தல ஆட்சியும் திருத்தியமைக்கப்பட்டது. ஆட்சித்துறை வட்டாரங்களிலும் (Departments), சிறு நில ஆட்சிப் பகுதிகளிலும் (Communes), மாவட்டங்களிலும் மக்களாட்சி ஏற்படுத்தப்பட்டது.

இதற்கிடையில் 1791-ல் அரசர் நாட்டினின்றும் ஓடிவிடத் தீர்மானித்தார். ஆனால், அவர் அம் முயற்சியில் ஈடுபட்டிருந்தபோது பிடி

பட்டார். பலர் அவரைப் பதவியினின்றும் நீக்கிவிடவேண்டும் என்று கோரினார்கள். ஆனால், புதிய அரசியலமைப்புச் சட்டத்தினை அவர்முன் சமர்ப்பிப்பது என்றும், அதை அவர் ஏற்றுவிட்டால் அவரை அரசராக மக்கள் ஏற்றுக்கொள்ளவேண்டும் என்றும் முடிவு செய்யப்பட்டது. 1791-ல் லூயி அரசியலமைப்புச் சட்டத்தை ஒப்புக்கொண்டார். செப்டம்பர் மாதம் தேசியச்சபை அதனுடைய வேலையை முடித்து விட்டதால் கலைந்தது.

1791-ல் புதிய அரசியல் அமைப்புச் சட்டம் நடைமுறைப் படுத்தப்பட்டது. புதிய சட்டசபை தேர்ந்தெடுக்கப்பட்டது. தேசியச் சபையின் உறுப்பினர்கள் எவரும் இப் புதுச் சட்டசபைக்குத் தேர்ந் தெடுக்கப்படலாகாது என்று தேசியச் சபையே முடிவு கட்டியதால், சட்டசபையின் அங்கத்தினர்கள் அனைவரும் அனுபவம் அற்றவர் களாகவே இருந்தனர். இச் சபையின் உறுப்பினர்கள் மூன்று பிரிவினர்களாய் இருந்தனர். ஒரு கட்சியினர் அரசியலமைப்புப்படி ஆட்சி நடைபெறவேண்டும் என்று கருதினர். மற்றவர் புரட்சியைத் தொடர்ந்து நடத்தவேண்டும் என்றும் குடியாட்சியை அமைக்கவேண்டும் என்றும் எண்ணமிட்டனர். இவர்களில் பெரும் பான்மையினோர் மிதவாதிகளாகவும், மற்றவர்கள் தீவிர நோக்குடை யவர்களாகவும் இருந்தனர். இவர்களில் முதலில் கூறப்பட்டவர்கள் கிராண்டியர் (Girondins) என்று அழைக்கப்பட்டனர்.[1] மற்றவர்கள் ஜாகோபியர் ஆவர். கிராண்டியர் கட்சியில் ரோலண்ட் (Roland) என்னும் அம்மையார் செல்வாக்குப் பெற்றிருந்தார். ஜாகோபியர்கள் டான்டன் (Danton). இரோபஸ்பியர் (Robespierre) ஆகியவர்களைத் தலைவர்களாகக் கொண்டிருந்தனர். ஜாகோபியர் சட்டசபையில் செல்வாக்குப் பெறவில்லை என்றாலும், பாரிஸ் மக்களிடம் மிகுந்த செல்வாக்குப் பெற்றிருந்தார்கள். சட்டசபையின் நடவடிக்கைகளை எல்லோரும் கவனிக்க அனுமதிக்கப்பட்டதால், பாரிஸ் மக்கள் அங்குச் சென்று அவர்களுடைய கட்சியினரை ஆதரிக்க முற்பட் டனர். ஆகவே, நாளடைவில் எக்கட்சியிலும் சாராதவர்கள் சட்ட சபைக்குச் சென்று நடவடிக்கைகளில் பங்குகொள்ளுவதை நிறுத்திக் கொண்டார்கள்.

முதலில் லூயி பிற்போக்குக் கட்சியைச் சார்ந்தவர்களை அமைச்சர்களாக நியமித்தார். பிறகு கிராண்டியர்களை அமைச்சர் களாக அமர்த்த நேர்ந்தது. அக் காலத்தில் ஃபிரான்சு பிறநாட்டார் களுடன் போர்புரியவேண்டிய சூழ்நிலை உருவாகியது. ஃபிரெஞ்சு

[1] இவர்களின் தலைவர்கள் பெரும்பாலோர் கிராண்டே என்னும் பகுதியிலிருந்து வந்தவர்களாதலால் இவர்களுக்கு இப் பெயர் வழங்கலாயிற்று.

அரசி, மேரி அன்த்வானெட் (Marie Antoinette), ஆஸ்திரியப் பேரரசரின் சகோதரியாவார். ஆகவே, பேரரசர் அவருடைய சகோதரிக்குப் புரட்சிக்காரர்கள் யாதோர் இன்னல் நேராவண்ணம் பாதுகாக்க அறிக்கை ஒன்றினை 1791-ல் வெளியிட்டார் (Declaration of Pillnitz, 1791). அதைத் தொடர்ந்து அவரும், பிரஷ்யா நாட்டரசரும், ஃபிரெஞ்சு நாட்டு விவகாரங்களில் தலையிட ஏற்பாடுகளைச் செய்தார்கள். கிராண்டியர்கள் இந்த நிலையைப் பயன்படுத்தி நாட்டில் குடியரசை ஏற்படுத்த விரும்பினார்கள். அரசருடைய வரம்புக்குட்பட்ட ஆட்சியை விரும்பியவர்களும் போரில் அடையும் வெற்றிகளின் வாயிலாக 1791ஆம் ஆண்டின் அரசியலமைப்புச் சட்டத்தை நிலைநிறுத்தக்கூடும் என்று கருதினார்கள். ஜாகோபியர்கள் ஒருவர்தாம் போர்புரிவதை எதிர்த்தார்கள். போரின் விளைவாக நாட்டில் வல்லாட்சி ஏற்படும் என்ற எண்ணமே அவர்களது எதிர்ப்புக்குக் காரணமாகும். 1792-ல் போர் தொடங்கியது. எதிர்பார்த்ததுபோலவே ஃபிரெஞ்சுசேனை முரியடிக்கப்பட்டது. இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி அரசர் சில கிராண்டிய அமைச்சர்களை நீக்கினார். மேலும், சில சட்டங்களைத் தாற்காலிகமாகத் தடுத்து நிறுத்தினார். அப்பொழுது எதிரிகளின் படைத்தலைவர், பிரன்ஸ்விக் கோமகன் (Duke of Brunsvick) ஓர் அறிக்கையை விடுத்தார். லூயி மன்னர் குடும்பத்திற்குக் கேடு விளைவிப்பவர்கள் கடுந் தண்டனைக்குள்ளாவார்கள் என்று அதில் குறிப்பிட்டார். மேற்கூறிய சம்பவங்கள், அரசர் நாட்டிற்கு எதிராகச் சதிசெய்கிறார் என்ற ஐயத்தை வளர்த்தன. அவர்களுள் முக்கியமானவர்கள் டான்டனும், இரோபஸ்பியரும் ஆவார்கள். அவர்கள் தூண்டுதலின்பேரில் பாரிஸ் புரட்சிக்காரர்கள் பாரிஸ் நகர ஆட்சியைக் கைப்பற்றிய பிறகு அரசருடைய மாளிகையைத் தாக்கினார்கள். அப்பொழுதும்கூட அரசர் தம்முடைய காவலர்களைக்கொண்டு அவர்களைத் தாக்க விரும்பவில்லை. அதற்கு மாறாக அரசர் மாளிகையைவிட்டுச் சட்டசபையில் புகலிடம் நாடினார். புரட்சிக்காரர்கள் அவரைப் பின்தொடர்ந்தனர். சட்டசபைமுன் மன்னர் ஆட்சியை நீக்கவேண்டும் என்று கூச்சலிட்டனர். ஆகவே, மன்னர் சிறைப்படுத்தப்பட்டார். சட்டசபைக்கு முடியாட்சியை ஒழிக்க அதிகாரமில்லாததால், புதிய அரசியல் நிர்ணய சபையைக் கூட்டுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டன. இதற்கிடையில் பகைவர்கள் பாரிஸை நோக்கி முன்னேறிக்கொண்டிருந்தார்கள். இதை அறிந்த புரட்சிக்காரர்கள் அரசராட்சிக்கு ஆதரவளிப்பவர்களையெல்லாம் கொன்றுவிட்டனர் (September massacre). இக் கொலைகளுக்கெல்லாம் காரணமாயிருந்தது பாரிஸ் நகரசபையே (Commune) ஆகும். இந் நிகழ்ச்சி பயங்கர ஆட்சியின் (Reign of Terror) தொடக்கத்தைக் குறித்துக்காட்டும் நிகழ்ச்சியாகக் கருதப்படுகிறது.

இதன் பிறகு டான்டன் சர்வாதிகாரியாக விளங்கினர். படுகொலைகளைத் தடுத்து, அமைதியை ஏற்படுத்த முனைந்தார். ஃபிரெஞ்சுப் படையை பலமுடையதாகச் செய்தார். அதனுல் வால்மி (Valmy) என்னும் இடத்தில் பகைவர்கள் முரியடிக்கப்பட்டார்கள். அதன் பிறகு ஃபிரெஞ்சுப்படை ஆஸ்திரிய நெதர்லாந்துப் பகுதியில் புகுந்து வெற்றி கண்டது. மேலும், ரைன்நதிப் பகுதியிலும் இத்தாலியிலும் போர் புரிய ஏற்பாடுகள் செய்யப்பட்டன. இதற்கிடையே பாரிஸில் நேஷனல் கன்வென்ஷன் (National Convention) என்ற சபை கூட்டப்பட்டது. அதன் உறுப்பினர்களில் பெரும் பான்மையினர் எக் கட்சியிலும் சேராது இருந்தனர். ஜேரோப்பியர் 50 இடங்களையும், கிராண்டியர் 120 இடங்களையும் கைப்பற்றி இருந்தார்கள். 1792ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 22ஆம் தேதி முடியாட்சியை அச் சபை ஒழித்தது. அன்றுமுதல் ஃபிரான்சு குடியரசாயிற்று. பிறகு லூயி மன்னர் விசாரணைக்குக் கொண்டுவரப்பட்டார். அவர்மீது பல குற்றங்கள் சாட்டப்பட்டன. அவர் குற்றவாளி என்றும், இரோபஸ்-பியரின் தூண்டுதலின்பேரில் அவர் கொல்லப்படவேண்டும் என்றும் முடிவு செய்யப்பட்டது. 1793ஆம் ஆண்டு ஜனவரி மாதம் அரசர் கொல்லப்பட்டார்.

அரசர் கொல்லப்பட்ட பிறகு புரட்சி அரசாங்கம் இக்கட்டான நிலையில் இருந்தது. வெற்றிப் பெருமிதத்தில், சுதந்திரம் அடைய முயற்சி செய்யும் எல்லா மக்களுக்கும் ஃபிரெஞ்சுக்காரர்கள் உதவி புரியக் காத்திருக்கிருர்கள் என்ற அறிக்கை விடுத்து, ஃபிரான்சுக்கு எதிராகப் பலம் பொருந்திய நேச நாடுகளின் கூட்டிணைவு ஒன்றை அச் சபை உருவாக்கிவிட்டது. அதில் ஆஸ்திரியா, பிரஷ்யா, பிரிட்டன், ஹாலந்து, ஸ்பெயின், சார்டீனியா ஆகிய நாடுகள் சேர்ந்துகொண்டன. மேலும், பாரிஸ் நகரத்துக்கு வெளியே அரசருடைய ஆதரவாளர்கள் வெண்டி (Vendee) போன்ற இடங்களில் கிளர்ச்சியை மேற்கொண்டார்கள். படைத்தலைவர் டுமூரியே (Dumouriez) என்பவரும் புரட்சிக்காரர்களுக்கு விரோதமாக நடக்கலானர்; அவர் ஒரு கிராண்டியராதலால், கிராண்டியர்கள் தங்களுடைய செல்வாக்கை இழந்தார்கள். ஜாகோபியர்கள் இவ் வாய்ப்பைப் பயன்படுத்தி அரசாங்கத்தைக் கைப்பற்ற முனைந்தார்கள். கிராண்டியர்களைக் கன்வென்ஷனின்றும் வெளியேற்றினர்கள். கிராண்டியர்களின் வீழ்ச்சிக்குப் பிறகு ஃபிரான்ஸில் பயங்கர ஆட்சி ஏற்படுத்தப்பட்டது. ஜாகோபியர்கள் பாரிஸில் மட்டும் மிகுந்த செல்வாக்குப் பெற்றிருந்தார்கள். அவர்கள் நாட்டு மக்களில் ஒரு சிறுபகுதியினரே ஆவர். அத்தகையோர் ஆட்சி செலுத்தவேண்டுமாயின் பயங்கர முறையைப் பின்பற்றவேண்டியது அவசியமாகும்.

ஜாகோபியர்களுடைய பயங்கர ஆட்சிக்குத் துணையாக இருந்தது நாட்டின் பாதுகாப்புக்குழுவே (Committee of Public Safety) ஆகும். பன்னிரண்டு பேர்களடங்கிய இக் குழுவில் முதலில் டான்டன் செல்வாக்குப் பெற்றிருந்தார். எல்லாவற்றினுக்கும் மேற்பட்ட அதிகாரத்தைப் பெற்றிருந்த இக் குழு அதனுடைய கவனத்தைப் பெரும்பாலும் படைகளைப் பெருக்குவதிலும், போரை நடத்துவதிலும் செலுத்தியது. ஜாகோபியர்களுடைய ஆதிக்கத்தை நிலைநிறுத்துவதில் கவனம் செலுத்திய மற்றொரு ஸ்தாபனம் புரட்சி நீதிமன்றமாகும் (Revolutionary Tribunal). நாட்டின் துரோகிகளை இம் மன்றம் விசாரித்துத் தண்டனை கொடுத்தது. ஜாகோபியர்களுக்கு எதிராக நடப்பது தேசத்துரோகமாகக் கருதப்பட்டது. இம் மன்றம் அநேகரைக் கொல்ல உத்தரவிட்டது. மேரி அன்த்வானெட் அவர்களில் ஒருவராவார். கிராண்டியர் பலரும் இவ்வாறு உயிரிழந்தனர்.

வெகுவிரைவில் ஜாகோபியர்களிடையே பிளவு ஏற்பட்டது. அவர்களில் சிலர் மிதவாதிகளாக இருந்தனர். டான்டன் அவர்களுடைய தலைவராக விளங்கினர். இவர் இரக்க மனப்பான்மை கொண்டவர். அமைதியை ஏற்படுத்துவதில் நாட்டம் செலுத்தினர். சிலர் சமுதாயத் திருத்தங்களில் வெகு தீவிரமாக முனைந்திருந்தனர். இவர்களுக்கு ஹேபர்ட் (Hebert) என்பவர் தலைவராயிருந்தார். மூன்ருவது கட்சிக்கு இரோபஸ்பியர் தலைவராயிருந்தார். இவர் டான்டனுடைய மிதவாதத் தன்மையையும், ஹேபர்டினுடைய தீவிரத்தையும் வெறுத்தார். ஆகவே, இவர்கள் இருவரையும் ஒழித்துக்கட்ட எண்ணினர். அப்பொழுது ஹேபர்ட் கட்சியினர் பாரிஸ் நகர ஆட்சியின் துணைகொண்டு, பாரிஸில் கிறிஸ்தவ மதத்தை யொழித்து, அறிவு வழிபாட்டினைப் (Worship of Reason) புகுத்தினர்கள். இதை வெறுத்த இரோபஸ்பியர் டான்டனுடன் சேர்ந்து ஹேபர்ட்டைக் கைது செய்து, பிறகு கொல்லுவித்தார். 1794-ல் அவர் டான்டனையும் கைது செய்து, விசாரணைக்குக் கொண்டுவந்து, பிறகு கொல்லுவித்தார். மக்களின் நன்மதிப்பைப் பெறப் புது மதத்தைப் (Worship of Supreme Being) புகுத்தினர். கடவுள் ஒருவர் உள்ளார் என்பதும், அவர் அழியாதவர் என்பதும் அம் மதத்தின் அடிப்படைக் கொள்கைகளாகும். இரோபஸ்பியருக்கு அநேக எதிரிகள் ஏற்பட்டனர். அவர்கள் வெற்றிபெற்ருல் அவர் அழிவுறுவார் என்பதை உணர்ந்திருந்தார். ஆகவே, அவர் சந்தேகப்பட்டவர்களையெல்லாம் கொலைக்கூடத்திற்கு அனுப்ப முற்பட்டார். ரூஸோவின் கருத்துகளுக்கு ஏற்றவாறு நடக்கவேண்டும் என்று கருதி, சர்வாதிகார ஆட்சியை ஏற்படுத்த முனைந்தார். ஆகவே, அவருக்கு எதிராகச் சதிக்கும்பல் தோன்றியது. 1794-ல் அதன் விளைவாக அவர் சிறையிலடைக்கப்பட்டார். சிறையினின்றும் தப்பியோடி பாரிஸ் நகராட்சியின் உதவியை நாடினர். இதற்குள்ளாக

அவருடைய ஆதரவாளர்கள் அவரை விட்டு விலகினர்கள். எனவே, அவரைப் பிடிப்பது எளிதாயிற்று. அவர் சிறையினின்றும் தப்பியோடியதால், யாதொரு விசாரணையின்றிக் கொல்லப்பட்டார். அவருடைய மறைவு பயங்கர ஆட்சியின் முடிவைக் குறித்துக் காட்டுகிறது. அவ்வாட்சியின்போது வெளியேற்றப்பட்ட உறுப்பினர்கள் மீண்டும் கன்வென்ஷனில் சேர்ந்துகொண்டனர். எல்லா மதத்தினருக்கும் மத விவகாரங்களில் சுதந்திரமளிக்கப்பட்டது. கொலைகள் குறைந்தன. கன்வென்ஷனுக்கு எதிராக ஜாகோபியர்கள் ஏற்படுத்திய கிளர்ச்சிகளையெல்லாம் ஒடுக்கியது. 1795ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் அச் சபை கலைந்தது.

அச் சபை பல குறிப்பிடத்தக்க சட்டங்களை ஏற்படுத்தியது. நாட்டைவிட்டு வெளியேறிய பிரபுக்களின் நிலங்களைப் பறிமுதல் செய்தது. உணவுப் பொருள்கள் ஒரு குறிப்பிட்ட தொகைக்கு மேலாக விற்கப்படுவதைத் தடுத்தது. பெரும் நிலப்பண்ணைகளைச் சிறு பிரிவுகளாக்கி, அதனை ஏழை மக்களுக்கு விற்க ஏற்பாடு செய்தது. நாட்டின் எல்லாப் பகுதிகளிலும் ஒரே விதமான அளவு முறைகளை ஏற்படுத்தியது. மெட்ரிக் அளவு முறை மேற்கொள்ள ஏற்பாடு செய்தது. ஒருவரின் சொத்துகளை எல்லாக் குழந்தைகளும் பகிர்ந்துகொள்ள வேண்டும் என்று ஏற்பாடு செய்யப்பட்டது. கடனுக்காகச் சிறையிலிடும் வழக்கம் ஒழிக்கப்பட்டது. நீக்ரோ அடிமைகளை வைத்திருக்கும் வழக்கம் ஒழிக்கப்பட்டது. ஆண்களைப் போலவே பெண்களுக்கும் சொத்துரிமை உண்டு என்பதும் வலியுறுத்தப்பட்டது. சில பயனற்ற திருத்தங்களையும் அச் சபை மேற்கொண்டது. பிரபுக்கள் வகித்திருந்த பட்டங்கள் ஒழிக்கப்பட்டன. எல்லோரும் நாட்டு மக்கள் (Citizen) என்ற பெயரால் அழைக்கப்படவேண்டும் என்றும், வேலைப்பாடமைந்த ஆடைகளை அணியக்கூடாதென்றும் அறிவிக்கப்பட்டது. ஆண்டுக் குறிப்பேட்டையும் (Calendar) திருத்தியமைத்தது. ஒவ்வொரு மாதத்திலும் பத்து நாட்கள் கொண்ட மூன்று வாரங்களை ஏற்படுத்தியது. மாதங்களின் பெயரை மாற்றியது. குடியரசு ஆரம்ப நாளைத் தொடக்கமாக அந்தக் குறிப்பேடு கொண்டிருந்தது.

இவைகளன்றி அப் பேரவை அரசியல் அமைப்புச் சட்டமொன்றை நிறைவேற்றியது. அதன்படி சட்டமியற்றும் அதிகாரம் இரு சபைகளடங்கிய சட்டசபைக்கு அளிக்கப்பட்டது. வாக்குரிமை வரி கொடுப்போருக்கே அளிக்கப்பட்டது. ஐந்து டைரக்டர்கள் கொண்ட குழுவினுக்கு (Directory) சட்டங்களை நடைமுறைப் படுத்தும் அதிகாரம் வழங்கப்பட்டது. அவர்களுக்கு உதவி செய்ய அமைச்சர்கள் அமர்த்தப்பட்டனர். ஒவ்வோர் ஆண்டும் சட்டசபைகளின் ஒரு பகுதியினரும், டைரக்டர்களில் (Directors) ஒருவரும் புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட ஏற்பாடு செய்யப்பட்டது.

டைரக்டர்கள் ஆட்சி செய்த காலத்தில் வெளிநாடுகளுடன் போர் தொடர்ந்து நடைபெற்றுவந்தது. இப் போர் ஏற்படக் காரணமும், முதலில் ஃபிரெஞ்சுப் படை அடைந்த தோல்வியினையும், பிறகு டான்டன் மேற்கொண்ட முயற்சியின் விளைவாக ஃபிரரன்சுப் படையின் முன்னேற்றத்தைப்பற்றியும், ஃபிரான்சுக்கு எதிராக நாடுகளின் கூட்டிணைவு ஏற்படுத்தப்பட்டதையும் முன்னரே கவனித்தோம். குடியாட்சி ஏற்படுத்தப்பட்ட பின்னர் போர் நடத்தும் பொறுப்பு நாட்டின் பாதுகாப்புக் குழுவிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. அக் குழுவின் உறுப்பினர்களில் ஒருவரான கார்னோ (Carnot) என்பவர் ஃபிரெஞ்சுச் சேனையில் புத்துயிரை ஊட்டியும், நவீன போர்க் கருவிகளைப் புகுத்தியும், எல்லா இடங்களிலும் தோற்றுக் கொண்டிருந்த ஃபிரெஞ்சுப் படையை வெற்றிப் பாதையில் திருப்பி விட்டார். ஹாலந்து அவர்கள் கைவசமாயிற்று. 1795-ல் பிரஷ்யா ஃபிரான்சுடன் சமாதானம் செய்துகொண்டது. ஹாலந்து ஃபிரான்சுடன் சேர்ந்து போராட இசைந்தது. ஸ்பெயினும் ஃபிரான்சுடன் சமாதானம் செய்துகொண்டது. பிரிட்டனும் ஆஸ்திரியாவும் மட்டுமே எஞ்சியிருந்தன. இதற்குள்ளாக டைரக்டர்கள் பதவியேற்றனர். இவர்கள் ஆஸ்திரியாவை முரியடிக்கப் படை ஒன்றை வியன்னு நோக்கி அனுப்பினுர்கள். சிறு படையொன்றை நெப்போலியன் என்ற படைத்தலைவரின் கீழ் இத்தாலிக்கு அனுப்பினுர்கள். அவர் ஆஸ்திரியாவைத் தோற்கடித்து வட இத்தாலி முழுவதையும் ஃபிரெஞ்சுக்காரர்களின் ஆதிக்கத்துக்குட்படுத்தினுர். 1797-ல் ஆஸ்திரியா சமாதானம் செய்துகொண்டது. காம்போ ஃபார்மியோ உடன்படிக்கைப்படி (Treaty of Campo Formio) ஃபிரான்சு, பெல்ஜியம், அயோனியன் தீவுகள் ஆகியவற்றைப் பெற்றது. வட இத்தாலியில் குடியரசு ஏற்படுத்துவதற்கு ஆஸ்திரியா இசைந்தது. பிரிட்டன் ஒன்றுதான் எஞ்சியிருந்தது. அந் நாட்டினையும் சமாதானத்திற்கு ஒப்புவிக்க நெப்போலியன் படைகளை எகிப்துக்கு நடத்திச் சென்றுர். எகிப்தில் பல வெற்றிகளைப் பெற்று, சிரியாவிற்குச் (Syria) சென்றுர். இதற்கிடையே பிரிட்டிஷ் கப்பற்படை நெல்சன் (Nelson) தலைமையின்கீழ் ஃபிரெஞ்சுக் கடற்படையை நைல்நதி முகத்துவாரத்திற்கருகே தோற்கடித்தது. அதனுல் நெப்போலியன் இராணுவப் பொருள்களைத் தாய் நாட்டினின்றும் பெறமுடியாது போயிற்று. இவ் வெற்றியைப் பயன்படுத்தி பிரிட்டன் 1799-ல் இரண்டாவது நாடுகளின் கூட்டமைப்பை (Second Coalition) ஏற்படுத்தியது. இதில் ஆஸ்திரியாவும் ருஷ்யாவும் சேர்ந்துகொண்டன.

இதற்கிடையில் டைரக்டர்கள் தங்களுடைய செல்வாக்கை இழந்துவிட்டார்கள். அவர்கள் பெரும்பாலும் திறமையற்றவர்களாயிருந்தனர். மேலும், அவர்களிடம் ஊழல்கள் மலிந்திருந்தன.

அவர்களுக்கும் சட்டசபைகளுக்கும் அடிக்கடி தகராறுகள் ஏற்பட்டன. நாட்டின் நிதிநிலை மிகவும் மோசமான நிலையில் இருந்தது. வெளி நாட்டுப் போரை நடத்த அவர்களுக்குத் திறமை இல்லை என்பது அனைவருக்கும் தெரியலாயிற்று. ஃபிரெஞ்சுக்காரர்கள் இத்தாலியி னின்றும் துரத்தியடிக்கப்பட்டார்கள். ஆகவே, நாட்டில் வலிமை பொருந்திய ஆட்சி அமைக்கப்படவேண்டும் என்று மக்கள் வேண்டினர். நெப்போலியன் ஒருவரே அவர்களுடைய எண்ணத்தை நிறைவேற்றிவைக்கக்கூடியவராகக் காணப்பட்டார். பேராசை கொண்ட நெப்போலியனும், அப்பொழுதிருந்த நிலையைப் பயன்படுத் தித் தன்னுடைய அதிகாரத்தை நிலைநாட்ட முற்பட்டார். எனவே, 1799ஆம் ஆண்டில் நாடு திரும்பினர்.

நாடு திரும்பிய நெப்போலியனுடைய நட்பை எல்லாக் கட்சி யினரும் நாடினுர்கள். இறுதியில் அவர் சீயே (Sieyes) என்பவருடன் சேர்ந்துகொண்டார். நெப்போலியன் டைரக்டர் ஆக விரும்பினுர். ஆனல், அப் பதவிக்குத் தகுந்த வயது இல்லாமையால், ஆட்சி அமைப்பு முறையை மாற்றவேண்டிய நிலை ஏற்பட்டது. நெப்போலி யனும் அவர் நண்பர்களும் சதித்திட்டம் ஒன்றைத் தீட்டினுர்கள். அதற்கு அவருடைய சகோதரர் லூசியென் (Lucien) பேராதரவு கொடுத்தார். அதன் விளைவாக, சட்டசபைகள் பாரிஸ் நகரத்திற்குச் சில மைல்களுக்கப்பாலுள்ள செயின்ட் க்லௌட் (St. Cloud) என்னு மிடத்திற்கு மாற்றப்பட்டன. பாரிஸ் நகரத்திலிருந்த படை நெப்போலியனுடைய அதிகாரத்துக்குட்பட்டது. அச் சட்டத்தின்படி டைரக்டர்களில் ஒருவர் பதவியை இராஜிநாமாச் செய்தார். மற்ற வர்கள் இராஜிநாமாச் செய்யக் கட்டாயப்படுத்தப்பட்டார்கள். பிறகு சட்டசபைகளை, ஆட்சி அதிகாரத்தை நெப்போலியனைச் சேர்த்து மூன்று பேர் கொண்ட குழுவினுக்குக் கொடுக்குமாறும், அக் குழுவினருக்குப் புதிய அரசியலமைப்புச் சட்டம் இயற்றும் அதிகாரத் தைக் கொடுக்கும்படியும் வற்புறுத்துவதற்காக நெப்போலியன் அச் சபைகளை அணுகினர். ஒரு சபையின் அங்கத்தினர்கள் அவருடைய பேச்சினைக் காது கொடுத்துக் கேட்கவில்லை. மற்ரெரு சபையில் அவர் தாக்கப்பட்டதால் அவர் மூர்ச்சையடைந்தார். அவருக்குச் சட்டத்தின் காப்பின்மையை அறிவிக்கத் தீர்மானம் ஒன்றை நிறைவேற்ற அச் சபை தயாராயிருந்தது. அதனுடைய தலைவ ரான லூசியென் உடனே சபையைக் கலைத்துவிட்டு, இராணுவத்தின் உதவியைக்கொண்டு அச் சபையின் அங்கத்தினர்களை வெளி யேற்றினுர். பிறகு மற்ரெரு சபையினை அணுகி, நாட்டின் குடியரசை நிலைநிறுத்த நெப்போலியன், டியூகோ (Ducos), சீயே ஆகியோரைக்கொண்ட சட்ட அமைப்புக்குழு ஒன்றை ஏற்படுத்து மாறு வேண்டினுர். அதன் அனுமதி பெற்ற பிறகு பிறிதொரு

சபையின் அங்கத்தினர்களில் சிலரை மீண்டும் அழைத்து, அத் தீர் மானத்தை ஏற்றுக்கொள்ளுமாறு செய்தார். இவ்வாறாக 1795-ல் ஏற்படுத்தப்பட்ட அரசியல் அமைப்பு அழிக்கப்பட்டது.

விரைவில் புதிய அரசியலமைப்புச் சட்டம் நிறைவேற்றப் பட்டது. ஆட்சி அதிகாரங்களை மூன்று கான்சல்கள் (Consuls) பெற்றனர். அவர்களுள் நெப்போலியன் முதலாவது கான்சலாக இருந்தார். மற்ற இரண்டு கான்சல்களும் முதல் கான்சலுக்குக் கீழ்ப் படிந்து நடக்கவேண்டியவர்களாவர். சட்டங்களைச் செயற்படுத்தும் அதிகாரமும், படைகளைக் கட்டுப்படுத்தும் அதிகாரமும், அயல் நாட்டுக்கு அனுப்பப்படும் தூதர்களை நியமிக்கும் அதிகாரமும் அவருக்கு அளிக்கப்பட்டன. சட்டங்களை இயற்றும் அதிகாரம் நிய மிக்கப்பட்ட உறுப்பினர்களைக் கொண்ட குழு (State Council) ஒன்றினுக்கு வழங்கப்பட்டது. அறுபது பேர்கள் கொண்ட செனேட் (Senate) கான்சல் பதவியில் காலி ஏற்படும்போது அவ்விடத்தை நிரப்பும் அதிகாரம் பெற்றது. செனேட்டால் நியமிக்கப்பட்ட நூறு பேரடங்கிய சபை (Tribunate) எல்லா மசோதாக்களையும் விவாதிக் கும் உரிமை பெற்றது. அச் சபையால் ஏற்றுக்கொள்ளப்பட்ட மசோ தாக்கள் மட்டுமே 300 பேர் கொண்ட சட்டசபையின் முன்னர் வைக்கப் பட்டன. அச் சபை யாதொரு விவாதமுமின்றி அம்மசோதாக்களை நிறைவேற்ற ஏற்பாடு செய்யப்பட்டது.

மேற்கூறிய புதிய அரசியலமைப்புச் சட்டம் நடைமுறைப் படுத்தப் பட்டவுடன் நெப்போலியன் இத்தாலிக்கு அவருடைய படைகளை நடத்திச் சென்றார். 1799-ல் ஃபிரான்சுக்கு எதிராக இரண்டாவது நேச நாடுகளின் கூட்டிணைவு ஏற்படுத்தப்பட்ட தென்றும், அதில் கலந்துகொண்ட ஆஸ்திரியாவும், ருஷ்யாவும் ஃபிரெஞ்சுக்காரர்களை இத்தாலியினின்றும் துரத்தியடித்தன என்றும் நாம் முன்னரே கவனித் தோம். மீண்டும் ஃபிரான்சின் ஆதிக்கத்தை இத்தாலியில் ஏற்படுத்த வும் பகைவர்களின் ஒற்றுமையைக் குலைக்கவும், நெப்போலியன் இத்தாலி சென்றார். மிலான் நகரத்தை எளிதில் கைப்பற்றினார். அதையடுத்து ஆஸ்திரியாவை மாரெங்கோ (Marengo) என்னும் இடத்தில் தோற்கடித்தார். இதற்கிடையில் வியன்னாவை நோக்கிப் புறப்பட்ட மற்றொரு ஃபிரெஞ்சுப் படை ஹோயென்லின்டன் (Hohenlinden) என்னுமிடத்தில் ஆஸ்திரியாவைத் தோற்கடித்தது. ஆகவே, 1801-ல் லூனெவில் சமாதானத்தை (Peace of Luneville) ஆஸ்திரியா செய்துகொண்டது. இத்தாலியில் ஆஸ்திரியாவின் ஆளுகைக்குட்பட்ட பகுதிகளையும், ஜெர்மனியில் ரைன் நதிக்கு மேற்கேயுள்ள பகுதியினையும் ஃபிரான்சு பெற்றது. ஆஸ்திரியா, பிரிட்டன் ஆகியவற்றுடன் மனவருத்தம் கொண்டு, ருஷ்யா போரி

னின்றும் விலகிக்கொண்டது. ஆகவே, பிரிட்டன் மறுபடியும் தனித்திருந்து போர் செய்ய வேண்டியதாயிற்று.

இதற்கிடையில் ஆங்கிலேயக் கப்பற்படையினரின் தொந்தரவுகளைத் தாங்கமுடியாமல் பல நடுநிலை நாடுகள் இங்கிலாந்துக்கு எதிராக ஒன்று சேர்ந்தன. இவைகளுக்குப் படைதரித்த நடுநிலைமை நாடுகள் (Armed Neutral States) என்ற பெயர் வழங்கலாயிற்று. அவைகளில் ஒன்ருன டென்மார்க்கின் கப்பற்படையை கோபன்ஹேகன் என்னுமிடத்திற்கு அருகே தோற்கடித்து, நிலைமையை ஒருவாறு பிரிட்டன் சமாளித்தது. இதற்கிடையில் ருஷ்ய நாட்டின் அரசராகப் பதவியேற்ற முதலாவது அலெக்சாந்தர் (Alexander I) ஃபிரான்சின் எதிரியாவார். மேலும், இங்கிலாந்தின் கடற்படை நன்னம்பிக்கை முனை, இலங்கை, டிரினிடாட் (Trinidad) ஆகிய இடங்களைக் கைப்பற்றியது. ஃபிரான்சு பிரிட்டனைப் பணியவைக்கலாகாது என்ற முடிவுக்கு வந்தது. அதேபோல் பிரிட்டனும் ஃபிரான்சை ஐரோப்பாவில் நிலச் சண்டையில் தோற்கடிக்கமுடியாது என்ற முடிவுக்கு வந்தது. மேலும், இரு நாடுகளும் போரிட்டு மிகவும் களைப்படைந்தன. ஆகவே, 1802 ஆமியேன் சமாதானம் (Peace of Amiens) ஏற்படுத்தப்பட்டது. இங்கிலாந்து நன்னம்பிக்கைமுனைப்பகுதி, மால்டா ஆகியவற்றைத் திருப்பிக்கொடுக்க இசைந்தது. இலங்கை, டிரினிடாட் ஆகியவற்றை அது தொடர்ந்து வைத்திருக்க அனுமதிக்கப்பட்டது. ரோமாபுரி, தெற்கு இத்தாலி, எகிப்து ஆகிய இடங்களினின்றும் ஃபிரான்சு வெளியேற இசைந்தது. 1799-ல் நெப்போலியன் கான்சல் பதவியேற்ருர் என்று முன்னர் கூறினேம். அந் நிகழ்ச்சி புரட்சிக்கு முடிவு ஏற்படுத்திவிட்டது என்று பொதுவாகக் கருதப்படுகிறது. ஆகவே, நெப்போலியனைப்பற்றி அறியுமுன்னர், புரட்சியின் விளைவுகளைச் சிறிது கவனிப்போம்.

புரட்சியின் விளைவாகப் பல புதிய கருத்துகள் செல்வாக்குப் பெற்றன. அவைகளில் ஒன்று 'சுதந்திரம்' என்பதாகும். அக் கருத்து பல அரசியல் நோக்கங்களை உட்கொண்டிருந்தது. 17, 18ஆம் நூற்ருண்டுகளில் அரச தெய்விக உரிமைக் கோட்பாட்டின் அடிப்படையில் இயங்கிவந்த வல்லாட்சி முறையை ஒழிக்க அது பெரும் உதவியாக இருந்தது. அரசியலமைப்போடு இசைவான ஆட்சிக்குப் பேராதரவு ஏற்படவும் அது காரணமயிருந்தது. அரச தெய்விக உரிமைக் கோட்பாடு அழிக்கப்பட்டு ஆட்சித் தலைமை யுரிமை மக்களைச் சார்ந்ததே என்ற கருத்து ஓங்கி வளருவதற்கும் அது துணைபுரிந்தது. புரட்சிக்கு முன்னர் யாதோர் உரிமையுமின்றி மக்கள் பல கொடுமைக்கு உள்ளாக்கப்பட்டிருந்தார்கள். புரட்சியின் பயனுக மக்கள் பிறக்கும்போதே சில உரிமைகளைக் கொண்டிருந்

தார்கள் என்றும், அவ்வுரிமைகள் அனைத்தும் புனிதத்தன்மை வாய்ந்தவை என்றும் கருதப்பட்டது. அக் கருத்தும், அவர்கள் அனுபவிக்கவேண்டிய உரிமைகள் எவை என்பதும் புரட்சியின்போது தயாரிக்கப்பட்ட மனித உரிமைகள் அடங்கிய அறிக்கையில் குறிப்பிடப் பட்டன. எல்லா மக்களுக்கும் அவரவருக்குப் பிடித்த மதத்தைத் தழுவுவதற்கும், அதற்காகத் தொழுகை இல்லங்கள் ஏற்படுத்து வதற்கும் உரிமை வழங்கப்படவேண்டும் என்றும், பேச்சுச் சுதந்தரம் அளிக்கப்படவேண்டும் என்றும், அவர்கள் எண்ணத்தை எழுத்து மூலமாக வெளியிட உரிமை வழங்கப்படவேண்டும் என்றும், சொத்துகளை யாதோர் இன்னல் இன்றி அனுபவிக்கும் உரிமை அளிக்கப்படவேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டது. மேலும், இக் கருத்து ஆட்சிமுறையில் மாறுதல்கள் ஏற்படுத்தப் பெரிதும் பயன் பட்டது. சட்டசபைகள் அமைக்கவும், தல ஆட்சியைத் திருத்தி அமைக்கவும் ஆட்சியாளர் முனைந்தனர்.

புரட்சியின் பயனாகத் தோன்றிய சமத்துவம் என்ற கருத்து சமுதாய அமைப்பு முறையில் பல மாற்றங்கள் ஏற்படக் காரணமா யிருந்தது. புரட்சிக்கு முன்னர் ஃபிரான்சிலும், ஏனைய ஐரோப்பிய நாடுகளிலும் சமுதாயம் நிலமானியத் திட்டத்தை (Feudalism) அடிப்படையாகக்கொண்டு அமைக்கப்பட்டு இருந்தது. அதனால் ஒரு சிலர் மட்டும் உரிமைகளைப் பெற்றிருந்தார்கள். ஏனையோர் அவர் களின் நன்மைக்கென வாழ்ந்திருந்தனர். அத்தகைய சமுதாய அமைப்பைப் புரட்சியின்போது ஃபிரெஞ்சுக்காரர்கள் தகர்த்தெறிந் தனர். நிலமானியத் திட்டத்தின் சான்றடையாளங்கள் அழிக்கப் பட்டன. நிலங்கள் குடியானவர்களுக்குப் பகிர்ந்து கொடுக்கப்பட்டன என்பதை முன்னரே குறிப்பிட்டோம். 'சமத்துவம்' என்ற கருத்து வளர்ச்சியுற்றதால் சட்டத்தின்முன் யாவரும் சமம் என்ற எண்ணம் வளர்ந்தது. அதையொட்டி நாட்டின் வரியமைப்பு மாற்றப்பட்டது. வரிவிலக்குப் பெற்றவர்கள் அவ் வுரிமையை இழந்தனர். எல்லோரும் நல்வாழ்வு வாழ சமமான உரிமையைப் பெறவேண்டும் என்ற கருத்தும் தோன்றியது.

புரட்சியின் விளைவாகத்தான் தேசியத் தன்மை ஓங்கி வளர லாயிற்று. 16ஆம் நூற்றாண்டிலே தோன்றிய இவ் வுணர்ச்சி மேலும் வளருவதற்கும், பிற நாடுகளில் பரவுவதற்கும் புரட்சி உதவி செய்தது. இதுகாறும் ஃபிரான்சில் மக்கள் அரசர் நாட்டு ஒற்றுமையின் சின்னம் என்பதற்காக அவரை நேசித்துவந்தனர். அந் நிலை இப்பொழுது மறைந்துவிட்டது. நாட்டுப்பற்று அதனுடைய இடத்தைக் கைப்பற்றிக் கொண்டுவிட்டது. இவ் வுணர்ச்சி வளர 'சகோதரத்துவம்' (Fraternity) என்ற புரட்சிக்காலக் கருத்து துணைபுரிந்தது. இதே கருத்து பிற இடங்களில் பரவுவதற்குக் காரணமும் புரட்சியேயாகும்.

ஃபிரெஞ்சுப் புரட்சி அரசாங்கம் பிற நாடுகளுடன் போரிட நேர்ந்தது என்று குறிப்பிட்டோம். அதைத் தொடர்ந்து நெப்போலியன் ஐரோப்பிய நாடுகளுடன் போர் புரியலானார். ஃபிரெஞ்சுப் படை சென்ற இடங்களில் எல்லாம் தேசியத் தன்மை வளரலாயிற்று. பத்தொன்பதாம் நூற்றாண்டில் இக் கருத்து மிகவும் செல்வாக்குப் பெற்றிருந்தது. அதன் பயனாகப் பல நாடுகளில் ஒற்றுமையுணர்ச்சி மேலோங்கியது. தேசிய அடிப்படையில் நாடுகள் உருவாக்கப்படவும் காரணமாய் அமைந்தது. ஃபிரான்சிலும் பிற இடங்களிலும் கல்வி, இராணுவம் ஆகியவைகள் தேசியமயமாக்கப்பட்டன.

மக்கள் நலத்தைக் கருதி மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளுக்கு இப் புரட்சி ஊக்கமளித்தது. அடிமைத்தனம் ஒழிப்பதற்குப் பெரிதும் உதவியாயிருந்தது. பத்தொன்பதாம் நூற்றாண்டில் பல நாடுகளிலும் மக்கள் நலம் கோரிப் பல சட்டங்கள் இயற்றப்பட்டன. புரட்சியின் போது ஃபிரான்சில் இவ்வகையில் ஏற்படுத்தப்பட்ட மாறுதல்களை நாம் முன்னரே கவனித்தோம்.[1]

கடைசியாக இலக்கியத்துறையில் ஏற்பட்ட புரட்சி குறிப்பிடத்தக்க மாறுதல்கள் ஏற்படுவதற்குக் காரணமாக இருந்தது. 19ஆம் நூற்றாண்டில் எளிய நடையில் அறிஞர்கள் தங்களுடைய கருத்துகளைத் தெரிவிக்க முனைந்தனர். அவர்களில் தலைசிறந்தவர் விக்டர் ஹியூகோ (Victor Hugo) என்பவராவர்.

## நெப்போலியன் (1769—1821)

1799ஆம் ஆண்டிற்குப் பிறகு ஃபிரான்சின் வரலாறும் நெப்போலியனுடைய வாழ்க்கையும் ஒன்றோடொன்று இணைக்கப்பட்டிருந்தன. ஆகவே, நெப்போலியனுடைய சாதனைகளைப்பற்றி இனிக் கவனிப்போம். நெப்போலியன் 1769-ல் கார்சிகா என்னும் தீவிலுள்ள அஜாஸியோ என்னுமிடத்தில் பிறந்தார். அவருடைய தந்தை கார்லொ போனபார்ட்டும் (Carlo Bonaparte) தாயார் லெடிஜியாவும் (Letizia) நடுத்தர இத்தாலியக் குடும்பத்தைச் சார்ந்தவர்கள். நெப்போலியன் பிறப்பதற்கு ஓராண்டுக்கு முன்னர்தான் கார்சிகா ஃபிரான்ஸ் வசமாயிற்று. ஆகவே, அவர் பிறந்ததிலிருந்தே அவர் ஃபிரெஞ்சுக் குடிமகனாக விளங்கினார். குடும்பம் மிகப் பெரியதாக இருந்ததால், அவருடைய தந்தை அவரை இராணுவத்தில் சேர்த்துவிட முடிவு செய்தார். பிரெயன் (Brienne), பாரிஸ் ஆகிய இடங்களிலிருந்த இராணுவப் பள்ளிகளில் படித்தார். படிக்கும்போது அவருக்கு அளிக்கப்பட்ட பொறுப்புகளை நிறைவேற்றுவதில் மிகுந்த ஆர்வம் காட்டிவந்தார். அவருக்கு எதிர்ப்பட்ட இடர்களை மிகவும் பொறுமை

[1] 143ஆம் பக்கம் பார்க்க.

யுடன் சகித்துக்கொள்ளும் திறம் பெற்றவர். அவர் ஏழையாக இருந்ததால், பலரின் ஏளனத்துக்கு இலக்காயினர். யாருடனும் தாராளமாக நெருங்கிப் பழகும் தன்மையற்றவராயும் எப்பொழுதும் சிடுசிடுப்பாகவும் இருந்தார். அவர் குடும்பத்தின்மீது மிகுந்த அக்கறை கொண்டிருந்தார். பயிற்சி முடிவுற்றபிறகு ஃபிரெஞ்சுப் படையின் பீரங்கிப் பிரிவில் பொறுப்புள்ள மேலாளராகப் பணியாற்றி வந்தார். அக் காலத்தில் அவர் பல அறிஞர்களின் நூல்களைப் படிப்பதில் மிகுந்த ஆர்வம் காட்டிவந்தார். மகா ஃபிரெடெரிக் போர் ஏற்பாடுகளைப்பற்றிய நூல்களை மிகவும் கவனமாகப் படிப்பார். அவர் பிறந்த இடமான கார்சிகா தீவில் குடியரசு ஏற்படுத்தவேண்டும் என்று கருதியதால், சில ஆண்டுகளைக் கார்சிகாவில் கழித்தார். லூயி மன்னரின் கவர்னரை எதிர்த்துப் போராடினர். 1793-ல் மீண்டும் ஃபிரான்சு திரும்பினர். புரட்சியை முழுமனதுடன் ஆதரித்தார். கிராண்டியர்களுக்கும் ஜாகோபியர்களுக்கும் இடையே தகராறுகள் ஏற்பட்டபோது, ஜாகோபியர் பக்கம் சேர்ந்துகொண்டார். 1793-ல் ஃபிரான்சுக்குள் புகுந்த பிரிட்டிஷார்களை டூலானிலிருந்து துரத்தும் பணியினை ஃபிரெஞ்சு அரசாங்கம் அவரிடம் ஒப்படைத்தது. ஆங்கிலேயர்களை டூலானிலிருந்து துரத்தியடித்துப் பேரும் புகழும் பெற்றார். அதைத் தொடர்ந்து அவர் பதவியேற்றமும் பெற்றார். இரோபஸ்பியர் வீழ்ச்சிக்குப் பிறகு சில காலம் அவர் சிறைவாசம் செய்யவேண்டியதாயிற்று. அவர் இரோபஸ்பியரினுடைய ஆதரவாளர் களில் ஒருவர் என்று கருதப்பட்டதே இதற்குக் காரணமாகும். அவர் ஜாகோபியர் என்றாலும், கலகக் கும்பலையும், அக் கும்பல் செய்யும் பலாத்காரச் செயல்களையும் ஆதரிக்கவில்லை. அமைதியான ஆட்சியில் அவருக்கு மிகுந்த பற்று இருந்தது. ஆகவே, 1795-ல் கொந்தளிக்கும் மக்கள் கும்பலுக்கு எதிராக அவர் உதவியைக் கன்வென்ஷன் (Convention) கோரியபொழுது, உடனே அவ் வேண்டுகோளுக்கு இணங்கினர். புரட்சி தொடங்கி ஏழாண்டுகளாகக் கலகக் கும்பல் மிக வெற்றிகரமாகத் தன்னுடைய நாசவேலைகளைச் செய்துவந்தது. நெப்போலியனே அக் கும்பலை முதன் முறையாகத் தோல்வியடையச் செய்தார். ஒழுங்கான ஆட்சிமுறை ஏற்படுத்த வழிவகை செய்தார். 1796-ல் அவருடைய திறமையைப் பாராட்டி நெப்போலியனை இத்தாலியில் போரிடவேண்டிய ஃபிரெஞ்சுப் படைக்குத் தளபதியாக டைரக்டர்கள் நியமித்தனர். மேலும், செல்வாக்கு மிகுந்த நெப் போலியன் தங்களுடைய ஆட்சிக்குக் கேடு செய்வாரோ என்ற பயத்தால் பதவியைக் கொடுத்து வெளியேற்றினர்கள் என்ற கருத்தும் இருந்து வருகிறது. இத்தாலிக்குப் புறப்படுவதற்கு இரண்டு நாட்களுக்கு முன்னர் நெப்போலியன் தம்மைவிட வயதில் மூத்தவரும், தேசிய சபையின் தலைவராகச் சில காலம் பணியாற்றிய போஆர்னே (Beauharnais) என்பவரின் விதவையும், இயக்குநர்களில் ஒருவரான

பாராஸ் (Barras) என்பவரின் ஆசைநாயகியும் ஆன ஜோசஃபீன் (Josephine) என்பவரை மணம் செய்துகொண்டார். அதன்பிறகு அவர் இத்தாலியிலும், எகிப்திலும், சிரியாவிலும் போரிட்டார் என்று முன்னரே கவனித்துள்ளோம். அப் போர் அவருடைய போர்த் திறத்தை எடுத்துக்காட்டுகிறது. அதன் பின்னர் 1799-ல் பலாத்கார முறையைக் கையாண்டு புது அரசியலமைப்பு ஒன்றை உருவாக்கினர். அதில் அவர் முக்கிய அங்கத்தையும் வகித்தார். 1799-ல் பத்து ஆண்டுகளுக்கு முதலாவது கான்சலாகப் பதவியேற்ருர். இத்தாலியில் மீண்டும் படையை நடத்திச்சென்று வெற்றி பெற்ருர் என்று முன்னரே கூறியுள்ளோம். 1802-ல் அவர் வாழ்நாள் முழுவதும் கான்சலாக இருக்கவேண்டும் என்று ஏற்பாடு செய்யப்பட்டது. அவருக்குப் பின்னர் அப் பதவி பெறுவதற்குத் தகுதி வாய்ந்தவரை நியமிக்கும் அதிகாரம் கொடுக்கப்பட்டது. அதே நேரத்தில் அவரைக் கொல்லப் பல சூழ்ச்சிகள் செய்யப்பட்டன. அவைகளின் விளைவாக அவருக்குப் பேரரசர் என்ற பட்டம் 1804-ல் அளிக்கப்பட்டது. அவருடைய முடிசூட்டு விழாவில் பங்கெடுத்துக்கொள்ள போப் ஆண்டவர் வரவழைக்கப்பட்டார். ஆனல், இறுதியில் போப் கைகளினின்றும் மணிமுடியை வாங்கித் தாமே சூட்டிக்கொண்டார். அரசர் ஆட்சிக்கு எதிராக நடத்தப்பட்ட இயக்கம் இறுதியில் முடியாட்சி ஏற்பட வழிசெய்தது. நெப்போலியன் ஃபிரெஞ்சுக்காரர்களின் பேரரசர் என்ற பட்டம் பெற்ற பிறகுங்கூட ஃபிரான்சு 'குடியரசு' என்றே அழைக்கப்பட்டுவந்தது என்பதை இங்குக் குறிப்பிடுதல் அவசியமாகும்.

உலகத்தில் தோன்றிய பெரும் படைத் தலைவர்களுள் நெப் போலியன் ஒருவராவார். அவர் போரிட்டு வென்ற நாடுகள் கணக் கற்றவையாகும். அதே நேரத்தில் அவர் சிறந்த அரசியல் மேதை யாவார். அவர் போர்க்களங்களில் பெற்ற வெற்றிகள் பயனுடைய விளைவுகளை ஏற்படுத்தவில்லை. ஆனல், அவருடைய படைத்துறை சாராத நடவடிக்கைகள் ஃபிரான்சுக்கும் ஏனைய நாடுகளுக்கும் பயன் தரத்தக்க விளைவுகளை ஏற்படுத்தின. ஆகவே, அவருடைய போர் ஏற்பாடுகளைக் கவனிக்குமுன்னர் அவருடைய படைத்துறை சாராத நடவடிக்கைகளைப்பற்றிக் கவனிப்போம்.

பொதுவாக அவரை 'ஃபிரெஞ்சுப் புரட்சியின் மகவு' என்று அழைக்கிருர்கள். புரட்சி ஏற்படவில்லை என்ருல் அவருடைய வாழ்க்கை சிறப்புற்றிருக்க முடியாது. ஆனல், புரட்சிக் கொள்கைகள் அனைத் தையும் அவர் ஏற்கவில்லை. தீய விளைவுகளை ஏற்படுத்தும் என்று அவர் கருதிய கருத்துகளை அவர் ஏற்க மறுத்தார். அதே நேரத்தில் புரட்சிக்காரர்களின் தாக்குதலுக்கு இலக்காயிருந்த பழைய ஆட்சி முறையில் அவர் கண்ட நற்கருத்துகளைத் தைரியமாகக் கையாண்டார். ஆகவே, அவருடைய ஆட்சி முறை புரட்சிக் கருத்துகளையும், பழைய

ஆட்சி முறையின் கருத்துகளையும் அடிப்படையாகக் கொண்டு இருந்தது. மேலும், அவருடைய நடவடிக்கைகள் பல புரட்சிக் கருத்துகளுக்கு நேர்மாறாக இருந்தன.

புரட்சி நடைபெற்றுவந்த காலத்தில் சீர்குலைந்துபோன ஆட்சி முறையை ஒழுங்குபடுத்துவதில் தம்முடைய கவனத்தைச் செலவிட்டார். மைய ஆட்சி முறையை ஏற்படுத்தினர். சட்டசபை, ஆட்சிக் குழு (Council) போன்ற எல்லா ஸ்தாபனங்களையும் தம்முடைய மேற் பார்வையின்கீழ்க் கொண்டுவந்தார். இலஞ்ச ஊழல்களை ஒழித்தார். எல்லா அதிகாரிகளும் கடுமையாக உழைக்க ஏற்பாடு செய்தார். தகுதி வாய்ந்தவர்களையே அமர்த்தி, ஆட்சித் தரத்தை உயர்த்தினர். சிறப்பாகப் பணியாற்றும் அதிகாரிகளுக்குத் தக்க பட்டங்கள் கொடுத்துக் கௌரவப்படுத்தவேண்டும் என்று எண்ணினர். ஆகவே, 1802-ல் சிறப்புக் குழுமம் (Legion of Honour) ஒன்றை அமைத்தார். இக் குழுமம் பல படிநிலைகளைக் கொண்டிருந்தது. படைத்துறை யாளர்களுக்கும், படைத் துறையைச் சாராதவர்களுக்கும் அவரவ ருடைய நற்பணிகளுக்குத் தக்கவாறு கௌரவப் பட்டங்கள் அளிக்கப்பட்டன. புரட்சியின்போது பட்டங்கள் அனைத்தும் ஒழிக்கப் பட்டன என்பதை நாம் நினைவில் வைத்துக்கொள்வது அவசியமாகும். முதலில் திறமை வாய்ந்தவர்களுக்கு இக் குழுமத்தில் இடமளிக்கப் பட்டது. ஆனல், நாளடைவில் திறமையற்றவர்களும் அதில் இடம் பெறலாயினர்.

புரட்சித் தலைவர்கள் ஆட்சிமுறையைச் சார்ந்த வட்டங்களில் செயற்பட்டுவந்த அதிகாரிகளை மக்களே தேர்ந்தெடுக்கும் முறையைப் புகுத்தினர்கள் என்று நாம் முன்னரே கவனித்தோம். நெப்போலியன் அம் முறை பல குறைகளை உட்கொண்டிருப்பதைக் கண்டார். அது அவ்வதிகாரிகளுக்கு அதிகமான 'சுதந்திரத்தை வழங்கியது. மேலும், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அதிகாரிகள் பெரும்பாலும் திறமை யற்றவர்களா யிருந்தனர். அதனல் ஆட்சிமுறை சீர்குலைந்தது என்று அவர் கருதினர். ஆகவே, எல்லா வட்ட அதிகாரிகளையும் நியமிக்கும் பொறுப்பைத் தாமே ஏற்றுக்கொண்டார். அவர்கள் அனைவரும் அவருக்குக் கீழ்ப்படிந்து நடக்க வழிவகை செய்தார். மாகாணங்களில் (Departments) பிரிஃபெக்ட் (Prefect) என்ற அதிகாரியையும், நகரங்களில் மேயர் என்ற அதிகாரியையும் நியமித்து, எல்லா அதிகாரங்களையும் அவர்களுக்கு அளித்தார். பிரிஃபெக்டுகள் லூயி மன்னர் காலத்தில் இன்டென்டன்ட் என்பவர் பெற்றிருந்த அதிகாரங்களைவிட மேலான அதிகாரங்களைப் பெற்றிருந்தார்கள். நெப்போலியன் ஏற்படுத்திய தல ஆட்சிமுறைதான் இன்று ஃபிரான்சில் நடைமுறையில் இருக்கும் தல ஆட்சிமுறையின் அடிக்கல்லாக விளங்குகிறது.

அதே நேரத்தில் புரட்சிக் காலத்தில் உருவான கருத்துகள் சிலவற்றினையும் அவர் ஏற்று ஆட்சியை நடத்திவந்தார். மேலும், ஆட்சித் தலையுரிமை பெற்றவர்கள் மக்களே என்ற கருத்தினை அவர் ஒப்புக்கொண்டார். புரட்சிக்காரர்களின் மூவர்ணக் கொடியே தேசியக் கொடியாகக் கொள்ளப்பட்டது. மார்சேய்லேஸ் (Marseillaise) என்ற புரட்சிக்காலத்தில் பாடப்பட்ட கீதம் தேசிய கீதமாக ஏற்றுக் கொள்ளப்பட்டது.

நெப்போலியன் படைத் துறையைச் சாராத விவகாரங்களில் மேற்கொண்ட சிறப்பு வாய்ந்த நடவடிக்கை, சட்டங்களை ஒழுங்கு படுத்தி அமைத்ததேயாகும். அவர் உலக மக்களுக்குப் பெருஞ்சேவை செய்த பெரியார்களுள் ஒருவராகக் கருதப்படுவதற்கு, அவர் ஏற்படுத்திய சட்டத் தொகுதிகள் சான்று கூறுகின்றன. நாட்டிற்குப் பொதுவான சட்ட திட்டங்கள் இல்லாதது புரட்சிக்கு ஒரு காரண மென்று முன்னரே கண்டோம். அக் குறையை நீக்க நெப்போலியன் சட்டத் தொகுதிகளை ஏற்படுத்த முனைந்தார். 1800-ல் வழக்கறிஞர்கள் அடங்கிய குழு ஒன்றின் உதவியால் சிவில் சட்டத் தொகுதியை ஏற்படுத்தினர். அக் குழுவின் கூட்டங்களில் இடைவிடாது கலந்து கொண்டு, சிவில் சட்டத் தொகுதியை உருவாக்குவதில் அவர் பெரு முயற்சி எடுத்துக்கொண்டார். இச் சட்டத் தொகுதி மக்களின் உரிமைகள், அவர்களது கடமைகள், திருமணம், விவாக ரத்து, வாரிசுரிமை போன்ற விவரங்களைப்பற்றிய சட்டங்களை உட் கொண்டிருந்தது. சமத்துவம், மத விவகாரங்களில் சகிப்புத்தன்மை, சமமான சொத்துரிமை போன்ற புரட்சிக் கருத்துகளுக்கு இச் சட்டத் தொகுதியில் இடமளிக்கப்பட்டன. அத்துடன், பெண்கள் ஆண் களுக்கு அடங்கி நடக்கவேண்டும் என்ற கருத்தும் சேர்த்துக் கொள்ளப்பட்டது. குடும்பத்தின் தலைவருக்கு மனைவி, மக்களின்மீது அளவற்ற அதிகாரம் கொடுக்கவேண்டுமென்ற கருத்தும் சேர்த்துக் கொள்ளப்பட்டது. மேலும், நடைமுறையில் இருந்த வழக்காறுகளும், ரோமானியர் சட்டங்களின் கருத்துகளும் இத் தொகுதியில் புகுத்தப் பட்டன. அது நாகரிகப் பண்பு பெற்ற சமூகம் எவ்வாறு அமைய வேண்டும் என்பதனை வெகு தெளிவாகவும் உறுதியாகவும் எடுத்துக் காட்டுகிறது. கிரிமினல் வழக்குமுறைச் சட்டத் தொகுதி, தண்டனைச் சட்டத் தொகுதி, வியாபாரச் சட்டத் தொகுதி ஆகியவைகளும் ஏற்படுத்தப்பட்டன. கிரிமினல் சட்டத் தொகுதி 'பகிரங்க விசாரணை, ஜூரி முறை ஆகியவற்றை உட்கொண்டு சிறப்படைந்தது. அதே சமயத்தில் ஜூரிகளை நியமிக்கும் உரிமை பிரிஃபெக்டுகளுக்கு அளிக்கப்பட்டது என்றும் இங்குக் குறிப்பிடுதல் அவசியமாகும். தண்டனைச் சட்டம் பல கடுமையான தண்டனைகளை விதிக்க வழி செய்தது. எல்லாச் சட்டத் தொகுதிகளையும் ஒன்றுசேர்த்துப்

பார்க்கும்பொழுது, சட்டத் துறையில் நெப்போலியன் சிறந்த தொரு பணியாற்றியுள்ளார் என்பது தெளிவாகிறது. அவருடைய சட்டங்கள் பின்பற்றுவதற்குச் சௌகரியமாக இருந்தன. மக்கள் பயன் பெறத் தக்கனவாக அமைந்தன. புரட்சிக் கருத்துகள் பிற நாடுகளில் புகுவதற்கு உதவியாயிருந்தன. இன்று ஐரோப்பிய நாடுகள் பலவற் றில் நடைமுறையில் இருக்கும் சட்டங்கள் நெப்போலியன் ஏற்படுத்திய சட்டங்களை ஆதாரமாகக் கொண்டுள்ளன. இதுவே அவருடைய சாதனையின் பெருமைக்கு எடுத்துக்காட்டாகும்.

நெப்போலியன் ஃபிரான்சின் நிதிநிலையைச் சீர்படுத்தினர். அர சாங்கத்தின் வருவாயைப் பெருக்கப் பல வழிகளைக் கையாண்டார். வரி களை வசூல் செய்யும் முறையைத் திருத்தியமைத்தார். சிக்கன முறை யைக் கையாண்டு செலவுகளைக் குறைத்தார். ஊழல் மலிந்த அதிகாரி களைக் கடுந் தண்டனைக்குள்ளாக்கினர். புது வரிகளைச் சுமத்தினர். சில பொருள்களை விற்கும் முழு உரிமையை அரசாங்கமே ஏற்றுக் கொண் டது. தோல்வியடைந்த நாடுகள் அவருடைய படையை வைத்துப் பேணும்படி ஏற்பாடு செய்தார். சீரழிந்த காகித நாணயத்தை ஒழித் தார். 1800-ல் பாங்க் ஆஃப் ஃபிரான்ஸ் (Bank of France) என்னும் ஸ்தாபனத்தை ஏற்படுத்தினர். அதை நடத்துவதற்கு கவர்னர் ஒரு வரை அமர்த்தினர். பிறகு அதனுடைய கிளைகளை மூன்று இடங்களில் ஏற்படுத்தினர். வல்லரசர்களைப்போல் பொருளாதாரத்துறையில் மக்கள் முன்னேற்றங் காணவேண்டும் என்று விழைந்தார். அதன் பயனுகச் சில நடவடிக்கைகளை மேற்கொண்டார். தொழில்துறையில் அபிவிருத்தி ஏற்படுத்துவதற்காக ஆலோசனைக் குழுக்களை அமைத்தார். காப்புவரி களை மீண்டும் புகுத்தினர். நாட்டின் தொழில்களைப் பெருக்குவதற்குக் கழகம் ஒன்று அமைத்தார் (The Society for the Encouragement of National Industries). தொழில் துறையில் ஈடுபட்டிருந்தவர் களில் சிறந்தவர்களைக்கொண்டு இக் கழகம் அமைக்கப்பட்டது. அக் கழகம் சோதனைகள் நடத்தியும், பிரசாரம் செய்தும், கடன் தொகை களை வழங்கியும், பரிசுப் பொருள்களைக் கொடுத்தும் தொழில் துறையில் முன்னேற்றங்களைச் செய்தது. தொழிற் கல்விக்கூடங்கள் அமைக்கப் பட்டன. கண்காட்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டன. கிழங்கிலிருந்து சர்க்கரை செய்யும் தொழிலும், சிகோரி தயாரிக்கும் தொழிலும் தொடங் கப்பட்டன. புதிய இயந்திரங்களைக் கொண்டு பருத்தித் தொழிலை முன் னேற்றுவித்தார். தொழிற்சாலைகள் ஒழுங்காக அமையும்பொருட்டுத் தொழிற் சட்டங்களை ஏற்படுத்தினர். வர்த்தகத்துறையிலும் பெருக்கம் காணப்பட்டது. வர்த்தகச் சங்கங்கள் பல ஏற்படுத்தப்பட்டன. சாலை களைச் செப்பனிட்டும், விரிவுபடுத்தியும், புதிய பாலங்களைக் கட்டுவித் தும், கால்வாய்களை வெட்டியும், துறைமுகங்களைப் பெரிதாக்கியும் வியா பாரத்தைப் பெருக்கினர். நாட்டு மக்களுக்குத் தேவையான உணவுப்

பொருள்களைக் குறைவில்லாமல் வழங்க அங்காடிகளையும், தானியக் களஞ்சியங்களையும், காவற்படையினரின் மேற்பார்வையில் வைத்தார். மெட்ரிக் அளவு முறை வியாபாரத்திற்குச் சௌகரியமாகக் காணப்பட்டதால், அம் முறையைத் தொடர்ந்து பின்பற்றுமாறு கட்டளையிட்டார். புரட்சிக்காலத்தில் புகுத்தப்பட்ட ஆண்டுக் குறிப்பேடு ஒழிக்கப்பட்டது. பழைய குறிப்பேடு மீண்டும் உபயோகத்தில் கொண்டுவரப்பட்டது. விவசாயத்துறையிலும் அவர் மிகுந்த அக்கறை காட்டிவந்தார். தானிய வகைகளை மாற்றிப் பயிர் செய்யும் முறையைச் (Crop-rotation) செம்மைப்படுத்தினர். வெளிநாடுகளிலிருந்து சாயங்களை இறக்குமதி செய்வதைத் தடுத்து, நாட்டில் சாயம் தயாரிக்கப் பயன்படும் செடிகளைப் பயிரிடுவதை ஊக்குவித்தார்.

மத விவகாரங்களிலும் மாறுதல் ஏற்படுத்தினர். நெப்போலியன் எந்த மதத்தையும் சார்ந்தவரல்லர். ஆனால், அவர் நாட்டு மக்களில் பெரும்பாலோர் கத்தோலிக்க மதத்தில் பற்றுள்ளவர்களாக இருப்பதைக் கண்டார். மேலும், அவர்களது மதப்பற்றும் நாட்டுப் பற்றும் ஒன்ருக இணைந்திருப்பதையும் அறிந்தார். ஆகவே, கத்தோலிக்க மத ஸ்தாபனத்துடன் தாம் ஒப்பந்தம் செய்துகொண்டால், தம்முடைய ஆட்சி பலம் பெற்று விளங்கும் என்று கருதினர். எனவே, அவர் கத்தோலிக்க மதத்தைச் சட்டப்படி நிறுவப்பட்ட ஸ்தாபனமாக்க முடிவு செய்தார். 1801-ல் போப்புடன் உடன்படிக்கை (Concordat) செய்துகொண்டார். கத்தோலிக்க மதம் சட்டப்படி நிறுவப்பட்ட மத ஸ்தாபனமாக ஏற்படுத்தப்பட்டது. ஆனல், ஏனைய மதங்களும் தொடர்ந்து இருக்க அனுமதி வழங்கப்பட்டது. மத குருமார்களை நியமிப்பதில் அரசாங்கம் செல்வாக்குப் பெறவும், அவர்களுக்கு அரசாங்கமே ஊதியம் அளிக்கவும், மத ஸ்தாபனம் அரசாங்கத்துக்குக் கட்டுப்பட்டு இயங்கவும் ஏற்பாடு செய்யப்பட்டது. ஆனால், புரட்சியின்போது பறிமுதல் செய்யப்பட்ட சொத்துகளை மீண்டும் மத ஸ்தாபனத்திற்குத் திருப்பிக்கொடுக்க முயற்சி செய்யப்படவில்லை. 1801-ல் ஏற்படுத்தப்பட்ட அந்த ஒப்பந்தம் 1905 வரை நடைமுறையில் இருந்தது. அதே நேரத்தில் அவருடைய மத விவகாரங்களில் அதிகாரத்தைப் பெருக்க பெருமுயற்சி மேற்கொள்ளப்பட்டது. ஃபிரெஞ்சு மத ஸ்தாபனத்தில் போப்புக்கு இருந்த செல்வாக்கு குறைக்கப்பட்டது. தம்முடைய அனுமதியின்றிப் போப்பின் கட்டளைகளை ஃபிரான்சில் நிறைவேற்றமுடியாது என்றும், மத ஸ்தாபனத்தின் கூட்டங்கள் நடைபெறமுடியாது என்றும், மதகுருமார்கள் நாட்டைவிட்டு வெளியே போகலாகாது என்றும் அறிவித்தார். அவ்வாறே பிராடஸ்டன்டு மத ஸ்தாபனங்களும், யூதர்களின் மத ஸ்தாபனங்களும் அவருடைய அதிகாரத்திற்கு உட்படுத்தப்பட்டன. அவருடைய மதத்தைப்பற்றிய சில ஏற்பாடுகள் பலத்த எதிர்ப்புக்குள்ளாயின. ஆனல், அவர் கத்தோலிக்க மத ஸ்தாபனத்தை மீண்டும்

சட்டப்படி நிறுவப்பட்ட ஸ்தாபனமாக ஏற்படுத்தி, அரசாங்கத்தின் கைகளைப் பலப்படுத்தினர் என்பதும், மதத்துறையில் ஒற்றுமையை ஏற்படுத்தினர் என்பதும் மறுக்கமுடியாத உண்மைகளேயாகும்.[1]

கல்வித்துறையிலே பல சீரிய நற்பணிகளை ஆற்றியுள்ளார். 1802-ல் கல்விக்கூடங்களை நான்கு பிரிவுகளாக்கினர்—ஆரம்பப் பள்ளிகள், உயர்நிலைப் பள்ளிகள், லைசீ (Lycees) எனப்படும் அரசாங்கப் பள்ளிகள், விஞ்ஞானம், தொழிற்சாலைகள் ஆகியவற்றைக் கற்றுக் கொடுக்கும் சிறப்புப் பள்ளிகள். பல்கலைக் கழகம் ஒன்றும் பெருந் தலைவரின் கீழ் (Grand Master) நிறுவப்பட்டது. அதற்கு மாகாணங்களிலுள்ள கல்வி ஸ்தாபனங்களைக் கட்டுப்படுத்தும் அதிகாரம் வழங்கப் பட்டது. ஆட்சிமுறை ஒருவர் கையில் கொண்டுவரப்பட்டதுபோலவே கல்வித் துறையும் ஒரே ஸ்தாபனத்தின்கீழ்க் கொண்டுவரப்பட்டது. எல்லாக் கல்வி நிலையங்களும் கத்தோலிக்க மதக்கொள்கையை அடிப் படையாகக்கொண்ட கல்வியைப் புகட்டுமாறு கட்டாயப்படுத்தப்பட்டன. 1795-ல் நிறுவப்பட்ட கல்வி-கலை ஆய்வு நிறுவனத்திற்கு (Institute de France) உதவி செய்தார். அங்கு அறநெறி, அரசியல் பாடங்களைக் கற்றுத்தருவதை நிறுத்தினர். அரும்பெருங் காட்சிமனைகள் Museums) பலவற்றை ஏற்படுத்தினர். இத்தாலியிலிருந்து கொண்டு வரப்பட்ட காட்சிப் பொருள்களைக் கொண்டு இச் சாலைகளைச் செம்மைப் படுத்தினர். பெருஞ்சாலைகளைக் கொண்டு பாரிஸ் நகரத்தை அழகு படுத்தினர். இதுவரை நாம் கவனித்துவந்த அவருடைய நடவடிக் கைகள் ஃபிரான்சுக்கு மட்டுமல்லாமல் ஏனைய நாடுகளுக்கும் பயன் கொடுத்தன. ஆகவே, அவரை அரசியல் மேதை என்று கூறுவது முறையேயாகும். இனி, அவருடைய வெற்றிப் பெருமைகளைக் கவனிப்போம்.

இராணுவப் பள்ளியில் பயிற்சிபெற்ற பிறகு நெப்போலியன் படைத்துறையில் சாதாரண மேலாளராகப் பணியாற்றத் தொடங்கினர் என்றும், பிறகு படிப்படியாக உயர்ந்து பேரரசரானர் என்றும் முன்னரே குறிப்பிட்டோம். இப்பொழுது பேரரசராக இருந்து அவர் செய்த போர் ஏற்பாடுகளையும், அவைகளின் விளைவுகளையும் கவனிப் போம். 1803-ல் நெப்போலியன் மறுபடியும் போர் தொடங்கவேண்டிய தாயிற்று. ஆமியேன் சமாதானம் பிரிட்டன், ஃபிரான்சு ஆகிய நாடுக ளுக்கு இடையே ஏற்பட்டிருந்த பகையுணர்ச்சியை அறவே ஒழிக்க வழி தேடவில்லை. அதற்குப் பதிலாக அவைகளிடையே இருந்த வேற்றுமை அதிகமாக வளர்ந்தது. ஃபிரான்சு தன்னுடைய செல்வாக்கைப்

[1] A. J. Grant, ‘A History of Europe—The Story of the Last Five Centuries’, p. 690. (A. J. கிராண்ட், ‘ஐரோப்பா—கடந்த ஐந்து நூற்றாண்டுகளின் வரலாறு’.)

பெருக்குவதில் நாட்டம் செலுத்தியிருந்தது. சமாதானத்திற்குப் பிறகு ஃபிரான்சு பல நாடுகளைத் தன்னுடைய ஆதிக்கத்தின்கீழ்க் கொண்டு வந்தது. அதனுடைய படைகள் கடல் கடந்து சென்று ஃபிரான்சின் செல்வாக்கைப் பெருக்கின. இந்தியாவிற்குத் தூதுவரொருவரை அனுப்பி, ஃபிரான்சின் செல்வாக்கை இந்தியாவில் ஏற்படுத்துவதற்கான வழிகளை ஆராயுமாறு பணித்திருந்தது. பிரிட்டனின் பாதுகாப்பு பாதிக்கப்படும் வழிகளில் ஃபிரெஞ்சு ஆதிக்கம் பெல்ஜியத்தில் ஏற்படுத்தப்பட்டிருந்தது. மேற்கூறிய ஏற்பாடுகள் அனைத்தும், ஃபிரான்சின் ஆதிக்கக் கொள்கையைத் தெளிவாக எடுத்துக்காட்டின. இக் கொள்கையின் விளைவாக வல்லமைச் சமநிலை பாதிக்கப்படும் என்று பிரிட்டன் உணர்ந்தது. ஆகவே, அந்த நிலை ஏற்படாமல் தடுக்க ஏற்பாடுகள் செய்ய அது முனைந்தது.

நெப்போலியனுடைய மற்றொரு செய்கையும் பிரிட்டனுடைய மனக் கசப்பை அதிகரிக்கச் செய்தது. சமாதானம் ஏற்பட்டபிறகு பிரிட்டன் ஃபிரான்சுடன் வியாபாரம்பற்றிய ஒப்பந்தம் ஏற்படுத்த வழி பிறக்கும் என்று கருதியது. ஆனால், அதற்கு மாறாக பிரிட்டிஷ் கப்பல்களும், வியாபாரப் பொருள்களும் ஃபிரெஞ்சு துறைமுகங்களினின்றும் வெளியேற்றப்பட்டன. அதே நேரத்தில் நெப்போலியனும் பிரிட்டிஷ் அரசாங்கத்தின்மீது கோபங் கொள்ளத்தக்க நிகழ்ச்சிகள் ஏற்பட்டன. பிரிட்டனில் பல செய்தித்தாள்கள் நெப்போலியனைக் கொடுங்கோலர் என்றும், மக்கள் உரிமையின் பகைவர் என்றும் விவரித்துவந்தன. நெப்போலியன் அத்தகைய செய்தித்தாள்களைத் தடை செய்யுமாறு வேண்டினார். மேலும், ஃபிரான்சின் அரசகுடும்பத்தைச் சார்ந்தவர்களுக்கும், புரட்சியின் விரோதிகளுக்கும் பிரிட்டன் புகலிடம் தந்தது. நெப்போலியன் அவர்கள் வெளியேற்றப்படவேண்டும் என்று வேண்டினார். பிரிட்டன் இவ் வேண்டுகோளை நிராகரித்தது.

போருக்கு உடனடியான காரணம் மால்டாவினின்றும் பிரிட்டன் வெளியேறாததேயாகும். ஆமியேன் சமாதானம் பிரிட்டிஷாரை வெளியேறுமாறு கட்டளையிட்டது. அத் தீவு போர்த்திற முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைந்திருந்தது. ஆகவே, அதைவிட்டு வெளியேற பிரிட்டனுக்கு மனமில்லை. எனவே, ஆமியேன் சமாதானம் விதித்த நிபந்தனைகள் நிறைவேற்றப்படவில்லை என்று சாக்குச் சொல்லி மால்டாவைத் தொடர்ந்து தன்னிடம் வைத்திருந்தது.

1803-ல் போர் தொடங்கியது. ஸ்பெயின் ஃபிரான்சுடன் சேரக் கட்டாயப்படுத்தப்பட்டது. பிரிட்டிஷ் பிரதமரான வில்லியம் பிட் (இளையவர்) தம்முடைய தந்தையின் வழியைப் பின்பற்றி நேசநாடுகளின் கூட்டிணைவு (Third Coalition) ஒன்றை 1805-ல் ஏற்படுத்

தினர். இதில் பிரிட்டன், ஆஸ்திரியா, ருஷ்யா, ஸ்விடன், நேபில்ஸ் ஆகிய நாடுகள் சேர்ந்துகொண்டன. இக் கூட்டிணைவு, ஃபிரான்சின் ஆதிக்கம் பிற இடங்களினின்றும் அகற்றப்பட்டு தனக்குரிய எல்லைக் குள்மட்டம் பரவியிருப்பதற்கு வழி செய்தலைப் பெருநோக்கமாகக் கொண்டிருந்தது.

போர் தொடங்கியவுடன் பிரிட்டன்மீது படையெடுத்து அந்நாட்டை அழிப்பதையே ஃபிரான்சு தன்னுடைய முக்கிய நோக்கமாகக் கொண்டிருந்தது. ஆகவே, அதனுடைய படைகள் பூலோன் (Boulogne) என்னுமிடத்தில் சேகரிக்கப்பட்டன. அப் படைகளை இங்கிலீஷ் கால் வாயைக் கடந்து இங்கிலாந்துக்குக் கொண்டுசெல்லக் கப்பல்களைத் தயாரித்தார். அக் கப்பல்களுக்குத் தகுந்த பாதுகாப்பளிக்கப் பல இடங்களில் சிதறிக் கிடக்கும் ஃபிரெஞ்சுக் கடற்படையை இங்கிலீஷ் கால்வாய்க்குக் கொண்டுவரவும், அதே நேரத்தில் அக் கால்வாயினைப் பாதுகாத்திருந்த பிரிட்டிஷ் கடற்படையை அங்கிருந்து வெளியேற்ற வும் ஏற்பாடுகள் செய்தார். பிரிட்டன் இவ்வேற்பாடுகளை அறிந்து, ஃபிரெஞ்சுக் கப்பற்படை ஒன்றுகச் சேர்ந்து இங்கிலீஷ் கால்வாயில் வரவொட்டாமல் தடுக்க ஏற்பாடுகள் செய்தது. நெப்போலியன் கட்டளையின்பேரில் ஃபிரெஞ்சு, ஸ்பானியக் கப்பற் படைகள் முற்றுகை யினின்றும் விடுவித்துக்கொண்டு மேற்கிந்தியத் தீவுகளை நாடிச் செல்ல வேண்டும் என்றும், பிரிட்டிஷ் கப்பற்படை அவைகளைத் தொடர்ந்தால், உடனே இங்கிலீஷ் கால்வாயை நோக்கி வந்து ஃபிரெஞ்சு சேனை பிரிட்டனுக்குச் செல்லுவதற்கு உதவவேண்டும் என்றும் திட்டமிடப் பட்டது. எதிர்ப்பார்த்ததுபோலவே பிரிட்டிஷார் மேற்கிந்தியத் தீவு களைக் காப்பாற்ற அவைகளைப் பின்தொடர்ந்தனர். திடீரெனப் பகை வரின் கப்பல்கள் பார்வையினின்றும் மறைந்துவிடவே, ஃபிரெஞ்சுக் காரர்களின் திட்டங்களை அவர்கள் புரிந்துகொண்டுவிட்டனர். உடனே நெல்சன் துரிதமாகச் செல்லும் கப்பல் ஒன்றைப் பகைவர்களுடைய கப்பல்களைக் கடந்து பிரிட்டிஷ் கப்பற் படைத்துறைக்குப் பகைவரின் திட்டத்தை அறிவிக்க ஏற்பாடு செய்து, பிறகு பகைவரைப் பின் தொடர்ந்தார். இவ்வாறு முன்னரே எச்சரிக்கப்பட்டதால், பிரிட்டிஷ் கப்பற்படை எதிரியின் திட்டத்தை அழித்துவிட்டது. இவ்வாருக பிரிட்டிஷ் கப்பற்படை பிரிட்டனைக் காப்பாற்றிவிட்டது.

பிரிட்டனை இனிப் படையெடுத்துக் கைப்பற்ற முடியாது என்று அறிந்த நெப்போலியன், அதை ஒழிக்க வேருெரு திட்டத்தை உருவாக் கினர். பிரிட்டனை அதனுடைய நேசநாடுகளினின்றும் பிரித்து அதை அழித்துவிடவேண்டும் என்பதே அத்திட்டத்தின் அடிப்படைக் கருத் தாகும். இதை நிறைவேற்ற முதலில் ஆஸ்திரியாவை நோக்கிப் புறப் படுமாறு பூலோனிலிருந்த அவரது படைகளுக்குக் கட்டளையிட்டார்.

ஜெர்மனியில் புகுந்த ஃபிரெஞ்சுப்படை அல்ம் (Ulm) என்னுமிடத்தில் ஆஸ்திரியாவின் படையைத் தோற்கடித்தது. இவ் வெற்றி நெப்போலி யன் வியன்னுவைக் கைப்பற்றுவதற்கு உதவியது. தற்கால வரலாற் றில் வியன்ன பகைவர்களின் கையில் சிக்கியது இதுவே முதல் தடவை யாகும். பேரரசர் தலைநகரத்தினின்றும் ஓடி, ருஷ்யாவின் உதவியை நாடினர்.

இதற்கிடையில் பிரிட்டன், ஃபிரான்சு ஆகிய நாடுகளின் கப்பற் படைகளுக்கு இடையே டிராஃபால்கர் (Trafalgar) என்னுமிடத்தில் போர் நடந்தது. நெல்சன் பிரிட்டனின் வெற்றிக்குக் காரணமாயிருந் தார். இவ் வெற்றி பிரிட்டனின் கடலாதிக்கத்தினை நிலைநாட்டியது. ருஷ்யாவின் உதவி நாடிச் சென்ற பேரரசர், ருஷ்யாவின் உதவியுடன் போரிட்டு வியன்னுவைக் கைப்பற்ற முயன்ருர். ஆனுல், அம் முயற்சியை நெப்போலியன் அவுஸ்டர்-லிட்ஸ் (Austerlitz) என்னு மிடத்தில் பெற்ற வெற்றியைக் கொண்டு முரியடித்தார். அதனுல் ஆஸ்திரியா நெப்போலியனுடன் பிரெஸ்பர்க் உடன்படிக்கை (Treaty of Pressburg) செய்துகொண்டது. ஆஸ்திரியா பல பகுதிகளை இழந்தது.

இதன் பின்னர் நெப்போலியன் ஜெர்மனியை நோக்கித் தம் கவனத்தைத் திருப்பினர். பல ஆண்டுகளாக நடைமுறையில் இருந்த தெய்விக ரோமானியப் பேரரசை ஒழித்தார். பல சிறிய நாடுகள் அழிக்கப்பட்டன. பல நாடுகள் ஒன்றுசேர்ந்து ரைன் நதிப் பிரதேச நாடுகளின் கூட்டு (Confederation of the Rhine) அமைப்பை ஏற்படுத்தினர். அக் கூட்டமைப்பு ஃபிரான்சுக்குக் கப்பம் செலுத்தி வந்தது.

பிறகு நெப்போலியன் பிரஷ்யாவின் வலிமையை அடக்கி, அதனைத் தம்முடைய பக்கத்தில் சேர்த்துக்கொள்ள முனைந்தார். போர் 1803-ல் ஏற்பட்டபோது பிரஷ்யா நடுநிலைக் கொள்கையைப் பின்பற்றிவந்தது. ஆனுல், பலவிதங்களில் நெப்போலியன் பிரஷ்யா வின் பகைமையைத் தேடிக்கொண்டார். மேற்கு ஜெர்மனி நாடுகளை ஒன்றுசேர்த்து பிரஷ்யாவிற்குப் பலத்த போட்டி நாடுகளின் கூட்டமைப்பை உண்டாக்கினர். ஆஸ்திரியாவிற்குப் பிறகு பிரஷ்யா தெய்விக ரோமானியப் பேரரசுப் பட்டத்தைப் பெற ஏற்பாடு செய்வ தாக அளித்த வாக்குறுதி நிறைவேற்றப்படவில்லை. பிரஷ்யா ஹனேவர் நாட்டைத் தன்னுடன் இணைத்துக்கொள்ள விரும்பியது. ஆனுல், நெப்போலியன் ஹனேவரைப் பிரஷ்யாவுடன் சேர்த்துக் கொள்ள உதவி புரியவில்லை. ஆதலுல் இரு நாடுகளுக்கும் இடையே போர் மூண்டது. ஏன (Jena) என்னுமிடத்திலும் பிரஷ்யா தோல்வி யுற்றது. பெர்லின் நெப்போலியன் கைவசமாயிற்று. பிரஷ்யாவுடன்

ருஷ்யா ஏற்படுத்திக்கொண்ட நேசவுறவை விட்டுவிட மறுத்ததால், நெப்போலியன் ருஷ்யாவின்மீது படையெடுத்தார். 1807-ல் ஃபிரீட்லாந்து (Friedland) என்னுமிடத்தில் ருஷ்யாவை வென்றார். அதைத் தொடர்ந்து ருஷ்யாவும் ஃபிரான்சும் டில்சிட் உடன்படிக்கை (Treaty of Tilsit) செய்துகொண்டன. மேற்கு ஜெர்மனியில் பிரஷ்யாவிற்குச் சொந்தமான பகுதிகளை பிரஷ்யா இழக்க நேர்ந்தது. அவைகளையும் ஹனோவரையும் சேர்த்து 'வெஸ்ட்பேலியா' என்னும் அரசை நெப்போலியன் ஏற்படுத்தினார். நெப்போலியனுடைய சகோதரர் ஜெரோம் போனபார்ட் (Jerome Bonaparte) அதன் அரசராக நியமிக்கப்பட்டார். பிரஷ்யாவிற்குச் சொந்தமான பிரஷ்யப் போலந்துடன் ஆஸ்திரியாவிற்குச் சொந்தமான காலிஷியாவை (Galicia) இணைத்து, 'வார்சா கோமகனுடைய பெரும் ஆட்சிப் பகுதி' (Grand Duchy of Warsaw) என்ற பெயர் கொடுத்தார். நெப்போலியனுடன் சேர்ந்திருந்த சாக்சனி அரசர் அதன் தலைவராக நியமிக்கப்பட்டார். ருஷ்யா, பிரிட்டன்மீது நெப்போலியன் தொடங்கப்போகும் புது விதமான போரில், அவருக்கு உதவுவதாக வாக்குறுதி அளித்தது. நெப்போலியன் ருஷ்யாவின் நாடு பிடிக்கும் நடவடிக்கைகளுக்கு உதவுவதாக வாக்களித்தார்.

மூன்றாவது நேச நாடுகளின் கூட்டிணைவு நெப்போலியனுடைய போர் ஏற்பாடுகளினால் அழிக்கப்பட்டுவிட்டது. ஆனாலும், பிரிட்டன் அடிபணியவில்லை. ஆகவே, அதை அழிக்கப் புதிய திட்டம் ஒன்றைத் தீட்டினார். 'அதற்கு ஐரோப்பியப் பொருளாதாரத் திட்டம்' (Continental System) என்று பெயர் வழங்கலாயிற்று. பிரிட்டன் அங்காடிகள் நடத்தும் மக்களைக்கொண்ட நாடு என்பதை நன்கு உணர்ந்திருந்தார். அவர்கள் தொழிற்சாலைகளில் உற்பத்தி செய்த பொருள்களையும், குடியேற்ற நாடுகளிலிருந்து கொண்டுவந்த பொருள்களையும் 'ஐரோப்பாவில் விற்றுத் தங்களுடைய வாழ்க்கையை நடத்திவந்தார்கள். ஐரோப்பாவின் பெரும்பகுதியில் அவர் பெற்றிருந்த செல்வாக்கைக் கொண்டு பிரிட்டிஷ்காரரை ஐரோப்பாவில் வியாபாரம் செய்யவொட்டாது தடுத்துவிட்டால், தங்கள் தொழிற்சாலைகளை அவர்கள் மூட நேரும் என்றும், அதனால் அவர்கள் நாட்டில் வேலையின்மை ஏற்படும் என்றும், அதன் விளைவாக அந் நாட்டில் பட்டினி ஏற்படும் என்றும், பட்டினியால் வாடும் மக்கள் தங்களுடைய அரசாங்கத்தை நெப்போலியனுக்கு அடிபணிந்துவிடுமாறு கட்டாயப்படுத்துவார்கள் என்றும் எண்ணினார். அதே நேரத்தில் நெப்போலியன் அவர்கள் நாட்டுக்குப் பொருள்களை ஏற்றுமதி செய்யவேண்டும் என்று எண்ணினார். அவ்வாறு செய்தால் அவர்களுடைய கையிருப்பிலுள்ள தங்க நாணயங்கள் குறையும் என்றும், அதனால் அந்நாட்டின் நிதிநிலை வெகுவாகப் பாதிக்கப்படும் என்றும் எண்ணினார். இந்த எண்ணங்கள்

நிறைவேறவேண்டுமாயின் ஐரோப்பா முழுவதும் அவரது திட்டத்தை ஏற்றுக்கொள்ள வேண்டியது அவசியம் என்றும் அவர் உணர்ந்திருந்தார்.

1806-ல் ஐரோப்பியப் பொருளாதாரத் திட்டத்தை நிறைவேற்றுவதில் முதல் நடவடிக்கையை மேற்கொண்டார். அவ்வாண்டில் பெர்லின் கட்டளைகளைப் (Berlin Decrees) பிறப்பித்தார். பிரிட்டன் முற்றுகையிடப்பட்டுள்ளது என்றும், அந் நாட்டின் துறைமுகங்களுக்குச் சென்று வரும் கப்பல்களும், பிரிட்டிஷார்களுடைய வியாபாரப் பொருள்களும் பறிமுதல் செய்யப்படும் என்றும் அறிவித்தார். நெப்போலியன், தாம் மேற்கொண்டிருக்கும் பொருளாதாரத் திட்டத்தை பிரிட்டனும் மேற்கொள்ளமுடியும் என்பதை அறியவில்லை. 1807-ல் பிரிட்டன் அவர் முறையையே பின்பற்ற ஆரம்பித்தது. ஃபிரெஞ்சுத் துறைமுகங்களுடனும், ஃபிரான்சின் நேச நாடுகளின் துறைமுகங்களுடனும் யாரும் வியாபாரம் செய்யக்கூடாது என்ற கட்டளை (Order-in-Council) பிறப்பித்தது. அதைத் தொடர்ந்து பிரிட்டன் நடுநிலை நாடுகளின் கப்பல்கள் எல்லாம் பிரிட்டிஷ் துறைமுகங்களுக்குச் சென்று, பிறகு மற்ற இடங்களுக்குச் செல்ல அவைகளுக்குச் சலுகைகள் காட்டியது. ஐரோப்பியர்கள் பிரிட்டிஷ்காரரைத் தவிர வேருெருவரிடத்தில் வியாபாரம் செய்வதைத் தடுப்பதே பிரிட்டனின் நோக்கமாக இருந்தது. 1807-ல் நெப்போலியன் பொருளாதாரத் திட்டத்தின் அடுத்த பகுதியைத் தொடங்கினுர். அவ்வாண்டில் மிலான் கட்டளையைப் பிறப்பித்து அத் திட்டத்தைப் பலப்படுத்தினுர்.

வெகு விரைவில் ஐரோப்பியர்கள் இத் திட்டத்தினுல் விளைந்த இன்னல்களை அனுபவிக்கத் தொடங்கினுர்கள். அவர்களுக்குத் தேவையான பொருள்களைப் பிரிட்டனிடமிருந்து வாங்குவதை நெப்போலியனும், பிறநாட்டினரிடமிருந்து பெறுவதை பிரிட்டனும் தடைசெய்வதை உணர்ந்தார்கள். ஆகவே, அவர்கள் ஒன்று அப்பொருள்கள் இல்லாமல் வாழவேண்டும் அல்லது அப் பொருள்களை பிரிட்டனிடமிருந்து பெறவேண்டும் என்ற நிலை ஏற்பட்டது. ஃபிரெஞ்சுக்காரர்களுக்காக அவர்கள் அப் பொருள்களின்றி வாழ விரும்பவில்லை. எனவே, அவர்கள் கள்ளக் கடத்தல் முறையைக் கையாள நேர்ந்தது. பிரிட்டிஷ்காரர்கள் பொருள்களை விற்க மிகுந்த ஆர்வத்துடன் இருந்ததாலும், இரகசியமாக அப் பொருள்கள் ஐரோப்பாவிற்குள் நுழைந்தன. பிரிட்டிஷ்காரர் ஹேலிகோலாந்து, ஜிப்ரால்டர், மால்டா, அயோனின் தீவு ஆகிய இடங்களில் கள்ள வாணிபத்தலங்களை ஏற்படுத்தினுர்கள். அதன் விளைவாக ஐரோப்பா முழுவதும் பிரிட்டனில் செய்யப்பட்ட பொருள்கள் குவிந்தன.

ஐரோப்பியப் பொருளாதாரத் திட்டம் தோல்வியுறுவதைக் கண்ட நெப்போலியன், ஐரோப்பியர்கள் இப்பொருள்களை வாங்காதிருக்கும்படி செய்ய அதிகமான காப்பு வரிகளை அவற்றின்மேல் சுமத்தினார். அப்படியிருந்தும், ஐரோப்பியர்கள் தொடர்ந்து அப் பொருள்களைப் பயன்படுத்திவந்தனர். ஆகவே, ஃபோன்டேனிப்ளியூ கட்டளையைப் (Fontaineblew Decree) பிறப்பித்தார். பிரிட்டிஷாருடைய வியாபாரப் பொருள்களைப் பறிமுதல் செய்ய உத்தரவிட்டார். இறுதியில் அவர் திட்டம் வெற்றிபெறவேண்டுமெனில், ஐரோப்பாவின் கடற்கரைப் பிரதேசம் முழுவதையும் தம்முடைய ஆட்சியின்கீழ்க் கொண்டுவர வேண்டும் என்றும் எண்ணினார். ஆகவே, அவர் திட்டத்தை ஏற்றுக் கொள்ள மறுத்தவர்களின் நாடுகளைக் கைப்பற்ற முனைந்தார். போப்பினுடைய துறைமுகங்களும், போர்ச்சுகல், ஸ்பெயின், டால்மேஷியன் கடற்கரைப்பகுதி, ஹாலந்து, ஜெர்மனியின் கடற்கரைப் பகுதி ஆகியவைகளைத் தம் ஆதிக்கத்திற்கு உட்படுத்தினார். அதனால் பல இடங்களில் நெப்போலியனுக்கு எதிராக ஒரு புதிய பகைவன் தோன்றினான். அதுவே தேசிய உணர்ச்சியாகும். இதுவரை நெப்போலியன் மன்னர்களின் சேனைகளுடன் போரிட்டு வெற்றி பெற்றார். இனி ஆயுதம் தாங்கிய மக்களுடன் போர்புரிய வேண்டியதாயிற்று. இதுவே அவருடைய அழிவிற்கு முக்கியக் காரணமாகும்.

நெப்போலியனுக்கு எதிராக மக்கள் கிளர்ச்சியில் ஈடுபட்டபோது, பிரிட்டன் தன்னுடைய கடல் வலிமையைப் பயன்படுத்தி, அம் மக்களுக்குத் தக்க உதவி செய்து, அவர்களுடைய கிளர்ச்சிகளைப் பலப்படுத்தியது. ஸ்பானியர்களுக்கு பிரிட்டன் அளித்த உதவி அவர்களுடைய வெற்றிக்கு ஒரு காரணமாகும்.

பிரிட்டன் ஐரோப்பியப் பொருளாதாரத் திட்டத்தை மற்றொரு வழியிலும் அழித்தது. ஐரோப்பாவிற்குப் பொருள்களை அனுப்பக் கூடிய ஃபிரெஞ்சுக் குடியேற்ற நாடுகளையும், அதன் அதிகாரத்திற்குட்பட்ட நாடுகளின் குடியேற்ற நாடுகளையும், பிரிட்டன் தன்னுடைய கப்பற் படையின் பலத்தைக்கொண்டு கைப்பற்றியது. அதனால் மற்றொரு விளைவும் ஏற்பட்டது. இங்கிலாந்து நாட்டில் உற்பத்தி செய்யப்படும் பொருள்களை விற்கப் புதிய சந்தைகளை பிரிட்டன் பெறலாயிற்று. அதனால் பிரிட்டனின் கஷ்டங்கள் ஓரளவு குறைந்தன.

ஐரோப்பியப் பொருளாதாரத் திட்டம் பிரிட்டிஷாருக்குப் பல துன்பங்களை விளைவித்தது. நாட்டில் வேலையின்மை பெருகியது. வியாபாரம் தடைப்பட்டதால், மக்கள் பொருளாதார நிலை பாதிக்கப்பட்டது. நாட்டில் பொருளக முறிவுகள் ஏற்பட்டன. அதே நேரத்தில் இக் காலத்தில் ஃபிரான்சு வளம்பெற்று விளங்கியது. விவசாயம் பெருகியது. கிழங்கிலிருந்து சர்க்கரை உற்பத்தி செய்யும்

தொழில் வளர்ந்தது. நீலச்சாயம் செய்ய ஆரம்பித்தார்கள். அதுவே நெப்போலியனுடைய அழிவிற்குப் பெருங்காரணமாகவும் அமைந்து விட்டது. அத் திட்டம் தோல்வியுறக் காரணமாயிருந்தது பிரிட்டிஷ் கப்பற்படை என்று கூறுவது மிகையாகாது. ஃபிரெஞ்சுக் கப்பற்படை வலிவிழந்த காரணத்தால் பிரிட்டனின் வியாபாரத்தைத் தடுக்க முடிய வில்லை. மேலும், நெப்போலியன் டென்மார்க்கினுடைய கப்பற்படை யைக் கைப்பற்ற யோசித்துக்கொண்டிருக்கையில், பிரிட்டன் முந்திக் கொண்டது. பிரிட்டன், டேனியர்களை, அவர்களுடைய கப்பற் படையைப் போர் முடியும்வரை பிரிட்டிஷ்காரர்களின் கீழ் வைத்திருக்க யோசனை கூறியது. டேனியர்கள் மறுக்கவே, 1807-ல் கோபன்ஹேகன் பிரிட்டிஷ்காரர்களால் தாக்கப்பட்டது. அவர்களுடைய கப்பற்படை பிரிட்டனுக்குப் பணிந்தது. ஆகவே, கப்பற்படைத் துணையின்றிப் பொருளாதாரத் திட்டத்தில் வெற்றி காண முனைந்த நெப்போலியன் முடிவில் தோல்வியுற்றூர்.

ஐரோப்பியப் பொருளாதாரத் திட்டத்தை எதிர்த்துப் போராடிய முதல் நாடு போர்ச்சுகல் ஆகும். ஆகவே, அதனை அடக்கவேண்டும் என்று எண்ணினூர். அதோடு ஸ்பெயினையும் தம்முடைய ஆதிக்கத் துக்கு உட்படுத்த விழைந்தார். மேலும், அங்கு ஆட்சிபுரியும் பூர்போன் குலத்தவரை ஒழித்துவிடவேண்டும் என்றும் எண்ணினூர். ஆகவே, முதலில் ஸ்பெயினுடன் ஓர் ஒப்பந்தம் செய்துகொண்டார். அதன்படி ஃபிரெஞ்சுப் படைகளை ஸ்பெயின் வழியாகப் போர்ச்சுகல் செல்ல ஸ்பெயின் அனுமதி வழங்கிற்று. அதற்குப் பதிலாகப் போர்ச்சுகலை இரு நாடுகளும் பகிர்ந்துகொள்ள ஃபிரான்சு இசைந்தது. போர்ச்சு கலின் கப்பற்படையையும், அதனுடைய கஜானுவிலுள்ள பொருளையும் கைப்பற்ற ஃபிரெஞ்சுப் படை போர்ச்சுகலின் தலைநகரான லிஸ்பனை நோக்கிச் சென்றது. போர்ச்சுகலின் அரசர், கப்பற்படை, பொருட் குவை ஆகியவற்றுடன் தனது நாட்டைவிட்டுச் சென்றுவிட்டார். போர்ச்சுகல் ஃபிரான்சு வசமாயிற்று. அதே நேரத்தில் போர்ச்சுகலைக் கைப்பற்றுவதைக் காரணங்காட்டி ஃபிரெஞ்சுப் படைகள் ஸ்பெயினில் குவிக்கப்பட்டன. ஸ்பெயின் அரசர் ஆருவது சார்லஸ் இதைக் கண்டு மனக் கசப்படைந்தார். ஆகவே, போருக்கான ஏற்பாடுகளைச் செய்ய லானூர். அந் நேரத்தில் அவர் மகன் பெர்டினூன்டு அவரது ஆட்சிக்கு எதிராகக் கிளர்ச்சியில் ஈடுபட்டிருந்தார். நெப்போலியன் வெகு தந்திர மாகத் தந்தையையும் மகனையும் ஃபிரான்சுக்கு வரவழைத்து, இருவரையும் நாட்டு அரசுரிமையை விட்டுக்கொடுக்குமாறு கட்டளை யிட்டார். காலியான அரசபீடத்தில் அப்பொழுது தெற்கு இத்தாலியை ஆண்டுவந்த அவரது சகோதரர் ஜோசஃப் போனபார்ட் என்பவரை அமர்த்தினூர். இவ்வாருக ஸ்பெயினிலும் அவரது செல்வாக்கு ஏற்படுத்தப்பட்டது. ஜோசஃப் சிறந்த முறையில்

ஆட்சியை நடத்திவந்தார். ஆனால், ஸ்பானியர்கள் தேசிய உணர்ச்சி வசப்பட்டிருந்ததால், நல்ல ஆட்சியைவிட சுய ஆட்சியைத்தான் விரும்பினர்கள். ஆகவே, நெப்போலியனைத் தங்களது சுதந்திரத்தின் பகைவனாய்க் கருதினர். எல்லா இடங்களிலும் மக்கள் கிளர்ச்சி செய்ய முற்பட்டனர். 1808-ல் பேய்லென் (Baylen) என்னும் இடத்தில் ஃபிரெஞ்சுப் படை அடிபணிந்தது. ஜோசஃப், ஸ்பெயினின் தலைநகரான மாட்ரிடை (Madrid) விட்டு வெளியேறினர். இந் நிகழ்ச்சிகளையெல்லாம் கவனித்துக்கொண்டிருந்த பிரிட்டன், ஸ்பெயின் மக்கள் தன்னுடைய உதவியைக் கோரியபொழுது, உடனடியாக ஆர்தர் வெல்லெஸ்லி (Arthur Wellesley) தலைமையின்கீழ்ச் சேனை யொன்றைப் போர்ச்சுகலுக்கு அனுப்பியது. இவ்வாருகத் தீபகற்பப் போர் (Peninsular war) தொடங்கியது. போர்ச்சுகலுக்கு அனுப்பப் பட்ட பிரிட்டிஷ் படை விமீரோ (Vimiero) என்னும் இடத்தில் பிரெஞ்சுப் படையைத் தோற்கடித்தது. பிரிட்டிஷ்காரர்கள் ஃபிரெஞ்சுக் காரர்களுடன் சின்ட்ரா ஒப்பந்தம் (Convention of Cintra) செய்து கொண்டனர். அதன்படி ஃபிரெஞ்சுக்காரர்கள் போர்ச்சுகலினின்றும் யாதோர் இடையூறும் இன்றி வெளியேற அனுமதிக்கப்பட்டார்கள். அதனால் கோபமுற்ற பிரிட்டிஷ் அரசாங்கம் சர் ஜான் மூர் (Sir John Moore) என்பவரைப் படைத்தலைவராக அமர்த்தியது. இதற்கிடையில் நெப்போலியனே ஸ்பெயினுக்குப் படை நடத்திச் சென்றார். மாட்ரிட்டில் ஜோசப்ஃபை மறுபடியும் அமர்த்தினர். நெப்போலியன் தம்முடைய சேனையின் முழு பலத்தைக்கொண்டு ஸ்பானியர்களைத் தாக்காதிருக்கும் வண்ணம், மூர், ஸ்பெயினுக்குள் புகுந்து, அச் சேனையின் கவனத்தைத் தம்பால் இழுத்தார். ஃபிரெஞ்சுச் சேனை அவரை நோக்கி முன்னேறும்போது அவர் பின்வாங்கினர். கொருன்னு (Corunna) என்னும் இடத்தில் அவர் சேனை ஆங்கிலேயக் கப்பல்களின் துணைகொண்டு வெளியேறியது. மூரின் திட்டம் வெற்றியடைந்தது. நெப்போலியனும் ஆஸ்திரியாவுடன் போர்புரிய ஸ்பெயினைவிட்டுச் செல்ல நேர்ந்தது. அதன் பிறகு ஸ்பெயினுக்கு அவர் வரவேயில்லை. போர் ஏற்பாடுகளையெல்லாம் அவருடைய சேனைத்தலைவர்களே மேற்கொண்டனர்.

மூர், கொருன்னு சண்டையில் இறந்துபோகவே, வெல்லெஸ்லி மீண்டும் தலைமைப் பதவியைப் பெற்றார். ஸ்பெயினில் புகுந்து தலவேரா (Talavera) என்னுமிடத்தில் ஃபிரெஞ்சுப் படையைத் தோற்கடித்தார். ஆனாலும், அவர் பின்தொடர நேர்ந்தது. அவரை ஃபிரெஞ்சுக் காரர்கள் பின்பற்றவே, லிஸ்பனுக்கு அருகே மறைகுழிகளை வெட்டி (the lines of Torres Vedras) அங்கிருந்து போர் புரியலானார். பிரிட்டிஷ்காரர்களை வெளியேற்றும் நோக்கத்துடன் பின்தொடர்ந்த ஃபிரெஞ்சுப் படை இக் குழிகளைக் கடக்க முடியாததாலும், போதிய

உணவு இல்லாததாலும் திரும்ப நேர்ந்தது. அதன் பிறகு ஃபிரெஞ்சுக் காரர்கள் போர்ச்சுகலுக்குள் நுழையவேயில்லை.

இதற்கிடையில் ஸ்பானியர்கள் ஃபிரெஞ்சுக்காரர்களுடன் தொடர்ந்து கொரில்லாச் சண்டை முறையைக் கையாண்டு தொல்லை கொடுத்துவந்தார்கள். 'வெல்லிங்டன் பிரபு' என்ற பட்டம் பெற்ற ஆர்தர் வெல்லெஸ்லி 1812-ல் ஸ்பெயினுக்குள் புகுந்தார். பாட்ஜாஸ் (Badjoz), சியூடாட் ராட்ரீகோ (Ciudad Rodrigo) ஆகிய கோட்டைகளைக் கைப்பற்றி, சலமான்காவை (Salamanca) நோக்கி முன்னேறினார். அங்குப் பெற்ற வெற்றியின் பயனாக அவர் மாட்ரிட்டைக் கைப்பற்றினார். ஜோசஃப் அங்கிருந்து ஓடிவிட்டார். அவ்வாறிருந்தும் குளிர்காலம் தொடங்கவே, வெல்லிங்டன் போர்ச்சுகல் திரும்பினார். 1813-ல் மறுபடியும் ஸ்பெயினுக்குள் புகுந்தார். ஃபிரெஞ்சுப் படையை விட்டோரியா (Vittoria) என்னுமிடத்தில் தோற்கடித்து, ஸ்பெயினிலிருந்து அதனைத் துரத்தியடித்தார். பிறகு பிரனீஸ் மலைத்தொடரைக் கடந்து ஃபிரான்சிலேயே போர்புரியத் தொடங்கினார். ஓர்தேஸ் (Orthez) என்னும் இடத்தில் அவர் வெற்றி பெற்றார். பிறகு டுலூசைக் (Toulouse) கைப்பற்றினார். அதற்கு முந்தின நாள் நெப்போலியன் எல்லா இடங்களிலும் தோற்கடிக்கப்பட்டதால், பதவியினின்றும் விலகினார். தீபகற்பப் போரும் முடிவுற்றது.

இப் போரில் நெப்போலியன் தோல்வியுறப் பல காரணங்கள் இருந்தன. ஸ்பெயினில் மக்களே போர்க்கருவிகளேந்தி சண்டையிடலாயினர். அவர்களுக்கு அந்நியர் ஆட்சியினின்றும் விடுதலை பெறவேண்டும் என்ற உயரிய நோக்கம் இருந்தது. அவர்கள் கையாண்ட கொரில்லாப் போர்முறை ஃபிரெஞ்சுக்காரர்களைச் சோர்வடையச் செய்தது. ஸ்பெயினினுடைய நில அமைப்பு அப் போர் முறைக்குச் சாதகமாய் அமைந்திருந்தது. மேலும், நெப்போலியன் ஆஸ்திரியாவுடனும் ருஷ்யாவுடனும் போர்புரிய நேர்ந்தது. ஆகவே, அவரே ஸ்பெயினில் இருந்து இறுதிவரை போர்புரிய இயலவில்லை. போர்க்களத்தில் அவர் ஒருவர் இருப்பின் அது 40,000 வீரர்களுக்குச் சமம் என்று வெல்லிங்டன் ஒரு சமயம் குறிப்பிட்டிருந்தார். அவருடைய சேனைத்தலைவர்கள் அவ்வளவு சிறப்புவாய்ந்தவர்கள் அல்லர். ஃபிரெஞ்சுப் படைத்தலைவராக இருந்து பிறகு ஸ்வீடன் அரசரான பெர்னேடோட் (Bernadotte) தனது நேசநாடுகளுக்குக் கீழ்க்காணுமாறு குறிப்பிட்டார் : 'நெப்போலியனை எதிரில் கண்டால் பின்வாங்குங்கள். அவருடைய படைத்தலைவர்களைக் கண்டால் சண்டையிடுங்கள்.' வெல்லிங்டனுடைய திறமையும், ஆங்கிலேயக் கப்பற்படையின் வலிமையும் வெற்றிக்குப் பேரளவில் உதவி செய்துள்ளன. ஜோசஃப் திறமைசாலியல்லர். அதுவும் தோல்விக்குக் காரணமாகும்.

தீபகற்பப் போரில் ஈடுபட்டது நெப்போலியனுடைய மாபெருந் தவருகும். அதில் அவர் படையின் பெரும்பகுதியை இழந்தார். ஆகவே, அப் போர் அவருடைய அழிவிற்கு ஒரு காரணமாகும்.

இதற்கிடையில் ஐரோப்பாவில் போர்புரிய நேர்ந்தது என்று முன்னரே குறிப்பிட்டோம். முதலில் அவர் ஆஸ்திரியாவுடன் போர் புரிந்தார். வாக்ராம் (Wagram) என்னுமிடத்தில் ஆஸ்திரியா தோல்வியுற்றது. அப்பொழுது ஏற்படுத்தப்பட்ட உடன்படிக்கை யின்படி ஆஸ்திரியா பல இடங்களை இழந்தது. ஐரோப்பியப் பொருளாதாரத் திட்டத்தில் சேர அது இசைந்தது. ஆஸ்திரியா இளவரசியான மேரி லூவே (Marie Louise) நெப்போலியனை மணக்க ஏற்பாடு செய்யப்பட்டது. ஆகவே, ஜோசஃபீன் தள்ளி வைக்கப்பட்டார். நெப்போலியன் மேரி லூவேவை மணந்ததன் நோக்கம் அவருடைய நிலையை உயர்த்துவதேயாகும். அவர் குடும் பத்தைச் சார்ந்தவர்களையும் அரச குடும்பங்களுடன் மணவுறவு வைத்துக்கொள்ளுமாறு வேண்டினர். லூசியன் ஒருவரே தம்முடைய மனைவியை விலக்கி, அரச குடும்பத்தினின்றும் ஒருவரை மனைவியாக்கிக் கொள்ள மறுத்தார்.

1810-ல் நெப்போலியனுடைய பேரரசு உச்சநிலையை அடைந் திருந்தது. ஃபிரான்சு, இத்தாலியின் ஒரு பகுதி, பெல்ஜியம், இல் லீரியா ஆகியவற்றைத் தம்முடைய நேராட்சிக்கு உட்படுத்தி யிருந்தார். போப், அவருடைய பொருளாதாரத் திட்டத்தில் பங்கு கொள்ளாததால், அதுவும் ஃபிரான்சுடன் இணைக்கப்பட்டது. இத்தாலி யின் அரசு, ஸ்விட்சர்லாந்து, ரைன் நதிப் பிரதேச நாடுகளின் கூட்டமைப்பு ஆகியவை அவரைத் தலைவராகக் கொண்டிருந்தன. ஸ்பெயினிலும் வெஸ்ட்பேலியாவிலும் அவருடைய சகோதரர்களான ஜோசப், ஜெரோம் ஆகியோர் ஆண்டுவந்தனர். ஹாலந்தில் மற்றொரு சகோதரரான லூயி அரசாண்டார். அவர் ஐரோப்பியப் பொருளாதாரத் திட்டத்தில் பங்குகொள்ள மறுத்ததால், பிற்காலத்தில் ஹாலந்தை ஃபிரான்சுடன் இணைத்துக்கொண்டார். வார்சா கோமகன் பெருநில ஆட்சிப் பகுதியினை அவருடைய நண்பரான சாக்சனி அரசர் ஆண்டு வந்தார். தெற்கு இத்தாலி அவருடைய மைத்துனர் மூராத் (Murat) என்பவரின் ஆளுகைக்குட்படுத்தப்பட்டது. ஆஸ்திரியா, பிரஷ்யா, ருஷ்யா இவருடன் ஒப்பந்தம் செய்திருந்தன. ஸ்வீடன் அவருக்கு அடங்கியிருந்தது. அவரது தளகர்த்தர்களில் ஒருவரான பெர்னே டோட் என்பவருக்கு ஆட்சி உரிமையை வழங்கியது. வெகு சீக்கிரத் தில் இவ்வளவு பெரிய பேரரசை ஏற்படுத்திய நெப்போலியனைச் சிறந்த போர்த்தலைவர் என்று கூறுவது மிகையாகாது.[1]

1 R. Denis, 'Illustrated History of Modern Europe', p. 56 (ஆர். டெனிஸ், 'தற்கால ஐரோப்பிய வரலாறு'. பக். 56).

பேரரசுகள் ஏற்படுவதும் அழிவதும் உலக வரலாற்றில் சாதாரண மாக ஏற்படும் நிகழ்ச்சிகளாகும். ஆனால், நெப்போலியனுடைய பேரரசு வெகு சீக்கிரமாக அழிவுற்றது. ஸ்பெயினில் அவர் அதிகாரம் வீழ்த்தப்பட்டதை முன்பே கவனித்தோம். இனி, ஐரோப்பாவில் அவரது ஆதிக்கம் அழிவுற்றதைப்பற்றிக் கவனிப்போம். ஆஸ்திரியாவைத் தோற்கடித்தபின் ருஷ்யாவின்மீது படையெடுக்கப் போர் ஏற்பாடுகளைச் செய்ய முனைந்தார். இப் பேரரசுகளிடையே பல காரணங்களால் மனக்கசப்பு வளர்ந்திருந்தது. ஆஸ்திரியாவுடன் போர் நடக்கும் காலத்தில் தகுந்த உதவி ருஷ்யா அளிக்கத் தவறியதாலும், ருஷ்யப் பேரரசர் தமது சகோதரியை அவருக்கு மணம் முடிக்க மறுத்ததாலும், நெப்போலியன் ருஷ்யாவினிடத்தில் வெறுப்புக் கொண்டிருந்தார். ஃபிரான்சு ருஷ்யாவின் ஆதிக்கத்தைப் பரப்ப உதவி புரியவில்லை என்று ருஷ்யப் பேரரசர் குற்றம் சாட்டினார். மேலும், நெப்போலியன், அலெக்சாந்தருடைய (ருஷ்யப் பேரரசர்) மைத்துனருக்குச் சொந்தமான ஓல்டென்பெர்க்கைக் (Oldenberg) கைப்பற்றியதால், அலெக்சாந்தர் கோபமடைந்தார். நெப்போலியன் போலந்து அரசைப் புதுப்பிக்க நடவடிக்கை மேற்கொள்ளுவதில்லை என்று உறுதி செய்யுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டார். ஆனால், அவ்வாறு உறுதிகூற மறுத்துவிட்டார். 1810-ல் பொருளாதாரத் திட்டம் வெற்றிபெறச் செய்வதற்காக நெப்போலியன் நடுநிலை நாடுகளின் கப்பல்கள் ருஷ்யாவின் துறைமுகங்களில் உட்புகுதலைத் தடைசெய்யுமாறு கேட்டுக்கொண்டார். அலெக்சாந்தர் மறுத்துவிட்டார். மேலும், அலெக்சாந்தர் ஃபிரான்சிலிருந்து ருஷ்யாவிற்கு ஏற்றுமதி செய்யப்படும் பொருள்களின்மீது அதிக வரிகளைச் சுமத்தினார். ஆகவே, போர் ஏற்பட்டது. நெப்போலியன் இப் போரை நடத்துவதில் மிகுந்த ஆர்வம் காட்டினார். ஏனெனில், இப் போரின் விளைவாக மாஸ்கோ பிடிபட்டால், இந்தியாவை அணுகுவது மிக எளிது என்று அவர் கருதினார்.[1]

600,000 பேர்கள் கொண்ட மலைக்கவைக்கும் படையுடன் (Grand Army) மாஸ்கோ நோக்கி 1812-ல் புறப்பட்டார். கோவ்னோ என்னுமிடத்தில் நீமென் (Niemen) நதியைக் கடந்து ருஷ்யாவிற்குள் புகுந்தார். ருஷ்யப் படைகள் பின்வாங்கின. ருஷ்யக் குடியானவர்களும், தங்களுடைய உணவுப் பொருள்கள் முதலியவற்றை அழித்துவிட்டுப் படைகளைப் பின்தொடர்ந்தனர். போரோடினோ (Borodino) என்னுமிடத்தில் ருஷ்யப் படைகளைத் தோற்கடித்து, மாஸ்கோ நகரத்தைக் கைப்பற்றினார். அங்குள்ள மக்கள் யாவரும் நகரம் பிடிபடுவதற்கு முன்னரே வெளியேறிவிட்டனர். அலெக்சாந்தர் நகரம் பிடிபட்ட பிறகு அடிபணிவார் என்று எண்ணிய நெப்போலியன் ஏமாற்றம் அடைந்தார். பழைய விரோதம் பாராட்டி, பெர்னேடோட்டு, அலெக்

[1] 'Moscow is half-way house to India'—Napoleon.

சாந்தரை நெப்போலியனுடன் சமாதானம் செய்துகொள்வதைத் தடுத்தார். குளிர்காலம் தொடங்கியதாலும், தேவையான பொருள்கள் இல்லாததாலும், நெப்போலியன் தம்முடைய நாடு நோக்கிப் படைகளை நடத்தவேண்டியதாயிற்று. ருஷ்யர்கள் அவர் வந்த வழியிலேயே திரும்பிச்செல்ல ஏற்பாடு செய்தார்கள். அதனால் நெப்போலியனுடைய படைகள் உணவுப் பொருள்களைப் பெற வழியில்லாது போயிற்று. மேலும், அவர்களால் குளிர் தாங்க முடியவில்லை. ருஷ்யர்கள் அவர்களுக்குத் தொடர்ந்து இடையூறுகளைக் கொடுத்து வந்தனர். அதனால் படையின் பெரும்பகுதி அழிவுற்றது. 20,000 பேர்களே கோவ்னேவைக் கடந்து ஐரோப்பாவிற்குச் சென்றனர். மலைக்கவைக்கும் படை இவ்வாருக அழிக்கப்பட்டது.

நெப்போலியனுடைய ருஷ்யப் படையெடுப்பு ஏற்பாடு தோல்வியுற்ற செய்தி பிரஷ்யா, ஆஸ்திரியா ஆகிய நாடுகளை ஃபிரான்சுக்கு எதிராகப் போரில் ஈடுபடத் தூண்டியது. 1813-ல் நான்காவது நேச நாடுகளின் கூட்டிணைவு ஏற்படுத்தப்பட்டது. ஜெர்மனியில் தேசிய உணர்ச்சி பெருகிற்று. அதைப் பயன்படுத்திப் பிரஷ்யா பெருஞ்சேனையொன்றை ஏற்படுத்தியது. பிரஷ்யாவில் தோன்றிய அரசியல் மேதைகள் பிரஷ்யாவைப் பல சீர்திருத்தங்கள் வாயிலாக வலிமை பொருந்திய நாடாகச் செய்தனர். ஆகவே, நெப்போலியன் ஜெர்மனியில் போர்செய்ய முற்பட்டார். 1813-ல் டிரெஸ்டன் (Dresden) சண்டையில் நெப்போலியன் வெற்றி பெற்ருர். ஆனல், லீப்ஸிக் (Leipzig) என்னுமிடத்தில் அவர் பெருந் தோல்வி அடைந்தார். அதனல் நெப்போலியன் பின்வாங்க நேர்ந்தது. எல்லாத் திசைகளினின்றும் அவருடைய பகைவர்கள் அவரைத் தாக்கினர்கள். அவர் ஆட்சியின் கீழிருந்த அரசுகள் அவருக்கு எதிராகக் கிளர்ச்சி செய்தன. ஃபிரெஞ்சுக்காரர்களும் படைத்தலைவர்களும் சமாதானம் விரும்பினர்கள். இறுதியில் 1814-ல் நெப்போலியன் முடிதுறந்தார். ஆனல், அவர் பேரரசர் பட்டத்துடன் எல்பா (Elba) தீவில் வாழ அனுமதிக்கப்பட்டார். ஃபிரான்சு, பூர்போன் மன்னரின் ஆளுகைக்குட்படுத்தப்பட்டது. அவர் ஏற்படுத்திய பேரரசும் அழிக்கப்பட்டது.

1815-ல் நெப்போலியன் எல்பாவினின்றும் தப்பி ஃபிரான்சில் காலடி எடுத்துவைத்தார். வெகு விரைவில் மக்களின் உதவியுடன் பாரிஸைக் கைப்பற்றினர். பூர்போன் மன்னரான பதினெட்டாம் லூயி நாட்டைவிட்டு ஓடினர். ஃபிரான்சில் தம்முடைய ஆதிக்கத்தை ஏற்படுத்தியபிறகு, பெல்ஜியம் நோக்கிப் படை நடத்திச் சென்ருர். அங்கு ஆங்கிலேயர், டச்சுக்காரர்கள், பிரஷ்யர்கள் ஆகியோர் அவரை எதிர்த்தார்கள். பிரஷ்யர்களை லினி (Ligny) என்னுமிடத்தில் தோற்கடித்தார். ஆனல், அவர்களைப் பின்தொடர ஏற்பாடு செய்யவில்லை. அதனல் வாட்டர்லூ என்னுமிடத்தில் நெப்போலியன் பிரிட்டிஷ்

படையைத் தாக்கியபோது, பிரஷ்யர்கள் திரும்பிவந்து அப் படைக்கு உதவி செய்ய முடிந்தது. முடிவில் நெப்போலியன் தோல்வியுற்ருர். பிறகு அவர் ஆங்கிலேயரிடம் சரண் புகுந்தார். அவர்கள் அவரை யாவராலும் எளிதில் புகமுடியாத செயின்ட் ஹெலிஞ (St. Helena) என்னும் தீவிற்கு அனுப்பிஞர்கள். அங்குச் சில ஆண்டுகள் வாழ்ந்த பின்னர் 1821-ல் மறைந்தார்.

## வியன்ஞ மாநாடு

நெப்போலியனைத் தோற்கடித்தபிறகு 1814-ல் ஃபிரான்சுடன் பாரிஸ் உடன்படிக்கையை நேசநாடுகள் செய்துகொண்டன. ஆஞல், ஐரோப்பாவின் இதர நாடுகளைப்பற்றிய முடிவுகள் எளிதாக மேற்கொள்ளத்தக்கனவாக இல்லை. வெற்றி பெற்ற நாடுகள் தகுந்த வெகுமதிகளை நாடிஞர்கள். அவர்கள் தோல்வியுற்ற நாடுகளைத் தண்டிக்கும் வகையில் மாற்றங்கள் நிறைவேற்றப்படவேண்டும் என்று யோசனைகள் கூறிஞர்கள். அதே நேரத்தில் ஐரோப்பாவின் பல பகுதிகளில் ஃபிரெஞ்சுப் புரட்சிக் கொள்கைகளான சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் ஆகியவைகள் செல்வாக்குப் பெற்றிருந்தன. மக்கள் இக் கருத்துகளை அடிப்படையாகக் கொண்டு ஆட்சி முறைகள் அமைக்கப்படவேண்டும் என்று எண்ணமிட்டிருந்தனர். மேலும், இருபது ஆண்டுகளுக்கு மேலாக நடந்த போர்களால் ஏற்பட்ட துன்பங்கள் மீண்டும் நிகழாதிருக்கவேண்டிய வகையில் ஏற்பாடு அமையவேண்டும் என்ற கருத்து பலரிடையே செல்வாக்குப் பெற்றிருந்தது. இத்தகைய சூழ்நிலைதான் 1814ஆம் ஆண்டு ஐரோப்பிய நாடுகளின் பிரதிநிதிகள் வியன்ஞவில் கூடி ஆலோசிக்கலாயினர்.

வியன்ஞ மாநாடு பொதுவாக எல்லா ஐரோப்பிய நாடுகளின் பிரதிநிதிகளையும் கொண்டிருந்தது என்று கூறலாம். தோற்கடிக்கப்பட்ட ஃபிரான்சும் அதில் இடம் பெற்றிருந்தது. அதில் இரண்டு பேரரசர்களும், பல அரசர்களும், சிற்றரசர்களும் நேரடியாகக் கலந்துகொண்டார்கள். மாநாடு நடைபெற்ற இடத்தை அழகுபடுத்துவதற்கும், மாநாட்டில் கலந்துகொண்டோரை உபசரிக்கவும் பெரும்பொருள் செலவிடப்பட்டது. வியன்ஞ மாநாட்டின் முடிவுகள் பெரும்பாலும் ஒருசிலர் அடங்கிய சிறப்புக் குழுவிஞலேயே ஏற்படுத்தப்பட்டன. அவர்களில் ஒருவர் ஆஸ்திரியாவின் வெளிநாட்டமைச்சரான மெட்டர்னிக் (Metternich) என்பவராவார். அவர் புரட்சிக் காலத்தில் வளர்ச்சியடைந்த சுதந்திரம், சமத்துவம் போன்ற கருத்துகளை வெறுத்தார். அவருடைய திறமை முழுவதும் அக் கருத்துகளின் அடிப்படையில் ஜெர்மனியிலும் இத்தாலியிலும் அரசு முறைகள் அமைவதைத் தடுப்பதில் பயன்படுத்தி, அம் முயற்சியில் வெற்றி

கண்டார். அடுத்தவர் ருஷ்யப் பேரரசர் முதலாவது அலெக்சாந்தர் ஆவார். முற்போக்குக் கருத்துடையவராய் இருந்தபோதிலும், அக் கருத்துகளைச் செயற்படுத்துவதற்கு வேண்டிய பொறுமையும், இடைவிடாத உழைப்பும், மனத்திடமும் பெற்றிருக்கவில்லை. வியன்னு மாநாட்டில் ருஷ்யாவின் ஆதிக்கத்தைப் பெருக்குவதில் கவனம் செலுத்தினர். பிரான்சின் பிரதிநிதியான தாலெரான் (Talleyrand), நெப்போலியன் கைப்பற்றிய நாடுகளை, அந் நாடுகளை முறைப்படி அரசு செலுத்த உரிமை பெற்றவர்களுக்குத் திருப்பி அளிக்கவேண்டும் என்ற (Principle of Legitimacy) கொள்கையை வற்புறுத்தினர். அவ்வாறு திருப்பிக்கொடுக்க முடியாத நிலை ஏற்பட்டபோது, அதனுல் பாதிக்கப்படும் அரசர்களுக்கு நஷ்டஈடு வழங்கவேண்டும் என்றும் கூறினர். பிரிட்டனின் அமைச்சர் காசில்ரீ (Castlereagh) என்பவர் வல்லமைச் சமநிலை ஏற்படுத்துவதில் நாட்டம் செலுத்தினர். மேற்கூறிய மூன்று கருத்துகளின்—அவரவர் நாடுகளை அவரவருக்குத் திருப்பி அளித்தல், நஷ்டஈடு வழங்குதல், வல்லமைச் சமநிலை ஏற்படுத்துதல் ஆகியவை—அடிப்படையில் வியன்னு ஏற்பாடு உருவாக்கப்பட்டது. இந்த ஏற்பாட்டினை உட்கொண்ட ‘இறுதிச் சட்டம்’ (Final Act) 1815-ல் நிறைவேற்றப்பட்டது.

போருக்குக் காரணமான ஃபிரான்சு கண்ணியமாகவே நடத்தப் பட்டது. 1814-ல் ஏற்படுத்தப்பட்ட முதலாவது பாரிஸ் உடன் படிக்கையின்படி பதினெட்டாம் லூயி ஃபிரான்சு மன்னரானர். ஃபிரான்சு, வென்ற எல்லா நாடுகளையும் இழந்தது. 1792-ல் இருந்த எல்லைகளை ஃபிரான்சு இப்பொழுது கொண்டிருக்க அனுமதிக்கப் பட்டது. குடியேற்ற நாடுகள் பலவற்றை அது இழந்தது. நெப்போலியனை வரவேற்று அவர் மறுமுறை போரில் ஈடுபடுவதற்கு ஃபிரான்சே காரணம் என்று நேசநாடுகள் கருதியதால், முதலாவது பாரிஸ் உடன்படிக்கை ஏற்படுத்திய திட்டத்தில் சில மாறுதல்களை ஏற்படுத்தினர்கள். 1790-ல் அமைந்திருந்த எல்லைகளையே ஃபிரான்சு இப்பொழுது கொண்டிருக்கவேண்டும் என்றும், நேசநாடுகளுக்கு நஷ்டஈடு அளிக்கவேண்டும் என்றும், அதுவரை ஃபிரான்சில் அந்நியப் படைகள் இருக்கவேண்டும் என்றும், ஃபிரான்சு ரோம் நகரிலிருந்து கொண்டு சென்ற கலைப்பொருள்களைத் திருப்பித்தர வேண்டும் என்றும் ஏற்பாடு செய்யப்பட்டது.

ஆஸ்திரியாவிற்குச் சொந்தமான பெல்ஜியம், ஆஸ்திரியாவின் விருப்பப்படி ஹாலந்துடன் இணைக்கப்பட்டது. இவ்விரு நாடுகளுக்கும் இடையே பெருத்த வேறுபாடுகள் இருந்ததாலும், பாதிக்கப்பட்ட நாடுகளின் ஒப்புதல் இன்றி இம் முடிவு மேற்கொள்ளப்பட்டதாலும், 1830-ல் இவ்விணைப்பு துண்டிக்கப்பட்டது. ஃபிரான்சின் எல்லையில்

பலம் பொருந்திய நாட்டை அமைத்து, வல்லமைச் சமநிலையை நிலை நிறுத்தவே இவ்வேற்பாடு செய்யப்பட்டது.

ஜெர்மனியைப்பற்றிய ஏற்பாட்டினை நிறைவேற்றுவதில் சில தகராறுகள் ஏற்பட்டன. ஒருபுறம் ஜெர்மானியர்கள் தேசிய உணர்ச்சியால் வசப்பட்டு ஜெர்மனியை ஒன்றுபடுத்தவேண்டும் என்று விரும்பினர். ஆனால், மெட்டர்னிக் ஆஸ்திரியாவின் செல்வாக்கை அங்குத் தொடர்ந்து நிலைநிறுத்துவதற்காக ஜெர்மனியைப் பிரித்தும், பலமற்ற நிலையிலும் வைத்திருக்க எண்ணினர். முடிவில் தெய்விகப் புனித ரோமானியப் பேரரசு மீண்டும் ஏற்படுத்தப்படவில்லை. நெப்போலியனுடைய ரைன் நதிப் பிரதேச நாடுகளின் கூட்டமைப்பும் அழிக்கப்பட்டது. அவைகளுக்குப் பதிலாக 38 நாடுகள் கொண்ட ஜெர்மனியைக் கூட்டமைப்பு (The German Confederation) ஏற்படுத்தப்பட்டது. ஆஸ்திரியா அதனுடைய தலைமைப் பொறுப்பைப் பெற்றது. கூட்டமைப்பின் பொறுப்புகளை நிறைவேற்ற சபை ஒன்று (Federal Diet) ஃபிராங்ஃபோர்ட் (Frankfort) என்னுமிடத்தில் அமைக்கப்பட்டது. ஜெர்மனியின் நிலப்பகுதிகளை ஆளும் அரசர்களும், நான்கு சுதந்திரம் பெற்ற நகரங்களும் தங்களது பிரதிநிதிகளை அச் சபைக்கு அனுப்பினர்கள். முந்நூற்றுக்கு மேற்பட்ட சிறிய அரசர்கள் அனைவரும் தங்களுடைய நிலப்பகுதிகளை மீண்டும் பெற அனுமதிக்கப்படவில்லை என்பது உண்மையேயானாலும், ஜெர்மனி பலம் பொருந்திய நாடாக அமைக்கப்படும் என்று எதிர்பார்த்திருந்த ஜெர்மானியர்களும் ஏமாற்றம் அடைந்தார்கள் என்பதில் ஐயமில்லை.

ஜெர்மனியிலுள்ள பிரஷ்யா சில நிலப்பகுதிகளைப் பெற்றது. போலந்தில் அதற்குச் சொந்தமாயிருந்த பகுதியில் சில இடங்களை விட்டுக்கொடுத்து, மேற்கு ஜெர்மனியில் வெஸ்ட்பேலியா, ரைன்நதிப் பிரதேசம் (The Rhineland), சாக்ஸனி நாட்டின் பெரும் பகுதியையும், பாமரேனியாவின் ஒரு பகுதியினையும் பெற்றது. ஜெர்மானியர்கள் அதிகமாக வாழாத இடங்களை இழந்து, ஜெர்மானியர்கள் பெருவாரியாக வசிக்கும் இடங்களைப் பெற்ற காரணத்தால், பிரஷ்யா ஜெர்மானிய நாடுகளில் தலைசிறந்த நாடாக விளங்கலாயிற்று.

ஆஸ்திரியா பெல்ஜியத்தைத் தானாகவே விட்டுக்கொடுத்தது. வியன்னாவிலிருந்து வெகுதூரத்திலுள்ள பெல்ஜியத்தை ஆளுவது மிகக் கடினமாகத் தோன்றியது. அதற்குப் பதிலாக ஆஸ்திரியாவிற்கு வெகு அண்மையிலுள்ள வெனீஷியாவைப் பெற்றது. வெனீஷியாவையும் லம்பார்டியையும் சேர்த்து 'லம்பார்டி-வெனீஷிய அரசு' ஏற்படுத்தப்பட்டது. இவைகளன்றி, ஆஸ்திரியா, இல்லீரி

யாவையும் பவேரியாவிற்குச் சொந்தமான பகுதிகளில் சிலவற்றையும் பெற்றது.

மேலும், இத்தாலியின் வடக்கிலும் நடுப்பகுதியிலும் பல சிற்றரசுகள் ஏற்படுத்தப்பட்டன. மோடெனு, டஸ்கனி, பார்மா ஆகியவை எல்லாம் ஆஸ்திரிய அரச குடும்பத்தைச் சேர்ந்தவர்களுக்குக் கொடுக்கப்பட்டன. ரோம், அதைச் சுற்றியுற்ள பகுதி, அம்பிரியா போன்ற போப்புக்குச் சொந்தமான இடங்களில் போப்பின் அதிகாரம் மீண்டும் ஏற்படுத்தப்பட்டது. நேபிள்ஸ், சிசிலி ஆகியவை பூர்போன் குலத்தைச் சேர்ந்தவருக்கு அளிக்கப்பட்டன. பியட்மான்ட் (Piedmont), சார்டினியா ஆகியவை சவாய் (Savoy) குலத்தைச் சார்ந்தவரின் ஆளுகைக்குட்படுத்தப்பட்டன. ஆகவே, இத்தாலியும் மெட்டர்னிக்கினுடைய கருத்திற்கு ஏற்றுற்போலப் பலமற்றதாகவும், பல பிரிவுகளை உட்கொண்டதாகவும் அமைக்கப்பட்டது.[1]

போர்க்காலத்தில் ருஷ்யா கைப்பற்றிய இடங்களாகிய பின்லாந்தும் பெஸரேபியாவும் (Bessarabia) தொடர்ந்து அதனுடைய ஆளுகைக்குள் வைத்திருக்க ஏற்பாடு செய்யப்பட்டது. போலந்தில் பிரஷ்யாவிற்கும் ஆஸ்திரியாவிற்கும் சொந்தமான பகுதிகளில் சிலவற்றை ருஷ்யா பெற்றது.

போலந்து நாட்டினர் போர் முடிந்தவுடன் சுதந்திரம் பெறலாம் என்று எண்ணியிருந்தனர். அதற்கு மாருகப் போலந்து நான்கு பிரிவுகளாகத் துண்டிக்கப்பட்டது. ஆஸ்திரியாவும், பிரஷ்யாவும், ருஷ்யாவும் ஒவ்வொரு பகுதியைப் பெற்றன. ருஷ்யாவின் பாகம் மற்ற இரு நாடுகளுக்குச் சொந்தமாக்கப்பெற்ற சில இடங்களைக் கொண்டு விரிவு படுத்தப்பட்டது. நான்காவது சிறு பிரிவாகிய கிராகவ் (Cracow) குடியரசாக ஏற்படுத்தப்பட்டது.

டென்மார்க் நெப்போலியனுக்கு உதவி செய்ததால், அதனிடமிருந்து நார்வே (Norway) பிரிக்கப்பட்டது. நார்வே ஸ்வீடனுடன் இணைக்கப்பட்டது.

சுவிட்சர்லாந்தில் பழைய கூட்டிணைவு புதுப்பிக்கப்பட்டது. ஸ்பெயினில் பூர்போன் குலத்தினர் மீண்டும் ஆட்சி செய்ய வழி வகுத்தது.

இங்கிலாந்து ஹேலிகோலாந்து, மால்டா, அயோனியன் தீவுகள், இலங்கை, நன்னம்பிக்கை முனைக் குடியேற்ற நாடு ஆகியவைகளைப் பெற்றது.

[1] A. J. Grant, 'Europe—the Story of the Last Five Centuries', page 725 (கிரான்ட், ஐரோப்பா—கடந்த ஐந்து நூற்றுண்டுகளின் வரலாறு,' பக்கம் 725.)

வியன்னு ஏற்பாடு பல குறைகளைக் கொண்டிருந்தது. வல்லமைச் சமநிலையை நிலைநாட்டும் நோக்கத்துடனும், வெற்றிபெற்ற நாடுகளின் ஆசைகளை நிறைவேற்றும் எண்ணத்துடனும் செயற்பட முனைந்த போது, அக் காலத்தில் மக்களிடம் செல்வாக்குப் பெற்றிருந்த தேசிய உணர்ச்சியையும் முற்போக்குக் கருத்துகளையும் கவனியாது விட்டது. ஆகவே, நாடுகளின் எல்லைகளைத் திருத்தியமைக்கும்போது மக்களின் விருப்பத்தை அறிந்துகொள்ள முற்படவில்லை. அதனால்தான் அதனுடைய ஏற்பாட்டிற்குப் பல இடங்களில் எதிர்ப்பு உண்டாயிற்று. 1830-ல் பெல்ஜியம் கிளர்ச்சி செய்து சுதந்திரம் அடைந்தது. 1905-ல் நார்வே சுதந்திரம் பெற்றது. 1917-ல் பின்லாந்து ருஷ்யாவினிடமிருந்து பிரிந்து தனிநாடு ஆயிற்று. இத்தாலியிலும் ஜெர்மனியிலும் 19ஆம் நூற்றுண்டில் ஒற்றுமை இயக்கம் தோன்றியது. மக்களாட்சி முறையை எதிர்நோக்கியிருந்த நாடுகளில் பழைய வல்லாட்சிகளை ஏற்படுத்திக் கிளர்ச்சி யுண்டாவதற்கு வழி செய்திருந்தது. ஆகவே, 19ஆம் நூற்றுண்டில் ஏற்பட்ட பல போர்களும் கிளர்ச்சிகளும் வியன்னு மாநாட்டின் ஏற்பாட்டின் குறைகளைப் போக்குவதற்காகவே ஏற்பட்டன என்று கூறப்படுகிறது. ஆனால், இவ்வேற்பாடு ஐரோப்பியர்களுக்கு ஒரு பெருநன்மையை உண்டாக்கியது. போரினால் அவதிப்பட்ட ஐரோப்பாவில் அடுத்த நாற்பது ஆண்டுகளில் பெரும் போர் ஏற்படாமல் தடுக்க அது பயன்பட்டது என்ற உண்மையை யாரும் மறுக்கமுடியாது.

### வினாக்கள்

1. ஃபிரெஞ்சுப் புரட்சி ஏற்படக் காரணம் என்ன? அதன் விளைவுகள் யாவை?
2. ஃபிரெஞ்சுப் புரட்சியின்போது ஏற்பட்ட முக்கிய நிகழ்ச்சிகளை விவரி. அது மனித வரலாற்றினை எவ்வாறு மாற்றி அமைத்தது என்பதையும் குறிப்பிடு.
3. நெப்போலியனுடைய எழுச்சியையும் வீழ்ச்சியையும் பற்றி ஒரு கட்டுரை வரைக.
4. நெப்போலியனுடைய வாழ்க்கை வரலாற்றை எழுதி, அவர் முடிவில் தோல்வியுறக் காரணம் என்ன என்பதையும் குறிப்பிடு.
5. வியன்னு மாநாட்டின் சாதனைகளை விளக்கு.

# 3. அமெரிக்க நாடுகளின் வளர்ச்சி

## அமெரிக்க ஐக்கிய நாடு

முதல் அத்தியாயத்தில் வட அமெரிக்காவில் ஆங்கிலேயர்கள் பல குடியேற்றங்களை அமைத்தனர் என்றும், அவைகளில் சிறப்பு வாய்ந்தவை வட அமெரிக்காவின் அட்லாண்டிக் கடற்கரையோரமாக அமைக்கப்பட்ட பதின்மூன்று குடியேற்ற நாடுகள் என்றும் கவனித்தோம். இவைகளினின்றுதான் ஐக்கிய அமெரிக்க நாடு ஏற்பட்டது. ஆகவே, அந்நாட்டின் தோற்றத்தை இனிக் கவனிப்போம்.

17, 18ஆம் நூற்றாண்டுகளில் ஏற்படுத்தப்பட்ட 13 ஆங்கிலேயக் குடியேற்ற நாடுகளுக்கும், அவற்றின்மீது ஆதிக்கம் செலுத்திவந்த பிரிட்டனுக்கும் இடையே 18ஆம் நூற்றாண்டில் போர் ஒன்று ஏற்பட்டது. இப் போரை 'அமெரிக்க சுதந்திரப் போர்' என்று கூறுகிறார்கள். இப் போர் ஏற்படப் பல காரணங்கள் உண்டு.

குடியேற்றங்களில் ஏற்படுத்தப்பட்டிருந்த ஆட்சிமுறையில் காணப்பட்ட குறைகள் போருக்குரிய காரணங்களில் ஒன்றாகும். ஒவ்வொரு குடியேற்றமும் ஓர் அரசாங்க நிருவாகத்தைக் கொண்டிருந்தது. ஒவ்வொன்றிலும் பிரிட்டிஷ் அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட கவர்னர் ஒருவர் ஆட்சிப் பொறுப்பை ஏற்றிருந்தார். சட்டமியற்றும் அதிகாரங்கள் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சபைக்குக் கொடுக்கப்பட்டிருந்தன. அச் சபையே கவர்னருக்கு ஊதியத் தொகையை அளிக்கும் அதிகாரம் பெற்றிருந்தது. ஆகவே, கவர்னருக்கும் சட்டசபைக்கும் அடிக்கடி தகராறுகள் ஏற்பட்டன. சட்டசபை கவர்னரைத் தன்னுடைய அதிகாரத்திற்குட்படுத்த முயன்றது. அரசரால் நியமிக்கப்பட்ட கவர்னர் மக்கள் சபைக்கு உட்பட்டு நடக்க மறுத்தார்.

இதனுடன் மற்றொரு பிரச்சனையும் எழுந்தது. குடியேற்ற நாடுகளிலிருந்து பிரதிநிதிகள் எவரும் பிரிட்டிஷ் பாராளுமன்றத்திற்குத்

தேர்ந்தெடுத்து அனுப்பப்படவில்லை. அவ்வாறிருக்க, அப் பாராளு மன்றம் குடியேற்ற நாடுகளுக்கும் சட்டங்களை இயற்றும் உரிமையைக் கொண்டாடியது. குடியேற்ற நாடுகள் அவ் வுரிமையை மறுத்தன. பாராளுமன்றம் நிறைவேற்றும் சட்டங்களைக் குடியேற்ற நாடுகளில் நடைமுறைப்படுத்தலாகாது என்று அறிவித்தன.

அடுத்தபடியாக, குடியேற்ற நாடுகளின் பாதுகாப்புப் பிரச்சனையும் போர் ஏற்படக் காரணமாக அமைந்தது. எல்லாக் குடியேற்ற நாடு களும் ஒன்றுசேர்ந்து தங்களுடைய பாதுகாப்புக்காக ஒரு பொது அமைப்பை உண்டாக்குவதற்கு எவ்வித முயற்சியும் மேற்கொள்ள வில்லை. அமெரிக்காவிலுள்ள செவ்விந்தியர்கள் இக் குடியேற்ற நாடுகளுக்குத் தீங்கு விளைவித்துக்கொண்டிருந்தார்கள். மேலும், ஏழாண்டுப் போருக்குப் பின்னரும் ஃபிரெஞ்சுக்காரர்களால் அமெரிக்கக் குடியேற்ற நாடுகளுக்கு ஏற்படும் ஆபத்து நீங்கியதாகத் தெரியவில்லை. ஆகவே, ஏழாண்டுப் போருக்குப் பின்னர் பிரிட்டிஷ் அரசாங்கம் குடியேற்ற நாடுகளின் பாதுகாப்புக்காக ஒரு கப்பற் படையையும் ஒரு சேனையையும் எற்படுத்துவதென முடிவு செய்தது. அவைகளை வைத்துப் பேணுவதற்குச் செலவிடப்படும் தொகையில் ஒரு பகுதியினைக் குடியேற்ற நாடுகள் ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று பிரிட்டிஷ் அமைச்சர் கிரென்வில் (Grenville) கருதினர். ஆகவே, 1765-ல் முத்திரைச் சட்டம் (The Stamp Act) இயற்றினர். அதன்படி எல்லாப் பத்திரங்களும் முத்திரையிடப்பட்ட காகிதங்களில் எழுதப்பட வேண்டும் என்று கூறினர். இதுவரை பிரிட்டிஷ் அரசாங்கம் குடியேற்ற நாடுகளின்மீது நேரடி வரிகளை விதிக்க முற் பட்டதில்லை. உடனே குடியேற்ற நாடுகள், தங்களுடைய பிரதிநிதி களைக் கொண்டிராத பாராளுமன்றத்திற்குத் தங்கள்மீது வரி விதிக்கும் உரிமை இல்லை என்று கூறின.[1] கிரென்விலுக்குப் பிறகு அமைச்ச ரான ராக்கிங்ஹாம் (Rockingham) அச் சட்டத்தை ரத்து செய்தார். அதே நேரத்தில் குடியேற்ற நாடுகளின்மீது பிரிட்டிஷ் பாராளு மன்றத்திற்கு வரிவிதிக்கும் உரிமை உண்டு என்று சட்டத்தின் வாயிலாக அறிவித்தார். சார்லஸ் டவுன்ஷெண்டு (Charles Townshend) என்னும் நிதியமைச்சர், குடியேற்ற நாடுகளின் பாது காப்புக்காக அமைக்கப்படும் இராணுவம், கற்பற்படை ஆகியவற்றிற் காகச் செலவிடப்படும் தொகையைப் பெறத் தேயிலை போன்ற பொருள் களின்மீது வரிவிதித்தார். இவ் வரி, அமெரிக்கக் குடியேற்ற நாடு களின் துறைமுகங்களுக்குள் இப் பொருள்களைக் கொண்டுசெல்லும் போது வசூலிக்கப்பட்டது. ஆகவே, இதற்கு யாதோர் எதிர்ப்பும் இராது என்று எண்ணினர். ஆனல் இதையும் அவர்கள் எதிர்த்தனர். பல இடங்களில் கிளர்ச்சிகள் ஏற்பட்டன. இங்கிலாந்திலும் இதற்கு

[1] 'No taxation without representation'.

எதிர்ப்புகள் ஏற்பட்டன. அவரைப் பின்தொடர்ந்த நார்த் பிரபு (Lord North) புதிய தேயிலைச் சட்டம் ஒன்றை இயற்றினர். அதன்படி, இந்தியாவிலிருந்து அமெரிக்காவிற்குத் தேயிலையை நேராக எடுத்துச்செல்ல அனுமதி வழங்கப்பட்டது. இதனுல் தேயிலை யின் விலை குறைந்தது. அமெரிக்கக் குடியேற்ற நாடுகள், விலையைக் குறைத்துக் குடியேற்ற மக்களைத் தேயிலை வரியை ஏற்றுக்கொள்ளச் செய்வதற்குக் கையாளப்படும் தந்திரமாக அதனைக் கருதினர்கள். ஆகவே, பாஸ்டன் துறைமுகத்திற்குள் பல அமெரிக்கர்கள் செவ் விந்தியர்கள் வேடமணிந்து, தேயிலைக் கப்பல்கள் மீதேறித் தேயிலைக் கட்டுகளைக் கடலில் வீசி எறிந்தனர். இது 'பாஸ்டன் தேநீர் விருந்து' (Boston Tea Party) என்று கூறப்படுகிறது. உடனே அரசாங்கம் கடுமையான நடவடிக்கைகளை மேற்கொண்டது. அவைகளில் முக்கியமானது மாசாசுஸெட்ஸ் ஆட்சிமுறைச் சட்ட மாகும். அதன்படி, மாசாசுஸெட்ஸ் குடியேற்ற நாட்டிற்கு அளிக்கப் பட்ட உரிமைகள் ரத்து செய்யப்பட்டன. அதுவே போருக்கு உடனடி யான காரணமாயிற்று.

வியாபார அமைப்பு முறையில் இருந்த சீர்கேடுகள் போர் மூளக் காரணங்களாய் இருந்தன. அவ் வியாபார அமைப்புமுறை 17ஆம் நூற்றுண்டில் ஏற்படுத்தப்பட்டது. அம் முறை, குடியேற்றங்கள் அவைகளுடைய தாய்நாட்டின் நலன்களுக்காகவே ஏற்படுத்தப் பட்டவை என்ற கருத்தை அடிப்படையாகக் கொண்டிருந்தது. அதன் விளைவாகச் சில மூலப்பொருள்களும் பிரிட்டனுக்கு அனுப்பப்பட்டன. பிற நாடுகளுடன் குடியேற்ற நாடுகள் நேரடியான வியாபாரம் செய்ய இயலவில்லை. அந் நாடுகளுக்கு எடுத்துச் செல்லப்படும் பொருள் களும், அங்கிருந்து எடுத்துச் செல்லப்படும் பொருள்களும் பிரிட்டிஷ் கப்பல்களிலோ, அல்லது குடியேற்றங்களின் கப்பல்களிலோ எடுத்துச் செல்லப்பட்டன. குடியேற்ற நாடுகள் கப்பல் வசதி பெற்றிராததால் பிரிட்டிஷ் கப்பல்களிலே பொருள்கள் எடுத்துச் செல்லப்பட்டன. முதலில் இம் முறையை ஆங்கிலேயர்கள் கண்டிப்புடன் செயற்படுத்த வில்லை. ஆனுல், 18ஆம் நூற்றுண்டில் கண்டிப்புடன் செயற் படுத்த முனைந்தார்கள். ஆகவே, குடியேற்ற நாடுகள் கள்ளக் கடத்தலில் ஈடுபட்டன. இதை அறிந்த பிரிட்டிஷ் அரசாங்கம் கடுமையான நடவடிக்கைகளை மேற்கொண்டு கள்ள வாணிபத்தைத் தடுக்க முயன்றது. ஆகவே, குடியேற்ற நாடுகள் மனக்கசப்பு அடைந்தன.

கனடாவை பிரிட்டிஷ்காரர்கள் கைப்பற்றிய பிறகு ஃபிரெஞ்சுக் காரர்களால் குடியேற்ற நாடுகளுக்கு ஏற்படும் அபாயம் பெருமளவில் குறைந்தது. ஃபிரெஞ்சுக்காரர்கள் கனடாவில் ஆதிக்கம் பெற்றிருந்த வரை, குடியேற்ற நாடுகள் பிரிட்டிஷ் படைகளின் உதவியைப்

பெறுவதற்காக பிரிட்டிஷ் அரசாங்கத்திடம் பற்று மாருதவர்களா யிருந்தனர். பயம் குறைந்துவிட்டதால் பிரிட்டிஷ் அரசாங்கத்தை எதிர்க்கத் தலைப்பட்டார்கள்.

மேலும், குடியேற்ற நாடுகளுக்கும் பிரிட்டிஷ் அரசாங்கத்திற்கும் புதிதாகக் கைப்பற்றிய இடங்களைப் பகிர்ந்துகொள்வதில் வேறுபாடுகள் ஏற்பட்டிருந்தன. குடியேற்ற நாடுகள் தம் விருப்பம்போல் அந் நிலங்களை வாங்குவதற்கு முயன்றன. ஆனால், பிரிட்டிஷ் அரசாங்கம் அவ்வாறு வாங்குவதற்கு அனுமதி வழங்கவில்லை. மேற்கூறிய காரணங்களால் போர் மூண்டது.

மாசாசுசெட்ஸ் குடியேற்றப் பகுதியின் உரிமைகளை ரத்து செய்ததை அறிந்த குடியேற்ற நாடுகள், தங்களுடைய உரிமைகளைக் காத்துக்கொள்ள 1774-ல் பிலடெல்ஃபியா நகரத்தில் நடைபெற்ற மாநாட்டிற்குப் பிரதிநிதிகளை அனுப்பிவைத்தன. அதில் ஜார்ஜியா கலந்துகொள்ளவில்லை. பிரிட்டிஷ் அரசாங்கத்தின் புதுச் சட்டங்களை உடனடியாக ரத்து செய்யுமாறு கோரினார்கள். அவர்களுடைய கோரிக்கைகள் நிறைவேற்றப்படும்வரை பிரிட்டனுடன் வியாபாரம் செய்வதை நிறுத்தவேண்டும் என்று அம் மாநாட்டில் முடிவு செய்யப் பட்டது. பாஸ்டனில் நிலைநிறுத்தப்பட்டிருந்த பிரிட்டிஷ் படை, குடியேற்ற நாட்டவர்கள் போருக்கான பொருள்களைச் சேகரிப்பதைத் தடுக்க முற்பட்டது. அதனால் 1775-ல் லெக்ஸிங்டன் என்னுமிடத்தில் முதல் முறையாக பிரிட்டிஷ் படையும் குடியேற்ற நாட்டின் படையும் கைகலந்தன. இதற்கிடையில் இரண்டாவது மாநாடு ஒன்றைக் குடியேற்ற நாட்டினர் நடத்தினார்கள். அம் மாநாட்டில் குடியேற்ற நாடுகள் 1763-ல் தாம் இருந்த நிலையை மீண்டும் நிலைநிறுத்த இசைந்தன. அதற்குப் பதிலாக பிரிட்டிஷ் பாராளுமன்றம் குடியேற்ற நாடுகளுக்குச் சட்டம் இயற்றும் அதிகாரத்தை விட்டுவிடவேண்டும் என்று கோரியது. பிரிட்டிஷ் அரசரங்கம் அக் கோரிக்கையை நிராகரித்தது.

இதற்கிடையில் குடியேற்ற நாட்டினர் ஜார்ஜ் வாஷிங்டன் என்பவரை அமெரிக்கப் படையின் தலைவராக நியமித்தனர். ஜார்ஜ் வாஷிங்டன் வர்ஜீனியா குடியேற்ற நாட்டைச் சார்ந்தவர். அவர் ஒரு தோட்டப் பண்ணை முதலாளியாவார். திடசித்தமுடையவர். மேற் கொண்ட காரியத்தில் தம் முழுக் கவனத்தையும் செலுத்தி வெற்றி காணும் இயல்புடையவர். அதே நேரத்தில் பிரிட்டிஷ் படைத் தலைவராக அமர்த்தப்பட்ட சர் வில்லியம் ஹௌ (Sir William Howe) என்பவர் சிறந்த போர்வீரர் அல்லர். 1775-ல் பங்கர் ஹில் (Bunker Hill) என்னுமிடத்தில் சண்டை நடந்தது. அச் சண்டையின் முடிவில் அமெரிக்கர்கள் அவ்விடத்தினின்றும் துரத்தப்பட்டார்கள்.

கியூபெக்கைக் தாக்க அனுப்பப்பட்ட அமெரிக்கப் படையும் வெற்றி பெறவில்லை. ஆனால், வாஷிங்டன், ஹௌவை பாஸ்டனிலிருந்து துரத்திவிட்டார்.

1776 ஜுலை மாதம் 4ஆம் தேதி மூன்ருவது அமெரிக்க மாநாடு (Congress) பிலடெல்ஃபியாவில் கூடியது. அம் மாநாட்டில் சுதந்திர அறிக்கை வகுத்து இயற்றப்பட்டது. அவ்வறிக்கையில் எல்லா மக்களும் சில உரிமைகளைப் பிறப்புரிமையாகக் கொண்டுள்ளார்கள் என்றும், அவ்வுரிமைகளைக் காப்பது அரசாங்கத்தின் கடமை என்றும், அவ்வுரிமைகளைக் காக்கத் தவறிய அரசாங்கத்தினை மக்கள் ஒழிப்பதற்கு உரிமை பெற்றிருக்கிறுர்கள் என்றும், ஆகவே அமெரிக்கக் குடியேற்ற நாடுகள் சுதந்திர நாடுகளாக இனி இயங்க உரிமை உண்டு என்றும், அந் நாடுகளுக்கும் பிரிட்டிஷ் அரசாங்கத்திற்கும் இடையேயுள்ள அரசியலைச் சார்ந்த தொடர்புகள் அனைத்தும் துண்டிக்கப்பட்டுவிட்டன என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. இதற்கிடையே ஹௌ நியூயார்க்கைக் கைப்பற்றினுர். பிலடெல்ஃபியாவும் அவர் வசமாயிற்று. ஆனால், அவர் அமெரிக்கப் படையைத் தொடர்ந்து துரத்திச் செல்லவில்லை. அவ்வாறு சென்றிருப்பாரேயானுல், பட்டினியாலும் நோயாலும் அவதிப்பட்டுக் கொண்டிருந்த அமெரிக்கப் படைகளை எளிதாக வென்றிருக்க முடியும்.

1777-ல் பிரிட்டிஷ் படைத்தலைவரின் திறமைக்கேடு வாஷிங்டனுக்குப் பெருவெற்றியைக் கொடுத்தது. ஆங்கிலேயர்கள் பர்காயின் என்னும் படைத்தலைவரைக் கனடாவினின்றும் தெற்கு நோக்கிச் சென்று ஹௌவுடன் சேர்ந்துகொள்ளுமாறு கட்டளையிட்டனர். ஹௌ வடக்கு நோக்கிச் சென்று பர்காயினைச் சந்திக்கும்படி ஏற்பாடு செய்யப்பட்டது. ஆனால், ஹௌ பிலடெல்ஃபியாவைக் கைப்பற்றுவதில் காலத்தை வீணுக்கினுர். இதற்குள்ளாக பர்காயின், திட்டத்தின்படி ஹட்சன் தீரத்தில் வந்துசேர்ந்தார். எல்லாத் திசைகளினின்றும் அவர் தாக்கப்பட்டதாலும், ஹௌ குறித்த காலத்தில் அவருக்குத் துணையாக வராத காரணத்தாலும் சாரடோகா (Saratoga) என்னுமிடத்தில் சரணடைந்தார்.

இவ் வெற்றிச் செய்தியை அறிந்த ஃபிரான்சு அமெரிக்கக் குடியேற்ற நாடுகளுடன் சேர்ந்து பிரிட்டனுக்கு எதிராகப் போரிடத் தீர்மானித்தது. ஃபிரெஞ்சுக் கப்பற்படை மேற்கிந்தியத் தீவுகளைத் தாக்கியதால், பிரிட்டிஷ் கப்பற்படை அவைகளைக் காப்பாற்ற முனைந்தது. மேலும், ஃபிரெஞ்சுக் கப்பற்படை, பிரிட்டனினின்றும் அமெரிக்காவில் போர்புரியும் பிரிட்டிஷ் படைகளுக்கு அனுப்பப்படும் வலிமையூட்டும் பொருள்கள் விரைவில் சேரவொட்டாமல் தடுத்தது. ஸ்பெயினும் இப் போரில் இங்கிலாந்துக்கு எதிராகக் கலந்து கொண்டது. மைனுர்கா என்னும் தீவு பிரிட்டனிடமிருந்து கைப்

பற்றப்பட்டது. டச்சுக்காரர்களும் அமெரிக்கக் குடியேற்ற நாடுகளுடன் சேர்ந்துகொண்டனர். நடுநிலை நாடுகள் பிரிட்டிஷ் கப்பற்படை தரும் தொந்தரவுகளைத் தாங்கமாட்டாமல் படைதரித்த நடுநிலைமை நாடுகள் கூட்டிணைவினை ஏற்படுத்தின. அதில் ருஷ்யா, ஸ்வீடன், டென்மார்க் ஆகிய நாடுகள் சேர்ந்தன.

இதற்கிடையில் பிரிட்டிஷ் படைத்தலைவர் மாற்றப்பட்டார். புதிய தலைவர் ஹென்றி கிளின்டன் (Henry Clinton), சார்ல்ஸ்டன் (Charleston) என்னுமிடத்தைக் கைப்பற்றினர். ஆனால், பிரிட்டிஷ் படைத்தலைவர் காரன்வாலிஸ் தம் படையுடன் யார்க்டவுனில் சரணடைந்தார். இதனுடன் அமெரிக்காவில் போர் முடிவுற்றது. ஆனால், ஃபிரான்சுடனும் ஸ்பெயினுடனும் போர் தொடர்ந்து நடைபெற்றது. ஜிப்ரால்டரைக் கைப்பற்றும் முயற்சியை பிரிட்டிஷ் காரர்கள் தோற்கடித்தனர். ஃபிரெஞ்சுக் கப்பற்படை மேற்கிந்தியத் தீவுகளுக்கு அருகே தோல்வியுற்றது. பிரிட்டனின் பெருமை அதனால் புத்துயிர் பெறலாயிற்று.

1783-ல் வார்சேயி (Versailles) உடன்படிக்கை வாயிலாகப் போர் முற்றுப்பெற்றது. அதன்படி, பிரிட்டிஷ்காரர்கள் 'ஐக்கிய அமெரிக்க நாடுகள்' என்ற பெயர்கொண்ட அமெரிக்கக் குடியேற்ற நாடுகளின் சுதந்திரத்தை அங்கீகரித்தனர். அந் நாடுகளுக்கும் கனடாவுக்கும் இடையேயுள்ள எல்லை வரையறுக்கப்பட்டது. ஃபிரான்சு, கோரி, செனீகல், மேற்கிந்தியத் தீவுகளில் சில (Tobago and St. Lucia) ஆகியவற்றையும், ஸ்பெயின், ஃபிலோரிடா, மைனர்கா ஆகியவற்றையும் மீட்டும் பெற்றனர்.

அமெரிக்க சுதந்திரப் போர் ஏற்படுத்திய விளைவுகளில் முக்கியமானது 'ஐக்கிய அமெரிக்க நாடு' ஏற்படுத்தப்பட்டதேயாகும்: அந் நாடு மக்கள் ஆட்சித் தலைமையுரிமையை அடிப்படியாகக் கொண்டு அமைக்கப்பட்டது. முதலில் அது உறுதியாக இணைக்கப்படாத நாடுகளின் கூட்டு அமைப்பாக அமைந்திருந்தது. குடியேற்ற நாடுகளின் பிரதிநிதிகள் அடங்கிய காங்கிரஸ் என்று அழைக்கப்பட்ட சபையொன்று ஏற்படுத்தப்பட்டிருந்தது. அதில் அங்கம் வகித்திருந்த நாடுகளின்மீது காங்கிரஸ் அதிகாரம் பெற்றிருக்கவில்லை. ஆனால், அந் நாடுகளுக்குச் சிபாரிசு செய்யும் உரிமையைப் பெற்றிருந்தது. ஆனால், சிபாரிசுகளை ஏற்கவோ மறுக்கவோ அந் நாடுகளுக்கு உரிமை இருந்தது. அத்தகைய அமைப்பு யாருக்கும் திருப்தியளிக்காததால், 1787-ல் பிலடெல்ஃபியாவில் அரசியலமைப்பைப் புது மாதிரியாக நிர்ணயம் செய்வதற்காகப் பிரதிநிதிகள் அடங்கிய சபையொன்று கூட்டப்பட்டது. அச் சபையில் அனுபவம் முதிர்ந்த பெரியார்கள் பலர் கலந்து கொண்டனர். அக் கூட்டத்தில் மன்னராட்சி ஏற்படுத்த

வேண்டும் என்றும், வாஷிங்டன் மன்னராக வேண்டும் என்றும் சிலர் யோசனை கூறினர்கள். ஆனல், வாஷிங்டன் அதை ஏற்க வில்லை. பலத்த விவாதங்களுக்குப் பிறகு அரசியலமைப்புச் சட்டம் உருவாக்கப்பட்டது. அரசியல் அமைப்புச் சட்டம் கூட்டாட்சி அரசை அந் நாட்டில் ஏற்படுத்தியது. பலவகையான கருத்து களையும் உரிமைகளையும் கொண்ட பலவகையான இனத்தவர்களைச் சில பொதுக் காரியங்களுக்காக ஒரே அரசாங்கத்தின்கீழ்க் கொண்டு வருவதற்கு இவ்வாட்சிமுறை பெரிதும் பயன்பட்டது. அமெரிக்காவில் ஏற்படுத்தப்பட்ட கூட்டாட்சி முறையைப் பல நாடுகள் பின்பற்றத் தொடங்கின. மேலும், 1789ஆம் ஆண்டின் அரசியல் சட்டம் அமெரிக்காவில் குடியரசை ஏற்படுத்தியது. நான்கு ஆண்டு களுக்கு ஒரு முறை தேர்ந்தெடுக்கப்படும் ஜனதிபதி, அக் குடியரசின் தலைவராக ஏற்றுக்கொள்ளப்பட்டார். அவர் அமைச்சர்கள் துணைகொண்டு ஆட்சி செலுத்தவும், அவ்வமைச்சர்கள் அவருக்குப் பதில் சொல்லக் கடமைப்பட்டவர்களாயிருத்தல்வேண்டும் என்றும் ஏற்பாடு செய்யப்பட்டது. சட்டங்களை இயற்ற இரு சபைகள் கொண்ட—கூட்டரசு உறுப்பு நாடுகளின் பிரதிநிதிகள் அடங்கிய சபை, (Senate), மக்களின் பிரதிநிதிகள் அடங்கிய சபை (House of Representatives)—சட்டசபை ஏற்படுத்தப்பட்டது. அது சட்ட மியற்றவும், நிதிநிலையைக் கட்டுப்படுத்தவும் அதிகாரம் பெற்றது. அரசியலமைப்புச் சட்டத்தைப் பாதுகாக்க நீதிமன்றம் ஒன்றும் ஏற்படுத்தப்பட்டது. இச் சட்டம் கூட்டாட்சி அமைப்பில் அங்கம் வகிக்கும் நாடுகள் முன்னர் சமர்ப்பிக்கப்பட்டது. அவைகளின் இசைவு பெற்றபின்னர் 1789-ல் நடைமுறைப்படுத்தப்பட்டது. வாஷிங்டன் முதல் ஜனதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

முதலில் அமெரிக்கக் கூட்டரசு உறுப்பு நாடுகளில் (States) இயங்கிவந்த சட்டசபைகள், மக்களாட்சிக் கருத்துகளின்படி அமைக்கப்பட்டிருக்கவில்லை. வாக்குரிமை ஆண்களுக்குமட்டுமே வழங்கப்பட்டிருந்தது. அவர்களுள் நிலம் படைத்தவர்களும், பொருள் படைத்தவர்களுமே அவ் வுரிமையைப் பெற்றிருந்தார்கள். சில இடங்களில் மதம் காரணமாக வாக்குரிமை சிலருக்கு அளிக்கப்பட வில்லை. அரசாங்கப் பதவிகளும் பணமுடையோருக்கே அளிக்கப் பட்டன. ஆனல், நாளடைவில் ஒவ்வொரு கூட்டரசு உறுப்பு நாட்டிலும் மக்களாட்சி முழுமையாக ஏற்படுத்தப்பட்டது.

அமெரிக்க சுதந்திரப் போர் ஃபிரெஞ்சுப் புரட்சிக்கு ஒரு காரணமாய் அமைந்தது என்று முன்னரே குறிப்பிட்டுள்ளோம். அப்போரின் வாயிலாக ஃபிரான்சு பிரிட்டன்மீது வஞ்சம் தீர்த்துக் கொள்ள முடிந்தது. 1763-ல் இழந்த இடங்களில் சிலவற்றை மீண்டும் பெற்றது.

அமெரிக்கப் புரட்சி முதலாவது ஆங்கிலேயப் பேரரசை அழித்து விட்டது. குடியேற்ற நாட்டுக் கொள்கையை மாற்றிவிட அது காரணமாயிருந்தது. அதன் விளைவாகத் தடையிலா வர்த்தகக் கொள்கை பலப்படுத்தப்பட்டது. பிரிட்டிஷ்காரர்கள் தங்களது கவனத்தை வேறு கண்டங்கள் பக்கம் திருப்பலாயினர்.

பிரிட்டிஷ் அரசியலில் இப் போர் குறிப்பிடத்தக்க மாற்றத்தை ஏற்படுத்தியது. மூன்ருவது ஜார்ஜ் மன்னருடைய நேரடி ஆட்சியை ஒழித்தது. அயர்லாந்தில் ஆங்கிலேய ஆட்சிக்கு எதிராகத் தொடங் கப்பட்ட சுதந்திர இயக்கம் மேலும் வலுவடைந்தது.

எல்லாவற்றிற்கும் மேலாக அமெரிக்க சுதந்திரப் போரின் விளைவாய் அரசியல் சார்ந்த புதிய கருத்துகள் பல உருவாயின. அக்கருத்துகளைப் பிற நாடுகள் பின்பற்றலாயின. அவைகளுள் குறிப்பிடத்தக்க கருத்துகள் பின்வருவனவாகும்: ஆட்சியை மக்களே நடத்தவேண்டும் என்ற கருத்து; பல்வேறு கருத்துகளையுடைய மக்களைக் கொண்ட சிறு நாடுகள், தங்களுடைய தனித்தன்மை யினையும் உரிமையினையும் இழக்காமல், பொதுக் காரியங்கள் சில நிறைவேற்றுவதற்காக ஒன்றுசேர வாய்ப்பைத்தரும் கூட்டாட்சி முறை; அரசியல் அமைப்புச் சட்டப்படி ஆட்சி நடத்தும் முறை; சட்டம் இயற்றுதல், சட்டத்தை நடைமுறைப்படுத்துதல், சட்டத்தை மீறுபவரைத் தண்டித்தல் ஆகிய அரசாங்கக் காரியங்கள் தனித்தனி நபர்களால் அல்லது குழுக்களால் மேற்கொள்ளப்பட வேண்டும். கடைசியாகச் சொல்லப்பட்ட கருத்து மான்தெஸ்கியூவினுடையதாகும். எனினும், அமெரிக்காவில்தான் அது முதன் முதலாக வெற்றிகரமாய் நடைமுறைப்படுத்தப்பட்டது என்பதை நாம் கருத்தில் கொள்ள வேண்டும்.

## லத்தீன் அமெரிக்கா

15ஆம் நூற்ருண்டிலும் 16ஆம் நூற்ருண்டிலும் மேற்கொள்ளப் பட்ட கடற்பயணங்களின் விளைவாக ஐரோப்பியர்களில் சிலர் வடக்கு, நடு, தென் அமெரிக்கா ஆகிய நாடுகளில் அவர்களுடைய ஆதிக் கத்தை ஏற்படுத்திஞர்கள் என்று நாம் முன்னர் கவனித்தோம். ஆங்கிலேயர்கள், டச்சுக்காரர்கள், ஃபிரெஞ்சுக்காரர்கள் கைப்பற்றி யிருந்த கயாஞ நீங்கலாக ஏனைய தென் அமெரிக்க நிலப்பகுதிகளும், நடு அமெரிக்காவில் ஆங்கிலேயர் வசம் இருந்த ஹோண்டூராஸ் பகுதியைத் தவிர ஏனைய நடு அமெரிக்க நிலப்பகுதிகளும், மேற்கிந் தியத் தீவுகளைத் தவிர ஏனைய வட அமெரிக்காவின் தென்பகுதிகளும் 'லத்தீன் அமெரிக்கா' என்று அழைக்கப்படுகின்றன. அப் பகுதி களில் ஸ்பானியர்களும் போர்த்துகீசியரும் தங்களுடைய ஆதிக்கத்தை ஏற்படுத்திஞர்கள் என்று முன்னரே அறிந்திருக்கிரும். 19ஆம் நூற்ருண்டில் அப் பகுதிகளில் சுதந்திர இயக்கம் உருவாகியது. அச்

சுதந்திர இயக்கம் தற்கால வரலாற்றில் சிறப்பிடம் பெற்றிருக்கிறது. அவ்வியக்கம் தேசியக் கருத்து, குடியாட்சிக் கருத்து ஆகியவற்றின் அடிப்படையில் நிறுவப்பட்ட ஆட்சி முறையை ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டிருந்தது. அதன் விளைவாகப் பல இடங்களிலும் மக்களாட்சி நிறுவப்பட்டது. ஆகவே, அவ்வியக்கத்தின் வரலாற்றினை இனிக் கவனிப்போம்.

19ஆம் நூற்றுண்டின் தொடக்கத்தில் லத்தீன் அமெரிக்காவின் பெரும்பகுதி ஸ்பானியர்வசம் இருந்தது. பிரேசில்மட்டுமே போர்த்து கீசியரின் ஆதிக்கத்துக்குட்பட்டிருந்தது. ஸ்பானிய அமெரிக்க நாட்டில் நான்கு பெரும் பிரிவுகள் ஏற்படுத்தப்பட்டன. நியூ ஸ்பெயின், நியூ கிரானெடா, பெரு, ரியோ தெ லா பிலாடா (Rio de la Plata) ஒவ்வொன்றிலும் ஒரு வைசிராய் நியமிக்கப் பட்டார். அவர் பல அதிகாரங்கள் பெற்றிருந்தார். ஆட்சிப் பொறுப்புடன், படைகளின் தலைமைப் பொறுப்பும் அவரிடம் விடப் பட்டிருந்தது. நிதியைப் பற்றிய விவகாரங்களை அவரே கட்டுப் படுத்தி வந்தார். கியூபா, குவாடிமாலா (Guatemala), சிலி, வெனிசுலா ஆகியவை 'காப்டன்சி ஜெனரல்' (Captaincy General) என்ற பெயர்கொண்ட ஆட்சிப்பகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருந்தன. அவை ஒவ்வொன்றும் ஒரு காப்டன் ஜெனரலைத் தலைவராகக் கொண்டிருந்தன. அவைகளைவிடச் சிறிய ஆட்சிப் பகுதிகள் கவர்னர் என்பவரின் ஆளுகைக்குட்படுத்தப்பட்டன. இவ்வதிகாரிகள் அனை வரும் சிறப்பாகப் பணியாற்றுவதற்காகப் பல ஸ்தாபனங்கள் ஏற்படுத்தப்பட்டிருந்தன. அவைகளில் ஒன்று ஆடியென்சியா (Audiencia) என்பதாகும். அது பெரும்பாலும் நீதிமன்றமாகச் செயற்பட்ட போதிலும், மேற்கூறிய அதிகாரிகளின் ஆலோசனை சபையாகவும், அவர்களைக் கண்காணிக்கும் சபையாகவும் விளங்கியது. இவ்வாறு இருந்தும், வைசிராய்களில் பலர் கொடுங்கோலர்களாகவும், ஊழல் மலிந்தவர்களாகவும் காணப்பட்டனர். ஆகவே, அவர்களுடைய ஆட்சியினின்றும் விடுதலை பெற்று, மக்கள் உரிமைகளைக் காக்கும் வகையில் ஆட்சிமுறையை அமைக்கப் பல தலைவர்கள் முன்வந்தனர். பிரேசிலிலும் மேற்கூறியவாறே ஆட்சி நடைபெற்றுவந்தது. அதன் தலைவரான கவர்னர்-ஜெனரலின் கீழ்ப் பல காப்டன்கள் பணியாற்றி னர். காப்டன்கள் பெரும் அதிகாரங்கள் பெற்றிருந்தார்கள். மேலும், கவர்னர்-ஜெனரலும் அவருக்குக் கீழிருந்த அதிகாரிகளும், பிற் போக்காளர்களாகவும், திறமையற்றவர்களாவும், ஊழல் நிறைந்தவர் களாகவும் இருந்தார்கள். மைய அரசு பலமற்றதாக இருந்ததால் புரட்சி வெற்றிகரமாக நடைபெறலாயிற்று.

சமுதாய அமைப்புமுறையில் இருந்த சீர்கேடுகள் புரட்சிக்குக் காரணங்களாய் அமைந்தன. ஸ்பானிய அமெரிக்காவில் மக்கள்

நான்கு பிரிவுகளாக இருந்தனர். ஸ்பெயினில் பிறந்து அமெரிக்காவில் தங்கிய ஸ்பானியர்கள் எல்லா உயர்பதவிகளையும் வகித்திருந்தனர். அவர்கள் மத ஸ்தாபனம், படை, பல்கலைக்கழகங்கள் ஆகியவற்றையும் தங்களுடைய கட்டுக்குள் வைத்திருந்தனர். அவர்கள்தாம் பெரிய வியாபாரிகளாகவும் விளங்கிவந்தனர். அவர்கள் மற்றவரைத் தாழ்ந்தவர்களாகக் கருதினுர்கள். அவர்களுக்கு அடுத்தவர்கள் கிரியோல் என்று அழைக்கப்பட்டனர். அவர்கள் அமெரிக்காவில் பிறந்த ஸ்பானியர்களாவர். அவர்கள் விளைநிலங்களையும் சுரங்கங்களையும் அதிக அளவில் பெற்றிருந்தனர். அரசியல், மதம் ஆகிய துறைகளில் சிறுபதவிகளை வகித்திருந்தனர். நகரசபைகளில் அங்கத்தினர்களாகப் பணியாற்றினுர்கள். ஐரோப்பாவில் பிறந்த ஸ்பானியர்களுக்குச் சிறப்புரிமைகள் வழங்கப்பட்டதால் அவர்கள் வெறுப்படைந்திருந்தார்கள். அவர்கள் ஸ்பானிய ஆட்சிக்கு எதிராக ஏற்பட்ட கிளர்ச்சிகளின் தலைவர்களாக விளங்கினுர்கள். அவர்களுக்கு அடுத்தாற்போல் மெஸ்டிஜோஸ் என்னும் வகுப்பினர் இருந்தார்கள். அவர்கள் ஸ்பானியர்களுக்கும் இந்தியர்களுக்கும் பிறந்தவர்களாவர். அவர்கள் சிறு தொழில்களிலும், பயிர்த்தொழிலிலும் ஈடுபட்டிருந்தனர். பெரும்பாலான மக்கள் இந்தியர்கள் இனத்தைச் சார்ந்தவராவார்கள். அவர்கள் மிகவும் ஏழ்மையான நிலையில் இருந்தனர். கடுமையான உழைப்புத் தேவைப்படும் வேலைகளில் அவர்கள் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். கிறிஸ்துவ மதஸ்தாபனம் மதத்தைப் பரப்பக் கடுமையான முறைகளைக் கையாண்டது. இதே மாதிரியான சமூக அமைப்பு பிரேசிலிலும் இருந்தது. சுருங்கக் கூறுமிடத்து, ஐரோப்பாவில் பிறந்த ஸ்பானியர், போர்த்துகீசியர் ஆகியோர்களையும் அமெரிக்காவில் பிறந்த ஸ்பானியர், போர்த்துகீசியர் ஆகியோர்களையும் பிரித்து, அவர்களுள் முதலாவது கூறப்பட்டவர்களுக்குத் தனிச் சலுகைகளைக் காட்டிய அரசாங்கத்திற்கு எதிராகவே கிளர்ச்சிகள் ஸ்பானிய தென் அமெரிக்காவிலும் பிரேசிலிலும் தோன்றின என்று கூறுவது மிகையாகாது.

மேலும், வியாபாரத் துறையிலும் இம் மக்களிடம் மனக்கசப்பு ஏற்பட்டிருந்தது. குடியேற்ற நாடுகள் தாய்நாடுகளின் நன்மைக்காகவே பயன்படுத்தப்பட்டன. அவைகள் பிற நாடுகளுடன் வியாபாரம் செய்வதைத் தாய்நாட்டின் அரசாங்கம் தடுத்தது. சில பொருள்களை விற்கும் உரிமையை அரசாங்கமே பெற்றிருந்தது. குடியேற்ற நாடுகளில் தொழில்கள் பெருகுவதைத் தடைசெய்தது. அதற்காக மூலப்பொருள்களைத் தாய்நாட்டிற்கு ஏற்றுமதி செய்யுமாறு கட்டளையிட்டது. குடியேற்ற நாடுகளின் தொழில்கள் தாய்நாட்டுத் தொழில்களுடன் போட்டியிடுவதைத் தடுக்க, குடியேற்றத் தொழில்களின்மீது அதிக வரி விதித்திருந்தது. மேலும் குடியேற்ற,

நாடுகளில் வாழும் மக்கள்மீது ஏராளமான வரி விதிக்கப்பட்டிருந்தது. அதனால் அம் மக்கள் பொருளாதாரத் துறையில் முன்னேற்றம் அடைய வாய்ப்பில்லாது போயிற்று.

மேலும், லத்தீன் அமெரிக்காவில் முற்போக்குக் கருத்துகள் நுழை ஆரம்பித்தன. பல்கலைக்கழகங்கள் ஏற்படுத்தப்பட்டிருந்த தால், அவைகள் மூலமாக அறிஞர்கள் பலரின் கருத்துகள் சில மக்களிடம் பரவின. அக் காலத்தில் செய்தித்தாள்கள் வெளியிடப் பட்டன. மேலும் பல அச்சகங்கள் தோன்றின. அவைகள் புரட்சிக் கருத்துகளை மக்களிடம் பரப்புவதற்குப் பெருமளவில் உதவி செய்தன. செய்தித்தாள்கள், சிறு வெளியீடுகள் அக் காலத்தில் நடைபெற்ற புரட்சிகளைப்பற்றி விரிவாக எடுத்துக்காட்டின. அமெரிக்கச் சுதந்தரப் போரும் ஃபிரெஞ்சுப் புரட்சியும் அவர்களுக்கு வழிகாட்டியாக அமைந்தன.

ஸ்பெயினை நெப்போலியன் கைப்பற்றியதே புரட்சிக்கு உடனடி யான காரணம் ஆகும். ஸ்பெயின் அரசு நெப்போலியன் கைவச மாயிற்று என்ற செய்தியை ஸ்பானியக் குடியேற்ற நாடுகளுக்கு ஃபிரெஞ்சுத் தூதுவர்களின் வாயிலாக அறிவிக்கப்பட்டது. அத்துடன் ஃபிரெஞ்சு அரசாங்கம், அங்கு ஆட்சி புரிந்த வைசிராய், காப்டன் ஜெனரல்கள், கவர்னர்கள், மற்றுமுள்ள அதிகாரிகளை ஸ்பெயின் நாட்டின் புதிய அரசரான ஜோசப் போனபார்ட், அவர்கள் தொடர்ந்து பணியாற்ற அனுமதி வழங்கிய ,செய்தியையும் அறிவித்தது. இதனால் ஸ்பானிய மக்கள் கொதித்தெழுந்தனர். ஆகவே, முதன்முதலில் கிளர்ச்சி ஃபிரான்சுக்கு எதிராக ஏற்பட்டது. என்பதை நாம் கருத்தில் கொள்ளவேண்டும். ஸ்பெயினில் ஃபிரான்சுக்கு எதிராகக் கிளர்ச்சி ஏற்பட்டபோது, ஸ்பானிய அமெரிக்கர்கள் அக் கிளர்ச்சிக்குப் பேராதரவு அளித்தார்கள். நாளடைவில் இங்கு ஏற்பட்ட கிளர்ச்சிகள் ஸ்பெயினுக்கு எதிராகத் திருப்பப்பட்டன.

முதன்முதலில் கிளர்ச்சி சார்காஸில் (Charcas) தொடங்கியது. கிரியோல்களைக் கொண்ட ஆட்சி ஏற்படுத்தப்பட்டது. ஆனால், விரை வில் கிளர்ச்சி அடக்கப்பட்டது. லாபாசிலும் (Lapaz) கிரியோல்களைக் கொண்ட ஆட்சி அமைக்கப்பட்டது. கீடோவின் (Quito) தலைவர் பதவியை இழந்தார். ரியோ தெ லா பிலாடா (Rio de la Plata) என் னும் பகுதியில் ஸ்பானியரின் ஆட்சி அழிக்கப்பட்டது. அங்குள்ள சார்காஸ் ஒன்றில்தான் ஸ்பானியர்கள் தங்களுடைய ஆட்சியை நிலை நிறுத்த முடிந்தது. இதற்கிடையே பிலாடாவில் ஸ்பானியர்களை எதிர்த்த மாகாணங்களை ஒன்றுசேர்க்க முயற்சி செய்யப்பட்டது. ஆனால், அம் முயற்சி வெற்றி பெறவில்லை. ஆனால் லா பிலாடா

பகுதியில் ஆர்ஜென்டைனு, உருகுவே, பராகுவே என்ற தனி நாடுகள் அமைக்கப்பட்டன. மேலும், பெருவிலிருந்த ஸ்பெயின் அரசருடைய ஆதரவாளர்கள் புதிய ஆட்சிக்குத் தொல்லே கொடுத்து வந்தனர். அவர்களே ஒழித்தாலொழிய பிலாடா சுதந்தரமாக இருக்க முடியாது என்ற கருத்து வளரலாயிற்று. இதற்கிடையில் சான்மார்டின், பிலாடாவின் ஆட்சிக்கு ஆதரவளித்தார்.

மார்டின் புரட்சித் தலேவர்களுள் ஒருவர். 1778-ல் இவர் லா பிலாடா என்னுமிடத்தில் பிறந்தார். அவருடைய தந்தையார் இராணுவத்தில் சேர்ந்திருந்ததால், இருவரும் இராணுவத்தில் சேர்த்துவிடப்பட்டார். ஸ்பெயினில் சிலகாலம் வாழ்ந்துவந்தார். ஸ்பெயின் படையில் சேர்ந்து வட ஆப்பிரிக்காவில் சண்டை செய்தார். தீபகற்பப் போரில் நெப்போலியனுக்கு எதிராகச் சண்டை செய்தார். இராணுவ விவகாரங்களே மிகுந்த அக்கறையுடன் படித்துவந்தார். 1812-ல் அவர் தாய்நாடு திரும்பினுர். அப்பொழுது நடந்து கொண்டிருந்த கிளர்ச்சிகளில் ஈடுபட்டார். அவர் பிலாடா அரசாங்கத் திற்குப் புரிந்த உதவியின் காரணமாக குயோ (Cuyo) என்னும் பகுதிக்கு கவர்னராக நியமிக்கப்பட்டார். நன்னெறிகளேயே கடைப்பிடித்துவந்தார். எவ்வித இன்னல்களேயும் பொறுமையுடன் சகித்துக்கொள்வார். எவ்வித வேலேயை மேற்கொண்டாலும், அதைப் பொறுமையுடனும் ஒழுங்காகவும் செய்துமுடிக்கும் திறனுடையவர். ஆகவே, அவர் பத்தொன்பதாம் ஆண்டில் தோன்றிய தலேசிறந்த புரட்சித் தலேவர்களில் ஒருவராகக் கருதப்படுகிருர். நாட்டின் நன்மைக்காகவும் சுதந்திரத்திற்காகவுமே போரிட்டவர். சுயநலத்தில் அவருக்குப் பற்றேயில்லே எனக் கூறலாம்.

வெனிசுலாவிலும் கிளர்ச்சி ஏற்பட்டது. அதை அறிந்த மற்ருெரு தலேவர் (Mirand) நாடு திரும்பிக் கிளர்ச்சியில் பங்கு கொள்ள முற்பட்டார். அவர் 1756-ல் காரகாஸ் என்னுமிடத்தில் பிறந்தார். ஐரோப்பாவில் பல ஆண்டுகள் செலவழித்தார். ஐரோப்பிய மன்னர்கள், அமைச்சர்கள் ஆகியோர்களில் பலரை அறிந்திருந்தார். அவர் ருஷ்யாவின் பேரரசியான காதரைன் என்பவரின் அன்பைப் பெற்றிருந்தார். ஃபிரெஞ்சுப் புரட்சியின் போது ஃபிரெஞ்சுப் படையில் சேர்ந்து, சண்டையிட்டார். அமெரிக் காவில் சுதந்திரப் போர் ஏற்பட்டபோது, ஸ்பெயின் அமெரிக்கர் களுக்கு உதவியாக அனுப்பிய படையில் கலந்துகொண்டார். உலக வரலாற்றில் சிறந்து விளங்கும் இரு புரட்சிகளில் ஈடுபட்டிருந்ததால், அப் புரட்சிகளின் கருத்துகளே அவர் பெற்றிருக்க ஏதுவாக இருந்தது. அதற்கு முன்னரே அவர் ஸ்பானிய அமெரிக்கா முழுவதும் சுதந்திரம் பெறவேண்டும் என்ற கருத்தைக் கொண்டிருந்தார். அதன்பிறகு பல இரகசியக் குழுக்களே ஏற்படுத்தினுர். அவர் நோக்கம் நிறைவேறு

வதற்காக அயல்நாட்டினருடைய உதவியை நாடினர். இறுதியில் ஒரு படையை அமெரிக்காவினின்றும் வெனிசுலாவிற்கு நடத்திச் சென்றார். ஆனால், அவர் முயற்சி வெற்றிபெறவில்லை.

வெனிசுலாவில் கிளர்ச்சி ஏற்பட்டதை அறிந்த மிராண்டா நாடு திரும்பினர். அதே நேரத்தில் சைமன் பொலீவர் என்ற மற்றொரு பெருந் தலைவர் வெனிசுலாவிற்குத் திரும்பினர். இவர் மார்டினைப்போலவோ அல்லது மிரண்டாவைப்போலவோ இராணுவத்தில் பணியாற்றியவர் அல்லர். செல்வம் கொழித்த குடும்பத்தில் பிறந்திருந்தாலும் வறுமையுற்ற நிலையில் இறந்தார். அவர் தம் செல்வம் முழுவதையும் நாட்டின் விடுதலைக்காகச் செலவழித்தார். செல்வம் ஏராளமாகப் பெற்றிருந்ததால் அவர் வெளிநாடுகளில் கல்வி பயில முடிந்தது. கியூபா, மெக்ஸிகோ, ஃபிரான்சு ஆகிய நாடுகளில் சுற்றுப்பயணம் செய்திருந்தார். சில காலம் ஸ்பெயினில் வாழ்ந்துவந்தார். அதனால் ஊழல் நிறைந்த ஸ்பானிய அரசருடைய ஆட்சிமுறையை நேரடியாகப் பார்த்து உணர்ந்துகொள்ள முடிந்தது. 1802-ல் அவர் தம் நாடு திரும்பினர். சில காலம் கழித்து அவர் தமது மனைவியை இழந்தார். அதனால் ஏற்பட்ட வருத்தத்தைப் போக்குவதற்காக ஐரோப்பா திரும்பிச் சென்றார். களியாட்டங்களில் ஈடுபட்டும் அவருடைய வருத்தம் குறையவில்லை. ஆகவே, அவர் தற்கொலை செய்துகொள்ளத் துணிந்தார். அப்பொழுது தற்செயலாக அவருடைய ஆசிரியரைச் சந்திக்க நேர்ந்தது. அதன் விளைவாக உயிரைப் போக்கிக்கொள்ளும் முயற்சியைக் கைவிட்டு நாட்டின் விடுதலைக்காக உயிரையே அர்ப்பணிக்கத் துணிந்தார். அதற்காக ஒரு கப்பற்படையையும் ஒரு காலாட்படையையும் திரட்டினர். மிக ஒல்லியான உருவத்தைப் பெற்றிருந்தாலும், மிகக் கொடூரமாக நடக்கும் தன்மையைப் பெற்றிருந்தார். அவர் தென் அமெரிக்காவின் வாஷிங்டன்[1] என்று அழைக்கப்படுகிறார்.

மிராண்டாவும் பொலீவரும் கலந்து வெனிசுலாவைச் சுதந்திர நாடாக்கத் திட்டமிட்டனர். அதற்கென ஓர் அரசியலமைப்புத் திட்டத்தையும் வகுத்தார்கள். இத் திட்டம் அமெரிக்காவின் அரசியல் திட்டத்தையும், ஃபிரெஞ்சுக்காரர்களின் மனித உரிமைகளின் அறிக்கையையும் அடிப்படையாகக் கொண்டிருந்தது. ஆனால், ஸ்பானிய அரசாங்கம் அக் கிளர்ச்சியை அடக்க முற்பட்டது. அதுபோது மிராண்டாவிற்குப் பெரும் அதிகாரங்கள் வழங்கப் பட்டன. போரில் மிராண்டா தோல்வியுற்றார். ஆகவே, பகைவர்

[1] H. G. Wells, 'The Outline of History', p. 940. (H. G. வெல்ஸ் 'வரலாற்றின் சுருக்கம்', பக்கம் 940.)

களுக்கு அடிபணிய நேர்ந்தது. புரட்சிக்காரர்கள் அவரை வெறுக்கலாயினர். அவர்கள் அவரைக் கைப்பற்றி ஸ்பானியர்களிடம் ஒப்படைத்தார்கள். ஸ்பானிய அரசாங்கம் அவரை காடிஸ் (Cadiz) சிறையிலடைத்து. அச் சிறையிலேயே அவர் உயிர் நீத்தார்.

பொலீவர், வெனிசுலாவினின்றும் நியூ கிரானெடாவிற்கு ஓடினார். அங்கு, காரகாஸ் என்னுமிடத்தைக் கைப்பற்றிச் சுதந்திரம் வாங்கிக் கொடுத்தவர் என்ற சிறப்புப் பெயர் பெற்றார். ஆனால், ஸ்பானியர்கள் அங்கு ஏற்பட்ட கிளர்ச்சியையும் அடக்கினார்கள். பொலீவர், ஜமெய்காவிற்கு ஓடவேண்டியதாயிற்று. சிலி, சான் சால்வடோர், மேற்கு ஃபிளோரிடா, நியூ ஸ்பெயின் ஆகிய இடங்களிலும் கிளர்ச்சிகள் ஏற்பட்டன. நியூ ஸ்பெயினில் ஹிடால்கோ என்ற மதகுரு கிளர்ச்சிக்குத் தலைமை தாங்கினார். முடிவில் இக் கிளர்ச்சிகள் அனைத்தும் ஒடுக்கப்பட்டன. ஹிடால்கோ கொல்லப்பட்டார். பெருவில் ஸ்பானியர்கள் ஆதிக்கம் எவ்வித எதிர்ப்புக்கும் உள்ளாகவில்லை. இவ்வாறாக, 1816ஆம் ஆண்டிற்கு முன்னர் ஏற்பட்ட கிளர்ச்சிகள் பெரும்பாலும் அடக்கப்பட்டன.

ஸ்பானிய ஆதிக்கம் பெருவில் (Viceroyalty of Peru) வலிமை பெற்றிருந்ததால், அங்கிருந்து தென் அமெரிக்காவில் தெற்குப் பகுதிகளில் தோன்றும் சுதந்திர இயக்கங்கள் நசுக்கப்படக் காரணமாய் இருந்தது என்று பலர் அறிந்திருந்தனர். அவர்களுள் சான் மார்டின் ஒருவராவார். ஆகவே, அதனுடைய தெற்குப் பகுதியான சிலியைத் தாக்க மார்டின் முனைந்தார். 1817-ல் சாகாபூகோ (Chacabuco) என்னுமிடத்தில் ஸ்பானியர்களைத் தோற்கடித்தார். அங்குள்ள நகர மக்கள் அவரைச் சிலியின் தலைவராகத் தேர்ந்தெடுத்தார்கள். ஆனால், அப் பதவியை அவருடைய தளகர்த்தரான ஓ’ ஹிக்கின்ஸ் (O’ Higgins) என்பவருக்கு அளித்துவிட்டார். சிலி சுதந்திர நாடாக அமைக்கப்பட்டது. அதன் சுதந்திரம் நிலையாக அமைக்கப்படத் தென்புறத்திலுள்ள ஸ்பானிய ஆட்சியின் ஆதரவாளர்களைத் தோற்கடிக்கவேண்டும் என்று எண்ணினார். மாய்பூ (Maipu) என்னுமிடத்தில் அவர்களைத் தோற்கடித்துச் சிலியின் சுதந்திரத்தை நிலையாக அமைத்தார்.

அதன் பிறகு, பெரு ஆட்சிப் பிரிவின் வடபகுதியை நோக்கி முன்னேறினார். அதற்காக ஒரு கப்பற்படையைத் தயாரித்தார். பெருவின் கடற்கரைப் பகுதியை முற்றுகையிட்டார். ஸ்பெயினுக்குச் சொந்தமான கப்பல்கள் கைப்பற்றப்பட்டன. பெருவினுடைய வியாபாரம் பல இன்னல்களுக்குட்படுத்தப்பட்டது. எனினும், மார்டின் அதிகமான இரத்தம் சிந்தாமல் அவருடைய நோக்கத்தை நிறைவேற்றிக்கொள்ளவேண்டும் என்று கருதினார். ஆகவே, நேரடித்

தாக்குதலை ஒத்திப்போட்டுக்கொண்டு வந்தார். சிறு வெளியீடுகளை அச்சிட்டு ஸ்பெயினுக்கு விரோதமாக மக்களைக் கிளர்ச்சி செய்யுமாறு ஊக்குவித்தார். அவரது திட்டம் வெற்றிபெற்றது. லீமாவினின்றும் (பெருவின் தலைநகரம்) ஸ்பானியப் படை வெளியேறியது. மார்டின் பெருவின் தலைவராக ஏற்றுக்கொள்ளப்பட்டார். ஆனால், ஸ்பானியர்கள் பெருவின் ஒரு பகுதியில் பலம்பெற்று இருந்தார்கள். அவர்களைப் போரிட்டு வெளியேற்றவேண்டும் என்ற கருத்தை அவர் ஏற்கவில்லை. அதனால் அவருடைய ஆதரவாளர்களில் பலர் அவரை வெறுக்க ஆரம்பித்தனர். ஆதலால், பொலீவருடைய உதவியை மார்டின் நாடவேண்டியதாயிற்று.

இதற்கிடையில் பொலீவர் அங்கோஸ்டுரா (Angostura) என்னுமிடத்தைத் தளபதி அலுவலமாக ஏற்படுத்திப் படைகளைச் சேகரித்துக்கொண்டிருந்தார். பிறகு, நியூ கிரானெடா ஆட்சிப் பிரிவிலுள்ள (Viceroyalty of New Granada) போகோடா (Bogota) என்னுமிடத்தைக் கைப்பற்ற முனைந்தார். ஸ்பானிய ஆதரவாளர்களை போயாகா (Boyaca) என்னுமிடத்தில் தோற்கடித்தார். அதன் பயனாக போகோடா அவர் கைவசமாயிற்று; நியூ கிரானெடா சுதந்திரம் பெற்றது. அதன் பின்னர் வெனிசுலாவை நோக்கிப் படை நடத்திச் சென்றார். காரபோபோ (Carabobo) என்னுமிடத்தில் வெற்றி பெற்றார். அதனால் வெனிசுலா சுதந்திரமடைந்தது. அதே நேரத்தில் அவர் படைத்தலைவருள் ஒருவரான சுக்ரே (Sucre) என்பவர் கீடோவில் பிசின்சா (Pichincha) என்னுமிடத்தில் வெற்றி பெற்று, கீடோவைத் தன் ஆளுகைக்குட்படுத்தினார். ஆகவே, ஈக்வேடார் சுதந்திரமடைந்தது. இவ்வாறாகத் தென் அமெரிக்காவின் வட பாகத்தினின்றும் ஸ்பானியருடைய ஆட்சி விரட்டப்பட்டது. இம் மூன்று பகுதிகளையும் இணைத்துப் பெரிய கொலம்பியா என்ற பெயரில் கூட்டமைப்பு ஒன்றைப் பொலீவர் ஏற்படுத்தினார். ஆனால், 1830-ல் அது கலைக்கப்பட்டது. அதன் விளைவாகக் கொலம்பியா, வெனிசுலா, ஈக்வேடார் என்ற நாடுகள் ஏற்படுத்தப்பட்டன.

அதற்கிடையில் சான் மார்ட்டின் பெருவில் ஸ்பானிய ஆதரவாளர்களை ஒழிக்க பொலீவருடைய உதவியை நாடினார். இரு தலைவர்களும் 1822-ல் சந்தித்தார்கள். மார்டின் வரம்புக்குடபடுத்தப்பட்ட மன்னராட்சியை விரும்பினார். பொலீவர் குடியாட்சியை விரும்பினார். மேலும், பொலீவர் ஆதிக்க மனப்பான்மையைக் கொண்டவர். தமது கருத்துகளை விட்டுக்கொடுக்கும் மனப்பான்மையற்றவர். ஆனால், மார்ட்டின் எந்தவித ஆசையும் இல்லாதவர். தமக்கும் பொலீவருக்கும் இடையே ஒற்றுமை வளர வாய்ப்பு இல்லை என்று அறிந்த மார்ட்டின், தமது ஒரே மகளுடன் ஃபிரான்சுக்குச் சென்றுவிட்டார். 1850-ல்

அவர் உயிர் நீத்தார். நாட்டின் நன்மைக்காகச் சுயநலத்தை விட்டுக் கொடுத்த மேதைகளில் இவர் ஒருவராவார்.

பொலீவரும் சுக்ரேவும் பெருவிலிருந்த ஸ்பானிய ஆதரவாளர்களை அழிக்க முற்பட்டனர். ஜூனின் (Junin) என்னுமிடத்தில் அவர்களைத் தோற்கடித்தார்கள். சுக்ரே மீண்டும் ஒரு முறை அயாகுசோ (Ayacucho) என்னுமிடத்தில் தோற்கடித்தார். பெரு, சாரகாஸ் ஆகிய பகுதிகளிலிருந்து வெளியேற ஸ்பானியர்கள் இசைந்தார்கள். சுக்ரே, சார்காஸ் என்னும் பகுதியைச் சுதந்திர நாடாக்கினர். அதற்கு 'பொலீவியா' என்ற பெயர் கொடுத்தார். முதலில் பெருவும் பொலீவியாவும் இணைந்திருந்தன. 1839-ல் அவ்விரு நாடுகளும் தனி அரசுகளை ஏற்படுத்தின; இவ்வாறு ஸ்பானியத் தென் அமெரிக்கா சுதந்திரம் பெற்றது. அதற்கெனப் பாடுபட்ட பொலீவர் 1830-ல் சான்டா மார்டா (Santa Marta, near Columbia) என்னும் இடத்தில் உயிர் நீத்தார்.

ஸ்பெயினுக்குச் சொந்தமான வட அமெரிக்காவின் தென்பகுதி, நடு அமெரிக்கா ஆகிய இடங்களிலும் அதனுடைய ஆட்சி அகற்றப் பட்டது. 1820-ல் ஸ்பெயினில் புரட்சி ஏற்பட்டது. அப் புரட்சி யால் கத்தோலிக்க மத ஸ்தாபனமும், உரிமைகள் பெற்ற பெரு மக்களும் பாதிக்கப்பட்டனர். அப் புரட்சியால் ஏற்பட்ட திருத்தங்கள் மெக்ஸிகோவிலும் புகுத்தப்பட்டால் மெக்ஸிகோவில் வாழ்ந்துவந்த பெருமக்களின் உரிமைகளும் சொத்துக்களும் பறிபோய்விடும் என்ற பயம் அவர்களிடையே ஏற்பட்டது. ஸ்பெயினுக்கும் மெக்ஸிகோவிற் கும் இடையே ஏற்படுத்தப்பட்ட இணைப்புத் துண்டிக்கப்பட்டால் அத் தகைய ஆபத்து நேராது என்று கருதினர்கள். ஆகவே சுதந்திரம் கோரிக் கிளர்ச்சியில் ஈடுபட்டார்கள். இவர்களது நோக்கம் அரசியல், சமூகம் ஆகியவற்றில் சீர்திருத்தங்கள் ஏற்படுத்துவதைத் தடுப்பதே யாகும். அவர்களை அடக்குவதற்கு அனுப்பப்பட்ட படை யாதொரு வெற்றியும் பெறவில்லை. எனவே, மெக்ஸிகோவின் அரசப் பிரதி நிதி இல்டுர்பைட் (Ilturbide) என்பவரைத் தளபதியாக்கினர். அவர் நியூ ஸ்பெயினில் பிறந்தவர். அவர் கிரியோல் வகுப்பைச் சார்ந்தவர். போர்த்துறையில் மிகவும் திறமை வாய்ந்தவர். அவர் ஒரு சமயம் படைத்தலைவராகப் பணியாற்றியவர். சில குற்றங்கள் அவர்மீது சாட்டப்பட்டதால், அவர் விசாரணையின்றிப் பதவியினின்றும் விலக் கப்பட்டார். அதனல் அவர் அரசாங்கத்திடம் வெறுப்புக்கொண்டிருந் தார். இப்பொழுது தலைமைப் பதவி கிடைத்தவுடன், கிளர்ச்சிக் காரர்களை அடக்குவதற்குப் பதிலாக அவர்களுடன் சேர்ந்து ஸ்பானிய அரசாங்கத்தின்மீது பழிதீர்த்துக்கொள்ள முற்பட்டார். அதனல் அவர்களுடன் ஒப்பந்தம் செய்துகொண்டார். மெக்ஸிகோ சுதந்திர நாடாகவும், ஒன்றுபடுத்தப்பட்ட நாடாகவும் அமைக்க ஏற்பாடு

செய்யப்பட்டது. அது பூர்போன் குலத்தைச் சார்ந்த ஒருவரால் ஆட்சி செய்யப்படவேண்டும் என்றும், அவ்வாட்சி அரசியலமைப்புச் சட்டத்தின்படி நடைபெறவேண்டும் என்றும் முடிவுகட்டப்பட்டது. அதன் பிறகு எல்லா நகரங்களும் இல்டுர்பைடை வரவேற்றன. மெக்சிகோவிலிருந்த ஸ்பானிய அரசாங்கம் வேறு வழியின்றிச் சரணடைந்தது. பூர்போன் குலத்தைச் சார்ந்தவர்களை அரசராக அமர்த்தும் திட்டத்தை ஸ்பெயின் அங்கீகரிக்கவில்லை யாதலால், இல்டுர்பைடே பேரரசர் என்ற பட்டத்தை 1822-ல் சூட்டிக்கொண்டார். ஸ்பானிய நடு அமெரிக்கா மெக்சிகோவின் திட்டத்தை ஏற்றுக் கொண்டது. ஆகவே, ஸ்பானிய நடு அமெரிக்கா மெக்சிகோ பேரரசுடன் இணைந்தது. ஆனால், சில காலத்திற்கெல்லாம் அது மெக்சிகோ, மத்திய அமெரிக்க நாடுகளின் கூட்டிணைவு என இரு பிரிவுகளாகப் பிரிந்தது. சில ஆண்டுகளுக்குப் பிறகு மத்திய அமெரிக்கர்களின் கூட்டிணைவு ஐந்து நாடுகளாகப் பிரிந்தது— குவாடிமாலா, எல் சால்வடார், ஹொண்டுராஸ், நிகாராகுவா, காஸ்டாரீகா.

மேற்கிந்தியத் தீவுகளில் ஒன்றான இஸ்பானோலாவிலும் கிளர்ச்சி ஏற்பட்டது. அத் தீவின் மேற்குப் பகுதியில் ஃபிரெஞ்சுக்காரர்களின் ஆதிக்கத்திற்குட்பட்டிருந்த கறுப்பர்கள் 1804-ல் சுதந்திர அரசை ஏற்படுத்தினார்கள். அதற்கு 'ஹைதி' (Haiti) என்று பெயர் வழங்கலாயிற்று. ஸ்பானியர்களின் ஆதிக்கத்திற்குட்பட்டிருந்த கிழக்குப் பகுதியும் அதனுடைய ஆதிக்கத்தின்கீழ்க் கொண்டுவரப் பட்டது. ஆனால், 1944-ல் அப் பகுதி டாமினிகன் குடியரசு என்ற பெயரில் தனிநாடாக ஏற்படுத்தப்பட்டது. 1895-ல் ஸ்பெயினுக்கும், அதனுடைய குடியேற்ற நாடான கியூபாவிற்கும் போர் ஏற்பட்டது. அப் போரில் அமெரிக்கா கலந்துகொண்டு அங்கு ஏற்படுத்தப்பட்டிருந்த ஸ்பானிய ஆதிக்கத்தை ஒழித்தது. இன்று கியூபா தனி நாடாக விளங்குகிறது. 1903-ல் கொலம்பியாவினின்றும் பனமா பிரிந்து சுதந்திர நாடாக அமைந்தது.

ஸ்பானிய அமெரிக்க நாடுகள் சுதந்திர இயக்கம் ஆரம்பித்த காலத்தில் பிரேசில் மக்களும் சுதந்திரம் பெற ஆசைப்பட்டார்கள். 1808 வரை பிரேசில் அரசப் பிரதிநிதிகளால் ஆளப்பட்டுவந்தது. 1808-ல் நெப்போலியன் போர்ச்சுகலைத் தாக்கவே, அரச குடும்பத்தினர் பிரேசிலுக்குச் சென்றனர். முதலில் மக்கள் செல்வாக்கைப் பெற்ற அரச குடும்பம் நாளடைவில் அதை இழக்கத் தொடங்கியது. ஆறுவது ஜான் (John VI) போர்த்துகீசியருக்கே எல்லாப் பதவிகளையும் கொடுத்தார். அவர்களுடைய செலவுகள் அதிகமாக இருந்தன. பிரேசில் மக்களுக்குக் கேடு விளைவிக்கும் வகையில் ஆங்கிலேயருக்கு வியாபாரச் சலுகைகள் அளித்தார். இதற்கிடையில்

போர்ச்சுகல் நாட்டில் கிளர்ச்சி ஏற்பட்டது. மக்கள், அரசரைப் போர்ச்சுகல் வருமாறு வேண்டினர்கள்; ஜான் தயங்கினர். அதை அறிந்த பிரேசில் மக்களும் அரசருடைய அதிகாரத்தைக் குறைக்க வேண்டும் என்று கோரிக் கிளர்ச்சி செய்தார்கள். அதன் பயனாக மக்கள் சபை ஒன்று கூட்டப்பட்டது. அச் சபை பல உரிமைகளை மக்களுக்கு அளிக்குமாறு கோரியது. 1821-ல் ஜான் பிரேசிலைவிட்டுச் சென்றார். அவர் மகன் பெட்ரோ பிரேசிலிலேயே தங்கினர். ஜான் பிரேசிலுக்கு அளித்திருந்த உரிமைகளைப் போர்த்துகீசியப் பாராளுமன்றம் ரத்துச் செய்தது. ஆகவே, பிரேசிலில் புரட்சி ஏற்பட்டது. புரட்சியின் பயனாக பிரேசில் சுதந்திர நாடாக அமைக்கப்பட்டது. பெட்ரோ, பேரரசர் என்ற பட்டத்துடன் சுதந்திர பிரேசிலின் தலைவரானர். போர்த்துகீசிய இராணுவப் படைகள் பிரேசிலினின்றும் விரட்டப்பட்டன.

## ஐக்கிய அமெரிக்க நாடுகளின் உள்நாட்டுப் போர்

ஐக்கிய அமெரிக்க நாடுகள் ஏற்படுத்தப்பட்ட வரலாற்றினைப் பற்றி முன்னர் கவனித்தோம். அந்த நாட்டின் ஒற்றுமையை அழிக்கத் தக்க வகையில் 1861-ல் உள்நாட்டுப் போர் ஒன்று ஏற்பட்டது. அப் போரின் விளைவாக நாட்டின் ஒற்றுமை நிலைநிறுத்தப்பட்டது. அத்துடன் புதிய அமெரிக்காவையும் அப் போர் உருவாக்கியது. அத்தகைய சிறப்புப் பெற்ற விளைவுகளை உண்டாக்கிய போரைப் பற்றி இப்பொழுது கவனிப்போம்.

அமெரிக்க உள் நாட்டுப் போர் ஏற்படப் பல காரணங்கள் இருந்தன. அடிமைப் பிரச்சினை இதற்கு முக்கியக் காரணமாகக் கருதப்படுகிறது. ஐரோப்பியர்கள் அமெரிக்காவில் குடியேறி விவசாயத் தொழிலில் ஈடுபட்டபோது அவர்களுக்கு உதவியாகப் பல அடிமைகளை ஆப்பிரிக்காவினின்றும் இறக்குமதி செய்தார்கள் என்று முன்னரே கூறினேம். அமெரிக்கச் சுதந்திரப் போர் ஏற்பட்டபோது, பொதுவாக எல்லாக் குடியேற்ற நாடுகளிலும் அடிமைகள் இருந்தனர். ஆனால், நாளடைவில் வடக்கிலிருந்த குடியேற்ற நாடுகளில் அடிமைத்தனம் ஒழிக்கப்பட்டது. ஆகவே, சில கூட்டரசு உறுப்பு நாடுகள் அடிமைத் தனத்தை ஒழித்த நாடுகள் என்றும், வேறு சில கூட்டரசு உறுப்பு நாடுகள் அடிமைத்தனத்தை ஏற்றுக்கொண்ட நாடுகள் என்றும் பிரிந்திருந்தன. இவைகளைப் பிரிக்க அமைக்கப்பட்ட எல்லைக்கோடு 'மேசன்–டிக்ஸன் கோடு' என்ற பெயரால் அழைக்கப்பட்டது. 1787-ல் புதிதாகச் சேர்த்துக்கொள்ளப்பட்ட வடமேற்குப் பகுதி அடிமைத்தனம் அகற்றப்பட்ட கூட்டரசு உறுப்பு நாடாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. ஒகியோ நதி இவ்விரு வகையான நாடுகளைப் பிரிக்கும் எல்லையாகக் கொள்ளப்பட்டது.

அடிமைத்தனம் அகற்றப்படவேண்டும் என்ற எண்ணம் வளர்ந்து வந்த நேரத்தில், பருத்தியிலிருந்து விதைகளை அகற்றும் இயந்திரம் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டது. அதனால் பருத்தி பயிர் செய்யும் தொழில் பெருகிற்று. ஆகவே, அடிமைகளை ஒழிக்கும் மனப்பான்மை அழிவுற்றது. அதற்குப் பதிலாக அடிமைகள், வைத்துப் போற்றக்கூடிய சொத்து என்ற கருத்து வளரலாயிற்று. ஆகவே, அடிமை ஒழிப்பை எதிர்க்கலாயினர். அச் சமயத்தில் அமெரிக்க அரசாங்கம் நெப்போலியனிடமிருந்து லூசியானாவைப் பொருள் கொடுத்து வாங்கியது. அதனால் இதனை எந்த வகையான நாடாகக் கருதவேண்டும் என்ற பிரச்சினை எழுந்தது. இறுதியில் மிசௌரி அடிமைகள் உடைய நாடாகவும், அதற்கு மேற்கேயுள்ள பகுதியில் 36° 30′ அட்சரேகையை அவ்விருகை நாடுகளின் எல்லையாகவும் கொள்ள முடிவுசெய்தனர். பிறகு மெக்சிகோவுடன் மேற்கொண்ட போரின் பயனாக மேலும் பல இடங்கள் அமெரிக்க நாட்டுடன் சேர்த்துக் கொள்ளப்பட்டன; ஆகவே, அடிமைகளைக்கொண்ட நாடுகளாக அவைகளைச் சேர்த்துக்கொள்வதா, அல்லது அடிமைத்தனம் அகற்றப்பட்ட நாடுகளாக ஏற்படுத்துவதா என்ற பிரச்சினை மீண்டும் எழுந்தது. மறுபடியும் இப் பிரச்சினைக்குத் தகராறு இல்லாமல் முடிவு காணப்பட்டது. கலிஃபோர்னியா அடிமைத்தனம் அகற்றப்பட்ட நாடாகச் சேர்த்துக்கொள்ளப்பட்டது. மற்றப் பகுதிகளில் அப் பிரச்சினைக்கு அந்தந்த மக்களே தீர்வு காணவேண்டும் என்று ஏற்பாடு செய்யப்பட்டது. ஆகவே, அடிமைகள் பிரச்சினை சமாதான முறையில் தீர்வுகாணக்கூடிய பிரச்சினையாகவே இதுவரை இருந்துவந்தது. அந்தச் சமயத்தில் ஸ்டீபன் டக்ளஸ் (Stephen Douglas) என்பவர் மிசௌரி நாட்டிற்கு மேற்கேயுள்ள பகுதிகளினின்றும் புதிய நாடுகளை ஏற்படுத்த முனைந்தார். அப்பொழுது மிசௌரி ஒப்பந்தத்தை ரத்து செய்தார். அதனால் அடிமைத்தனம், அடிமைத்தனம் ஒழிக்கப்பட்ட நாடுகளிலும் பரவ வழி ஏற்பட்டது. மேலும், 1857-ல் அமெரிக்காவின் கூட்டரசின் மைய அமைப்பைச் சார்ந்த நீதிமன்றம், மிசௌரி ஒப்பந்தம் அரசியல் அமைப்புச் சட்டத்திற்கு முரணானது என்றும், அடிமைத்தனத்தைச் சட்டப்படி ஐக்கிய நாடுகளின் எப்பகுதியினின்றும் அகற்றமுடியாது என்றும் தீர்ப்புக் கூறியது. அதைத் தொடர்ந்து வடக்கு நாட்டவர்கள் (Northerners) கிளர்ச்சிகளைத் தொடங்கினார்கள். 1854-ல் அடிமைத்தனம் பரவுவதை எதிர்க்கும் வகையில் கட்சியொன்று தோன்றியது. அதுதான் ரிபப்ளிகன் கட்சியாகும் (Republican Party). மேலும், வடநாட்டவர்கள் தங்களுடைய செல்வாக்கைப் பயன்படுத்தி அடிமைத்தனத்தை அழித்துவிடுவார்கள் என்ற பயம் தென்னாட்டவர்களைப் பிடித்துக்கொண்டுவிட்டது. அந் நேரத்தில் ஆபிரகாம் லிங்கன் ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அடிமைத்தனத்தை அவர்

அறவே வெறுத்தவர் என்பதை அனைவரும் அறிவார்கள். அடிமைகளை வைத்திருப்பது தவறு இல்லை என்றால், உலகத்தில் வேறெதுவுமே தவறில்லை என்ற கருத்துடையவர் அவர். மேலும், நாடு இரு பிரிவாக இருப்பதையும் அவர் விரும்பவில்லை. அமெரிக்க நாடு பாதி அடிமையாகவும், பாதி சுதந்திரமாகவும் இருக்கமுடியாது என்று திட்டவட்டமாகக் குறிப்பிட்டார். அத்தகையவர் ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட செய்தி தென்பகுதியைக் கலக்கத்தில் ஆழ்த்திவிட்டது.

அதே நேரத்தில் அடிமைகளை உடைமையாக வைத்திருக்கும் வழக்கம் பொருளாதாரக் காரணங்களால் தானாகவே அழிந்துவிடும் என்றும் அவர் கருதினார். ஆகவே, எந்தெந்த நாடுகளில் அவ் வழக்கம் இருந்ததோ, அங்கெல்லாம் அவ் வழக்கத்தில் தலையிடுவதில்லை என்று முடிவுசெய்திருந்தார். ஆகவேதான், அவர் பதவியேற்ற பிறகு தெற்குக் கரோலினா கூட்டமைப்பினின்றும் (Union) பிரிந்து சென்றபோது, கூட்டமைப்பைக் காப்பதற்காகப் போராடினாரேயொழிய, அடிமைகளுக்குச் சுதந்திரம் வழங்கும் பிரச்சினைக்காக அன்று என்று கூறப்படுகிறது. 1862-ல் அவர் ஒரு கடிதத்தில் பின்வருமாறு எழுதினார்: 'இந்தப் போரில் என்னுடைய தலைசிறந்த நோக்கம் கூட்டமைப்பைக் காப்பதேயன்றி, அடிமைகளை உடைமையாக வைத்திருக்கும் வழக்கத்தைக் காப்பாற்றுவதோ அல்லது அழிப்பதோ அன்று. ஓர் அடிமையைக்கூட விடுவிக்காமல் கூட்டமைப்பைக் காப்பாற்ற முடிந்தால், நான் அதைச் செய்வேன்; எல்லா அடிமைகளுக்கும் சுதந்திரம் கொடுத்து அதைக் காப்பாற்ற முடிந்தால், நான் அதைச் செய்வேன்; சில அடிமைகளுக்குச் சுதந்திரம் கொடுத்து சிலரை அந் நிலையிலேயே விட்டுவைத்து அதைக் காப்பாற்ற முடிந்தால் நான் அதையும் செய்வேன்.' இதனின்றும் உள்நாட்டுப் போருக்கு முக்கியக் காரணம் என்ன என்பது நன்கு விளங்கும்.

போர் ஏற்பட வேறு சில காரணங்களும் உண்டு. வடநாட்டவர்களுக்குத் தெற்குப் பகுதியில் வாழ்ந்தவர்கள் பலவிதங்களில் வேறுபட்டிருந்தனர். வட பகுதியிலுள்ளவர்களின் மூதாதையர்கள் மத விவகாரங்களில் சுதந்திரமாக வாழ்வதற்காகத் தாங்கள் பிறந்த நாட்டையே உதறிவிட்டு வந்தவர்களாவார்கள். அத்தகையோர் வழியில் வந்தவர்கள் சுதந்திரத்தில் பற்றுள்ளவர்களாகவும், தன்னாட்சி முறையில் நம்பிக்கை கொண்டவர்களாகவும், முற்போக்கு எண்ணங் கொண்டவர்களாகவும் விளங்கியதில் வியப்பொன்றுமில்லை. ஆனால், தென் பகுதிகளில் உள்ளவர்கள் பெரும்பாலும் பொருளாதாரத் துறையில் முன்னேற்றம் நாடி வந்தவர்கள். அவர்களில் அநேகர் பண்ணை முதல்வர்களாக இருந்தனர். அவர்கள் பிற்போக்குக் கருத்துகளைக் கொண்டவர்களாக இருந்தனர். பொருளாதாரத்

துறையிலும் இவ்விருவகை மக்களுக்குமிடையே பெருத்த வேறுபாடுகள் இருந்தன. தென்பகுதி மக்கள் விவசாயத்திலும், வடபகுதி மக்கள் தொழில் துறையிலும் ஈடுபட்டிருந்தனர். ஆகவே, வடபகுதியினர் தங்களுடைய தொழில்களை வெளிநாடுகளின் போட்டிகளினின்றும் காப்பாற்றுவதற்காகக் காப்புவரி விதிக்குமாறு அரசாங்கத்தினரை வேண்டிக்கொண்டார்கள். ஆனால், காப்புவரி செயற்கைப் பொருள்களின் விலைகளை அதிகமாக்கிவிடும் என்று தென்பகுதி மக்கள் உணர்ந்திருந்ததால் அதனை எதிர்த்தார்கள். மத விவகாரங்களிலும் இவர்கள் வேறுபட்டவர்களாயிருந்தனர். வட பகுதியினர் பெரும்பாலும் பியூரிடன்களாவர். தென் பகுதியினர் பெரும்பாலும் கத்தோலிக்கர்களாகவும், ஆங்கிலிகன் மத ஸ்தாபனத்தைச் சேர்ந்தவர்களாகவும் இருந்தனர்.

போருக்கு உடனடியான காரணம் தென் கரோலினா கூட்டமைப்பிலிருந்து விலகியதேயாகும். அது பிரிந்துபோவதற்குக் காரணம் அடிமைப் பிரச்சினை என்று கண்டறிந்தோம். அதைத் தொடர்ந்து அலபாமா, ஃபிலோரிடா, மிசிசிபி, லூசியானா, டெக்ஸாஸ், ஜார்ஜியா அதனுடன் சேர்ந்துகொண்டு, புதியதொரு கூட்டாட்சியை (Confederacy) ஜெஃப்பர்சன் டேவிஸ் (Jefferson Davis) தலைமையின்கீழ் அமைத்தன. லிங்கன், கூட்டமைப்பை எப்படியும் காப்பாற்றுவது என்று முடிவு செய்தார்.

1861-ல் தென் கரோலினா கூட்டமைப்புக்குச் சொந்தமான ஃபோர்ட் சம்டர் (Fort Sumter) என்ற படைத்தளத்தைத் தாக்கியது. அப் படைத்தளத்திற்கு அதிபதியான ஆண்டர்சன், போதிய உணவுப் பொருள்களும் பிற பொருள்களும் இல்லாத காரணத்தால் சரண் அடைந்தார். லிங்கன் உடனே படையெடுப்பு ஏற்பாடுகள் செய்யத் தொடங்கினார். அவர் போக்கை எதிர்க்கும் வகையில் வர்ஜீனியா, வட கரோலினா, டென்னஸி (Tennessee), அர்கன்சாஸ் (Arkansas) ஆகியவைகளும் கூட்டமைப்பினின்றும் பிரிந்து சென்றன. வர்ஜீனியாவிலுள்ள ரிச்மாண்டு (Richmond) கூட்டாட்சியின் தலைநகரமாக்கப்பட்டது. வடக்குப் பகுதியிலும் மேற்குப் பகுதியிலும் வாழ்ந்துவந்த இருபது மிலியன் மக்கள் ஆபிரகாம் லிங்கன் தலைமையினை ஏற்றுக்கொண்டார்கள். வடபகுதியினருக்குச் சில அனுகூலங்கள் இருந்தன. அவர்களிடத்தில் படைத்தளங்களும், கப்பற்படையும், பாதி சேனையும், தலைநகரமும், போர்க்கருவிகள் தயார் செய்யும் சாதனங்களும் இருந்தன. மேலும், அரசியல் அமைப்புச் சட்டத்தின்கீழ் இயங்கிவரும் அரசாங்கம் என்பதனால் அவர்களுக்கு மக்கள் ஆதரவு பெருமளவில் இருந்தது. தென் பகுதியினரின் மொத்த மக்கள்தொகை $5\frac{1}{2}$ மிலியன்களாக இருந்தது. ஆனால், அவர்களிடத்தில் திறமைமிக்க படைத்தலைவர்கள் இருந்தனர். அவர்களிடம்

பிளவுகள் அதிகமாயில்லை அவர்களிடம் ஒழுங்குக் கட்டுப்பாடு சிறந்த நிலையில் இருந்தது. மேலும், அவர்களுக்கு வெளிநாடுகளின் உதவிபெற வாய்ப்பு இருந்தது. ஆனால், எல்லாவற்றையும் ஒருங்கே சேர்த்துப் பார்க்குமிடத்து, வடபகுதியினருக்கு வெற்றிக்கான அனுகூலங்கள் அதிகமாக இருந்தன.

பல அனுகூலங்களைப் பெற்றிருந்தபோதிலும், முதலில் வட பகுதியினரே போரில் தோல்வியுற்றனர். புல் ரன் (Bull Run) என்னும் இடத்தில் வடபகுதியினரைத் தோற்கடித்து, வர்ஜீனியாவை வடபகுதியினர் கைப்பற்றும் முயற்சியைத் தென்பகுதியினர் தோற் கடித்தனர். பிறகு தளபதி லீ (General Lee) என்பவர் தென்பகுதி யினருக்கு மேலும் ஒரு வெற்றியை புல் ரன் (Second Battle of Bull Run) என்னுமிடத்தில் தேடித்தந்தார். அதன் பிறகு லீ, மேரி லாந்தின்மீது படையெடுத்தார். அப் படையெடுப்பைத் தடுக்க வடபகுதியினர் முற்பட்டார்கள். ஆன்டியேடம் (Antietam) என்னு மிடத்தில் நடந்த சண்டை யாருக்கும் வெற்றி தோல்வியின்றி முடிவுற்றது. ஆனால், அச் சண்டை தென்பகுதியினரை மேரிலாந் தினின்றும் பின்வாங்கும்படி செய்தது. மேலும், அது லிங்கன் அடிமைகளுக்குச் சுதந்திரம் வழங்கும் அறிக்கையொன்றை விடுக்கப் பயன்பட்டது. அதன்படி கூட்டாட்சி முறைக்கு எதிராகப் போராடும் நாடுகளில் உள்ள அடிமைகளுக்குச் சுதந்திரம் அளித்தார். அதனால் தென்பகுதியில் வாழும் அடிமைகளைப் பறிமுதல் செய்து இராணு வத்தில் சேர்த்துக்கொள்ள முடிந்தது. மேலும், அடிமைத்தனம் ஒழிக்க அது பெரிதும் உதவியது. போர் முடியுமுன்னர், அடிமைத் தனத்தை ஆதரித்த பிரிவினை ஆதரவாளர்கள், அடிமைகளுக்குச் சுதந்திரம் அளித்துப் படையில் சேர்த்துக் கொண்டனர். மற்றும், இங்கிலாந்து போன்ற நாடுகளின் அன்பைப் பெற அது உதவியது. முற்போக்குக் கருத்தின் அடிப்படையில் நிறுவப்பட்ட இங்கிலாந்தின் அரசாங்கம், அடிமைத்தனத்தை ஒழிப்பதற்காகப் போராடும் லிங்கனுக்கு எதிராக அடிமைகளைத் தொடர்ந்து வைத்திருக்க விரும்பும் தென்பகுதியினருக்கு உதவி செய்ய முடியாதல்லவா?

பின்வாங்கிய லீ-யைத் தோற்கடிக்க வடபகுதியினர் முயற்சி செய்தார்கள். ஆனால், அம்முயற்சியில் அவர்கள் தோல்வியுற்றனர். மீண்டும் லீ முன்னேறினர். இச்சமயம் அவர் பென்சில்வேனியாவின் மீது படையெடுத்துச் சென்றார். கெட்டிஸ்பர்க் (Getteysburg) என்னு மிடத்தில் பெருஞ் சண்டை நிகழ்ந்தது. அதில் வடபகுதியினரின் படைத்தலைவர் ஹூக்கர், லீ-யைத் தோற்கடித்தார். அதைத் தொடர்ந்து லிங்கன் சிறப்புப் பெற்ற சொற்பொழிவு ஒன்றை நிகழ்த்தினர்.

மிசிசிபி போர்முனையில் வடபகுதியினரின் படைத்தலைவரான கிராண்ட் (Grant) பல வெற்றிகளைப் பெற்ருர். அவைகளுள் மிகச் சிறப்பு வாய்ந்தது விக்ஸ்பர்க்கைக் கைப்பற்றுவதற்கு மேற்கொள்ளப் பட்ட சண்டையாகும். அச் சமயத்தில் தென்பகுதியினருடைய சிறந்த தளகர்த்தருள் ஒருவரான ஸ்டோன்வால் ஜாக்சன் (Stonewall Jackson) இறந்தார். அதன்பிறகு மிசிசிபி நதியில் வடபகுதியினருடைய கப்பல்கள் தடங்கலின்றித் திரிய வழி ஏற்பட்டது. மேலும், மிசிசிபி நதியின் மேற்கேயிருந்த பிரிவினை ஆதரவாளர்களையும், கிழக்கேயிருந்த பிரிவினை ஆதரவாளர்களையும் பிரித்துவிட அவருடைய வெற்றிகள் உதவின. அதனுல் கிழக்கே யிருந்த பிரிவினை ஆதரவாளர்கள் மேற்கிலிருந்து படைகளையும், இராணுவத் தேவையான பொருள்களையும் பெற முடியவில்லை. கிராண்ட், பிரிவினை ஆதரவாளர்களை சாட்டநூகா (Chattanooga) என்னும் இடத்தில் தோற்கடித்தார். அதன் பயனுக அவர் ஜார்ஜியா நாட்டிற்குள் புகுவதற்கு வாய்ப்பு ஏற்பட்டது. மேலும், கப்பற் படையைப் பயன்படுத்தி நியூஆர்லியன்ஸ் துறைமுகத்தைப் பிரிவினையை எதிர்ப்பவர்கள் கைப்பற்றினுர்கள். மேலும், வெளி நாடுகளுக்கும் தென்பகுதி நாடுகளுக்கும் இடையே நடைபெற்று வந்த வியாபாரத்தை அறவே தடுத்து நிறுத்தியது. ஆகவே, தென் பகுதி மக்கள் பெருங்கஷ்டத்திற்குள்ளாஞர்கள்.

இறுதியில் போர், வடகிழக்கு, தென்மேற்குப் பகுதிகளில் நடை பெற்றது. கிராண்ட், ரிச்மாண்டைக் கைப்பற்ற முனைந்தார். ஷெர் மான் என்ற மற்ருெரு படைத்தலைவர் ஜார்ஜியாவிலுள்ள அட்லான் டாவைக் கைப்பற்ற முயன்ருர். ஷெர்மான் அட்லான்டாவைக் கைப்பற்றினுர். பிறகு ஜார்ஜியாவை அடக்குவதில் தம்முடைய கவனத்தைச் செலுத்தினுர். அதன்பிறகு சாவன்ன (Savannah), சார்லஸ்டன் ஆகிய இடங்களைக் கைப்பற்றினுர். இதற்கிடையில் கிராண்ட், பீட்டர்ஸ்பர்க் என்னும் இடத்தைக் கைப்பற்றினுர். அதனுல் லீ, ரிச்மாண்டை விட்டு வெளியேறத் தீர்மானித்தார். ஆனுல், கிராண்ட் அவரைப் பின் தொடர்ந்து அப்போடொமாக்ஸ் (Appotomax) என்னுமிடத்தில் சரண் அடையச் செய்தார். அத்துடன் போர் முடிவுற்றது (1865).

அமெரிக்க உள்நாட்டுப் போர், ஐக்கிய அமெரிக்க நாடுகளில் ஏற்படுத்தப்பட்டிருந்த கூட்டரசை அழியவொட்டாமல் நிலை நிறுத்தி யது, அக் கூட்டரசுக்கு அழிவற்ற தன்மையை அளித்தது. நாட்டில் ஒற்றுமை ஏற்படவும் அது காரணமாயிருந்தது. வடபகுதியும் தென் பகுதியும் நெருக்கமாகப் பிணைக்கப்பட்டன. அதன் விளைவாகத் தேசியப் பண்புகள் வளரலாயின. அப் பண்புகள் நாளடைவில் முதிர்ச்சி பெற உதவியது உள்நாட்டுப் போரேயாகும்.

அப் போர் முதலில் வடபகுதியினருக்கும் தென்பகுதியினருக்கும் இடையே மனக்கசப்பை வளர்த்துவிட்டது. அது மறைவதற்குப் பல வருடங்கள் ஆயின. அரசியல் விவகாரங்களில் சகிப்புத்தன்மை வளருவதைத் தடை செய்தது. இருபதாண்டுகளுக்குப் பிறகுதான் டெமோகிராடிக் கட்சியைச் சார்ந்தவர் ஒருவர் குடியரசுத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். ஐம்பது ஆண்டுகளுக்குப் பின்னர்தான் தென் பகுதியினருள் ஒருவர் ஜனாதிபதியாக வர முடிந்தது. உள் நாட்டுப் போருக்கு முன்னர் தென்பகுதியினர்தாம் ஆட்சியில்வெகுவாகப் பங்குகொண்டிருந்தனர் என்பதை நாம் நினைவில் வைத்துக்கொள்வது அவசியமாகும்.

தென்பகுதியின் ஆட்சிமுறை திருத்தி அமைக்கப்பட்டது. லிங்கன் சிறந்த அரசியல் மேதை ஆவார். அவர் 'ஆட்சி முறையைத் திருத்தி அமைக்கும் முறையிலும், 'எல்லோருக்கும் நியாயத்தை வழங்கும் வகையிலும், யாரிடத்திலும் பகைமை உணர்ச்சியைக் காட்டாமலும் நடந்துகொள்வேன்' என்று கூறினார். ஆனால், 1865-ல் அவர் தென்பகுதியைச் சேர்ந்த வெறியர் ஒருவரால் கொல்லப் பட்டார். அவருக்குப் பின்னர் ஏற்படுத்தப்பட்ட அரசாங்கத்தினர் தென்பகுதியினருக்குத் தண்டனை அளிக்கும் வகையில் ஆட்சி அமைப்பைத் திருத்த முற்பட்டனர். தென்பகுதியை ஐந்து இராணுவப் பிரிவுகளாகப் பிரித்தனர். ஒவ்வொன்றிலும் ஒரு படைத்தலைவரை நியமித்தார்கள். அவருடைய ஆட்சிக்கு உதவி யாகப் படைகள் நிறுத்தப்பட்டன. நீக்ரோக்களுக்கு வாக்குரிமை வழங்கப்பட்டது. அவர்களுக்கு வெள்ளையர்கள் அனுபவித்து வந்த உரிமைகள் அனைத்தும் அளிக்கப்பட்டன. அதற்கென அரசியல் அமைப்புச் சட்டம் திருத்தியமைக்கப்பட்டது. இத் திருத்தங்களைத் தென்பகுதியிலுள்ள வெள்ளையர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு வற்புறுத் தப்பட்டனர். புதிய அரசாங்கங்கள் தென்பகுதியில் அமைக்கப் பட்டன. அவைகளை நடத்தும் பொறுப்பு நீக்ரோக்களுக்கும், வட பகுதியினின்றும் வந்த வெள்ளையர்களுக்கும், தென்பகுதியில் ஏழ்மையில் வாழ்ந்து வந்த வெள்ளையர்களுக்கும் அளிக்கப்பட்டது. அவர்களுடைய ஆட்சி பல சீர்கேடுகளைப் பெற்றிருந்தது. வெள்ளை யர்கள் மீது கடுமையான வரி சுமத்தப்பட்டது. இலஞ்ச ஊழல் மலிந்திருந்தது. அரசாங்கப் பொருள் அனாவசியமாகச் செலவிடப் பட்டது. இந்த நிலை வெகு நாள் நீடித்து இருக்கவில்லை. வெள்ளை யர்கள் பலாத்கார முறைகளைக் கையாளத் தொடங்கினார்கள். 'கு லக்ஸ் கிலான்' (Ku Lux Klan) போன்ற ஸ்தாபனங்களை ஏற்படுத்தி, நீக்ரோக்களுக்கும், வடபகுதியினின்றும் வந்த வெள்ளையர்களுக்கும் இடையூறுகளைக் கொடுத்து வந்தனர். அதனால் கார்பெட்பாக்கர்ஸ் (Carpet baggers) எனப்பட்ட அவ்வடபகுதி வெள்ளையர்கள் வெளியேற

நேர்ந்தது. நீக்ரோக்கள் தங்களது வாக்குரிமையை விட்டுக் கொடுக்குமாறு கட்டாயப்படுத்தப்பட்டார்கள். சிறிது காலத்திற் கெல்லாம் டெமொகிராடிக் கட்சியினர் தென்பகுதியில் மீண்டும் தங்களுடைய செல்வாக்கை ஏற்படுத்திஞர்கள்.

பொருளாதாரத் துறையிலும் தென்பகுதியினர் பல இன்னல்கள் அனுபவிக்க நேர்ந்தது. சாலைகள், பாலங்கள், இருப்புப்பாதைகள் அழிக்கப்பட்டதால் வியாபாரம் குன்றியது. பணத்தின் மதிப்புக் குறைந்ததாலும், பாங்குகள் (Banks) மூடப்பட்டதாலும் வர்த்தகம் பாதிக்கப்பட்டது. பருத்தித் தொழிற்சாலைகள் அழிவுற்றன. பயிர்த் தொழில் சீரழிந்தது. பண்ணைகளில் வேலை செய்வோர் எண்ணிக்கை குறையலாயிற்று. ஆனுல், விரைவில் தென்பகுதியில் அதனுடைய பொருளாதாரத் துறையில் புனரமைப்பு மேற்கொள்ளப்பட்டதால், இழந்த வளத்தை மீண்டும் பெற வழியேற்பட்டது. தொழில்கள் ஏற்படுத்தப்பட்டன. சாலைகள், இருப்புப்பாதைகள் ஆகியவை புதுப்பிக்கப்பட்டன. பாங்குகள், கம்பெனிகள் ஆகியவை மீண்டும் திறக்கப்பட்டன. விவசாயத்தில் பெரும்பான்மையினேர் ஈடுபட்டார் கள். வரிச்சுமை அதிகமாயிருந்ததால், வரிக்காகவும் கடனுக்காகவும் பெருநிலப் பண்ணைகள் சிறிதுசிறிதாக விற்கப்பட்டன. அதனுல் நிலமற்று இருந்த சிறு குடியானவர்கள் நிலம் வாங்குவதற்கு வாய்ப்பு ஏற்பட்டது. அடிமைத்தனம் ஒழிக்கப்பட்டதாலும், பண்ணை உரிமையாளர்களிடத்தில் பணம் இல்லாததாலும் பண்ணைத் தொழி லாளர்களுக்குப் பண்ணையில் உற்பத்தியாகும் பொருள்களில் ஒரு பகுதியை அவர்களுக்கு அளிக்கும் முறை வளர்ந்தது.

உள்நாட்டுப் போர் புதிய அமெரிக்காவை ஏற்படுத்துவதற்கு உதவி செய்தது. போருக்குப் பிறகு தொழில் வளர்ச்சி பெற்றது. வியாபாரம் பெருகியது. போக்குவரத்துச் சாதனங்கள் பெருகின. இயந்திரங்களைக்கொண்டு பயிர்த்தொழில் நடத்தத் தொடங்கிஞர்கள். இதுவரை பயன்படுத்தப்படாமல் இருந்த நிலங்கள் பயிர்த்தொழில் செய்வதற்கும், ஆடுமாடுகள் வளர்ப்பதற்கும் பயன்படுத்தப்பட்டன. பெருநகரங்கள் வளர்வதற்கு வேண்டிய சூழ்நிலை உருவாக்கப் பட்டது. இவ்வாருக, உள்நாட்டுப் போருக்குப் பிறகு தொழில் அதிபர்களையும் (Captains of Industry) பெரு முதலாளிகளையும் (Masters of Capital) கொண்ட அமெரிக்கா வெளிப்பட்டது. அதனுடைய பொருளாதார முன்னேற்றம் அமெரிக்கா வல்லரசாக மாற உதவி செய்தது.

போரிஞல் மக்கள் தொகை வெகுவாகப் பாதிக்கப்பட்டது. 31 மிலியன் மக்களில் அறுநூறு ஆயிரம் பேர் போரில் இறந்தார்கள்.

போரின் விளைவாகப் பணத்தாசையும், அதிகார வெறியும், அநாகரிகப் பண்புகளும் பெற்ற ஒரு வகுப்பினர் தோன்றினர். ஆனால், பொது வாக மக்கள் நல்ல உழைப்பாளிகளாகவும், நாட்டுப் பற்றுடையவர்க ளாகவும் இருந்தனர். தென்பகுதியில் மேற்குடியைச் சார்ந்த பண்ணை முதல்வர்களை உட்கொண்ட வகுப்புச் சீரழிந்தது. அதற்குப் பதிலாகச் சிறுநிலச் சொந்தக்காரர்களும், வியாபாரிகளும், தொழில் தலைவர்களும், பணம் படைத்தவர்களும் அடங்கிய நடுத்தர வகுப்பு வளரலாயிற்று. அடிமைகளை உடமையாக வைத்திருக்கும் வழக்கம் ஒழிக்கப்பட்டது. அரசியல் அமைப்புத் திருத்தச் சட்டங்கள் வாயிலாக அவர்களுக்குச் சமவுரிமைகளும் வாக்குரிமையும் வழங்கப் பட்டன. ஆனால், அவர்களுடைய பொருளாதார நிலையைச் சீர்படுத்த யாதொரு முயற்சியும் மேற்கொள்ளப்படவில்லை. சிறிது காலம் அங்கும் இங்கும் திரிந்துகொண்டிருந்தனர். அநேக குடும்பங்கள் நாசமாயின. சிலர் வடபகுதிக்குச் சென்று தொழிற் சாலைகளில் வேலை செய்யலாயினர். பெரும்பாலோர் விளைச்சலில் ஒரு பகுதியைப் பெறும் கூலியாட்களாகப் பயிர்த்தொழிலில் ஈடுபட்டார்கள்.

## வினாக்கள்

1. அமெரிக்கச் சுதந்திரப் போர் ஏற்படக் காரணங்கள் யாவை? அதன் விளைவுகள் யாவை?
2. லத்தீன் அமெரிக்காவில் ஏற்பட்ட விடுதலை இயக்கத்தை விவரி.
3. அமெரிக்க உள்நாட்டுப் போரைப்பற்றி ஒரு கட்டுரை வரைக.

# 4. பத்தொன்பதாம் நூற்றுண்டில் ஐரோப்பாவில் தேசிய நாடுகள் ஏற்படுத்துதல்

பத்தொன்பதாம் நூற்றுண்டில் ஐரோப்பாவிலும், ஏனைய பகுதிகளிலும் தேசியக் கோட்பாட்டை அடிப்படையாகக்கொண்டு பல நாடுகள் உருவாக்கப்பட்டன. தற்காலத்தில் இருக்கும் தேசிய இனஞ்சார்ந்த நாடுகளில் ஐந்தில் ஒரு பங்கு அக் காலத்தில் ஏற்படுத்தப்பட்டவையேயாகும். ஐரோப்பியர்கள் தேசியக் கோட்பாட்டைக் பத்தொன்பதாம் நூற்றுண்டிற்கு முன்னரே அறிந்திருந்தார்கள். ஆனல், ஃபிரெஞ்சுப் புரட்சி அக் கோட்பாட்டிற்குப் புதியதோர் ஆற்றலை ஊட்டியது. அதன் விளைவாக ஐரோப்பிய மக்களிடையே அக் கோட்பாடு மிக்க செல்வாக்குப் பெறலாயிற்று. அதன் பயனுகப் பல்வேறு சிறு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருந்த ஒரே இனத்தவர்கள் ஒன்றுசேர்ந்து தேசிய இனம் சார்ந்த ஒரே நாட்டை உருவாக்கினுர்கள். இத்தாலியும் ஜெர்மனியும் இவ்வாறு உருவாக்கப்பட்ட நாடுகளேயாகும். வேறு சில இடங்களில் அக் கோட்பாடு செல்வாக்குப் பெற்றதால், பல்வேறு இனங்களைக்கொண்ட பேரரசுகள், தேசிய இனஞ்சார்ந்த தனித்தனி நாடுகளாகப் பிரிக்கப்பட்டன. சென்ற அத்தியாயத்தில் ஸ்பானிய அமெரிக்கப் பேரரசு பல சிறு நாடுகளாகப் பிரிக்கப்பட்ட வரலாற்றினைக் கண்டோம். இப்பொழுது சிறு பகுதிகள் ஒன்றுசேர்க்கப்பட்டு உருவாக்கப்பட்ட தேசிய இனஞ் சார்ந்த நாடுகள் எவ்வாறு தோன்றின என்பதைக் கவனிப்போம்.

பத்தொன்பதாம் நூற்றுண்டிற்கு முன்னர் இத்தாலி பல பிரிவுகளை உட்கொண்டதாயிருந்தது. சவாய் குடும்பத்தைச் சேர்ந்த அரசர் இத்தாலிக்கு அருகேயுள்ள சார்டினியாவையும், வட இத்தாலியிலுள்ள பியட்மான்ட் என்னும் பகுதியையும் ஆண்டு வந்தார். மிலான் நகரம், அதைச் சுற்றியுள்ள லம்பார்டி பகுதி, மோடெனு ஆகியவை ஆஸ்திரியாவின் ஆளுகைக்குட்பட்டிருந்தன.

டஸ்கனி ஆஸ்திரியாவைச் சார்ந்த ஆட்சிப் பகுதியாக இருந்தது. அதைக் கோமகன் ஒருவர் ஆண்டுவந்தார். ஸ்பெயினில் ஆண்டு வந்த பூர்போன் குலத்தைச் சார்ந்தவர் சிசிலித் தீவையும், தெற்கு இத்தாலியையும் ஆண்டு வந்தார். வட இத்தாலியிலுள்ள பார்மா வையும் அக் குலத்தைச் சார்ந்தவர்களில் ஒருவரே ஆண்டுவந்தார். கத்தோலிக்க மதத் தலைவரான போப் ரோம், நடு இத்தாலி ஆகிய வற்றை ஆண்டுவந்தார். இவைகளைத் தவிர நான்கு குடியரசுகளும் வெனிஸ் (Venice), ஜெனோவா (Genoa), லூக்கா (Lucca), சான் மாரினோ (San Marino)—ஏற்படுத்தப்பட்டிருந்தன. 1796-ல் நெப்போலியன் இத்தாலியின்மீது படையெடுத்தார் என்று முன்னரே கூறினோம். அப் படையெடுப்பும், அதற்குப் பின்னர் அவர் மேற்கொண்ட மற்றொரு படையெடுப்பும் இத்தாலியின் பெரும் பகுதியை அவருடைய ஆதிக்கத்தின்கீழ்க் கொண்டுவர உதவின. அங்கிருந்த நாடுகளின் எல்லைகளை அவருடைய விருப்பம்போல் மாற்றினார். இறுதியில் பியட்மாண்ட், பார்மா, ஜெனோவா, ரோம் நகரம், அதைச் சுற்றியுள்ள பகுதிகள் சவாய், டஸ்கனி (Tuscany) ஆகியவற்றை ஃபிரான்சுடன் சேர்த்து அவருடைய நேரடி ஆட்சியை அங்கு ஏற்படுத்தினார். லம்பார்டி, மோடெனா, வெனிஸ், நடு இத்தாலியில் போப்புக்குச் சொந்தமான இடங்கள் ஆகியவற்றைச் சேர்த்து உருவாக்கப்பட்ட அரசுக்கு 'இத்தாலி அரசு' என்று பெயர் கொடுத்தார். நெப்போலியனே அதன் அரசரானார். அவருடைய பிரதிநிதியைக் கொண்டு அப் பகுதியை ஆண்டு வந்தார். தெற்கு இத்தாலியைத் தனி அரசாக ஏற்படுத்தி, அதற்கு அவருடைய தமையனார் ஜோசஃப் போனபார்ட் என்பவரை அரசராக்கினார். லூக்காவை அவருடைய சகோதரி ஒருவருக்குக் கொடுத்தார். சார்டினியா சவாய் குலத்து அரசரிடமும், சிசிலி பூர்போன் அரசரிடமும் தொடர்ந்து இருந்துவந்தன. 1815-ல் நெப்போலியன் முடிவாக வீழ்த்தப்பட்டார். அதே ஆண்டில் வியன்னா ஏற்பாடு உருவாக்கப் பட்டது. அதன்படி இத்தாலி பழைய நிலைக்குத் திரும்பியது. இத்தாலியைப் பற்றிய ஏற்பாடு மெட்டர்னிக்கின் கருத்துக்கேற்றவாறு அமைக்கப்பட்டது. ஆஸ்திரியாவின் ஆதிக்கத்தை இத்தாலியில் நிலைநாட்ட மெட்டர்னிக் அப் பகுதியினைப் பல பிரிவுகளாகப் பிரித்து பலமற்றதாகச் செய்தார். ஆஸ்திரியா லம்பார்டியுடன் வெனிஷியாவையும் (Venetia) பெற்றது. போப் அவர் இழந்த பகுதிகளை மீண்டும் பெற்றார். ஆஸ்திரியாவின் படைகள் அவருடைய ஆட்சிப் பகுதியிலுள்ள சில இடங்களில் நிலைநிறுத்தப்பட்டன. சவாய் குலத்து அரசர் பியட்மாண்ட், சவாய், நைஸ் (Nice) பகுதி களைப் பெற்றார். அத்துடன் இதுகாறும் குடியரசாக விளங்கிய ஜெனோவாவும் அவருக்கு அளிக்கப்பட்டது. டஸ்கனி, கோமகன் மூன்றாவது பெர்டினாண்டுக்குக் கொடுக்கப்பட்டது. லூக்கா, மாரி

லூயிஸ் என்னும் பூர்போன் குலத்தவருக்கு அளிக்கப்பட்டது. பார்மா, நெப்போலியனுடைய மனைவியும் ஆஸ்திரியா நாட்டின் இள வரசியுமான மாரி லூயிஸுக்கு அளிக்கப்பட்டது. ஆஸ்திரியாவை ஆண்டு வந்த ஹாப்ஸ்பர்க்கு குலத்தைச் சார்ந்த நான்காவது ஃபிரான்சிஸ் மோடெனுவைப் பெற்றுர். நேபிள்ஸ், பூர்போன் அரச ரான நான்காவது பெர்டினுன்டுக்குத் திருப்பி அளிக்கப்பட்டது. சான் மாரிஞு ஒன்றுதான் குடியரசாகத் தொடர்ந்து விளங்கியது. பார்மாவின் கோமாட்டி இறந்த பிறகு லூக்காவை ஆண்டுவந்த வருக்கு அது அளிக்கப்பட்டது. லூக்கா டஸ்கனியுடன் சேர்த்துக் கொள்ளப்பட்டது. இவ்வாருக, இத்தாலியில் பெரிய ஆட்சிப் பகுதிகளை அமைப்பதற்கு நெப்போலியன் மேற்கொண்ட முயற்சிகள் வீணுயின.

பத்தொன்பதாம் நூற்றுண்டின் தொடக்கத்தில் பல காரணங் களால் இத்தாலி ஒன்றுபடுத்தப்பட்ட நாடாக விளங்கவில்லை. இத் தாலியின் பெரும் பகுதி அந்நியருடைய ஆதிக்கத்தில் இருந்தது. போப், சார்டினியாவின் அரசர் ஆகியவர்களே இத்தாலி நாட்டைச் சார்ந்தவர்களாவார்கள். மேலும், ஆஸ்திரியா தன்னுடைய செல்வாக் கைப் பயன்படுத்தி இத்தாலியில் ஒற்றுமையுணர்ச்சி வளரவொட்டாது தடுத்தது. இத்தாலிய மக்கள் இன்னும் தேசியக் கருத்துகளை ஏற்றுக்கொள்ளவில்லை. நடுத்தர வகுப்பினர்களே அவ்வுணர்ச்சியைப் பெற்றிருந்தார்கள். பிரபுக்கள் மதகுருமார்கள் ஆகியவர்களில் ஒரு சிலர் அவ் வகுப்பினருக்கு அவ்வப்போது உதவிசெய்து வந்தனர். இதுவன்றியும், போப் ஆண்டுவந்த நிலப்பகுதிகள் இத்தாலியை இரு துண்டுகளாக்கின. போப், நாடுகளை ஆட்சி செலுத்தும் அதி காரங்களைப் பெற்றிருக்கும்வரை இத்தாலியை ஒன்றுபடுத்துவது அரிய செயலாகக் காணப்பட்டது.

அதே நேரத்தில் சில காரணக் கூறுகள் தேசிய உணர்ச்சி இத்தாலிய மக்களிடையே கொழுந்துவிட்டெரிய உதவி செய்தன. நெப்போலியன் இவ்வகையில் இத்தாலிக்கு அரிய சேவை செய் துள்ளார். பல பிரிவுகளை ஒழித்து மூன்று பெரும் பிரிவுகளை ஏற்படுத்தி, இத்தாலியில் ஒரே அரசு ஏற்பட வழிவகை செய்தார். அதுமட்டுமன்றி, இத்தாலியில் ஒரே சீரான சட்ட அமைப்பையும் ஆட்சிமுறையையும் புகுத்தி, ஒற்றுமை உணர்ச்சி வளர வழி ஏற்படுத்திஞர். சாலைகளைச் செம்மைப்படுத்தியும், கால்வாய்களை வெட்டியும், பாலங்களை அமைத்தும் போக்குவரத்துச் சாதனங்களைப் பெருக்கினர். அதன் பயனுக மக்கள் ஒருவரை ஒருவர் நெருங்கிப் பழகும் வாய்ப்பு ஏற்பட்டது. கல்வித்துறையில் குறிப்பிடத்தக்க முன்னேற்றங்களை ஏற்படுத்திஞர். அதனுல் மக்கள் அரிய கருத்து களைத் தாங்களே கற்றுத் தெரிந்துகொள்ள வாய்ப்பு ஏற்பட்டது. நிலமானியத் திட்டத்தைச் சார்ந்த வழக்கங்களை ஒழித்தார். நெப்

போலியன் நடவடிக்கைகளில் பல, அவர் வீழ்ச்சிக்குப் பிறகு ரத்து செய்யப்பட்டன என்பது உண்மையேயாகும். ஆனால், அக் குறுகிய காலத்திற்குள்ளாகவே ஒற்றுமையின் அவசியத்தை அவர்களால் மறந்துவிட முடியாத அளவில் அவர்களுக்குக் கற்றுக்கொடுத்துவிட்டார். மேலும், இத்தாலியை ஆண்டுகொண் டிருந்தவர்கள் அனைவரும் வல்லாட்சி முறையைப் பின்பற்றி யிருந்தனர். சார்டினியாவின் அரசர், முதலாவது விக்டர் இம்மானு வேல் பிற்போக்குக் கருத்துடையவர். லம்பார்டி-வெனீஷியா பகுதியில் மக்களின் நடவடிக்கைகளைக் கூர்ந்து கவனிக்க ஒற்றர்கள் நிய மிக்கப்பட்டிருந்தனர். மக்களுக்கு எவ்வித உரிமையும் வழங்கப்பட வில்லை. அரசாங்கத்தினர் புத்தகங்கள், செய்தித் தாள்கள் ஆகிய வற்றைத் தணிக்கை செய்தனர். கடுமையான வரிகளை மக்கள்மீது சுமத்தியிருந்தனர். இத்தாலியிலுள்ள ஒரு கோமகன் ஆட்சிக்குட் பட்டிருந்த பகுதிகளில் இருந்த மக்கள் அதிகாரிகளுடைய கொடுங் கோன்மைக்கும் பேராசைக்கும் இலக்காயினர். மோடெனாவில் பிரபுக் களும் குருமார்களும் மட்டுமே சில உரிமைகள் பெற்றிருந்தனர். போப்பின் ஆளுகைக்குட்பட்ட பகுதிகளிலுள்ள மக்கள் பலவாறு துன்புறுத்தப்பட்டனர். அதிகாரிகள் ஊழல் நிறைந்தவர்களாயிருந் தனர். தெற்கு இத்தாலியில் மக்கள் வெறுப்புக்குள்ளாகியிருந்த தணிக்கைமுறை, முற்போக்குக் கருத்தினரைத் துன்புறுத்தும் வழக்கம் ஆகியவை மீண்டும் புகுத்தப்பட்டன. ஃபிரெஞ்சுப் புரட்சிக் கருத்துகள் இத்தாலியிலும் பரவியதால், மக்கள் உரிமைகள் பெறத் துடித்தனர். அதனால் கிளர்ச்சிகள் ஏற்படலாயின. மேலும், மக்க ளுடைய கருத்துகளை எடுத்துச்சொல்ல மன்றங்கள் எவையும் இல் லாததாலும், முற்போக்குக் கருத்துகளை எடுத்துரைப்பவர்கள் கடுமை யாகத் தண்டிக்கப்பட்டதாலும், அரசாங்கம் அதனைக் குறை கூறுவதை அனுமதிக்கவில்லையாதலாலும் மக்கள் பல இரகசியக் கழகங்களை ஏற்படுத்தியிருந்தனர். அவைகளுள் முக்கியமானது கார்போனரி (Carbonari) என்பதாகும். அவை முற்போக்குக் கருத்துகள் அழி வுறுவதைத் தடைசெய்தன.

எல்லாவற்றிற்கும் மேலாக அக் காலத்தில் இத்தாலியில் பல தலைவர்கள் தோன்றினர்கள். அவர்கள் மக்களிடையே ஒற்றுமை உணர்ச்சியைத் தோற்றுவித்தனர். அதே நேரத்தில் முற்போக்குக் கருத்துகளைக்கொண்ட ஆட்சி முறையை ஏற்படுத்துவதற்கும் வழி வகை செய்தனர். அவர்களில் ஒருவர் மாஜினி (Mazzini) என்பவராவார். 1805-ல் ஜெனோவாவில் பிறந்த இவர் சிறு வயது முதற்கொண்டே நாட்டின் சீரழிந்த நிலையைக் கண்டு மனம் நொந்து இருந்தார். பல்கலைக்கழகப் படிப்பு முற்றுப்பெற்ற பிறகு கார்போனரியில் சேர்ந்தார். இத்தாலியில் 1831-ல் ஏற்பட்ட

புரட்சியில் பங்கு கொண்டதற்காக அவர் கைது செய்யப்பட்டார். ஆனல், சில மாதங்களுக்குப் பிறகு அவர் குற்றமற்றவர் என்பதற்காக விடுதலை செய்யப்பட்டார். போலீசார் கண்காணிப்பில் இருக்க விருப்பங்கொள்ளாததால், நாட்டை விட்டு ஃபிரான்சிலுள்ள மார்சேயி (Marseilles) என்னுமிடத்திற்குச் சென்ருர். அங்கு 'யங் இத்தாலி' (Young Italy) என்ற பெயரில் ஒரு கழகத்தை அமைத்தார். இளைஞர்களிடம் அவருக்கு மிகுந்த நம்பிக்கை இருந்ததால், அவருடைய கழகத்திற்கு 'யங் இத்தாலி' என்ற பெயரை வைத்தார். மாஜினி சிறந்த எழுத்தாளர். மாசற்ற பண்புடையவர். ஆகவே, அவருடைய கழகம் வெகு விரைவில் வளர்ச்சி பெறலாயிற்று. அவருடைய முக்கிய நோக்கம் இத்தாலியை ஒரே ஆட்சியின்கீழ்க் கொண்டுவரவேண்டும் என்பதாகும். அந்நியர்களை விரட்டி, மக்களே ஆட்சியை நடத்தவேண்டும் என்றும் விரும்பினர். அந் நோக்கங்களை நிறைவேற்ற முதலில் மக்களுக்குத் தம் கருத்துகளை எடுத்துரைத்து, அவர்களைத் தம்முடைய இயக்கத்தில் ஈடுபடுத்தவேண்டும் என்று எண்ணினர். ஆகவே, அவருடைய கழகத்தைச் சார்ந்தோர்களை இத்தாலிக்கு அனுப்பி, அக் கருத்துகளைப் பரப்புமாறு கட்டளையிட்டார். மக்களிடம் தேசிய உணர்ச்சியை வளர்த்த பிறகு, அவர்களது துணையுடன் கிளர்ச்சியில் ஈடுபட வேண்டும் என்று எண்ணினர். இத்தாலிய சுதந்திரப் போரை அந்நியருடைய உதவியின்றியே வெற்றிகரமாக நடத்த முடியும் என்றும் அவர் எண்ணினர். அந்நிய ஆட்சியை ஒழித்த பிறகு இத்தாலி குடியரசாக வேண்டும் என்று அவர் கருதினர். அதனல் அவர் செயல்முறைக்குரிய திட்டங்களை உருவாக்கும் திறனற்றவர் என்று கூறுகிறர்கள். ஆனல், இத்தாலியில் ஒரே ஆட்சி ஏற்படுவதற்கு வாய்ப்பு உள்ளது என்று முதன்முதலில் கண்டறிந்தவர் அவரேயாவார். அதோடு இராமல், அதை அடையப் பெருமுயற்சியும் மேற்கொண்டதால், அவரை இத்தாலியின் மாபெருந் தலைவர்களுள் ஒருவராகக் கருதுகிறர்கள். மாஜினியினுடைய நடவடிக்கைகளை அறிந்த ஃபிரெஞ்சு அரசாங்கம் அவரை ஃபிரான்சிலிருந்து வெளியேறும்படி உத்தரவிட்டது. சில காலம் சுவிட்சர்லாந்தில் தங்கியிருந்தார். 1833-ல் சவாய்மீது படையெடுக்க ஏற்பாடு செய்தார். அதனல் சுவிட்சர்லாந்திலிருந்தும் அவர் துரத்தப்பட்டார். அதன் பிறகு அவர் இங்கிலாந்தில் தங்கினர். 1848-ல் இத்தாலியில் கலகங்கள் ஏற்பட்டபோது நாடு திரும்பி அவற்றில் கலந்துகொண்டார்.

ஜ்ோபார்தீ (Gioberti) என்பவரும் மக்களிடையே ஒற்றுமை உணர்ச்சியை வளர்த்தார். 1801-ல் பிறந்த இவர், முதலில் சார்டினியா அரசின் மதகுருவாகப் பணியாற்றிவந்தார். நாளடைவில் அரசியலில் ஈடுபடலாயினர். ஆகவே, 1833-ல் இவர் நாடுகடத்தப்பட்டார்.

சுதந்திரத்தையும் ஒன்றுபடுத்தப்பட்ட ஆட்சியையும் போப் தலைமையின்கீழ் ஏற்படுத்தப்படும் கூட்டமைப்பின் (Confederation) வாயிலாகத்தான் பெறமுடியும் என்று கருதினர். ஒவ்வோர் அரசரும் சீர்திருத்தங்களை மேற்கொள்ளுவாராயின், மக்கள் உரிமை பெற்று வாழ்வார்கள் என்றும் அறிவித்தார். ஆனால், அவர் திட்டங்கள் வெற்றிபெறவில்லை.

மற்றொரு தலைவர், மாசிமோ தெ அஜெக்லியோ (Massimo d' Azeglio) என்பவர். இவர் 1798-ல் பியட்மாண்டில் பிறந்தார். போப் ஆண்டுவந்த பகுதிகளில் பல நாள் வாழ்ந்துவந்தார். ஆகவே, அங்கு நிறைந்திருந்த சீர்கேடுகளை நன்கு அறிந்திருந்தார். எனவே, போப்பைத் தலைவராகக் கொண்டு இத்தாலியிலுள்ள நாடுகளை ஒன்றுசேர்த்து ஒரு கூட்டமைப்பு ஏற்படுத்துவதென்ற கருத்தை எதிர்த்தார். இத்தாலியை ஓர் ஆட்சியின்கீழ்க் கொண்டுவர வல்லவர் சார்டினியாவின் அரசர் ஒருவரே என்று குறிப்பிட்டார். அவரால்தான் புதிய ஆதிக்கத்தை ஒழிக்க முடியும் என்ற கருத்தைத் தெரிவித்தார். இவ்வாறு பிற்காலத்தில் சார்டினியாவின் தலைமையின்கீழ் ஐக்கிய இத்தாலிய சுதந்திர நாடு ஏற்படுத்துவதற்கு அவர் வழிவகை செய்தார்.

கத்தோலிக்க மதத்தலைவரான போப் ஒன்பதாவது பயஸ் (Pius IX) முற்போக்குக் கருத்துகளை ஊக்குவிக்கும் வகையில் பல சீர்திருத்தங்களை மேற்கொண்டார். அரசியல் குற்றவாளிகளை விடுவித்தார். செய்தித்தாள்களுக்குச் சுதந்திரம் அளித்தார். அமைச்சரவை ஒன்று ஏற்படுத்தினர். ரோமாபுரியில் மக்கள் பிரதிநிதிகள் கொண்ட சபையை ஏற்படுத்தி நகராட்சியினை அதனிடம் ஒப்படைத்தார். இந்த ஏற்பாடுகள் எல்லாம் மக்களின் தேசிய உணர்ச்சியைப் பேரளவில் தூண்டிவிட்டன.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் முற்பகுதியிலேயே இத்தாலியைச் சுதந்திர நாடாக அமைப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. 1821-ல் ஸ்பெயினில் புரட்சி ஏற்பட்ட செய்தி, இத்தாலிய மக்களைத் தூண்டிவிட்டது. தெற்கு இத்தாலிய மக்கள் கிளர்ச்சி செய்தனர். நேபிள்ஸ் அரசர் அவர்களுடைய கோரிக்கைகளை ஏற்றுக் கொண்டார். அதே நேரத்தில் அவர் ஆஸ்திரியாவின் துணைகொண்டு தக்க சமயத்தில் தாம் கொடுத்த வாக்குறுதிகளை ரத்து செய்ய முற்பட்டார். ஆஸ்திரியா அவருடைய வேண்டுகோளை ஏற்றுக் கொண்டது. ஏனெனில், ஆஸ்திரியாவிற்கு இத்தாலியில் பல பகுதிகள் சொந்தமாயிருந்தன. நேபிள்ஸில் புரட்சி வெற்றியடைந்து அதன் பயனாகப் பொறுப்புள்ள ஆட்சி ஏற்படுத்தப்பட்டால், அதே நிலையை அவர்களுடைய பகுதியில் வாழும் மக்களும் பெற முயலு

வார்கள் என்று கருதினர். ஆகவே, ஆஸ்திரியாவின் சேனையொன்று தெற்கு இத்தாலி சென்றது. நேபிள்ஸ் அரசர் இழந்த அதிகாரங்களை மீண்டும் பெற அச் சேனை உதவி புரிந்தது. அதே நேரத்தில் பியட் மாண்டிலும் மக்கள் உரிமைகள் பெறக் கிளர்ச்சி செய்தார்கள். ஆஸ்திரியா, பியட்மாண்டின் அரசரான சார்லஸ் ஃபெலிக்ஸ் (Charles Felix) என்பவரின் ஒப்புதலின்பேரில் பியட்மாண்டிற்கு ஒரு சேனையை அனுப்பிக் கிளர்ச்சிக்காரர்களை ஒடுக்கியது. இவ்விரு கிளர்ச்சி களும், மக்களிடம் முற்போக்குக் கருத்துகளும் ஒற்றுமை உணர்ச்சி யும் அதிக அளவில் செல்வாக்குப் பெறவில்லை என்பதையும் மெட்டர்னிக்கின் வலிமையையும் தெளிவாக எடுத்துக்காட்டுகின்றன. அவைகளின் பயனுக, ஆஸ்திரியாவின் செல்வாக்கு மேலும் இத்தாலி யில் வளர்ச்சி பெறலாயிற்று.

1830-ல் கிளர்ச்சிகள் மீண்டும் ஏற்பட்டன. ஃபிரான்சில் அவ் வாண்டில் ஏற்பட்ட புரட்சி இத்தாலியர்களைக் கிளர்ச்சி செய்ய ஊக்குவித்தது. போப்புக்குச் சொந்தமான ரோமக்னுவிலும், பார்மா விலும், மோடெனுவிலும் கிளர்ச்சிகள் ஏற்பட்டன. போப் ஆஸ்திரி யாவின் உதவியை நாடினர். மோடெனுவின் கோமகன் ஆஸ்திரியா விற்குச் சொந்தமான பகுதிக்கு ஓடிவிட்டார். ஆஸ்திரியா மீண்டும் படைகளை அனுப்பி மோடெனுவிலும், ரோமக்னுவிலும், பார்மாவிலும் ஏற்பட்ட கிளர்ச்சிகளை அடக்கியது. இக் கிளர்ச்சிகள் யாவும் தோல்வி யுற்ற போதிலும், கிளர்ச்சிக்காரர்கள் ஆங்காங்கே இடைக்கால மக்கள் அரசாங்கத்தை ஏற்படுத்தி, பிற்போக்குக் கருத்துகளையுடைய ஆட்சியாளர்களின் பலவீனத்தை நன்கு புலப்படுத்தினர்கள். மேலும், ஆஸ்திரியாவின் உதவியால்தான் அவர்கள் அரசர்களாக இருக்க முடியும் என்பதையும் எடுத்துக்காட்டினர்.

1848-ல் இத்தாலி சுதந்திரமும் ஒற்றுமையும் பெறுவதற்குத் தீவிரமான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. அவைகளுக்கு ஏற்றாற் போல் போப் ஒன்பதாவது பயஸ் தம்முடைய ஆட்சிப் பகுதியில் சில முற்போக்குச் சீர்திருத்தங்களைச் செய்து, மக்கள் உணர்ச்சியைத் தூண்டிவிட்டார். மேலும், மாஜினியின் முயற்சியால் மக்களிடம் சுதந்திர உணர்ச்சி கொழுந்துவிட்டெரியத் தொடங்கியது. முதலில் சிசிலித் தீவில் மக்கள் அரசாங்கத்திற்கு எதிராகக் கிளர்ச்சி செய் தார்கள். அவர்களை அடக்க அனுப்பப்பட்ட படை தோல்வி யுற்றது. 1812-ல் ஏற்படுத்தப்பட்ட அரசியலமைப்புச் சட்டம் மீண்டும் 'ஏற்படுத்தப்பட்டது. பிறகு நேபிள்ஸ் மக்கள் கிளர்ச்சி செய்தார்கள். நேபிள்ஸ் மன்னர் பெர்டினண்டு ஆஸ்திரியாவின் உதவியை நாடினர். ஆனல், போப் ஆஸ்திரியாவின் துருப்புகள் தம் நாட்டின் வழியாகச் செல்வதற்கு அனுமதி வழங்கவில்லை. ஆகவே, பெர்டினண்டு மக்களுடைய கோரிக்கைகளை ஏற்றுக்கொள்ள வேண்டிய

தாயிற்று. புதிய அரசியலமைப்பு ஒன்றை ஏற்படுத்தினர். அதற்குப் பின்னர் பியட்மாண்ட் மக்கள் கோரிக்கைகளை நிறைவேற்ற, அப்பொழுது அவர்களை ஆண்டுவந்த சார்லஸ் ஆல்பர்ட் என்ற முற்போக்குக் கருத்து உடைய அரசரைக் கொண்டுள்ள அரசியலமைப்பு ஒன்றை ஏற்படுத்தினர். டஸ்கனியிலும் பொறுப்பாட்சி ஏற்படுத்தப் பட்டது. போப்பும் அரசியலமைப்பு ஒன்றை ஏற்படுத்தினர். அந்த நேரத்தில் ஆஸ்திரியாவில் ஏற்பட்ட புரட்சியின் விளைவாக, மெட்டர்னிக் நாட்டைவிட்டு வெளியேற வேண்டியதாயிற்று. அவ் வாய்ப்பைப் பயன்படுத்தி லம்பார்டி மக்கள் சுதந்திரம் பெற முயன்றனர்கள். லம்பார்டியிலுள்ள மிலான் நகரத்தில் நடைபெற்ற சண்டையில் மக்களே வெற்றி பெற்றனர்கள். ஆஸ்திரியாவின் படையினர் மிலானைவிட்டு வெளியேறி நான்கு கோட்டைகளால் சூழப்பட்ட மாவட்டத்தில் (The Quardilateral) தங்களுடைய படைநிலையை ஏற்படுத்தினர்கள். அதன் பிறகு வெனிஸ் நகர மக்கள் கிளர்ச்சி செய்தார்கள். டேனியல் மானின் (Daniel Manin) என்பவரைத் தலைவராகக்கொண்ட குடியரசை அங்கு அமைத்தார்கள்.

சார்லஸ் ஆல்பர்ட் ஆஸ்திரியாவின் இக்கட்டான நிலையைப் பயன்படுத்தி, அந்நிய ஆட்சியை இத்தாலியினின்றும் ஒழித்து, இத்தாலியை ஒருகுடைக்கீழ்க் கொண்டுவர எண்ணினர். பியட்மாண்டின் தலைவர்கள் பலர் அவரை ஆஸ்திரியாவிற்கு எதிராகப் போர்புரியத் தூண்டினர். இத்தாலி மக்கள் எல்லோரும் சார்லஸ் ஆல்பர்ட்டைப் போரிட வேண்டினர்கள். இதற்கு இரண்டு காரணங்கள் உண்டு. முதலாவதாக, சவாய் குலத்தினர் நாட்டுப் பற்றுடையவர். இரண்டாவதாக, இத்தாலியிலுள்ள அரசர்களுள் அவர்தாம் படைவலிமை பெற்றிருந்தார். மேலும், அவர் நாட்டு மக்களும் ஏனைய இத்தாலியர்களைவிடப் போர் புரிவதில் ஆர்வங் கொண்டிருந்தவர்கள். சார்லஸ் ஆல்பர்ட் மக்கள் வேண்டுகோளுக்கு இணங்கிப் போர்ப் பிரகடனம் செய்தார்; டஸ்கனியின் கோமகன், போப், பெர்டினண்டு ஆகியோர் சார்லஸ் ஆல்பர்ட்டுக்கு உதவியாகப் படைகளை அனுப்பினர்கள். நாடு திரும்பிய மாஜினியும் போரில் கலந்துகொண்டார். ஆனால், போப் தமது படை, தமது நாட்டைக் காப்பதற்கே பயன்படுத்தப்பட வேண்டும் என்று அறிவித்தார். பெர்டினண்டு மீண்டும் பிற்போக்கு ஆட்சியை ஏற்படுத்தியதால், தம் படைகளைத் திரும்பிவிடுமாறு கட்டளையிட்டார்.

சர்லஸ் ஆல்பர்ட் மிலானை நோக்கிப் படைகளை நடத்திச் சென்றனர். மிலான் நகர மக்கள் அவரை வரவேற்றனர். பிறகு வெனிஸ் சென்று அம் மக்களின் ஒப்புதலைப் பெற்றபின், வெனிஸை பியட்மாண்டுடன் சேர்த்தார். மிலான், மோடெனு ஆகியவைகளும்

பியட்மாண்டுடன் சேர்ந்தன. வட இத்தாலி இவ்வாருக ஓர் ஆளுகை யின்கீழ்க் கொண்டுவரப்பட்டது.

ஆனல், ஆஸ்திரியா முழுமையாக இத்தாலியினின்றும் விரட்டப் படவில்லை. அதன் படை ராடெட்ஸ்கியின் (Radetsky) தலைமையின் கீழ் மிக்க பாதுகாப்புடன்கூடிய மாவட்டத்தில் நிலைநிறுத்தப் பட்டிருந்தது. ஆகவே, போர் தொடர்ந்து நடைபெற்றது. மாஜினியின் குடியரசுக் கருத்துகளை ஏற்றிருந்த மக்களிடமிருந்து சார்லஸ் ஆல்பர்ட் தகுந்த ஆதரவைப் பெற இயலவில்லை. கஸ்டோஸ்ஸா (Custozza) என்னுமிடத்தில் ஆஸ்திரியா அவரை எளிதில் தோற்கடித்தது. ஆகவே, மிலானைவிட்டு அவர் வெளியேற நேர்ந்தது. மிலான் நகரத்தைப் பகைவர்களிடம் ஒப்படைத்ததால், மிலான் மக்கள் அவரைத் தாக்கிஞர்கள். இறுதியில் சார்லஸ் ஆல்பர்ட் லம்பார்டியை விட்டு வெளியேறவேண்டியதாயிற்று.

இதற்கிடையே ரோம் நகரில் கிளர்ச்சி ஏற்பட்டது. போப், நகரத்தைவிட்டு ஓடிவிட்டார். ரோம் மக்கள், அரசியல் நிர்ணய சபை ஒன்றை ஏற்படுத்திஞர்கள். இறுதியில் ரோமில் குடியரசு ஏற்படுத்தப் பட்டது. மாஜினியை உட்கொண்ட மூன்று பேர் அடங்கிய குழுவி னிடம் ஆட்சியதிகாரம் ஒப்படைக்கப்பட்டது. போப்பின் அதிகாரத்தை மீண்டும் நிலைநிறுத்த ஃபிரான்சு படையொன்றை ரோமுக்கு அனுப் பியது. ரோம் குடியரசைக் காக்க அப்பொழுது வட இத்தாலியில் சார்லஸ் ஆல்பர்ட்டுக்கு உதவியாகச் சண்டை செய்துகொண்டிருந்த கரிபால்டி என்ற மற்றேர் இத்தாலியத் தலைவரை மாஜினி வேண்டிஞர். உடனே கரிபால்டி ரோமுக்கு விரைந்து சென்ருர்.

கரிபால்டி சவாயிலுள்ள நைஸ் என்னுமிடத்தில் 1807-ல் பிறந்தார். அவர் தந்தை அவர் மதஸ்தாபனத்தில் சேரவேண்டும் என்ற விருப்பங் கொண்டிருந்தார். ஆனல், மதகுருவாவதை அவர் விரும்பாததால், பதினைந்து வயதில் அவர் வீட்டைவிட்டு ஓடி விட்டார். அதன் பிறகு அவர் கப்பலில் வேலைபார்த்துவந்தார். மாஜினி தொடங்கிய 'யங் இத்தாலி' கழகத்தில் சேர்ந்தார். பியட்மாண்ட் கப்பற்படையில் பியட்மாண்ட் அரசருக்கு எதிராகக் கலகம் ஏற்படுத்தி அதன் வாயிலாகக் குடியரசை அங்கு ஏற்படுத்த எண்ணியதால், அக் கப்பற்படையில் சேர்ந்தார். அரசாங்கத்திற்கு எதிராக நடவடிக்கையை மேற்கொண்டதற்காக அவருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது. ஆனல், அதை நிறைவேற்றுமுன்னர் ஃபிரான்சு நாட்டிற்கு ஓடிவிட்டார். அங்கிருந்து தென் அமெரிக்கா விற்குச் சென்ருர். பன்னிரண்டு ஆண்டுகள் உருகுவே மக்களுடன் சேர்ந்து சுதந்திரப் போரில் ஈடுபட்டிருந்தார். அக் காலத்தில் அவர் கொரில்லா முறைப் போரையும், திறமையாகக் குதிரைகள்மீது

சவாரிசெய்யும் முறையையும் கற்றுக்கொண்டார். அங்குதான் அனீடா (Anita) என்பவரை மணம் செய்துகொண்டார். அவ்வம்மையார், தம் கணவர் மேற்கொண்டிருந்த மிகப் பயங்கரமான வாழ்க்கையை அவர் கூடவே இருந்து பகிர்ந்துகொண்டார். தென் அமெரிக்காவில் இருந்தபொழுது ஒரு படையினை ஏற்படுத்தினர். அப் படையினருக்குச் சிவப்பு ஆடைகளைச் சீருடையாக ஏற்படுத்தித் தந்தார். 1848-ல் அவர் நாடு திரும்பினர். ஆஸ்திரியாவிற்கு எதிராக ஆர்வத்துடன் போரில் ஈடுபட முனைந்தார். முதலில் சார்லஸ் ஆல்பர்ட்டுக்கு உதவிசெய்ய அனுமதி கோரினர். சார்லஸ் ஆல்பர்ட் அவருடைய உதிவியை நிராகரிக்கவே, லம்பார்டிய மக்களுக்கு உதவி புரியலானர். மிலான் நகரவாசிகள் அவருக்கு ஆர்வமிக்க வரவேற்பை அளித்தார்கள். பல பேர் அவருடைய படையில் சேர்ந்துகொண்டனர். அப் படையைக் (Red shirts) கொண்டு ஆஸ்திரியாவிற்குப் பல இன்னல்கள் கொடுத்துவந்தார். இறுதியில் சார்லஸ் ஆல்பர்ட்டின் படைத்தலைவராக அமர்ந்தார். அதே நேரத்தில் மாஜினி அவருடைய உதவியைக் கோரியதால் அவர் உடனே ரோம் நோக்கிப் புறப்பட்டார். முதலில் ஃபிரெஞ்சுக்காரர்களைத் தோற்கடித்தார். ஆனல், ஃபிரெஞ்சுப் படைகள் பலப்படுத்தப்பட்டதால் ரோமை விட்டு வெளியேறவேண்டியதாயிற்று. மறுபடியும் போப் ரோமாபுரியின் ஆட்சித் தலைவரானர். ரோமை விட்டு வெளியேறிய கரிபால்டி வெனிஸ் செல்ல முயன்ருர்; ஆனல், அவரைப் பின்தொடர்ந்த அவரது பகைவர்கள் அம் முயற்சியைத் தோற்கடித்தார்கள். அவர்களுடைய பிடியிலிருந்து தப்ப கரிபால்டி பல இன்னல்களை அனுபவித்தார். அவர் மனைவியார் அக் காலத்தில் தான் இறந்துவிட்டார். இறுதியில் அவர் இத்தாலியினின்றும் தப்பி வெளியேறினர்.

இதற்கிடையே பியட்மாண்ட் பாராளுமன்றம் சார்லஸ் ஆல்பர்ட்டை ஆஸ்திரியாவுடன் மீண்டும் போர்செய்யுமாறு தூண்டியது. அதே நேரத்தில் ஆஸ்திரியாவின் தலைநகரில் கிளர்ச்சி ஏற்பட்டது. அதைப் பயன்படுத்தி சார்லஸ் ஆல்பர்ட் மீண்டும் போர் தொடங்கினர். ஆனல், மீண்டும் நோவாரா என்னுமிடத்தில் தோல்வியுற்ருர். அதனல் அவர் முடிதுறந்தார். அவரைப் பின்தொடர்ந்த இரண்டாவது விக்டர் இம்மானுவேல் ஆஸ்திரியாவுடன் சமாதானம் செய்து கொண்டார். பியட்மாண்ட், தான் கைப்பற்றிய இடங்களைத் திருப்பிக் கொடுத்துவிட்டது. ஆஸ்திரியா பியட்மாண்டினுடைய அரசியலமைப்பை ஒழிக்குமாறு வேண்டிக்கொண்டது. ஆனல், விக்டர் இம்மானுவேல் அதற்கிசைய மறுத்தார். ஆகவே, இத்தாலியில் 1848-ல் கிளர்ச்சி காரணமாக ஏற்படுத்தப்பட்ட அரசியல் அமைப்புகளில் பியட்மாண்ட் அரசியலமைப்பு ஒன்றுதான் நிலைபெற்றிருந்தது.

இவ்வாறிருக்க, வெனிஸ் நகரத்தில் மக்கள் ஆஸ்திரியாவைத் தொடர்ந்து எதிர்த்துக்கொண்டிருந்தார்கள். 1849-ல் வெனிஸ் சரண் அடைந்தது. கிளர்ச்சி காரணமாகத் தம் ஆட்சிப் பகுதியை விட்டு வெளியேறிய டஸ்கனி கோமகன் தம்முடைய ஆட்சியதிகாரத்தை மீண்டும் பெற்ருர்.

1848-ல் இத்தாலியின் சுதந்திரத்திற்காகவும், மக்களுக்கு உரிமைகள் அளிப்பதற்காகவும் ஏற்படுத்தப்பட்ட கிளர்ச்சி தோல்வியில் முடிந்தது. கிளர்ச்சிக்காரர்கள் மிக்க ஆர்வத்துடன் அதில் ஈடுபட்டிருந்தார்கள் என்பதில் ஐயமில்லை. ஆனல், அக் கிளர்ச்சியின் தலைவர்களுக்குள் ஒற்றுமை இல்லை. அனைவரும் ஆஸ்திரியாவை விரட்டிவிட வேண்டும் என்று எண்ணினர்கள். ஆனல், அந் நோக்கத்தைச் செயற்படுத்துவதில் ஒன்றுபட்டு செயற்படவில்லை. சார்லஸ் ஆல்பர்ட் தம்முடைய ஆட்சியின்கீழ் இத்தாலியை ஒன்றுபடுத்த எண்ணினர். ஆனல், குடியரசை ஏற்படுத்தவேண்டும் என்று கருதிய மாஜினியின் கட்சியினரும், போப்பைத் தலைவராக்க வேண்டும் என்று கருதியவர்களும் சார்லஸ் ஆல்பர்ட்டுடன் ஒத்துழைக்கவில்லை. மேலும், வலிமை வாய்ந்த ஆஸ்திரியாவுடன் போரிட இத்தாலிய மக்களுக்கு அயல் நாடுகளினின்றும் யாதோர் உதவியும் கிடைக்கவில்லை. 1848-ல் ஏற்பட்ட இயக்கம் தோல்வியில் முடிந்தாலும், மக்களிடம் தேசிய உணர்ச்சியும், அரசியலமைப்புச் சார்ந்த ஆட்சியில் பற்றும் மேலும் வளர அது பெரிதும் உதவி செய்தது. மாஜினியின் கட்சியினரும், போப்பைத் தலைவராகக் கொண்ட அமைப்பை ஏற்படுத்த வேண்டும் என்று கூறியவர்களும் தக்க சமயத்தில் சார்லஸ் ஆல்பர்ட்டுக்கு உதவி செய்யாததால், அவர்களுடைய செல்வாக்கை இழந்தார்கள். நாட்டு ஒற்றுமையை ஏற்படுத்தத் தகுதி பெற்றவர் பியட்மாண்ட் அரசரேயாவார் என்ற கருத்து ஓங்கி வளரலாயிற்று.

இத்தாலியை தேசியக் கோட்பாட்டின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட நாடாக மாற்றிய பெருமை கவூரைச் (Cavour) சேர்ந்ததாகும். கவூர் 1810-ல் டியூரின் என்னுமிடத்தில் பியட்மான்டைச் சார்ந்த மேற்குடியாளர் குடும்பத்தில் பிறந்தார். தம்முடைய தந்தைக்கு அவர் இளைய மைந்தனுதலின், அவர் படைத்துறையில் சேர வேண்டியதாயிற்று. பத்து வயதில் டியூரினிலுள்ள இராணுவப் பயிற்சிப் பள்ளியில் சேர்ந்தார். இராணுவ சேவையில் விருப்பங் குறையவே, அதைவிட்டு வெளியேறினர். பிரிட்டன் போன்ற நாடுகளில் சுற்றுப் பயணம் செய்தார். அதன் பயனக முற்போக்குக் கருத்துகளில் மிகுந்த அக்கறை காட்டிவந்தார். சில காலம் விவசாயத்தில் ஈடுபட்டிருந்தார். 1847-ல் 'ரிஸ்ஆர்கிமென்டோ' (II. Resorgimento) என்ற பெயரில் பத்திரிகையொன்றை நடத்தி

வந்தார். ரிஸ்ஆர்கிமென்டோ என்ருல், 'புதுச் செயல் ஊக்குவிப்பு' என்று பொருள். அப் பத்திரிகை அரசியலமைப்புச் சார்ந்த அரசாங்கத்தை அமைப்பது, இத்தாலியின் சுதந்திரம் போன்ற கருத்துகளை ஆதரித்தது. 1848-ல் புதிய அரசியலமைப்பு நடைமுறைப்படுத்தப்பட்டபோது, கவூர் பியட்மாண்டின் முதல் பாராளுமன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார். 1850-ல் அமைச்சரானர்; 1852-ல் பிரதம மந்திரியானர். வர்த்தகம் பெருகியதற்கும், நிதிநிலை நல்ல முறையில் அமைந்திருந்ததற்கும் அவருடைய பெருமுயற்சியே காரணமாகும். நாட்டில் மக்கள் எல்லா வளங்களையும் பெற்று மன நிறைவுடன் இருந்தால்தான் வெளிநாட்டுத்துறையில் நாடு சிறப்பாக விளங்கமுடியும் என்று கருதினர். நாட்டின் இராணுவப் பாதுகாப்புச் சாதனங்களைப் பெருக்கினர்.

கவூருடைய சிறப்புக்குக் காரணம் அவர் இத்தாலியை ஒன்றுபடுத்த மேற்கொண்ட முயற்சியேயாகும். இத்தாலி சுதந்தரம் பெற்ற நாடாக அமையவேண்டுமென்ருல், ஆஸ்திரியாவுடன் போர்புரிய வேண்டும் என்பதை நன்ருக உணர்ந்திருந்தார். அதே கருத்தைதான் மாஜினியும் கொண்டிருந்தார். ஆனல், காரியசாத்தியமான முறையைக் கையாண்டு அந் நோக்கத்தை நிறைவேற்றி, அவர் சிறப்படைந்தார். இத்தாலி ஆஸ்திரியாவை வெளியேற்ற அயல் நாட்டரசுகளின் உதவி மிகவும் அவசியமானது என்பதை உணர்ந்தார். ஆகவே, அதைப் பெற வழி தேடினர். அச் சமயத்தில் கிரிமியப் போர் (Crimean war) தொடங்கியது. இங்கிலாந்தும் ஃபிரான்சும் சேர்ந்து ருஷ்யாவுடன் போரிட்டன. சார்டினியா அதில் கலந்துகொண்டால், ஐரோப்பிய நாடுகளுக்கிடையே அதனுடைய செல்வாக்கை ஏற்படுத்தமுடியும் என்று கவூர் கருதினர். அத்தகைய செல்வாக்கு இத்தாலியை ஒன்றுபடுத்தும் முயற்சிக்கு அவசியம் என்று அறிந்திருந்தார். ஏனெனில், இத்தாலி ஒரு நாடாக உருவாக்கப்பட்டால், இத்தாலியைப் பொறுத்த அளவில் வியன்ன ஏற்பாடு கிழித்தெறியப்படவேண்டியதாகும். அதற்கு அவ் ஏற்பாட்டை உருவாக்கியவர்களின் ஆதரவு தேவைப்பட்டது. அவ்வாதரவைப் பெறவே கவூர் சார்டினியாவைப் போரில் ஈடுபடுத்தினர். அதற்கு மன்னர் விக்டர் இம்மானுவேல் பேராதரவைக் கொடுத்தார். போரில் சார்டினிய வீரர்கள் வீராவேசத்துடன் போரிட்டனர். அதன் பயனக சார்டினியாவின் புகழ் ஓங்க ஆரம்பித்தது. இப்பொழுது அது ஒரு வல்லரசாகவே கருதப்பட்டது. போருக்குப் பின்னர் பாரிஸில் கூட்டப்பட்ட மாநாட்டில் கவூர் கலந்துகொண்டார். அம் மாநாட்டில் இத்தாலியின் பல பாகங்களிலும் ஏற்பட்டிருந்த சீர்கேடுகளை விளக்கிக் கூறினர். அச் சீர்கேடுகளுக்கு ஆஸ்திரியாவே பொறுப்பு என்றும் கூறினர். அதன் விளைவாக இங்கிலாந்து,

ஃபிரான்சு ஆகிய நாடுகளின் பரிவிரக்கத்தைமட்டுமே பெற்ருர். ஆகவே, போரிடுவது அவசியமாகும் என அறிந்தார். பிரிட்டனின் உதவி கிடைக்காது என்று அறிந்தவுடன், அப்பொழுது ஃபிரான்சை ஆண்டுவந்த மூன்ருவது நெப்போலியனுடைய உதவியைக் கோரினர்.[1] பல காரணங்களால் நெப்போலியன் இத்தாலிக்கு உதவிசெய்ய முன் வந்தார். ஃபிரான்சில் அவர் ஆட்சி நிலைபெற்றிருக்க வெற்றிகரமான போர் தேவைப்பட்டது. வியன்னு ஏற்பாட்டை அழிக்கவேண்டும் என்ற கொள்கையை உடையவராதலின், இத்தாலிக்கு உதவிபுரிய இசைந்தார். மேலும், ஃபிரான்சின் அரசராவதற்கு முன்னர் இத்தாலிய மக்களின் உரிமைப் போராட்டங்களில் கலந்துகொண்டிருந்தார். மேலும், நாட்டிலுள்ள முற்போக்குக் கட்சியினரைத் திருப்திப்படுத்த அது பயன்படும் என்று கருதினர். 1858-ல் கவூரும் மூன்ருவது நெப்போலியனும் பிலாம்பியேர் (Plombieres) என்னுமிடத்தில் ஒப்பந்தம் செய்து கொண்டார்கள். ஆஸ்திரியாவை இத்தாலியினின்றும் விரட்டுவதற்கும், சார்டினியாவின் ஆட்சியை லம்பார்டியிலும் வெனிஷியாவிலும் ஏற்படுத்துவதற்கும் சார்டினியா தொடங்கும் போரில் ஃபிரான்சு கலந்துகொள்ள இசைந்தது. அதற்குப் பதிலாக சவாய், நைஸ் ஆகிய இடங்களை நெப்போலியனுக்கு அளிக்க சார்டினியா சம்மதித்தது. மத்திய இத்தாலியில் நெப்போலியனுடைய நெருங்கிய உறவினரான ஜெரோம் போனபார்ட் அரசராக அமர்த்தப்பட வேண்டும் என்றும் முடிவு செய்யப்பட்டது. மேலும், போர் ஆஸ்திரியாவாலேயே தொடங்கப்பட்டதாகக் காணப்படவேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டது. இவ்வொப்பந்தத்தைப் பலப்படுத்தும் வகையில் இளவரசர் ஜெரோம் போனபார்ட், விக்டர் இம்மானுவேலின் மகளை மணம்புரிய ஏற்பாடு செய்யப்பட்டது.

சில காலம் கவூர் ஆஸ்திரியாவைப் போருக்கு இழுப்பதற்கான வாய்ப்பை எதிர்பார்த்திருந்தார். ஆனுல், சில காலம் சென்றபின் நெப்போலியன் சண்டையிடத் தயங்குவதற்காகக் கவூர் கண்டார். ஆகவே, போருக்கான ஏற்பாடுகளை உடனடியாகச் செய்ய முற்பட்டார். ஐரோப்பிய நாடுகள் போர் நிகழாதவாறு தம் செல்வாக்கைப் பயன்படுத்தத் தொடங்கின. மாநாடு ஒன்றைக் கூட்டி இத்தாலியின் பிரச்சினைக்கு முடிவுகாண எண்ணினர்கள். கவூர் அதை விரும்பவில்லை. அப்பொழுது ஆஸ்திரியா, சார்டினியாவிற்கு இறுதி அறிக்கையொன்றை அனுப்பியது. கவூர் அதை நிராகரித்ததால், ஆஸ்திரியா போர் தொடங்கியது. போருக்குக்

[1] மூன்ருவது நெப்போலியன், நெப்போலியனுடைய சகோதரரான லூயி போனபார்ட் என்பவரின் மகன்.

காரணம் ஆஸ்திரியா என்று அறிந்தவுடன், நெப்போலியன் படையொன்றை சார்டினியாவிற்கு அனுப்பினர்.

1859-ல் தொடங்கிய போரில் விக்டர் இம்மானுவேல் மாஜென்டா, சால்ஃபெரினோ (Magenta and Solferino) என்னுமிடங்களில் ஆஸ்திரியாவைத் தோற்கடித்தார். லம்பார்டி, சார்டினியாவின் கைவசமாயிற்று.

இதற்கிடையில் நடு இத்தாலியிலுள்ள போப்பின் ஆட்சிக்குட்பட்ட பகுதியிலிருந்து ஆஸ்திரியாவின் படைகள் வெளியேறின. அந்த வாய்ப்பைப் பயன்படுத்தி அப் பகுதிகளில் மக்கள் ஆதரவைப் பெற்ற ஆட்சிகள் நிறுவப்பட்டன. அதுபோலவே டஸ்கனி, பார்மா, மோடெனு ஆகிய இடங்களில் உள்ள மக்கள் கிளர்ச்சி செய்து தங்களுடைய ஆட்சியாளர்களை விரட்டிவிட்டார்கள். அவ் விடங்களில் மக்கள் ஆதரவைப் பெற்ற அரசாங்கங்கள் ஏற்படுத்தப்பட்டன. பிறகு, போப்பின் ஆளுகைக்குட்பட்ட பகுதிகளில் ஒன்ருன ரோமாக்னு, டஸ்கனி, பார்மா, மோடெனு ஆகியவற்றின் புதிய ஆட்சியாளர்கள் தங்களுடைய ஆட்சிப் பகுதிகளை பியட்மாண்டுடன் சேர்த்துக்கொள்ளவேண்டும் என்று விக்டர் இம்மானுவேலை வேண்டிக் கொண்டார்கள். ஆஸ்திரியாவின் ஆதிக்கம் இத்தாலியில் ஒழிந்து விடும் என்று அனைவரும் எண்ணியிருந்தபோது, நெப்போலியன் விக்டர் இம்மானுவேலைக் கலந்து ஆலோசியாமல் ஆஸ்திரியாவுடன் சமாதானம் செய்துகொண்டார். அதற்குப் பல காரணங்களுண்டு. நெப்போலியன் திடமனமுடையவரல்லர். இத்தாலி ஒன்ருக்கப்பட்டு அதனுல் அது வலிமை அடைவதை அவர் விரும்பவில்லை. சார்டினியா அத்தகைய இத்தாலியை உருவாக்க விரும்புகிறது என்பதை அறிந்ததால், அவர் சண்டையை நிறுத்திக்கொண்டார். பிரஷ்யா போன்ற நாடுகள் இப் போர் நடைபெறுவதை விரும்பவில்லை. மேலும், ஃபிரான்சிலிருந்த கத்தோலிக்கர்கள் இப் போரை வெறுத்தார்கள். ஏனெனில், அப் போர் போப்பினுடைய ஆட்சிப் பகுதிகளில் கலவரத்தை உண்டாக்கக் காரணமாயிருந்தது. வில்லாபிரான்கா சமாதானத்தின்படி, லம்பார்டியை பியட்மாண்டுக்குக் கொடுக்க ஆஸ்திரியா இசைந்தது. பார்மாவையும் பியட்மாண்டுடன் இணைப்பதென்று முடிவுசெய்தனர். டஸ்கனியும் மோடெனுவும் அவற்றின் கோமக்களுக்குத் திருப்பி அளிக்கப்பட்டன. எல்லா இத்தாலிய நாடுகளும் போப்பின் தலைமையின்கீழ் ஒன்றுசேர்ந்து கூட்டமைவு ஒன்றை ஏற்படுத்த இவ்விரு நாடுகளும் இசைந்தன. கவூர் இவ் உடன்படிக்கையை ஏற்றுக்கொள்ளலாகாது என்றும், போரைத் தனித்திருந்து நடத்தவேண்டும் என்றும் விக்டர் இம்மானுவேலிடம் மன்ருடினர். அவர் மறுக்கவே, பதவியைவிட்டு விலகினர். பிறகு ஃபிரான்சு, சார்டினியா, ஆஸ்திரியா ஆகிய

நாடுகள் ஜூரிக் உடன்படிக்கையை (Treaty of Zurich) ஏற்படுத்தின. வில்லாபிராங்கா சமாதானத்தில் காணப்பட்ட முக்கிய நிபந்தனைகளை இது உட்கொண்டிருந்தது. ஆனுல், நடு இத்தாலிய நாடுகள் அவைகளுடைய கோமக்களை ஏற்றுக்கொள்ள மறுத்தன. போப் கூட்டமைவுக் கருத்தை எதிர்த்தார். ஆகவே, இத்தாலியப் பிரச்சினையை ஐரோப்பிய நாடுகள் கூடித் தீர்வு காணவேண்டும் என்று கூறினுர். 1860-ல் மீண்டும் கவூர் பிரதமரானுர். மறுபடியும் நெப்போலியனுடன் பேச்சுவார்த்தை நடத்தினுர். அதன் பயனுக அவ்விருவருக்கும் இடையே ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டது. நடு இத்தாலிய ஆட்சிப் பகுதிகளில் மக்களின் விருப்பப்படி ஆட்சி அமையவேண்டும் என்றும், சவாய், நைஸ் ஆகிய பகுதிகளில் வாக்கெடுப்பு நடத்தி மக்களின் ஒப்புதலைப் பெற்றபின்னர் அவைகளை ஃபிரான்சுடன் சேர்க்கவேண்டும் என்றும் முடிவு செய்யப்பட்டது. நடு இத்தாலியில் வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. பெருவாரியான மக்கள் பியட்மாண்டுடன் சேர விரும்பினர். அதேபோல் சவாய், நைஸ் ஆகிய மக்கள் ஃபிரான்சுடன் சேர விருப்பம் தெரிவித்தார்கள். டியூரினில் விக்டர் இம்மானுவேல் ஆட்சிக்குட்பட்ட பகுதிகளில் தேர்ந்தெடுக்கப்பட்ட அங்கத்தினர்களைக் கொண்ட பாராளுமன்றம் 1860-ல் கூடி ஜூரிக் உடன்படிக்கையை அங்கீகரித்தது.

இதற்கிடையில் சிசிலி, தெற்கு இத்தாலி ஆகிய இடங்களை பியட்மாண்டுடன் இணைப்பதற்கு வேண்டிய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. சிசிலியில் 1860-ல் கிளர்ச்சி ஏற்பட்டது. அம் மக்கள் உரிமைகளைப் பெறுவதையே நோக்கமாகக் கொண்டிருந்தனர். அக் கிளர்ச்சியைப் பயன்படுத்தி, அம் மக்களையும் புதிதாக ஏற்படுத்தப்பட்ட இத்தாலிய அரசில் சேர்த்துக்கொள்ள கவூர் விரும்பினுர். ஆனுல், ஐரோப்பிய நாடுகள், குறிப்பாக ஆஸ்திரியா, மேலும் பல பகுதிகளை இத்தாலிய அரசுக்குட்படுத்துவதை எதிர்க்கக் கூடும் என்பதையும் அறிந்திருந்தார். ஆகவே, 1855-ல் நாடு திரும்பிய கரிபால்டியைத் தம்முடைய படையுடன் சிசிலி சென்று அதை வெல்ல அனுப்பினுர். விக்டர் இம்மானுவேலும் மக்களும் கரிபால்டிக்குப் பணவுதவி செய்து, தங்களுடைய ஆதரவைத் தெரிவித்தார்கள். கரிபால்டி படைகளைச் சேகரிப்பதை அரசாங்கம் தடைசெய்யாது வாளாவிருந்தது. படையெடுப்பு ஏற்பாடுகள் முற்றுப்பெற்றபின், கரிபால்டி சிசிலி சென்று, மார்சாலா என்னுமிடத்தில் கரையேறினுர். சிசிலி மக்கள் அவரை வரவேற்று எல்லா அதிகாரங்களையும் கொடுத்தார்கள். தம்மை எதிர்த்த நேபிள்ஸ் படையினரை அவர் தோற்கடித்தார். பாலர்மோ என்னும் நகரத்தை முற்றுகையிட்டார். வெகு விரைவில் சிசிலியின் பெரும்பகுதியைத் தமதாக்கிக் கொண்டார். அதன் பின்னர் கரிபால்டி தெற்கு

இத்தாலிக்குச் சென்ருர். அங்கிருந்து நேபிள்ஸ் நோக்கிப் படையை நடத்திச் சென்ருர். நேபிள்ஸ் மன்னர் நகரத்தைவிட்டு வெளியேறினர். நேபிள்ஸ் எளிதில் கரிபால்டியின் கைவசமாயிற்று. அதன் பிறகு தென் இத்தாலியின் சர்வாதிகாரி என்று தம்மை அழைத்துக்கொண்டார். அச் சமயம் மாஜினியும் நேபிள்ஸில் இருந்தார். கரிபால்டி தாம் வென்ற நாடுகளை இத்தாலிய அரசுடன் இணைத்துவிடாமல், அப்பகுதிகளுக்கு அவர் சர்வாதிகாரிப் பட்டம் ஏற்றுக்கொண்ட செய்தியும், மாஜினி நேபிள்ஸில் தங்கியிருக்கும் செய்தியும் கவூருக்குப் பெருத்த பயத்தை விளைவித்தன. கரிபால்டி குடியரசை ஏற்படுத்த முற்படுவார் என்று கவூர் பயந்தார். ஆனல், கரிபால்டி, ரோமாபுரியையும் வென்றபிறகே எல்லாப் பகுதிகளையும் விக்டர் இம்மானுவேலின் ஆட்சிக்குட்படுத்துவேன் என்று அறிவித் தார். ரோம் நகரம் தாக்கப்பட்டால் ஃபிரான்சு போன்ற கத்தோலிக்க நாடுகள் அத் தாக்குதலினின்றும் போப்பைக் காப்பாற்ற முற்படும் என்றும், அதனல் இத்தாலியப் பிரச்சினையில் ஐரோப்பிய நாடுகள் தலையிட வாய்ப்பு உண்டாகும் என்றும் கவூர் எண்ணினர். ஆகவே, விக்டர் இம்மானுவேலை, நேபிள்ஸ் சென்று அதைத் தடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டார். அந் நேரத்தில் போப் ரோமாக்னவைத் தாக்க ஏற்பாடு செய்தார். அவ் வாய்ப்பைப் பயன்படுத்தி பியட்மாண்டினுடைய சேனையைப் போப்பிற்குச் சொந்தமான அம்பிரியா போன்ற பகுதிகளுக்கு அனுப்பினர். காஸ்டல்ஃபிடார்டோ (Castelfidardo) என்னுமிடத்தில் போப்பின் படைகள் தோற்கடிக்கப் பட்டன. அம்பிரியாவும் மார்சஸும் (Marches) பியட்மாண்டின் படைகள் வசமாயின. அன்கோனு (Ancona) என்னுமிடத்தில் விக்டர் இம்மானுவேல் தம் படைகளுடன் சேர்ந்துகொண்டார். பிறகு தக்க சமயத்தில் விக்டர் இம்மானுவேல் நேபிள்ஸ் சென்ருர். யாவரும் வியக்கத்தக்க வகையில் கரிபால்டி தம்முடைய சர்வாதி காரிப் பட்டத்தைத் துறந்தார். நேபிள்ஸை விக்டர் இம்மானுவேல் கைகளில் ஒப்படைத்தார். அதன்பிறகு கரிபால்டியின் படைகள் கலைக்கப்பட்டன. பல இடங்களில் வென்று சர்வாதிகாரியாக விளங்கிய கரிபால்டி, காப்ரீரா செல்லும்போது, ஒரு பை நிறைய விதைகளும், கடன் வாங்கிய 500 ஃபிராங்குகளுமே (Francs) எடுத்துச் சென்ருர். அவருக்கு அளிக்கப்பட்ட எல்லா விருதுகளையும் நிராகரித்தார். அவரது வாழ்க்கை, நாட்டின் நலமே ஒருவரது சுயநலத்தைவிட மேலாகக் கருதப்படவேண்டியது என்பதற்கு ஓர் எடுத்துக்காட்டாக விளங்குகிறது. அம்பிரியா, மார்சஸ், நேபிள்ஸ், சிசிலி ஆகிய இடங் களில் வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. மக்கள் இத்தாலிய அரசில் சேர விருப்பம் தெரிவித்தார்கள். அவர்கள் விருப்பப்படியே அவைகள் இத்தாலிய அரசுடன் இணைக்கப்பட்டன. 1861-ல் ஆஸ்திரியாவின் அதிகாரத்துக்குட்பட்ட வெனீஷியா, போப்பின் ஆட்சியின்கீழ்

இருந்த ரோமாபுரி, அதைச் சுற்றியுள்ள பகுதிகள் தவிர ஏனைய பாகங்களில் தேர்தல் நடத்தப்பட்டது. அதன் விளைவாக இத்தாலியப் பாராளுமன்றம் டியூரினில் கூடியது. சில மாதங்களுக்குப் பின்னர் கவூர் இறந்தார். அவர் இத்தாலியை ஐக்கியப்படுத்த மேற்கொண்ட முயற்சிகளும், அடைந்த மனவேதனைகளுமே அவருடைய அகால மரணத்திற்குக் காரணமாகும்.

கவூர் மறைவிற்குப் பின்னர் இத்தாலியப் பகுதிகளான வெனீஷியா, ரோம் ஆகியவை இத்தாலிய அரசுடன் இணைக்கப்பட வேண்டியனவாக இருந்தன. கவூருடைய அரசியல் நிறம் இத்தாலியின் பெரும்பகுதியை ஒரே ஆட்சியின்கீழ் கொண்டுவர உதவி செய்தது என்று நாம் முன்னர் கவனித்தோம். இத்தாலிக்கு வெளியே ஏற்பட்ட இரண்டு நெருக்கடிகள் மேற்கூறிய பகுதிகளை இத்தாலியுடன் இணைக்க உதவி செய்தன. ஜெர்மனியிலுள்ள பிரஷ்யாவும் இத்தாலியைப்போல ஆஸ்திரியாவை ஜெர்மனியினின்றும் விரட்டுவதற்கு முயற்சி செய்து கொண்டிருந்தது. ஆஸ்திரியாவுடன் போர் மேற்கொள்ளவேண்டிய நிலை அதற்கு ஏற்பட்டது. அதனுல், அது அப் போரில் தனக்கு உதவியாக இருக்க இத்தாலியைக் கேட்டுக்கொண்டது. அதற்குப் பதிலாக வெனீஷியாவை இத்தாலி பெறுவதற்கு உதவி செய்வதாகக் கூறியது. அதே நேரத்தில் விக்டர் இம்மானுவேல் போரின்போது நடுநிலை வகித்தால், ஆஸ்திரியா அவருக்கு வெனீஷியாவைத் தர இசைவு தெரிவித்தது. இத்தாலி அந்த யோசனையை நிராகரித்தது. பிறகு பிரஷ்யாவுடன் ஒப்பந்தம் செய்துகொண்டது. 1866-ல் பிரஷ்யாவிற்கும் ஆஸ்திரியாவிற்கும் இடையே போர் ஏற்பட்டது. இத்தாலி போரில் கலந்து கொண்டது. அப் போரில் கஸ்டோஸா என்னுமிடத்தில் இத்தாலி தோல்வியுற்றது. இத்தாலியின் கப்பற்படையும் தோல்வியடைந்தது. ஆனுல், பிரஷ்யாவின் பெருவெற்றி வெனீஷியாவை இத்தாலிய அரசுடன் இணைப்பதற்கு உதவி செய்தது. 1866-ல் ஏற்படுத்தப்பட்ட பிரேக் உடன்படிக்கையின்படி (Treaty of Prague) ஆஸ்திரியா வெனீஷியாவை விட்டு வெளியேறியது. அங்கும் வாக்கெடுப்பு நடத்தி மக்களின் ஒப்புதலைப் பெற்ற பிறகே, வெனீஷியா இத்தாலிய அரசுடன் இணைக்கப்பட்டது.

எஞ்சியிருந்தது ரோமாபுரியும் அதைச் சுற்றியிருந்த பகுதியுமே யாகும். ரோமாபுரி இத்தாலிய அரசில் இல்லையென்ருல் இத்தாலி சிறப்புற்றிருக்கமுடியாது என்று கருதப்பட்டது. ஃபிரான்சு ரோமாபுரியைக் காக்க ஒரு படையை அங்கு நிலைநிறுத்தி வைத்திருந்தது. ஆகவே, ஃபிரான்சுடன் போர் புரியாமல் ரோமாபுரியைக் கைப்பற்றுவது இயலாத காரியமாகத் தோன்றியது.

1862-ல் கரிபால்டி ரோமாபுரியைத் தாக்க முற்பட்டார். ஆனால், அவர் இத்தாலியப் படையால் தோற்கடிக்கப்பட்டார். போரில் காய மடைந்த கரிபால்டிக்கும், அவருடைய படையினருக்கும் மன்னிப்பு வழங்கப்பட்டது. அதன் பிறகு கரிபால்டி இங்கிலாந்துக்குச் சென்றார். 1864-ல் விக்டர் இம்மானுவேலும் நெப்போலியனும் ஓர் ஒப்பந்தத்தைச் செய்துகொண்டார்கள். அதன்படி இரண்டு ஆண்டு களுக்குள் ஃபிரெஞ்சுப் படைகளை ரோமாபுரியினின்றும் திரும்ப அழைத்துக்கொள்ள நெப்போலியன் இசைந்தார். விக்டர் இம்மானு வேல் போப்பினுடைய ஆட்சிப் பகுதியை எல்லாத் தாக்குதல்களி னின்றும் காப்பாற்றும் பொறுப்பை ஏற்றுக்கொண்டார். ஆகவே, இத்தாலிய அரசாங்கம் ஃபிளாரன்ஸைத் (Florence) தலைநகரமாக்கிக் கொண்டது. 1866ஆம் ஆண்டிற்குள் ஃபிரான்சு தன்னுடைய துருப்புகளை ரோமாபுரியினின்றும் திரும்ப அழைத்துக்கொண்டது. அவ் வாய்ப்பினைப் பயன்படுத்தி கரிபால்டி 1867-ல் ரோமாபுரியைத் தாக்க முயன்றார். முதலில் அவர் வெற்றியடைந்தார். அதை அறிந்த ஃபிரெஞ்சுப் படை மீண்டும் ரோமாபுரிக்குள் நுழைந்து கரிபால்டியை மென்டானு (Mentana) என்னுமிடத்தில் தோற்கடித் தது. ஆயினும், கரிபால்டி மீண்டும் காப்ரீராவுக்குச் செல்ல அனு மதிக்கப்பட்டார். 1870-ல் ஃபிரான்சுக்கும் பிரஷ்யாவிற்கும் போர் ஏற்பட்டது. அச் சமயத்தில் கரிபால்டி ஃபிரான்சுக்குச் சென்றார். ஃபிரெஞ்சுப் படையின் ஒரு பகுதிக்குத் தலைவராக்கப்பட்டார். அவர் ஃபிரெஞ்சு மக்கள் சபையின் அங்கத்தினராகச் சில இடங்களில் தேர்ந்தெடுக்கப்பட்டார். ஆனால், அந்நியர் என்ற காரணத்தால் அவர் மக்கள் சபையில் அங்கம் வகிக்க அனுமதிக்கப்படவில்லை. 1874-ல் அவர் இத்தாலியப் பாராளுமன்றத்தின் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இறுதியில் 1882-ல் காப்ரீராவில் உயிர் நீத்தார்.

இதற்கிடையில் 1870-ல் ஃபிரெஞ்சு பிரஷ்யாவுடன் போரில் ஈடு பட்டிருந்ததால், தன்னுடைய துருப்புகளைத் திரும்ப அழைத்துக் கொண்டது. ஃபிரான்சு சேடானில் (Sedan) தோல்வியுற்ற செய்தி பரவியது. அந்த வாய்ப்பைப் பயன்படுத்திக்கொண்டு இத்தாலியப் படை ரோமாபுரிக்குள் நுழைந்தது. 1870-ல் வாக்கெடுப்பு நடத்தப் பட்டது. மக்கள் பெருவாரியான வாக்குகளின் வாயிலாக விக்டர் இம்மானுவேலின் ஆட்சியை ஏற்றுக்கொண்டார்கள். 1871-ல் ரோமா புரி இத்தாலிய நாட்டின் தலைநகரமாக ஏற்படுத்தப்பட்டது. அரசாங்கம் போப்புக்குப் பல உரிமைகளைக் கொடுத்தது. வாட்டிகன், லாடெரன் பெருமாளிகைகளை (Vatican Lateran) ஆண்டுகொள்ளும் உரிமையும் கொடுக்கப்பட்டது. மத ஸ்தாபனத்தை நடத்தும் பொறுப்பும் அளிக் கப்பட்டது. ஆனால், போப் இத்தாலிய அரசை அங்கீகரிக்கவில்லை. எனினும், இத்தாலியை அந்நிய ஆட்சியினின்றும் விடுவிக்கவும் ஒன்று

படவும் மேற்கொண்ட முயற்சி பெரு வெற்றியை அடைந்தது என்று தான் சொல்லவேண்டும்.

**ஜெர்மனி**

1800ஆம் ஆண்டிற்கு முன்னர் ஜெர்மனி சில நூற்றுக் கணக்கான சிறு நாடுகளைக் கொண்டிருந்தது. இந் நாடுகள் அனைத்தும் தெய்விக ரோமானியப் பேரரசைத் தலைவராகக் கொண்டிருந்தன. ஆனால், அவர் பெயரளவில் மட்டுமே தலைவராக இருந்தார். அந் நாடுகள் அனைத்தும், உள்நாட்டு விவகாரங்களாயினுஞ் சரி அல்லது வெளிநாட்டு விவகாரங்களாயினுஞ் சரி, பெரும்பாலும் தங்கள் விருப்பப்படியே செயற்பட்டுவந்தன. அவைகளுள் ஆஸ்திரியாவும் பிரஷ்யாவும் முக்கியத்துவம் பெற்றிருந்தன. ஆஸ்திரியாவின் அரசர் தான் பேரரசர் பட்டத்தைப் பெற்றிருந்தார். பிரஷ்யா பலம் பொருந்திய இராணுவ அமைப்பைப் பெற்ற நாடாக விளங்கியது. ஏனைய நாடுகள் அவ்விரு நாடுகளைச் சார்ந்திருந்தன. எல்லா நாடுகளின் பிரதிநிதிகளடங்கிய சபையொன்று ஏற்படுத்தப்பட்டிருந்தது. அப் பிரதிநிதிகள் அந்தந்த நாட்டின் தலைவர்களால் நியமிக்கப்பட்டவர்களேயாவர். அச் சபைக்குக் குறிப்பிடத்தக்க அதிகாரங்கள் ஒன்றும் வழங்கப்படவில்லை. பத்தொன்பதாம் நூற்றுண்டில் நெப்போலியன் பல மாறுதல்களை ஏற்படுத்தினர் என்று நாம் முன்னரே கண்டறிந்தோம். சிறு நாடுகளை எல்லாம் ஒன்றுக்கி, அங்கு 39 நாடுகளை ஏற்படுத்தினர். அவைகளைத் தவிர அங்கிருந்த ஆட்சியுரிமை பெற்ற பல நகரங்களின் எண்ணிக்கையை நான்காகக் குறைத்தார். அவருடைய ஏற்பாட்டின் விளைவாக ஜெர்மனி நாடுகளிடையே கூட்டமைவு ஒன்று ஏற்படுத்தும் எண்ணம் வளரலாயிற்று. அத்துடன் விரிவாக்கப்பட்ட நாடுகள் மேலும் பலமுடையவாயின. அதனுல் அவைகளிடையே சுதந்தரத்தில் பற்று ஏற்பட்டது. மேலும், தெய்விகப் புனிதப் பேரரசு அழிக்கப்பட்டதால், புதிய ஜெர்மனியை உருவாக்குவதற்குத் தடையாய் நின்ற ஒரு ஸ்தாபனம் நீக்கப்பட்டது என்று கருதப்படுகிறது. அதுமட்டுமன்றி, ஆஸ்திரியா இன்றியே புதிய அமைப்பு ஒன்று ஜெர்மனியில் ஏற்படுத்தமுடியும் என்ற கருத்து வளரலாயிற்று. நெப்போலியன், ஆட்சிமுறையில் பல திருத்தங்களை ஏற்படுத்தினுர். அதன் விளைவாக இடைக் காலத்திலிருந்து நடைமுறையில் இருந்துவந்த பல கட்டுப்பாடுகள் அழிந்தன. அதனுல் புதிய ஜெர்மனியை உண்டாக்குவது எளிதான செயலாகக் காணப்பட்டது. மற்றொரு வகையிலும், நெப்போலியன், ஜெர்மனியைத் தேசிய இனஞ்சார்ந்த நாடாக அமைப்பதற்கு உதவி செய்துள்ளார். அவர் ஜெர்மனியில் மேற்கொண்ட நடவடிக்கைகள் மக்களை அந்நிய ஆட்சிக்கு எதிராகக் கிளர்ச்சி செய்யத் தூண்டியது. அதன் பயனுக நெப்போலியன் சுதந்தர உணர்ச்சியால் தூண்டப்பட்ட மக்களுக்கு

எதிராகப் போர்புரிய நேர்ந்தது. ஆனால், அச் சுதந்தர உணர்ச்சி வளர்ச்சி பெறுவதற்கு அங்கிருந்த ஆட்சியாளர்கள் தகுந்த நடவடிக்கை மேற்கொள்ளாததால், ஜெர்மனியை ஒன்றுபடுத்தும் வேலையை அங்கிருந்த அரசாங்கங்களே மேற்கொள்ள வேண்டியதாயிற்று.

1815-ல் வியன்னு ஏற்பாட்டின் வாயிலாக ஜெர்மனி பலமற்றதும், ஒற்றுமையுணர்ச்சி வளர வாய்ப்பு இல்லாததுமான நாடாக அமைக்கப்பட்டது என்று முன்னரே குறிப்பிட்டோம். தெய்விகப் புனித ரோமானியப் பேரரசு மீண்டும் ஏற்படுத்தப்படவில்லை. முன்னிருந்த சிறு நூற்றுக்கணக்கான சிறு நாடுகளும் பல ஆட்சியுரிமை பெற்ற நகரங்களும் மீண்டும் ஏற்படுத்தப்படவில்லை. புனித ரோமானியப் பேரரசுக்குப் பதிலாகக் கூட்டமைப்பு ஒன்று ஏற்படுத்தப்பட்டது. ஆனால், ஆஸ்திரியாவின் கருத்துக்கிணங்க, அக் கூட்டமைப்பு பலம் பொருந்தியதாக வளராதிருக்கத் தகுந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. அவ்வமைப்பு உட்கொண்டிருந்த நாடுகளுக்கு ஆட்சி முறை விவகாரங்களில் முழு அதிகாரங்கள் வழங்கப்பட்டன. கூட்டமைப்பு, ஜெர்மனியில் அமைதியை நிலைநிறுத்தும் அதிகாரம் பெற்றிருந்தது. கூட்டமைப்பின் அதிகாரங்களைப் பொறுத்த விவகாரங்களைக் கவனிக்க ஒரு சபை ஃபிராங்போர்டில் நிறுவப்பட்டது. ஒவ்வொரு நாடும் குறைந்தது ஒரு பிரதிநிதியை அச் சபைக்கு அனுப்ப ஏற்பாடு செய்யப்பட்டது. அப் பிரதிநிதிகள் அனைவரும் அவ்வரசாங்கத்தினரால் நியமிக்கப்பட்டவர்களாவார்கள். முக்கியமான விவகாரங்களை எல்லா உறுப்பினர்களின் ஒப்புதலின் பேரிலேயே முடிவு செய்யவேண்டும் என்றும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. ஆஸ்திரியாவை அச் சபையின் தலைமைப் பொறுப்பைத் தாங்குமாறும் ஏற்பாடு செய்யப்பட்டது. அதனால், ஆஸ்திரியாவின் செல்வாக்கு ஜெர்மனியில் பெருகிற்று. அதன் பயனாகக் கூட்டமைவினுடைய சபையைக் கொண்டு ஜெர்மனியை ஐக்கியப்படுத்தும் கருத்தைக் கைவிட வேண்டியதாயிற்று. அச் சபையிலிருந்த அரசர்களின் பிரதிநிதிகள் மக்களாட்சியை ஏற்படுத்தும் வகையில் நடவடிக்கைகள் மேற்கொள்ள விருப்பமற்றவர்களாயிருந்தனர். மேலும், அதனுடைய தீர்மானங்களைச் செயற்படுத்தக்கூடிய அமைப்புகள் ஏற்படுத்தப்படவில்லை. மேலும், ஆஸ்திரியா, பிரிட்டன் போன்ற ஜெர்மனிக்குப் புறம்பே இருந்த நாடுகளை ஆண்டுவந்த அரசர்கள் ஜெர்மனியின் நாடுகளுக்கும் அதிபர்களாயிருந்தனர். ஆகவே, அவர்களுடைய பிரதிநிதிகளும் அச் சபையில் கலந்துகொண்டனர். அவர்கள் ஜெர்மனி ஒன்றுசேர்ந்து பலம் பொருந்திய நாடாக அமைவதைத் தடுக்க முயற்சி செய்தனர். சுருங்கக் கூறுமிடத்து, வெளிநாட்டுப் போர்கள் ஏற்படும்போது ஜெர்மனி ஒரு கட்டாக நின்று போர் புரியவும், முற்போக்குக் கருத்துடையவர்களின் தாக்குதலினின்றும்

கூட்டமைப்பில் அங்கம் வகித்திருந்த நாடுகளைக் காப்பதற்குமே ஜெர்மன் கூட்டமைப்பு பயன்பட்டது.

ஜெர்மனி ஒன்றுக்கப்பட்ட நாடாக அமைவதை வேறு பல காரணக் கூறுகளும் தடைசெய்தன. நெப்போலியனுடன் போரிட்டுப் பல இன்னல்களுக்குட்பட்ட ஜெர்மானிய நாடுகள் போருக்குமுன் இருந்த நிலையைப் பெறும் முயற்சியிலும், பொருளாதார முன்னேற்றத்திலும் ஈடுபட்டிருந்தன. அரசியலமைப்பை மாற்றி அமைக்க வேண்டும் என்று கோரிய முற்போக்குவாதிகளிடையே கருத்து ஒற்றுமை இல்லாதுபோயிற்று. சிலர் ஆஸ்திரியாவை ஜெர்மனியினின்றும் விரட்டவேண்டும் என்ற கருத்துக் கொண்டிருந்தனர். வேறுசிலர் ஆஸ்திரியாவை ஜெர்மனியின் அரசியலமையில் தொடர்ந்து வைத்திருக்கவேண்டும். என்ற கருத்தைத் தெரிவித்தார்கள். இத்தாலியில் எல்லோருமே இத்தாலியின் ஐக்கியத்திற்கு முட்டுக்கட்டையாக அமைந்த ஆஸ்திரியாவை வெளியேற்ற வேண்டும் என்று வற்புறுத்தினர்கள் என்பதை நாம் இங்கு நினைவுக்குக் கொண்டுவருதல் அவசியமாகும். மேலும், மெட்டர்னிக் ஜெர்மனியில் முற்போக்குக் கருத்துகளை வளரவிடாது தடை செய்தார். அவருடைய முயற்சியால் 1819-ல் ஜெர்மனியின் கூட்டமைப்பின் சபை கார்ல்ஸ்பாட் கட்டளைகளை (Garlsbad Decrees) நிறைவேற்றியது. கண்டிப்பான தணிக்கை முறை ஏற்படுத்தப்பட்டது. முற்போக்குக் கருத்துகளைக் கொண்ட மாணவர் கழகங்களை மூட உத்தரவிடப்பட்டது. அரசியலைச் சார்ந்த கூட்டங்களுக்குத் தடை விதிக்கப்பட்டது. பல பல்கலைக் கழகப் பேராசிரியர்கள் பதவியினின்றும் விலக்கப்பட்டுச் சிறையிலிடப்பட்டார்கள். இக் கடுமையான நடவடிக்கை ஜெர்மனியில் முற்போக்குக் கருத்துகளைச் சில காலத்திற்கு அடக்கிவிட்டது. இறுதியாக ஜெர்மனியிலுள்ள மக்களில் பெரும்பாலோர் தேசிய உணர்ச்சியைப் பெற்றவர்கள் அல்லர். ஜெர்மனியை ஒன்றுபடுத்தவேண்டும் என்ற கோரிக்கை படித்தறிந்த ஒரு சிலரிடம்தான் காணப்பட்டது.

அதே நேரத்தில் ஒற்றுமை உணர்ச்சி வளர்வதற்கான சூழ்நிலையும் உருவாகிக்கொண்டு வந்தது. நெப்போலியன் ஜெர்மனிக்கு ஆற்றிய சேவைகளுள் முக்கியமானது, அதனுடைய மக்களிடையே தேசிய மனப்பான்மையைத் தோற்றுவித்ததேயாகும். அதைப்பற்றி முன்னரே கண்டறிந்தோம். அக் காலத்தில் ஃபிக்டே (Fichte) போன்ற அறிஞர்கள் பலர் முற்போக்குக் கருத்துகளை வளர்ப்பதில் நாட்டம் செலுத்தியிருந்தனர். பல்கலைக் கழகங்களில் அக் கருத்துகள் செல்வாக்குப் பெற்றிருந்தன. மாணவர்கள், கழகங்கள் பல அமைத்து முற்போக்கு எண்ணங்கள் அழிவுருமல் காத்து வந்தனர். மேலும், பொருளாதாரத் துறையில் ஏற்படுத்தப்பட்ட ஓர் அமைப்பு, அரசியல் அமைப்பிலும் மாறுதல்கள் ஏற்படுத்த

வழி காட்டியது. 1818-ல் பிரஷ்யா உள்நாட்டுச் சுங்க வரிகளை யெல்லாம் தவிர்த்தது. அதைத் தொடர்ந்து ஏனைய நாடுகளைச் சுங்க வரியைச் சார்ந்த அமைப்பில் சேருமாறு வேண்டுகோள் விடுத்தது. அவ்வாறு அமைக்கப்பட்ட கூட்டிணைவு ‘சால்வெரைன்’ (Zollverein) என்ற பெயரால் அழைக்கப்பட்டது. அதில் சேர்ந்த நாடுகளின் வியாபாரப் பொருள்களின்மீது விதிக்கப்பட்ட சுங்க வரிகள் ரத்து செய்யப்பட்டன. ஆகவே, அந் நாடுகளில் அப் பொருள்களை யாதொரு தடையுமின்றி எடுத்துச் செல்ல அனுமதி வழங்கப்பட்டது. 1844ஆம் ஆண்டிற்குள்ளாகப் பெரும்பாலும் எல்லா ஜெர்மானிய நாடுகளும் சேர்ந்தன. இச் சங்கம் அந் நாடுகளை அரசியல் துறையிலும் ஒன்றுபடுத்தும் இயக்கத்திற்கு வழி காட்டியாக அமைந்தது. மேலும், இச் சங்கத்தின் தலைமைப் பொறுப்பு பிரஷ்யாவிற்கு வழங்கப்பட்டது. ஆகவே, பிரஷ்யா அரசியல் துறையிலும் தலைமைப் பொறுப்பை ஏற்றுக்கொள்ளக்கூடிய வாய்ப்பைப் பெற்றது.

1815 முதல் 1848 வரை ஜெர்மனியில் குறிப்பிடத்தக்க பெருங் கிளர்ச்சிகள் எவையும் முற்போக்காளர்களால் மேற்கொள்ளப்பட வில்லை. 1830-ல் ஓரிரு இடங்களில் கிளர்ச்சிகள் ஏற்பட்டன. அதன் பயனாகப் புதிய அரசியலமைப்புகள் ஹெஸ்ஸி (Hesse) போன்ற இடங்களில் ஏற்படுத்தப்பட்டன. ஆனால், பெரும்பான்மையினர் அவைகளில் கலந்துகொள்ளாததால், கிளர்ச்சிகள் அடக்கப்பட்டு விட்டன. அவ்விடங்களில் பழைய ஆட்சி மீண்டும் ஏற்படுத்தப் பட்டது. 1848-ல் பெருமுயற்சி ஒன்றை முற்போக்காளர்கள் மேற் கொண்டனர். அக் காலத்தில் உணவுப் பொருள்களின் விலை ஏறிப் போயிருந்தது. மக்கள் பட்டினியால் வாடினர். அதே நேரத்தில் அண்மையிலுள்ள போலந்து நாட்டினர் கிளர்ச்சியில் ஈடுபட்டிருந் தனர் (1846). சுவிட்சர்லாந்திலும் சில இடங்களில் வல்லாட்சி ஒழிக்கப்பட்டு மக்களாட்சி ஏற்படுத்தப்பட்டது. 1838-ல் ஃபிரான்சிலும் புரட்சி ஏற்பட்டது. அதைத் தொடர்ந்து வியன்னாவில் இருந்த மக்கள் கிளர்ச்சியில் ஈடுபட்டனர். மெட்டர்னிக் நாட்டைவிட்டு வெளியேறினார். இந் நிகழ்ச்சிகள் எல்லாம் ஜெர்மன் மக்களைப் புரட்சி செய்யத் தூண்டின.

1848-ல் ஜெர்மனியில் ஏற்பட்ட புரட்சி இரு நோக்கங்களைக் கொண்டிருந்தது. எல்லா ஜெர்மானிய நாடுகளையும் ஒன்றுசேர்த்து வலிமையுடைய கூட்டமைப்பை ஏற்படுத்துவதையும், முற்போக்குக் கருத்துகளை அடிப்படையாகக் கொண்ட ஆட்சி முறையை அமைப் பதையும் புரட்சித் தலைவர்களில் பெரும்பாலோர் தங்களுடைய நோக்கங்களாகக் கொண்டிருந்தனர். அக் காலத்தில் ஏற்பட்ட புரட்சியின் காரணமாகப் பெரும்பாலும் எல்லா ஆட்சியாளர்களும்

முற்போக்குக் கருத்துகளையுடைய அரசியலமைப்பையும், முற்போக் காளர்களைக் கொண்ட அமைச்சரவையையும் ஏற்படுத்தினார்கள். பெரும்பாலும் இரத்தம் சிந்தாமலே இவ்வேற்பாடுகள் செய்யப்பட்டன. பிரஷ்யாவின் அரசரான நான்காவது ஃபிரெடரிக் வில்லியம் முற்போக்குக் கருத்துகளும், தேசிய அமைப்பை உண்டாக்கும் எண்ணமும் ஓரளவு பெற்றிருந்தார் என்றாலும் பலாத்காரத்தை விரும்பவில்லை. வேறு சில இடங்களில் முற்போக்குக் கருத்துகள் செல்வாக்குப பெற்றிருந்தபோதிலும், தேசிய உணர்ச்சி அவர் களிடம் பெருமளவில் காணப்படவில்லை. எனினும், பெரும் பான்மையினர் விருப்பத்திற்கிணங்க தேசிய ஜெர்மானியப் பாரா ளு மன்றம் (National German Parliament) ஏற்படுத்த புரட்சித் தலைவர்கள் விரைந்தார்கள். ஃபிராங்போர்டில் பிரதிநிதிகள் கூடி நேரடித்தேர்தல் முறையைக்கொண்டு தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதி நிதிகளடங்கிய மக்கள் சபையை அமைப்பது என்று முடிவு செய்தார் கள். அதற்கிடையில் ஆட்சிப் பொறுப்பைப் புதிதாக ஏற்படுத்தப் பட்ட ஆட்சிக் குழுவினிடம் ஒப்படைத்தார்கள். அதற்கு ஆஸ்திரி யாவின் இளவரசர் ஜான் (Arch Duke John) என்பவரைத் தலைவராக அமர்த்தினார்கள். 1848-ல் தேசிய ஜெர்மானிய மக்கள் சபை கூடியது. பல அறிஞர்களையும் வழக்கறிஞர்களையும் கொண் டிருந்த இச் சபை அரசியலமைப்பு ஒன்றை உருவாக்க முற்பட்டது. மனித உரிமைகளை உள்ளடக்கிய அறிக்கையொன்றைத் (Declaration of the Rights of Man) தயாரித்தது. ஜெர்மனியைத் தேசிய இனஞ் சார்ந்த நாடாகவும், அரசியலமைப்பைச் சார்ந்த ஆட்சி முறைபெற்ற நாடாகவும் அமைக்கத் தீர்மானித்தது. இறுதியில் ஆஸ்திரியாவுடன் சேர்ந்து முப்பது நாடுகளடங்கிய கூட்டமைவு ஏற்படுத்தவும், அதற்குப் பிரஷ்யாவின் அரசரைப் பேரரசர் என்ற பெயருடன் தலைவராக்கவும் முடிவு செய்தது. அப் பேரரசரைக் கட்டுப் படுத்த இரு சபைகளடங்கிய சட்டசபை ஏற்படுத்தப்பட்டது. அவை களில் ஒன்று அக் கூட்டமைப்பில் சேர்ந்துகொண்ட நாடுகளின் சார் பாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளைக் கொண்டிருக்கவும், மற் றொன்று மக்கள் பிரதிநிதிகளைக் கொண்டிருக்கவும் ஏற்பாடு செய்யப் பட்டது.

ஃபிராங்போர்ட் மக்கள் சபையின் ஏற்பாடுகள் ஏற்றுக்கொள்ளப் பட்டிருந்தால், ஜெர்மனி ஒன்றுக்கப்பட்ட நாடாக மட்டுமன்றி ஜன நாயக நாடாகவும் விளங்கியிருக்கும். ஆனால், மக்களாட்சி முறையில் பற்றில்லாத அரசர்களின் நடவடிக்கைகள் அவ்வேற்பாட்டை வெற்றி கரமாக நடைமுறைப்படுத்துவதைத் தடை செய்தன. அவ்வரசர் களுள் குறிப்பிடத்தக்கவர் ஃபிரெடரிக் வில்லியம் ஆவார். 1848-ல் புரட்சி ஏற்பட்டபோது மக்களைத் திருப்தி செய்யும் வகையில் நடந்து கொண்டார். தணிக்கை முறையை ஒழித்தார். அவருடைய

படைகளை பெர்லினினின்றும் வெளியேற்றினர். முற்போக்காளர்களைக் கொண்ட அமைச்சர்களை நியமித்தார். ஜெர்மனியுடன் பிரஷ்யாவை ஐக்கியப்படுத்துவதாக அறிவித்தார். இவைகளெல்லாம் அவர் முற்போக்குக் கருத்துகளின்பால் கொண்டிருந்த பற்றினால் ஏற்பட்டன அல்ல. அவர் சமாதானத்தைப் பெரிதும் விரும்புபவர். ஆகவே, மக்களைப் படை கொண்டு தாக்கி நாட்டில் பெருங் குழப்பத்தை விளைவிப்பதற்குப் பதிலாக, அவர்களுடைய விருப்பப்படி நடத்தி அமைதியை நிலைநிறுத்த விழைந்தார். அதே நேரத்தில், சமயம் நேரும்போது அவ்வேற்பாடுகளை நிராகரிக்கவும் எண்ணமிட்டிருந்தார். 1848-ல் வியன்னாவில் புரட்சி அடக்கப்பட்டதென்பதை அறிந்ததும் பிரஷ்யப் படைகளை பெர்லினுக்கு வரவழைத்துக்கொண்டார். வரி வசூலிக்க அனுமதி கொடுக்க மறுத்த மக்கள் சபையைக் கலைத்து விட்டார். பிற்போக்காளர்களைக்கொண்ட அமைச்சரவையை ஏற்படுத்தினர். ஃபிராங்க்போர்ட் மக்கள் சபை அவருக்கு அளித்த பேரரசர் பட்டத்தை ஏற்க மறுத்தார். அப் பட்டத்தை மக்கள் சபைக்குப் பதிலாக மன்னர்கள் சபை அளித்திருந்தால், தாம் ஏற்றிருப்பார் என்று கூறினர். ஆகவே, நாட்டுப்பற்று மிகுந்த சில அரசர்கள் அவருக்கு ஜெர்மனியின் தலைவர் பதவியை அளிக்க முன்வந்தனர். ஆஸ்திரியாவின் அரசர் பிரஷ்யாவின் அதிகாரத்திற்கு உட்பட்டு நடக்க விரும்பவில்லை. எனவே, அவ்வேற்பாட்டை ஏற்றுக்கொள்ள மறுத்தார். ஃபிரெடரிக் வில்லியம் ஆஸ்திரியாவுடன் போர் புரிய விருப்பமில்லாததாலும், அவர் ஆஸ்திரியாவிடம் மரியாதை கொண்டவராதலாலும், பேரரசர் பட்டத்தை அவர் ஏற்றுக்கொள்ளவில்லை. ஆனாலும், ஃபிராங்போர்ட் மக்கள் சபையின் முடிவினை இருபத்தெட்டு அரசுகள் ஏற்றுக்கொண்டன. ஆஸ்திரியா தன்னுடைய பிரதிநிதிகளை அச் சபையினின்றும் திரும்ப அழைத்துக்கொண்டது. பிரஷ்யா ஆஸ்திரியாவின் நடவடிக்கையைப் பின்பற்றியது. பிறகு ஆஸ்திரியாவும் பிரஷ்யாவும் ஜெர்மனியின் மைய ஆட்சி அதிகாரங்களை ஏற்றுக்கொண்டன. இவ்வாறாக, ஃபிராங்க்போர்ட் மக்கள் சபை அழிவுற்றது. அத்துடன் அது ஏற்படுத்திய அரசியலமைப்பு அழிவுற்றது. அத்துடன் ஜெர்மானியர்களுடைய தேசிய உணர்ச்சியுடன் மக்களாட்சிக் கருத்தையும் ஒன்றுசேர்க்கும் முயற்சி பெருந் தோல்வியில் முடிவுற்றது. இனி ஜெர்மனியை ஐக்கியப்படுத்தும் முயற்சி ஆட்சியாளர்களால் மேற்கொள்ளப்பட்டது.

1849-ல் ஃபிரெடரிக் வில்லியம் எல்லோரும் ஏற்றுக்கொள்ளத் தக்க கூட்டமைப்பு பிரஷ்யாவின் தலைமையில் ஏற்படுத்துவதற்குத் தம்முடைய ஒப்புதலைத் தெரிவித்தார். பல சிறு நாடுகளும், சில பெரிய நாடுகளும் அதில் கலந்துகொண்டன. அரசியல் அமைப்பு ஒன்றும் ஏற்படுத்தப்பட்டது. அவ்வமைப்பின்கீழ்த் தேர்தல் நடை

பெற்று மக்கள் சபையொன்று ஏற்படுத்தப்பட்டது. ஆனால், இத் திட்டத்தை ஆஸ்திரியா ஏற்றுக்கொள்ள மறுக்கவே பெரிய நாடுகள் அதினின்றும் விலகின. எனவே, பிரஷ்யா அத் திட்டத்தைக் கைவிட நேர்ந்தது. இதற்கிடையில் ஆஸ்திரியா 1815-ல் ஏற்படுத்தப்பட்ட ஜெர்மானியக் கூட்டமைவினைப் புதுப்பித்தது. அவ் வேற்பாட்டை பிரஷ்யா எதிர்க்கத் துணிந்தது. ஏனெனில், பழைய ஜெர்மானியக் கூட்டுக்குழு ஆஸ்திரியாவிற்கே முழுமையான செல்வாக்கை அளித் திருந்தது. இரு நாடுகளும் போர் ஏற்பாடுகளைச் செய்தன. முடிவில் பிரஷ்யா, ஆல்மூட்ஸ (Olmutz) என்னுமிடத்தில் ஒப்பந்தம் செய்துகொண்டது (1850). அதன்படி பிரஷ்யா 1815ஆம் ஆண்டில் ஜெர்மானியக் கூட்டமைவினை ஏற்றுக்கொண்டது. இவ்வாறாக ஆஸ்திரியாவின் செல்வாக்கு ஜெர்மனியில் மீண்டும் நிலைநிறுத்தப் பட்டது. ஆனால், அடுத்த இருபத்தோராண்டுகளில் எல்லா ஜெர்மானிய நாடுகளும் ஒன்றுசேர்ந்து ஜெர்மானியப் பேரரசை (German Empire) ஏற்படுத்தின. அந்தப் பேரரசை உருவாக்கியவர் பிரஷ்யா வின் முதலமைச்சரான (Chancellor) பிஸ்மார்க்கு என்பவராவார்.

ஜெர்மனியில் செல்வாக்குப் பெற ஆஸ்திரியாவும், பிரஷ்யாவும் போட்டியிட்டன என்றும், அப் போட்டியில் ஆஸ்திரியா வெற்றி பெற்றது என்றும் முன்னரே குறிப்பிட்டுள்ளோம். அப் போட்டியில் தாங்கள் தோல்வியடையக் காரணம் தங்களுடைய படையிலுள்ள சீர் கேடுகளே என்று பிரஷ்யாவின் ஆட்சியாளர்கள் அறிந்திருந்தார்கள். ஆகவே, பிரஷ்யாவின் படையைத் திருத்தியமைக்க முயற்சி செய்தார்கள். அவ்வாட்சியாளர்களுள் முக்கியமானவர் வில்லியம் என்பவராவார். அவர், அக்காலத்தில் மன்னருக்குப் பைத்தியம் பிடித்திருந்ததால், ஆட்சிப் பொறுப்பை ஏற்றிருந்தார். பிறகு அவரே முதலாவது வில்லியம் மன்னரானார். 1861-ல் வில்லியம், 39 புதிய படைப் பிரிவுகளை ஏற்படுத்த முனைந்தார். குடிமக்கள் அனைவரும் மூன்றுண்டுகள் இராணுவ சேவையில் ஈடுபடவேண்டும் என்றும், பிறகு நான்கு ஆண்டுகள் நெருக்கடிக்கால அழைப்புச் சேமப்படையிலும் பணியாற்ற வேண்டும் என்றும் திட்டமிட்டார். புதிய போர்க்கருவிகளையும் புகுத்தினர். மேற்கூறிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வில்லியமுக்கு அவரது போர்த்துறை அமைச்சர் ரூன் மிகவும் உதவியாக இருந்தார்.

மேற்கூறிய திட்டங்களை நிறைவேற்றப் போதுமான பணத்தைப் பெறுவதற்கு வில்லியம் மக்கள் சபையை நாடினர். அப்பொழுது முற்போக்காளர்கள் அச் சபையில் பெரும்பான்மைக் கட்சியினராயிருந் தனர். அவர்கள் மன்னருடைய படைத்திட்டங்களைத் திருத்த முயன்றனர்கள். மேலும், பல முற்போக்குக் கருத்துகளின் அடிப் படையில் பல சீர்திருத்தங்களையும் அரசர் மேற்கொள்ளவேண்டும்

என்று கோரினர்கள். இராணுவ சேவை இரண்டு ஆண்டுக் காலத்திற்குக் குறைக்கப்படவேண்டும் என்றும், அரசருடைய அமைச்சர்கள் மக்கள் சபைக்கே பொறுப்புள்ளவர்களாக இருத்தல் வேண்டும் என்றும் கூறினர்கள். அரசர் அவைகளை மறுக்கவே, அவருக்கு வேண்டிய பணத்தை வசூலிக்க அனுமதிதர மறுத்தனர். அந்த நிலையில் செய்வதறியாது வில்லியம் திகைத்திருந்தார். அச் சமயத்தில் பிஸ்மார்க்கு ஒருவரே நிலைமையைச் சமாளிக்க வல்லவர் என்று அவருக்கு யோசனை கூறவே, அவரை அமைச்சராக நியமிக்க முற்பட்டார். அந் நேரத்தில் பிஸ்மார்க்கு பாரிஸில் பிரஷ்யாவின் அயல்நாட்டுத் தூதுவராகப் பணியாற்றிக்கொண்டிருந்தார். அவருக்கு அவசரத் தந்தி அனுப்பி அவரை வரவழைத்தார். பிஸ்மார்க்கு வில்லியமுடைய படைத்திட்டங்களை ஏற்றுக்கொள்ள வாக்களித்ததால், அவரை முதலமைச்சராக நியமித்தார்.

பத்தொன்பதாம் நூற்றுண்டில் ஐரோப்பாவில் தோன்றிய அரசியல் மேதைகளில் தலைசிறந்தவர்களில் பிஸ்மார்க்கு ஒருவராவார். அவர் 1815-ல் நிலம் படைத்த மேற்குடியாளர் குடும்பத்தில் பிறந்தார். நல்ல உடற்கட்டுடன் மிக்க மனவுறுதியையும் பெற்றிருந்தார். அவர் சிறந்த அறிவாளி. பிற்போக்குக் கருத்துகளைக் கொண்டிருந்தார். வல்லாட்சி முறையில் மிகுந்த நம்பிக்கை உடையவர். தொடக்கத்திலிருந்தே அரசாங்கப் பணியில் ஈடுபட வேண்டும் என்ற நோக்கம் இருந்ததால், சட்டம் பயிலப் பல்கலைக் கழகத்தில் சேரவேண்டியதாயிற்று. படிக்கும்போது நேரத்தைக் குடிப்பதிலும் சண்டையிடுவதிலும் செலவிட்டார். ஆயினும், இறுதித் தேர்வில் வெற்றி பெற்றுர். பட்டம் பெற்றபிறகு நியாய நிலையத் துறையில் பணியாற்றி வந்தார். வெகு சீக்கிரத்தில் அப் பணியில் அவர் வெறுப்புக்கொண்டதால், அப் பதவியை ராஜிநாமா செய்தார். அதன்பிறகு தம்முடைய நிலங்களைக் கவனித்து வந்தார். அக் காலத்தில் பல புத்தகங்களைப் படித்துத் தம்முடைய அறிவைப் பெருக்கிக்கொண்டார். 1845-ல் பாமரேனியாவிலிருந்த மக்கள் சபையின் உறுப்பினராகப் பணியாற்றினர். 1847-ல் பிரஷ்யாவின் மக்கள் சபையின் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அதே ஆண்டு அவர் மணம் செய்துகொண்டார். அத் திருமணம் அவருடைய கட்டுப்பாடற்ற வாழ்க்கையைத் திருத்தியமைக்க உதவியது. 1848-ல் பிரஷ்யாவில் புரட்சி ஏற்பட்டபோது அதை வெகுவாகக் கண்டித்தார். மக்களாட்சியையும், பிரஷ்யாவை ஜெர்மனிக்குள் சேர்த்துவிடுவதையும் எதிர்த்தார். பிரஷ்யாவின் புரட்சிக்காரர்களைத் திருப்திபடுத்த மன்னர் சலுகைகள் வழங்குவதை எதிர்த்தார். தம் கருத்துகளைப் பரப்ப, ஒரு கட்சியையும் ஒரு பத்திரிகையையும் ஏற்படுத்தினர். ஃபிராங்க்போர்ட் சபை ஏற்

படுத்திய அரசியலமைப்பும் அவர் கண்டனத்திற்குள்ளாயிற்று. அதே நேரத்தில் ஆல்மூட்ஸ் உடன்படிக்கையை வெகு பலமாக ஆதரித்தார். பல சமயங்களில் அமைச்சர் பதவிக்கு அவர் பெயர் அடிபட்டது. ஆனால், இராணுவ ஆட்சி ஏற்படும் காலத்தில்தான் அவர் பதவியிலிருக்கத் தக்கவர் என்று மன்னர் கருதியதால், அவருக்கு அமைச்சர் பதவியைக் கொடுக்கவில்லை. எனினும், அவர் வல்லாட்சி முறைக்கு ஆற்றிய சேவைக்கு வெகுமதி அளிக்கும் வகையில் பிரஷ்ய மன்னரின் பிரத்தியேக ஃபிராங்போர்ட் சபைக்கு (Diet) அனுப்பப் பட்டார். ஆஸ்திரியாவிற்கும் பிரஷ்யாவிற்கும் இடையே ஏற்பட்டிருந்த பிளவைச் சரிப்படுத்துவதற்காக அனுப்பப்பட்ட பிஸ்மார்க்கு, அங்குச் சென்றபின் ஆஸ்திரியாவின் கடும் பகைவரானர். அவர் ஃபிராங் போர்டில் இருந்த காலத்தில் ஜெர்மனி பல சிறு நாடுகளாகப் பிரிந்து இருந்ததாலும் வலிமை பொருந்திய மைய ஆட்சி அமைக்கப்படாத தாலும், பல துன்பங்களை அடைய நேர்ந்தது என்று உணர்ந்தார். 1859-ல் ருஷ்யாவிற்குத் தூதுவராக அனுப்பப்பட்டார். அங்குத் தமது திறமையினுல் ருஷ்யப் பேரரசின் நன்மதிப்பைப் பெற்ருர். 1862-ல் பாரிஸில் தூதுவராக நியமிக்கப்பட்டார். அப்பொழுது ஃபிரான்சை ஆண்டுவந்த மூன்ருவது நெப்போலியனுடைய குணநலன்களைச் சரிவரப் புரிந்துகொண்டார். அப்பொழுது அவருக்கு நாட்டுக்குத் திரும்பிவிடும்படி கட்டளை வரவே, பெர்லின் திரும்பினர். 1862-ல் முதலமைச்சராக அமர்த்தப்பட்டார். பிரஷ்யாவின் மக்கள் சபை (Diet) அவருக்கு ஓராண்டுதான் அதிகாரத்தை அளித்தது. ஆனல், அவர் 28 ஆண்டுகள் முதலமைச்சராகப் பணியாற்றி, ஜெர்மனிக்குச் சிறந்த தொண்டுகள் செய்தார். அவைகளில் தலைசிறந்தது ஜெர்மனியை ஐக்கியப்படுத்தியதேயாகும்.

பதவியேற்றவுடன் பிஸ்மார்க்கு ஜெர்மனியைப் பிரஷ்யாவின் ஆதிக்கத்தின்கீழ் ஒன்று சேர்க்கவேண்டியதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளத் தொடங்கினர். அத்தகைய திட்டத்தை ஆஸ்திரியா தன்னுடைய முழு பலத்தைக்கொண்டு எதிர்க்கக்கூடும் என்று உணர்ந்தார். அவ்வெதிர்ப்பை எதிர்கொள்ள பிரஷ்யா தகுந்த முன்னேற்பாடுகளைச் செய்துகொள்ளவேண்டும் என்று எண்ணினர். ஆகவே, மன்னருடைய படைத்திட்டங்களை நிறைவேற்ற முனைந்தார். அத்திட்டங்களை நிறைவேற்றுவதைத் தடைசெய்யும் பிரஷ்யாவின் சபையை அணுகினர். படைபலத்தைப் பெருக்கவேண்டிய அவசியத்தை அவர்களுக்கு மிகத் திறமையாக எடுத்துக்காட்டினர். பெரும் பிரச்சினைகளைப் படைகொண்டு தீர்வுகாண முடியுமேயன்றித் தீர்மானங்கள் வாயிலாகவும், பேச்சுத் திறனலும் முடிவு செய்ய இயலாது என்ருர். ஆனல், சபை அசைந்து கொடுக்கவில்லை. எனவே, பிஸ்மார்க்கு, மன்னரைச் சபையின் அனுமதியின்றி வரி வசூல் செய்யுமாறு யோசனை கூறினர். பத்திரிகைகளின்மீது கடுமையான

DIGITIZED BY TAMIL VIRTUAL ACADEMY

தடைகள் விதித்தார். பிற்போக்குக் கருத்துடையவர்களைப் பதவியினின்றும் விலக்கினார். இவற்றின் பயனாக முற்போக்காளர்களின் வெறுப்பைத் தேடிக்கொண்டார். ஆனால், பிரஷ்யாவின் படைபலத்தை அதிக அளவில் பெருக்கிவிட்டார்.

அதன் பிறகு போர் ஏற்படும்போது ஆஸ்திரியா தனித்து நின்று போர்புரியவேண்டிய சூழலை உண்டாக்குவதில் தமது கவனத்தைச் செலவிட்டார். 1863-ல் போலந்து மக்கள் ருஷ்யாவிற்கு எதிராகக் கிளர்ச்சி செய்தார்கள். பிரஷ்யாவிலுள்ள முற்போக்காளர்கள் தங்களுக்கு உதவி செய்யுமாறு அரசாங்கத்தைத் தூண்டினார்கள். ஆனால், அக் கிளர்ச்சிக்காரர்கள் வெற்றிபெற்றால் பிரஷ்யாவிலுள்ள போலந்து மக்களும் கிளர்ச்சி செய்வார்கள் என்று கருதியதாலும், கிளர்ச்சிகளை எதிர்க்கும் பண்புடையவராதலாலும், எல்லாவற்றிற்கும் மேலாக ருஷ்யாவின் நட்பைப் பெறுவதற்காகவும் பிரஷ்யா ருஷ்யாவிற்கு உதவிபுரிய முடிவு செய்தது. அதே நேரத்தில் ஃபிரான்சு, ஆஸ்திரியா, பிரிட்டன் ஆகிய நாடுகள் ருஷ்யாவைப் போலந்து நாட்டினருக்குச் சில உரிமைகளை வழங்குமாறு கேட்டுக்கொண்டன. முடிவில் ருஷ்யா போலந்தை அடக்கியது. அதற்குத் துணையாக நின்ற பிரஷ்யாவின் உதவியை ருஷ்யா, பிஸ்மார்க்கு பதவியிலிருந்த வரை மறவாமல் இருந்தது, ஆனால், பிரஷ்யாவிலிருந்த முற்போக்குக் கட்சியினர் பிஸ்மார்க்கை வெகுவாகக் கண்டித்தார்கள். எனினும், அவர் அயல்நாட்டு விவகாரங்களில் வெற்றிபெற்றால் அவ் வெறுப்பெல்லாம் மறைந்துவிடும் என்று கருதித் தம் கவனத்தை ஆஸ்திரியாவுடன் போர்புரிவதற்கான காரணங்களை ஆராய்வதில் செலவிட்டார்.

அப்பொழுது ஷிலெஸ்விக்-ஓல்ஷ்டைன் (Scheleswig-Holstein) பிரச்சினை ஐரோப்பியர்களின் கவனத்தை ஈர்ந்திருந்தது. ஷிலெஸ்விக், ஓல்ஷ்டைன் ஆகிய இரண்டும் டென்மார்க்கின் தெற்கு எல்லையில் அமைந்திருந்தன. டென்மார்க்கின் அரசர் அப்பகுதிகளைக் கோமகன் என்ற பட்டத்துடன் ஆட்சி செய்து வந்தார். ஷிலெஸ்விக் மக்கள் பெரும்பாலும் டேனியர்களாவார்கள். அவர்களுக்கெனத் தனிச் சபையொன்று இருந்தது. ஓல்ஷ்டைன் மக்கள் பெரும்பாலும் ஜெர்மானியர்களாவார்கள். ஓல்ஷ்டைன் புனித ரோமானியப் பேரரசில் சேர்ந்திருந்தது. 1815-ல் ஜெர்மானியக் கூட்டமைவில் அங்கம் வகிக்கும் நாடாக ஏற்படுத்தப்பட்டது. டென்மார்க்கு அரசரின் பிரதிநிதியொருவர் அவ்வமைப்பின் சபையின் உறுப்பினராக இருந்தார். ஷிலெஸ்விக்கும் ஓல்ஸ்டைனும் தனி ஆட்சிப் பகுதிகளாக இருந்தாலும், ஓர் அமைச்சரவையால் ஆளப்பட்டு வந்தன. தேசிய உணர்ச்சி ஜெர்மானியர்களிடம் தோன்றவே, ஜெர்மானியர்கள் ஓல்ஷ்டைனை ஜெர்மனி நாட்டில் சேர்த்துக்கொள்ள விரும்பினார்கள். 18-ல் ஓல்ஷ்டைன் மக்கள் தேசிய உணர்ச்சியால் உந்தப்பட்டு